# சுதேசமித்திரன்

தொகுதி 30. மலர் 42,43

22,29 நவம்பர் 1959

M211,N30 S
N59.30.42,43
208825


தேசமித்திரன்
22-11-59









உரிமைகளுக்கு எழுதவும்:

**ஜனதா சினி கார்ப்பொரேஷன் பிரைவேட் லிட்.**

**2-வது மாடி, 35, மவுண்ட் ரோடு, சென்னை-2.**

# பொருளடக்கம்

Vol: XXX] [No 42
விகாரி௵ கார்த்திகை 6 நவம்பர் 22

தண்டனையும் மனமாற்றமும் 3
மக்கள் மன்றம் 5
அரசியல் துக்கடா 7
மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம் —தமிழ்வாணன் 9
காற்றுவாக்கிலே —அரட்டை 17
நாடகமும் நாட்டியமும் —சஞ்சாரி 18
உங்கள் கால பலன் —பி. வி. ராவ் 21
நட்சத்திர பேட்டி 32
இதுதான் அன்பு —ஸி. ஆர். ராஜம்மா 35
காதல் படகு —ராஜ் 41
திருவெம்பாவை —செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் 46
வெற்றியின் ரகசியம் —வே. ராஜம் 47
அக்காவுக்குக் கலியாணம் —ஏ. டி. ரங்கமணி 55
மாதர் மகாசபை —குங்குமம் 61
உயிர்ப் புதையல் —சோலே இருசன் 65
பட்டுப்பூச்சி —சுபத்ரா 73
கல்பனைகளும் பாம்பொருளும் —கே. ஆர். ஆர். சாஸ்திரி 82
நஞ்சல்ல நண்பன் —துருவன் 84
சாகாதே சரளா! —தி. அண்ணாமலை 91

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளி வரும் கதைகளில் பெயர்கள், சம்ப வங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



# தண்டனையும் மனமாற்றமும்

★

குற்றம் என்ற சொல் கேட்டதும், தண்டனைபற்றிய எ ணம் எழுகிறது. இந்த அடிப்படையில்தான் நமது சட்டங்கள் பலவும் உருவாகியிருக்கின்றன. ஆனால், குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதால்மட்டும் ஏற்படும் பலனென்ன? தண்டிக்கப்படுவோரின் உள்ளம் அதனால் திருந்தி விடுகிறதா? அதற்கு மாறாகக் குற்றவாளிகளில் பலர் தண்டனைக்குப் பிறகு இன்னும் பெரிய குற்றவாளிகளாவதைப் பார்த்திருக்கிறோம். எனவே குற்றம் செய்வோரை வஞ்சம் தீர்க்கும் முறையில் தண்டிப்பதால் பயனில்லை; அவர்களது மன இயலை அறிந்து, அதை நேரான முறையில் திருத்த வேண்டும்; இதுவே சமுதாயத்தில் வரவரக் குற்றங்கள் குறைய வழி என்ற உணர்வு தற்போது அதிகரித்து வருகிறது. இதற்கிணங்க சென்னை சிறை இலாகா நிர்வாகம் திருந்தி வருவதை அதன் சென்ற வருஷத்திய நிர்வாக அறிக்கை குறிக்கிறது.

ஒரு சமுதாயத்தில் குற்றங்கள் மலியுமாயின், குற்றவாளிகள்மீதே ஆத்திரம் முழுவதையும் திருப்புவது சரியல்ல. அந்நிலைக்கு உண்மையில் அவர்களைவிட, அந்த சமுதாயத்தினரே இன்னும் முக்கியப் பொறுப்பாளிகளாவர். ஏனெனில், சமுதாயத்திலுள்ள கோளாறுகள்தான் இத்தகைய குற்றங்களாக வடிவெடுக்கின்றன. உதாரணமாக, தக்க வசதியும், பிழைப்புக்கான வாய்ப்பும் இல்லாத ஒரு சமுதாயத்தில் குற்றங்கள் அதிகரிக்காமல் என்ன செய்யும்? எனவே குற்றங்களுக்கு ஆதாரவான சூழ்நிலை தோன்றாத

படி தக்க ஏற்பாடு செய்வது அந்தந்த சமுதாயத்தின் அல்லது சர்க்காரின் முதல் கடமை.

எப்படியும் குற்றங்கள் செய்வோரைக் குரூரமாகத் தண்டிப்பதால்மட்டுமே அவர்களை நல்வழிப்படுத்தி விடலாமென்று எண்ணுவது பேதமை. அதற்குப் பதிலாக அவர்களது உள்ளப்போக்கை நேரான வழியில் திருப்பும் முயற்சிகளில் ஈடுபடுவதால் அவர்களுக்கும் நன்மையுண்டு; சமுதாயத்துக்கும் லாபமுண்டு. குறிப்பாக நல்ல பழக்கங்களில் அல்லது உருவான காரியங்களில் அவர்களது கவனத்தைத் திருப்பினால், நாளாவட்டத்தில் அவர்களது குற்ற உணர்ச்சி தேய்ந்துவிடும். குற்றவாளிகளை சுவரில்லா சிறையில் வைக்கும் பரீட்சை சென்ற வருஷம் வெற்றிகரமாக நடந்திருக்கிறது. இதன்மூலம் வைகை அணைக்கட்டு வேலையில் பல கைதிகள் பங்கெடுத்துக்கொண்டனர். அவர்கள் காட்டிய வேலைத் திறனை அதிகாரிகள் விசேஷமாகப் பாராட்டியிருக்கிறார்கள். இவ்வாறே வேறு பல பொதுப் பணிகளுக்கும் அவர்களை இன்னும் பெருவாரியாக உபயோகித்துக்கொள்வதன் சாத்தியக் கூறுகளை அதிகாரிகள் ஆராய வேண்டுகிறோம். ஏற்கெனவே கைதிகளின் உழைப்பைக் கொண்டு சில சிறைகளில் பால் பண்ணைகள், காய்கறி உற்பத்தி போன்ற தொழில்கள் சிறிய அளவில் நடந்து வருகின்றன. 1957–ம் ஆண்டில் ஜெயில்களில் உற்பத்தியான பண்டங்களின் மதிப்பு 23·08 லட்ச ரூபாய். ஆனால், சென்ற ஆண்டில் இம்மதிப்பு சுமார் ஒன்றரை லட்ச ரூபாய் குறைந்திருப்பது இத்தொழில்களின் வளர்ச்சியைக் குறிக்கவில்லை. இத்தகைய தொழில்களில் வர வர அதிகமாகக் கைதிகளை ஈடுபடுத்த வகை செய்ய வேண்டும். அதன் மூலம் அவர்களுக்கு தரப்படும் பயிற்சி சிறையிலிருந்து வெளியேறியபின் யோக்கியமாக பிழைப்பு நடத்த மிக்க உபயோகமாயிருக்கும் என்பது தெளிவு. அவர்களிடை எழுத்தறிவைப் பரப்புவதிலும், அதிகாரிகள் இன்னும் விரிவான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

# மக்கள் மன்றம்

இந்த ஆண்டு மித்திரன் தீபாவளி மலர் சிறப்புற அமைந்ததற்குக் காரணம் ஜானகிராமனின் 'கமல'மும் லா. ச. ரா.வின் 'இதழ்'களுமே. ஜானகிராமனின் லாகவமான நடையும், உயிருள்ள சம்பாஷணைகளும் கதைக்கு மெருகு கொடுக்கின்றன. மாமாவும் அத்தையும் அழகான சிருஷ்டிகள். கதையின் கடைசி 'க்ளைமாக்ஸ்' திருப்பம் ஓரளவு கதையின் அழுத்தத்தை பலவீனப் படுத்துவதாயிருந்தாலும் இது ஒரு தங்கமான கதைதான். லா. ச. ரா.வின் 'இதழ்கள்' மலருக்கு இனிமையான மணம் அளிக்கிறது. இந்தத் தலைப்பில் அவர் எழுதியுள்ள பல கதைகளில் மிகச் சிறந்தவற்றுள் இதுவும் ஒன்று. தேர்ச்சிபெற்ற ஒரு வித்வானின் சங்கீதத்தை மெய்மறந்து கேட்டானந்திக்கும் சுகானுபவம் இந்தக் கதையைப் படிக்கும்போது உண்டாகிறது. மிக அற்புதமான கதை.

எம். சிவசுப்ரமணியம்,

நாகர்கோவில்.

ஃ ஃ ஃ

மலர் கண்டேன். மனமகிழ்ந்தேன்! கண்ணை கவரும் மூவர்ணப் படங்கள். சிருங்கேரி ஜகத்குரு, திருத்தணி முருகன், ஏகாந்த இராமன் ஆகிய படங்கள் கண்ணாடிப் போட்டு பூஜையில் வைக்க ஏற்பாடு செய்துவிட்டேன். ஸ்வாமியாவது, பூதமாவது என்று சொல்லி திரியும் உத்தமர்கள்கூட இப்படங்களை பார்த்தவுடன் திருந்திவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. 'கண்டதுண்டோ கண்ணன்போல' என்கிற நாடகத்தை மும்முறை படித்துவிட்டேன். இம்மாதிரியான மலர்களை வெளியிட்டு வாசகர்களின் அன்பை பெற்று, வளம்பெற ஆண்டவனை மனமார பிரார்த்திக்கின்றேன்.

அருணா நமச்சிவாயம்,

பன்னைப்பட்டி.

தீபாவளி நன்னாள் அன்று தங்கள் மலர் கிடைத்தது. மலரில் வெளியான கதைகள், கட்டுரைகள் மிகவும் ரசிக்கத் தக்க முறையில் அமைந்தன. கடந்த ஆண்டுகளைவிட இந்த வருடம் மலர் அதிக பக்கங்களுடன் வெளியானது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தீபாவளி அன்று முழுவதும் உங்கள் மலரைப் படித்து தீபாவளியை சிறப்பாகக் கொண்டாடினேன் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ம. கிருஷ்ணசாமி,

ஸ்ரீரங்கம்.

ஃ ஃ ஃ

தங்கள் ஒப்பற்ற கலை ஏடான 'மித்திரன்' 25–10–59 இதழ் கண்டேன். பாரதியின் 'சொல்ல வல்லாயோ, கிளியே!' என்ற கவிதைக்கேற்ற அற்புத சித்திரத்தைத் தீட்டித் தந்துள்ள 'நடனு' அவர்கட்கு என் உளங்கனிந்த பாராட்டுகள்! நான், என் முந்திய கடிதத்தில், 'முகப்போவியங்களில் ஓவியர் பெயரையும் வெளியிடவேண்டும் என்று வெளியிட்டுள்ள ஆவலை' இந்த இதழில் பூர்த்தி செய்தமைக்கு ஆசிரியரவர்கட்கு என் நன்றிகள்!

கு. ரா. கிருட்டிணன்,

சிதம்பரம்.


## அட்டைப்படக் கவிதை:

### கண்

இளைஞரைக் கொல்லும் கண்ணோ?
இன்பத்தை வெல்லும் கண்ணோ?
கலைஞரை ஈர்க்கும் கண்ணோ?
கவிதையைச் சேர்க்கும் கண்ணோ?
வலைஞரின் பிடியில் தப்பி
வாழ்ந்திடும் கயலோ? கண்ணோ?
சிலைஞரின் உளியும் காணா
செவ்விய அணங்கின் கண்ணே!

சிலைஞர் — சிற்பி.

எல்லைத் தொல்லை தீரத் தடை



# அரசியல் திக்கடா

உணவு தானிய விநியோகத்தைச் சர்க்கார் மேற்கொண்டு அமுல் நடத்த வேண்டுமென்ற யோசனை எனக்குச் சிறிதும் உகந்ததாகப் படவில்லை.

—நேருஜி.

இப்படிப் பேசும் நேருஜி நாளைக்கு சுதந்திரா கட்சியில் சேர்ந்துவிட்டால், தாம் வேறு கட்சியை ஆரம்பிக்க நேருமோ என்று ராஜாஜி கவலைப்படலாம்!

ஃ ஃ ஃ

மழை காரணமாக நாளைய தினம் கிண்டியில் குதிரைப் பந்தயம் கிடையாது.

—சென்னைச் செய்தி.

சறுக்கினதைச் சாக்காகக் கொள்ளும் நொண்டிக் குதிரைகளா கிண்டியில் ஓடுகின்றன?

ஃ ஃ ஃ

ரௌடிகளைப்போலப் போலீசார் நடந்துகொண்டனர்.

—ஒரு செய்தித் தலைப்பு.

பொதுஜனங்கள் சில சமயம் ரௌடிகளாகவே நடந்துகொள்வதால், போலீஸார், முள்ளை முள்ளால் எடுப்பதற்காக 'ரௌடிகள்போல்' நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்று கருதுகிறோம்.

ஃ ஃ ஃ

மதுரை நகரில் ஏற்பட்டுள்ள சீனிப் பஞ்சத்தின் விளைவாக இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துகொள்ள முயன்றார்.

—ஒரு செய்தி.

சீனி கிடைக்காவிட்டால் காப்பி கசக்கலாம்; வாழ்க்கையே கசந்து போய்விடலாமோ?

தேர்தலில் வோட்டுக் கேட்பது கல்யாணம் செய்யப் பெண் கேட்பது போன்றது.

—சி. சுப்ரமண்யம்.

அதைவிடப் பொதுத் தேர்தல்கள், பொதுஜனங்களுக்காக நடத்தப் பெறும் சுயம்வரம் என்று சொல்லலாமென நினைக்கிறோம்!

ஃ ஃ ஃ

குழந்தைகளை சேஷ்டை செய்ய விடுங்கள். இல்லாவிட்டால், பிற்காலத்தில் அவர்கள் 'மக்கு'களாக ஆகி விடுவார்கள்.

—போலீஸ் மந்திரி.

குழந்தைப் பருவத்தில் நிறைய சேஷ்டைகள் செய்ய விட்டால்தானே, பிற்காலத்தில், அவர்களில் சிலருடைய தயவில்லாமல் போலீஸ் இலாகா நடக்கலாம்!

ஃ ஃ ஃ

நான் கடவுளைத் திட்டுவதற்குப் பொதுமக்கள்தான் காரணம். அவர்கள் அறிவற்றவர்கள், மூடர்கள், பிழைக்கத் தெரியாதவர்கள்.

—பெரியார்.

'நான் கடவுளைத் திட்டுகிறவன்' என்று சொல்லிவிட்டுப் பொதுமக்களைப் பெரியார் திட்டி இருப்பதிலிருந்து 'பொது மக்களிடத்தில் கடவுளைக் காணும் ஞானி பெரியார்' என்று கூறலாமல்லவா?

ஃ ஃ ஃ

பருவ மழை பெய்யாததால் கிணறுகள் வரண்டுள்ளன. தண்ணீர் குடம் இரண்டணா விற்கிறது.

—வடார்க்காடு செய்தி.

அப்படியானால் அங்கு நல்ல பாலை வது கிடைக்குமே!

## தில்லி நகர்த் தபால்

### தீபாவளித் திருநாள்

இந்தப் பெருநாளை மக்கள் மிகக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். தென்னாட்டினர் எண்ணெய் நீராடி புத்தாடை உடுத்திக் கொண்டாடினர். மற்றவர்கள் புத்தாண்டு தினமாகவும் லக்ஷ்மி தேவியின் விஜயமாகவும் குதூகலமாகக் கொண்டாடினர். வழக்கம் போல நகரின் அழகு மிக்க பகுதிகள் விதவிதமான தீபாலங்காரத்துடன் ஜகஜ்ஜோதியாகத் திகழ்ந்தன. வீடுகள் எல்லாம் தீபாலங்காரங்களுடன் காட்சி அளித்தன. பட்டாசுகளுக்கோ மத்தாப்புகளுக்கோ குறைவே இல்லை. வெடி சப்தமும் வாண வேடிக்கைகளும் அங்கங்கே இவ்வாண்டு மிகச் சிறப்பாயிருந்தன.

சென்ற ஞாயிறன்று விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் திறந்து வைத்த மிருகக் காட்சிசாலையை, சர்க்கார் பாலர்களுக்கு அளிக்கும் தீபாவளிப் பரிசு என்று கூறலாம். உலகிலே மிகப் பெரிய சாலைகளில் இரண்டாவதாக விளங்கவிருக்கும் இந்த சாலையைத் திறந்துவைத்த மந்திரி, இந்த மிருகக் காட்சிசாலை சீக்கிரமே ஜீவனுள்ளதொரு பாடப் புத்தகமாக விளங்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இயற்கையின் விதவிதமான இயல்பான போக்கைக் காட்டுபவை விலங்கினமும், தாவரங்களும் ஆகும் —என்று அவர் கூறினார். விலங்கினத்தின் பால் மக்களின் அக்கறையை ஈர்ப்பது தான் இந்தக் காட்சி சாலையின் நோக்கம் என்றும் அவர் சொன்னார்.

இந்தியாவிலேயே முதலாவதான இந்த நவீன விலங்கு காட்சி சாலையில், விலங்குகள் தத்தமக்குரிய இயல்பான சூழ்நிலையில் இருக்கும் முந்நூறு விலங்குகளும் ஐநூறு பறவைகளும் உள்ளன. இந்தியாவிலேயே மிக உயரமான யானை ஒன்று உண்டு. ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த கங்காருக்களும் எதியோப்பியாவிலிருந்து வந்த சிங்கங்களும் குறிப்பிடத்தக்கவை. இருநூற்றி ஐம்பது ஏகரா பரப்பிலான இந்த விலங்குக் காட்சி சாலை தில்லியில் கட்டாயம் காணவேண்டியதொரு ஸ்தலம்.

### திரை நட்சத்திரங்களின் விஜயம்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் மற்ற திரையுலக சிற்பிகளும் 'பாவை விளக்கு' படப் பிடிப்பிற்காக இம்மாதம் இரண்டாந் தேதியன்று தில்லி வந்து சேர்ந்தனர். ஸ்ரீ ஏ. பி. நாகராஜன் டைரக்டர் சோமு, கதாசிரியர் அகிலன், காமிராமென் கோபால் முதலானோருடன் ஸ்ரீ வி. கே. ராமசாமி, ஸ்ரீமதி எம். என். ராஜம், சந்தியா முதலானோரும் வந்துள்ளனர். தணிகாசலம்-சிவாஜி உமா—எம். என். ராஜம் ஆகியோரை உமாவின் தந்தையாக வரும் வி. கே. ராமசாமியும் அவரது இரண்டாந்தாரமாக வரும் சந்தியாவும் தில்லியின் செங்கோட்டை, குதுப்மினார், ராஷ்டிரபதி பவனம் ஆகியவற்றுக்கு அழைத்துச் சென்று முக்ய அம்சங்களை விளக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன. ரயில்வே நிலையத்தில்தான் மக்கள் அபரிமிதமான ஆர்வம் காட்டி படப் பிடிப்பை பிரச்னையாக்கினர். மற்ற இடங்களில் போலீசாருடைய உதவியுடன் கூட்டம் தகுந்தபடி சமாளிக்கப்பட்டது. இந்த கோஷ்டியினர் ஆக்ராவிலும் பதேபூர் சிக்ரியிலும் படப் பிடிப்பிற்கெனப் புதன்கிழமையன்று சென்றனர்.

தலைநகரில் நாடகத் துறையில் ஈடுபட்டுச் சிறப்புறப் பணி செய்துவரும் 'சௌத் இந்தியன் தியேட்டர்ஸின் நிர்வாகிகள், நடிகர் திலகத்தையும் ஸ்ரீ ஏ. பி. என். முதலானோரையும் கண்டு நல்வரவு கூறி அளவளாவினர். தில்லியின் அமெச்சூர் நாடகத் துறை வளர்ச்சி பற்றி சிவாஜி அன்புடன் விசாரித்து ஆசி கூறினார்?






புது மனிதன் சன்னல் பக்கமாகப் பார்த்து விட்டான்! பூமகள் அச்சத்துடன் கீழே உட்கார்ந்து விட்டாள் தலையை இழுத்துக்கொண்டு!

'என்ன அங்கே பார்க்கிறாய்? எதற்காக எழுந்து போகிறாய்?' என்று தேவமணி கேட்கும் குரல், பூமகளுக்கு நன்றாகக் கேட்டது!

புது மனிதன் சன்னல் பக்கமாகப் பார்க்க எழுந்து வருகிறான் என்பதை உணர்ந்து கொண்ட பூமகள், சுவர் ஓரமாகவே விரைந்து சென்று வீட்டின் மற்றொரு பக்கம் சுவர் ஓரமாக நின்று பார்த்தாள். அவள் எட்டிப் பார்த்தபோது, பக்க வாட்டில் சிறிது தொலைவில் இருந்த சன்னல் வழியாகக் கை விளக்கின் வெளிச்சம் பளிச் சென்று தெரிந்தது. அந்த மனிதன் கை விளக்கைத் தூக்கிக் கொண்டு சன்னல் பக்கமாகவே வந்துவிட்டான்!

'என்ன தேடுகிறாய்?' என்று தேவமணி உரத்த குரலில் மீண்டும் கேட்பது நன்றாகக் கேட்டது அவளுக்கு!

'எவரோ எட்டிப் பார்த்ததைப்போலிருந்தது! அதுதான் பார்த்தேன்!'

'இங்கே எவர் வரப்போகிறார்கள்? உன் மனம் கலங்கியிருக்கிறது! அதனால்தான் உனக்கு அப்படித் தோன்றியிருக்கிறது.'

'அப்படியொன்றுமில்லை. ஏதோ ஒரு தலை தெரிந்ததைப் போலிருந்தது! இல்லாவிட்டால் எழுந்து வருவேனா?'

'எவரையும் காணோமே! நீ பேசாமல் உட்கார்! முதலில் உனக்குக் கட்டுப் போட்டு விட்டுப் பிறகு நான் வெளியே போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்!'

'நீ எனக்குக் கட்டுப் போட்டு விட்டு வெளியே போகும்வரையில், வந்தவன் உனக்காகக் காத்திருப்பானா? இப்போதே போய்ப் பார்!'

சன்னலில் கை விளக்கின் வெளிச்சம் மங்கியது. தேவமணி கை விளக்குடன் வெளியே வரப்போகிறான் என்பதை அறிந்து கொண்டதும் பூமகள் பின்னாலேயே நகர்ந்து சென்று, வீட்டிற்குச் சிறிது தொலைவில் இருந்த செடிகளின் மறைவில் பதுங்கிக் கொண்டாள்!

அவள் எதிர்பார்த்தபடியே கை விளக்கின் வெளிச்சம் வீட்டின் வெளியே தெரிந்தது! தேவமணி கை விளக்கைத் தூக்கிப் பிடித்தபடி வீட்டைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தான். பிறகு—

திரும்பிப் போய்விட்டான்!

தேவமணி வெளியே வந்து விளக்கைத் தூக்கிப் பிடித்துத் தேடியதைப் பார்த்தால், எவரும் வந்திருக்க மாட்டார்கள் என்று அவன் உறுதியுடன் திரும்பியதைப் போலிருந்தது! ஏதோ பார்க்க வேண்டுமே என்ற கடமைக்காகப் பார்க்க வேண்டும் என்று அவன் பார்த்ததைப் போலிருந்தது!

மீண்டும் பூமகள் எழுந்து போய்ச் சன்னலில் பார்க்க விரும்பவில்லை. சன்னலில் எவரோ எட்டிப் பார்த்தார்கள் என்று ஐயப்பட்ட மனிதன், அடிக்கடி சன்னல் பக்கமே பார்த்துக்கொண்டிருப்பான் என்று அவள் ஊகம் செய்தாள்! அவள் படித்தவள். பண்புடையவள். ஆகையால், மற்றவர்கள் என்ன எண்ணுவார்கள், என்ன செய்வார்கள் என்று எப்போதும் அவள் மனம் சிந்தனை செய்தது!

பூமகள் மெல்ல எழுந்தாள். நிமிர்ந்து நின்றாள். நிலவின் ஒளியிலே அவள் உருவம் நீண்ட நிழலாக விழுந்தது. அவள் இழுத்துப் போர்த்தியிருந்த சேலையின் நீண்ட முன்தலைப்பு விடுபட்டுக் காற்றில் படபடவென்று அடித்துக்கொண்டு பறந்தது! சேலையின் முன் தலைப்பை மீண்டும் அவள் இழுத்துப் போர்த்திக்கொண்டு, குன்றின் மீதிருந்த வீட்டை நோக்கி விரைந்து நடந்தாள்!

அவள் வரும்போது புது மனிதனையும், தேவமணியையும் தொடர்ந்து செல்லவேண்டுமே என்ற ஒரே கருத்துடன் அவள் அடக்க முடியாமல் எப்படியோ கரடுமுரடான வழியில் சென்று விட்டாள்! ஆனால், திரும்பிப் போகும்போது அவள் வந்த அதே வழி இப்போது கடந்து செல்லக் கடினமாக இருந்தது. அவள் அடிக்கடித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றபோது, இரண்டு மூன்று தடவைகள் இடறி விழப்போனாள்! தேவமணி எங்கே மீண்டும் வந்து வெளியே பார்க்கப் போகிறானோ என்று அஞ்சினாள் அவள்!

பூமகளின் கால்கள் குன்றின் சரிவில் நடந்து ஏறிக்கொண்டிருந்தன. அவளுடைய தலை அடிக்கடி திரும்பிப் பார்த்தது. அவள் மனம் எண்ணியது:

'புது மனிதனுடைய இடத் தோளில் துப்பாக்கிக் குண்டுதான் பாய்ந்திருக்கும். அவன் உடலிலே துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததென்றால், அப்பா சுட்ட குண்டுதான் அவன்மீது பட்டிருக்குமா? அவன் ஏன் அந்தப் பக்கம் வந்தான்? அவன்மீது துப்பாக்கிக் குண்டு தற்செயலாகப் பட்டதா அல்லது அப்பா வேண்டுமென்றே அவன்மீது சுட்டாரா?'

அவளுடைய சிந்தனை விரிந்ததே தவிர, என்ன நடந்தது என்பது அவளுக்குப் புரியாத மருமமாகவே இருந்தது!

'அப்பாவுக்கு என்ன நேர்ந்தது என்று அடிபட்ட மனிதனையே கேட்டுப் பார்க்கலாமா? அவனைக் கேட்டால் சொல்லுவானா? அவனைப் பார்த்தால் அப்படி ஒன்றும் கெட்டவனாகத் தெரியவில்லையே! உருவத்தைக் கண்டு ஒருவன் நல்லவனா கெட்டவனா என்று முடிவுகட்டும் திறன் நமக்கில்லைதான்! ஒருவன் தீயவன் என்று உருவத்தைக் கண்டு தெரிந்துகொள்ளும் நிலை நமக்கிருந்தால், திருமலை இத்தனை நாட்களாகக் காரோட்டியாக நம் வீட்டில் வேலை பார்த்திருக்க மாட்டானே! அவனை நல்லவன் என்றல்லவா இத்தனை நாட்களும் எண்ணியிருந்தோம்! இப்போது நடந்த நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கும்போது, திருமலை தீயவன் என்றல்லவா முடிவு கட்டவேண்டியதிருக்கிறது!' என்று மேலும் பூமகளின் மனம் புரண்டது. அவள் நடந்துகொண்டேயிருந்தாள். திடீரென்று மழை பெய்து ஓய்ந்ததைப்போல அவள் மனம் ஓய்ந்து போயிற்று!

வீட்டை நெருங்கி விட்டாள் அவள். அவள் சிந்தனையெல்லாம் புது மனிதனின்மீதே பதிந்திருந்தது! 'தேவமணி அவனை வீட்டிற்கு வரவேண்டாம் என்று கவனப்படுத்தியதைப் பார்த்தால், புது மனிதன் தீயவன் என்றுதான் தோன்றுகிறது! துப்பாக்கிக் குண்டு பட்டுவந்த ஒருவனை, தேவமணி, 'வீட்டிற்குள் வரவேண்டாம். விருந்தினர் வந்திருக்கிறார்கள். அவர்கள் பார்த்துவிடப் போகிறார்கள்' என்று ஏன் அஞ்சவேண்டும்?'

நின்ற மழை மீண்டும் பிடித்துக் கொண்டதைப்போல அவள் சிந்தனை மீண்டும் எண்ணங்களைக் கொட்டியது!

அவள் வீட்டை நெருங்கிவிட்டாள். சன்னல்களில் விளக்கு வெளிச்சம் தெரியவில்லை! கட்டழகியும் கிழவியும் படுத்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணினாள் அவள். உள்ளே போய் மெல்லக் கட்டழகியை எழுப்பி, உண்மையைச் சொல்லவேண்டும் என்று துடித்தது அவள் மனம். அந்தத் துடிப்பில்—

அவளையும் அறியாமல் அவள் மிகவும் விரைவாக ஓட்ட நடையில் நடந்துகொண்டிருந்தாள்!

வீட்டின் அருகில் வந்ததும் அவள் திரும்பிப் பார்த்த போது—

தொலைவில் மலைச்சரிவில் இருந்த மற்றொரு வீடு தெரியவில்லை! வழியிலே இருந்த பல மரங்களும் பாறைகளும் அந்த வீட்டை மறைத்துக்கொண்டன!

## 6

வீட்டின் முன் வந்து நின்றாள் அவள். கதவு அவள் சாத்திவிட்டுச் சென்றதுபோலவே மூடியிருந்தது!

தேவமணி வெளியே வந்த போது, புறக்கடைக் கதவைத் திறந்துகொண்டுதான் வந்திருக்க வேண்டும். அவன் முன்பக்கமாக வந்திருந்தால், வெளிக் கதவு தாழிடப்படாமல் சும்மா சாத்தியிருப்பதைக் கவனித்து, வெளியே சென்றது யார் என்று ஐயப்பட்டிருப்பானே?

பூமகள் மெல்லக் கதவைத் தள்ளிஞள். அது—

திறந்துகொண்டது! ஆஞல்—







திறந்த கதவின் வழியாக உள்ளே அவள் காலை வைத்ததுமே—

கூடத்தில் விளக்கு எரிந்தது!

பூமகள் அச்சத்துடன் அப்படியே நின்ருள்! எவரோ அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்து, அவள் உள்ளே காலடி எடுத்து வைத்ததும் தக்க நேரத்தில் விளக்கை வேண்டுமென்றே போட்டதைப்போலிருந்தது! அவள்—

விழிப்புடன் பார்த்தாள்!

கூடத்தின் ஓரத்தில், பூமகளையே வைத்த கண் வாங்காமல் அச்சம் தரும் வகையில் பார்த்தபடி நின்றிருந்தாள் கிழவி!

கிழவி எப்போது விழித்துக் கொண்டாளோ!

பூமகள் சிறிது நேரம் ஆடாமல் அசையாமல், அப்படியே கதவைப் பிடித்துக்கொண்டு

நின்றாள்! பிறகு—

கதவைப் பட்டென்று மூடினாள்! தாழிட்டாள்!

கிழவி ஆடாமல் அசையாமல், பூமகளையே பார்த்துக்கொண்டு நின்றபோது—

அச்சமாகத்தான் இருந்தது!

கிழவிக்கு வாயிருந்தால் பேசியிருப்பாள்! ஆனால், அவளுக்கு உண்மையிலேயே வாய் இல்லையோ என்னவோ? அவள் பார்வையிலேயே ஐயம் கலந்திருந்தது!

கூடத்திலிருந்த கடிகாரத்தின் டிக்டிக் ஓசை, சுத்தியலை எடுத்து அடிப்பதைப்போலிருந்தது! அவ்வளவு அமைதி!

கிழவியும் நகரவில்லை, பூமகளும் பேசவில்லை! கிழவியின் பார்வையும் அகலவில்லை, பூமகளின் அச்சமும் நீங்கவில்லை!

நேரம் ஓடியது. எதுவும் நிகழவில்லை! பூமகள் பார்வையை நேராகத் திருப்பிக் கட்டழகி படுத்திருந்த அறையை நோக்கி நடந்தாள்!

கிழவியின் பார்வை பூமகளின் பக்கமே திரும்பி, அவளைத் தொடர்ந்து சென்றது. பூமகள் திரும்பிப் பார்க்கவேயில்லை. அச்சம் தரும் அந்த உருவத்தை அவள் மீண்டும் பார்க்க விரும்பவில்லையோ?

கட்டழகி படுத்திருந்த அறையின்முன் வந்ததும், பூமகள் திடுக்கிட்டு நின்றாள். அறையின் வெளியே தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது!

அவள் வெளியே சென்றபோது, கதவின் வெளியே தாழிடவில்லை என்பது அவளுக்குத் தெளிவாக நினைவு இருந்தது. அவள் வெறும் கதவைத்தான் அழுத்திச் சாத்திவிட்டுச் சென்றாள். ஆனால், இப்போது—

கதவு வெளியே தாழிடப்பட்டிருக்கிறதே! கதவைத் தாழிட்டது எவராக இருக்கும்?

கட்டழகி விழித்துக்கொண்டு தன்னைக் காணாமல் அஞ்சி, தன்னைத் தேடி வர வெளியே புறப்பட்டுச் சென்றுவிட்டாளோ? அப்படி அவள் புறப்பட்டுப் போகும்போது அறையின் கதவை வெளியே தாழிட்டிருப்பாளா?

பூமகள் தாழ்ப்பாளைத் திறந்து கதவையும் திறந்தாள். கூடத்திலிருந்து வந்த வெளிச்சம், இலேசாக அறையினுள் பாய்ந்தது. உள்ளே—

கட்டழகி பச்சிளம் குழந்தையைப்போல் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்!

பூமகளின் மனம் எண்ணியது: ‘கதவை வெளியே தாழிட்டது யார்? புரிந்து விட்டது! துப்பாக்கியினால் அடிபட்ட மனிதன் சன்னல் வழியாகத் தேவமணியை எழுப்பியபோது, தேவமணி பேச்சுக் குரல் கேட்டு எங்கே இந்தப் பெண்கள் இருவரும் எழுந்து வந்துவிடுவார்களோ என்று அஞ்சி, விழிப்புடன் கதவைத் தாழிட்டிருக்க வேண்டும்! நாங்கள் விழித்துக்கொண்டாலும், வெளியே வர முடியாமல் கதவைத் தட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதானே! அடிபட்ட மனிதனுக்கு, நான் வாயில் கதவைச் சும்மா சாத்திவிட்டுச் சென்றது தெரியாது! தெரிந்திருந்தால் அவன் நேராகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்திருப்பான்! சன்னல் பக்கமாகத் தேவமணியை அழைத்திருக்க மாட்டான்!

தன் சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, கட்டழகியை உலுப்பி எழுப்பினாள் பூமகள். கட்டழகி கண்களைத் திறந்து பார்த்தாள். அதே நேரத்தில் கூடத்தில் எரிந்துகொண்டிருந்த விளக்கைக் கிழவி அணைத்து விட்டாள்! உள்ளே—

இருட்டாக இருந்தது!

பூமகள் எழுந்து சென்று பாதிக்கு மேல் மூடியிருந்த சன்னல் கதவுகளைத் திறந்தாள். மேலே எழும்பிவிட்ட சந்திரனின் வெளிச்சம் அந்த அறைக்குள் ஒரு பகுதியில் மட்டும் விழுந்தாலும் மெல்லிய வெளிச்சத்தை அறையினுள் பரப்பியது!

கண்களைப் பாதி திறந்து அரைத் தூக்கத்தில் பார்த்த கட்டழகி, அக்காள் அறையில் நடமாடுவதைப் பார்த்தாள். அவள் புதிய இடத்தில் வந்து தூங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற நினைப்பு வந்ததும் எழுந்து உட்கார்ந்து, சரிந்து விழுந்த சேலைத் தலைப்பை அள்ளிப் போட்டுக்கொண்டு, ‘என்ன அக்கா!’ என்றாள் உரத்த குரலில்!

‘நன்றாகத் தூங்கினாயா!’ என்று கேட்டாள் பூமகள்.

‘ஆமாம், நீ தூங்கவில்லையா?’

‘இல்லை.’

‘மணி என்ன?’

‘பாதி இரவுக்குமேல் ஆகிவிட்டது!’

‘அப்பா வந்துவிட்டாரா?’

‘இல்லையடி!’

‘டிரைவர்?’

‘எவரையும் காணோம்! காரையும் காணோம்!’

‘என்ன!’ கட்டழகியின் குரல் அழுத்தமாக எழுந்தது!

‘மெல்லப் பேசு கட்டழகி! அச்சப்படாதே! நான் சொல்லுவதைக் கேட்டுக்கொள். காரைக் காணோம்! அப்பாவும் வரவில்லை! நீ தூங்கிக் கொண்டிருந்தபோது, அப்பா ஒருவேளை வந்து காரில் நம்மைக் காணாமல் தேடிக்கொண்டிருப்பாரோ என்று நான் மட்டும் தனியாகத் துணிந்து சென்று பார்த்தேன்! காரை எவரோ பின்னுக்கு எடுத்து ஓட்டிச் சென்றிருக்கிறார்கள்!’

‘அப்பா வந்திருந்தால் நம்மைத் தேடாமல், கார் ஆரனை அடிக்காமல் போயிருக்க மாட்டார்!’

‘உண்மைதான் அக்கா!’

‘அப்பாவின் துப்பாக்கி, காரை நாம் விட்டுச் சென்ற இடத்திலிருந்து சிறிது தொலைவில் விழுந்து கிடந்தது!’

‘எப்படி? புரியவில்லையே!’

‘எனக்கும்தான் புரியவில்லை!’

‘பிறகு?’

‘அப்பாவையும் காணோம்! டிரைவரையும் காணோம்! என்னால் இயன்றவரையில் தேடிப் பார்த்தேன். அப்பாவின் துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டு சுடப்பட்டிருக்கிறது!’

கட்டழகி அச்சத்துடன் ஒன்றும் பேசாமல் உட்கார்ந்து விட்டாள்!


பூமகள் சொன்னாள்: ‘நான் திரும்பி வந்தபோது, இங்கே வீட்டின் வெளியே ஒருவன்—எவனோ ஒருவன் தேவமணியிடம் பேசிக்கொண்டிருந்தான்! அவர்கள் என்னைக் கவனிக்க

வில்லை. அந்தப் புது மனிதனுடைய இடத் தோளில் துப்பாக்கிக் குண்டு பட்டு ரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது!'

'அப்படியா? அப்பா அவனைச் சுட்டிருப்பாரா?'

'இருக்கலாம்! அந்தப் புது மனிதனை வீட்டிற்கு வர வேண்டாமென்று தேவமணி தடுத்து, மற்றொரு வீட்டிற்கு அழைத்துச் சென்று கட்டுப் போட்டிருக்கிறான்! நான் அந்த வீட்டைப் பார்த்துக்கொண்டு வந்துவிட்டேன்!'

'மற்றொரு வீடா? இந்தப் பக்கத்தில் மற்றொரு வீடுகூட இருக்கிறதா?'



'ஆமாம் கட்டழகி, குன்றின் சரிவில், கீழே ஒரு வீடு இருக்கிறது! அதைப் பார்த்தால் மாட்டுத் தொழுவம்போல இருக்கிறது?'

'இப்போது என்ன செய்யலாம்?'

'அதற்காகத்தானே உன்னை எழுப்பினேன்! நான் உள்ளே வரும்போது எவருக்கும் தெரியாமல் வெளியே போய்வந்ததைக் கிழவி கண்டுபிடித்து விட்டாள்!'

'அவள் பார்த்த பார்வையில் அப்படியே எரிந்து சாம்பலாகி விடுவேனோ என்று நான் அஞ்சினேன்!'

'எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை அக்கா!'

பூமகள் ஆதரவுடன் கட்டழகியை அணைத்துக்கொண்டாள். 'இனியும் நாம் இங்கிருப்பது ஆபத்து கட்டழகி!'

'வேறு எங்கே போவது?'

'தேவமணி இன்னும் வரவில்லை! அவர் வருவதற்குள் நாம் இந்த வீட்டை விட்டு வெளியேறலாம்!'

'எங்கே போவது?'

'பக்கத்தில் எங்கேயாவது ஒளிந்து கொண்டிருக்கலாம்! தேவமணி இப்போது வந்துவிடுவார்! அவர் வீட்டிற்குள் நுழைந்ததும், நாம் மெல்ல நழுவிக் குன்றின் சரிவில் கீழே இருக்கும் அந்த வீட்டிற்குப் போவோம்!'

'அங்கே போய்?'

'அடிபட்ட மனிதனைப் பார்ப்போம்!'

'அக்கா!'

'அஞ்சாதே கட்டழகி! நாம் இருவரும் சேர்ந்து அவன் எவன் என்பதையும், அப்பாவுக்கு என்ன நேர்ந்தது என்பதையும் கண்டுபிடிப்போம்!' இருவரும் ஒன்றாகச் சென்றால், இருவருக்குமே சற்றுத் துணிவு ஏற்படும் இல்லையா?'

கட்டழகி ஒன்றும் பேசவில்லை! அப்படியே அவள் உட்கார்ந்து விட்டாள் வெண்கலச் சிலைபோல! (தொடரும்)

# நாற்ய வாக்கிலே!

## புரியாத போக்கு!

அயோக்கியர்களுக்கெல்லாம் இறுதிப் புகலிடம் அரசியலே என்று ஒரு மேல்நாட்டு மேதாவி கூறினார்! சுத்த வயிற்றெரிச்சல் பேர்வழிபோலிருக்கிறது. ஒருவேளை அவருக்கு அந்த அரசியலால் ஒதுங்க இடம் கிடைக்காதிருந்திருக்கலாம்! ஆனால், நம் நாட்டு அரசியல் ரொம்பவும் விநோதமான விவகாரம் என்பதைமட்டும் மறுப்பதற்கில்லை. சில அரசியல் கட்சிகளின் நோக்கும் போக்கும் புரிவதேயில்லை.

தமுக்கம் மைதானத்தில் தமுக்கடித்தார் ஒரு அறிஞர். 'மத்திய சர்க்காரிடம் அதிகாரம் குவிந்திருப்பது அபாயகரமானது; அவற்றை ராஜ்யங்களுக்கு ஒருமித்து வற்புறுத்தவேண்டும்' என்றார். திராவிட முன்னேற்றக் கழகம் கூறுவதை சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, தமிழரசுக் கழகம் ஆகிய அனைத்தும் ஒப்புக்கொள்கின்றனவாம்! ஆகவே, எல்லாம் சேர்ந்து தி. மு. கழகத்தின் கோரிக்கையை மத்திய சர்க்காரிடம் கண்டிப்பாக எடுத்துக் கூறினால், நிச்சயம் பலன் கிடைக்கும் என்பது அவரது திடமான நம்பிக்கை. ஆனால், சொன்ன பிறகு அவருக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. யார் இந்தக் கட்சிகளை ஒன்று சேர்ப்பது? பூனைக்கு மணி கட்டுவது யார்? சாதாரண சுண்டெலிகள் மயங்கலாம்; தயங்கலாம். ஆனால், அறிஞர் அறிவுக்கு எட்டாத விஷயமா? தாம் ஒருவரே கட்சியாகவும், தாமே அதன் தலைவராகவும், தொண்டராகவும், மற்றும் எல்லாமாகவும் வியாபித்திருக்கும் 'தனி'ப் பெருமை வாய்ந்த பிரமுகரை வேண்டி, வருந்தி அழைத்தார். இனி என்ன கவலை? கணக்கிலும், கற்பனையிலும் காணாத தொண்டரையும், தோழரையும் புதுக் கட்சியில் சேரக் கட்டளையிட்டவருக்கு இது தானா பிரமாதம்? வாயசைக்க வேண்டியதுதான்.

பிடித்தாலும் சரியான புளியங்கொம்பாய் பிடித்த அறிஞர், இந்த விவகாரத்தில் தமது கரிசனத்தின் காரணத்தையும் கூறிவிட்டார். அதிகாரங்கள் ராஜ்யத்துக்கு மாற்றப்படும்போது தனித் திராவிடநாடு பெறுவதில் உள்ள கஷ்டங்கள் நீங்கிவிடும் என்பது அவர் கருத்து. விஷயம் விளங்கிவிட்டது. இனித் தமிழரசுக் கழகமும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்ட்களும் உடனே தி. மு. க.வுடன் கூட்டு சேரத் தயங்க முடியுமோ? சுதந்திர நாட்டில் சுதந்திர தினம் கொண்டாடுவதில் சிறிதும் அக்கறையில்லாதவர்களை ஆரவணைத்துத்தானே நிற்க வேண்டும்? நாடு நலம்பெற, மக்கள் வாழ்வு வளம்பெற, அபிவிருத்தித் திட்டம் தீட்ட, சர்வகட்சிக் கூட்டம் கூட்டியும் ஒதுங்கியிருப்பவர்களுடன் ஒத்துழைக்க மறுக்கலாமோ? திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் தனித் திராவிட நாட்டுடன் முடிந்துவிட்டாலென்ன? ஐக்கிய இந்தியாவையே தாங்கி நிற்கும் பிரஜா சோஷலிஸ்ட்களும், மற்றவர்களும் தங்கள் கொள்கைகளையெல்லாம் தூர விலக்கி, பிளவு சக்திகளுக்கு உடனே ஆக்கமளித்துத்தானே தீரவேண்டும்? நம் நாட்டின் எல்லை எங்கே என்பதை மறந்தாலும் 'ஏக இந்தியா' கோஷத்தை மட்டும் ஓயாமல் எழுப்பும் கம்யூனிஸ்ட் தோழர்கள் அதிலும் பல்டியடித்து தனித் திராவிடமேற்பட உதவ வேண்டியதுதானே? தமிழரசுக் கழக மகாநாட்டில் தங்கத் தம்பிமார்கள் கூச்சலிட்டுக் குழப்பம் செய்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல்

யரிவு காட்டுவதுதானே பண்பாடு? என்ன சொல்வது? அனுசரணையான கட்சிகளை கூட்டு சேர மறுக்கும் போது, ஒன்றோடொன்று சற்றும் பொருத்தமில்லாத கட்சிகள் விருப்பமில்லாத விவகாரத்தில் கூட்டாகக் காரியம் செய்ய வேண்டுமென்று ஒரு பெரிய தலைவர் எதிர்பார்ப்பதை எப்படி வர்ணிப்பது?

தேசீயம், மத சார்பற்ற தன்மை, ஜனநாயகம்போன்ற அடிப்படை விஷயங்களில் ஒற்றுமை இருந்தபோதிலும் கொள்கைகள் அமுலில் கருத்து வேற்றுமை நீடிக்கும்வரையில் காங்கிரஸுடன் ஒத்துழைப்பு பிளவு சக்திகளுக்கே ஆக்கமளித்து மக்களிடை சோர்வுணர்ச்சியையே அதிகரிக்கும் என்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சி வெள்ளி விழாக் கூட்டம் தீர்மானித்திருக்கிறது. ஆனால், கேரளத்தில் காங்கிரஸுடன் கூட்டு சேரமட்டும் இணங்கியுள்ளது. முன்னால் சொன்னது உண்மையென்றால் கேரளத்தில் நிலை என்னவாகும்? அல்லது கேரளத்தில் மட்டும் ஒரு ஏற்பாடு சாத்தியமென்றால், அது அகில இந்திய ரீதியில் ஏன் முடியாது? பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஒத்துழைக்கக் கூடிய கட்சி ஏதாவது இருந்தால், அது காங்கிரஸ்தான் என்று புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தலைவரே கூறுகிறார். சீன ஆக்கிரமிப்பால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை மனதில் கொண்டால் இரு ஸ்தாபனங்களிடையேயும் ஒற்றுமை சாத்தியமென்கிறார். பொதுக் காரியதரிசியோ இன்னும் ஒரு படி மேலே போய்விட்டார். பிரஜா சோஷலிஸ்ட் கொள்கைகளைத்தான் காங்கிரஸ் அனுசரித்து நிற்கிறது என்று பெருமையடித்துக்கொள்கிறார். புதுக் கட்சியைச் சாடுவதிலும் இரு கட்சிகளிடையும் மகத்தான கருத்து ஒற்றுமை. அப்படியானால் ஜனநாயக சோஷலிஸத்தில் நம்பிக்கையுள்ள இரு கட்சிகளும் ஒன்றுபட்டு இயங்க என்ன தான் முட்டுக்கட்டை? மக்களின் சுதந்திரத்திற்கும், நாட்டின் ஐக்கியத்திற்கும் அபாயம் ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில், அபிப்பிராய பேதங்களை மறந்து மக்கள் ஒன்றுபடுவது அவசியமென்று ஆளும் கட்சியின் காரியக் கமிட்டியும் கேட்டுக்கொண்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் ஆசை; இன்னொரு பக்கத்தில் அழைப்பு. இருந்தாலும் ஒட்டியும் ஒட்டாமலும் இரண்டுங் கெட்ட நிலை. புரியாத போக்கு, இதெல்லாம் அரசியலா அல்லது அசல் பித்தலாட்டமா என்று சாமான்யர் சந்தேகப்படுவதில் தவறென்ன?

—அரட்டை

# நாடகமும் நாட்டியமும்

'அமெச்சூர் ஆக்டர்ஸ் க்ரூப்' என்கிற குழுவினர் தங்களது பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி சென்ற இரு வாரங்களில் ரஸிக ரஞ்சனி சபை ஹாலில் நாடக விழா ஒன்றை வெகு விமரிசையாக நடத்தினார்கள். அவர்களுக்கு அழியாப் புகழைத் தேடித் தந்த 'நல்லதும் கெட்டதும்', 'கிரிமினல் கிருஷ்ணஸ்வாமி', 'கவியின் கனவு', 'டாக்டரும் பேயும்', 'பாதுகா பட்டாபிஷேகம்' ஆகிய ஐந்து நாடகங்கள் அதில் இடம் பெற்றிருந்தன. ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பு வாய்ந்தது.

வேறு எந்த நடிகர் குழுவும் காட்டாத புதுமைப் பொலிவுடன் கூடிய நாடகமாகும் 'டாக்டரும் பேயும்'. அழகிய முகத் தோற்றமுடைய ஒரு நடிகர், ரசிகர்கள் முன்னிலையிலேயே விகாரப் பேய் உரு எடுக்கிறார். அந்த உரு மாற்றம் 'மேக்கப்' திரை மறைவில் இல்லாது மேடையிலேயே நடக்கிறதென்றால், அது ஆச்சரியமன்றோ!

ஸி. ஜி. விஸ்வநாதன் அந்த நாடக வித்தையைச் செய்து காட்டும்போது பயங்கரத்தின் நிழலாட்டம் ஹால் முழுவதும் குடிகொள்வதைக் காண்கிறோம். தரமான நடிப்பின் எல்லையில் போய் திடமாக நின்று அவர் பேய்ச் சிரிப்பு சிரிக்கும் அழகே அழகு!

நான்கு ஆண்டுகளுக்குமுன் மியூஸியம் தியேட்டரில் முதன் முதலாக நான் அந்நாடகத்தைப் பார்த்தேன். இப்போது இன்னும் சில நல்ல அபிவிருத்திகள் அதில் செய்யப்பட்டுள்ளன.

ஸி. ஜி. விஸ்வநாதன் உடல் அப்போதைக்கிப்போது பருமனாகிவிட்டதால், அவரது நடிப்பு வேகம் கொஞ்சம் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது. ஆனால், அந்த வேஷத்தில் வேறு யாரும் அவ்வளவு தத்ரூபமாக நடிக்க முடியுமா என்பது சந்தேகமே.

டி. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார், வி. வி. ஜெயராமன், பி. டி. சம்பத்கம், ஏ. என். பொன்னம்பலம், டி. எஸ். சேஷாத்ரி, ஸ்ரீமதி காமினி, இந்திரா தேவி, உஷா, சரஸ்வதி முதலானவர்களும் அந்நாடக வெற்றிக்கு அருமையாக ஒத்துழைத்தனர்.

'எவ்வளவு தடவை பார்த்தாலும் அலுக்கவில்லை' என்று 'ஹிந்து' ஸ்ரீ பார்த்தா அன்றைய நாடகத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பாராட்டினார். இதுவரை பதினைந்து தடவை அந்நாடகம் நடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பன்முறை நடிக்கப்படலாம். அவசியம் பார்க்க வேண்டிய அமெச்சூர் நாடகங்களில் அதுவும் ஒன்று.

விழாவின் கடைசி நாள் வி. வி. ஜெயராமன் அழகாக வசனம் அமைத்துள்ள 'பாதுகா பட்டாபிஷேகம்' நாடகத்தை குழுவினர் நடித்தனர். புராண நாடகம் நடிப்பது மகா சிரமம். ஆனால், அக்குழுவில் ஸ்ரீ டி. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் பயிற்சியாளராகவும் டைரக்டராகவும் இருக்கும்வரை அவர்களுக்கு எதுவுமே சிரமம் இல்லையெனலாம். அவர்கள் பெற்ற அரும் பாக்கியம் அது. அக்குழுவினர் இதுவரை சுமார் இருபத்தைந்து நாடகங்கள் நடித்துள்ளனர். அவற்றுக்கெல்லாம் சிகரமாக விளங்குகிறது 'பாதுகா பட்டாபிஷேகம்'.

'ராம'ராக டி. எஸ். சேஷாத்ரி நல்ல அனுபவ ஆற்றலுடன் பிரமாதமாக நடிக்கிறார். 'தசரதர்' டி. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்கார் தம் உயர்தர நடிப்பின்மூலம் நம் நெஞ்சை அள்ளுகிறார். எஸ். ஆர். வீரராகவன், டி. எஸ். பத்மநாபன், வி. வி. ஜெயராமன், கே. ராஜகோபால், காமினி முதலியவர்களும் தத்தம் திறமையை நன்கு வெளிக்காட்டினர்.

குழுவினர் தங்களது நாடகத் தந்தை ஸ்ரீ டி. எஸ். கோபாலஸ்வாமி அய்யங்காருக்கு விழா முடிவில் நேர்த்தியானதொரு சால்வை போர்த்தி, வெள்ளிப் பேழையொன்று பரிசளித்துக் கௌரவித்தனர். தலைசிறந்த நாடகம் நடிக்கும் அமெச்சூர் நடிகர் குழுவுக்கு அவரது பெயரால் சுழல் கேடயம் ஒன்று பரிசளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக நாடகத் தொண்டு புரிந்துவரும் ஸ்ரீ அய்யங்கார், மிகவும் அடக்கமான நற்குணம் படைத்தவர். இதுவரை 500 நாடகங்களில் நடித்துள்ளார். ஏறக்குறைய 200 நாடகங்களில் பயிற்சியாளராகவும் விளங்கியவர். தமிழில் மட்டுமின்றித் தெலுங்கு நாடகங்களிலும் அவருக்கு நல்ல அனுபவம் உண்டு. பெண் வேடங்கள் தாங்குவதில் அலாதி மோகம் அவருக்கு.

ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்தினம் விழாவுக்கு அன்று தலைமை வகித்து ஸ்ரீ அய்யங்காரின் அருமை பெருமைகளை சிலாகித்துப் பேசினார். பல அமெச்சூர் நடிகர் குழுக்களின் சார்பாக அப்பெரியாருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. அன்னார் நீடூழி வாழ்க.

குழுவின் தலைவர் ஸ்ரீ கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப், உபதலைவர் ஸ்ரீ ஏ. என். பொன்னம்பலம் ஆகியவர்கள் கொடுத்த ஊக்கமும், இதர அங்கத்தினர்கள் காட்டிய உற்சாகமும் அந்நாடக விழாவை மிகவும் வெற்றியடையச் செய்துள்ளன.

★

# இலங்கை கீதம்

## கொலை செய்ய நடந்த சதிக்கூட்டம்

பண்டாரநாயகா படுகொலையைப் பற்றியும் பார்லிமெண்ட் விவாதம் சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டது. பதவியிலிருந்து நீக்கப் பட்ட ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தனாவின் வீட்டில் களனி புத்த ஆலய பிரதம குரு புத்த ரஹிதி தேரோவின் தலைமையில் ஒரு சதிக் கூட்டம் நடைபெற்றதாயும் அக் கூட்டத்தில் பிரதம மந்திரி தஹநாயகா வும் இருந்தாரென்றும் எதிர்க் கட்சித் தலைவர் பார்லிமெண்டில் பகிரங்கமாகவே குற்றஞ் சாட்டினர். காலஞ் சென்ற பிரதமர் உயிருடனிருக்கும் போதே ஸ்ரீ தஹநாயகா எதிர்காலப் பிரதமர் என்று வர்ணிக்கப்பட்டதையும் அவரைப் பிரதம மந்திரியாக்குவதாகப் புத்த ரஹிதி தேரோ வாக்களித்ததையும் அவர் மேலும் சுட்டிக் காட்டினர். ஸ்ரீ நிமல் கருணதிலகா என்பவர் பிரதமரைக் கொலைகாரனென்றே பகிரங்கமாகப் பேசினர். இந்தக் குற்றச் சாட்டுகளெல்லாம் அநியாயமானவைகளென்றும் அவற்றைப் பற்றி விசாரிக்க பாரபட்சமற்ற ஒரு கமிட்டியை நியமிக்க தாம் தயாராயிருப்பதாயும் அக்கமிட்டியின் தீர்ப்பை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ளத் தாம் தயாரென்றும் தம்மீது கூறப்படும் புகார்கள் உண்மையாயின் பிரதம மந்திரி பதவியைத் துறந்துவிடத் தயாரென்றும் ஸ்ரீ தஹநாயகா கூறினர். சதிக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்ட ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன மந்திரி பதவியிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டுவிட்டதுடன் புத்த ரஹிதி தேரோ என்பவரும் கைது செய்து ரிமாண்டில் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இலக்கியத்தின் மூலம் வகுப்பு ஒற்றுமை

இலக்கியத்தின் மூலமாக சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்த ஸ்ரீ லங்கா ஸாஹித்திய மண்டலம் சில நல்ல யோசனைகளைச் செய்து வருகின்றது. முதலாவதாக அடுத்த வருட ஆரம்பத்தில் தமிழ் சிங்களப் புத்தகங்கள் காட்சியொன்றை நடத்துவதற்கு அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். அதோடு பல அரிய தமிழ் நூல்களைச் சிங்களத்திலும் சிங்கள நூல்களைத் தமிழிலும் மொழி பெயர்த்த ஒரு மொழி இலக்கியங்களை மற்ற மொழி பேசுவோர்களும் நன்கு அறிந்துகொள்ள ஒழுங்குகள் செய்யப் பட்டு வருகின்றன. திருக்குறளை சிங்களத்தில் மொழி பெயர்க்கவும் மகா வம்சத்தையும் சலாஹினி சந்தேசயாவையும் தமிழில் மொழி பெயர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இம்முயற்சி நாட்டில் வகுப்பு நல்லுறவை ஏற்படுத்தப் பெருமளவு உதவுமென்று நம்பப்படுகிறது.

## ஒரே நேரத்தில் பிரார்த்தனைக் கூட்டம்

ஒவ்வொரு சமயத்தவர்களுக்கும் பிரார்த்தனை நேரமென்று ஒன்று இருக்கிறது. முஸ்லீம்கள் வெள்ளிக்கிழமை தோறும் முற்பகலில் தவறாது மசூதிகளுக்குச் செல்லுகிறார்கள். கிறிஸ்தவர்களோ ஞாயிற்றுக்கிழமை காலைகளில் திருச் சபை தேவாலயங்களுக்குப் போகத் தவறுவதில்லை. என்ன வேலையிருந்தாலும் இவ்விரு சமயத்தவர்களும் பிரார்த்தனை நேரத்தில் அவரவர்களது தொழுகை ஸ்தலங்களிலே தவறாமல் சமூகம் கொடுக்கின்றனர். இது அவர்களுக்கிடையில் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்தப் பெருமளவு உதவுகிறது. இதேபோல இலங்கை பூராவிலும் உள்ள இந்துக்கள் வாரத்தில் ஒருநாள் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் தங்கள் தங்களது ஊர்களிலுள்ள குறிப்பிட்டதொரு ஸ்தலத்தில் கூடிப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும் இதற்கு வழி வகுக்க வேண்டுமென்றும் ஸ்ரீ ஸி. பி. மோடி என்பவர் இந்து சமய விவகாரக் கமிட்டிக்கு ஒரு யோசனை சொல்லியிருக்கிறார். அந்த யோசனையை ஆராய இந்து விவகாரக் கமிட்டி ஒரு உப கமிட்டியை நியமித்திருக்கிறது. இந்த யோசனை செயல்பட்டால் இந்துக்களிடையில் ஒரு புதிய ஒற்றுமையும் கட்டுப்பாடும் ஏற்படுமென்று கூறப்படுகிறது.

# உங்கள் காலபலன்

பி.வி.ராவ்

**1959ஞு நவம்பர்மீ 17உ (விகாரிஞு கார்த்திகை 1உ மு. 29-ந்தேதி) முதல் டிசம்பர்மீ 15-ந் தேதி வரை.**

—*—

[கீர்க்கண்ட பலன்களை சந்திரராசி, சூர்ய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்]

## இலை உதிர்காலத்தில் ஜனித்தவர்கள்

இலை உதிர் காலத்தில் அதாவது செப்டம்பர் 24—லிலிருந்து டிசம்பர் 21—ந் தேதிக்குள் பிறந்தவர்களுக்கு அக்டோபர் 20—ந் தேதியிலிருந்து நவம்பர் 20—ந் தேதிவரையில் மிகவும் அதிருஷ்டமான காலம். கூடியமட்டும் முக்கிய காரியங்களை இக்காலத்தில் செய்து முடிக்க அவர்கள் முயற்சிக்க வேண்டும். இது அவர்களுக்கு அதிருஷ்டகரமான காலம். வருஷத்தின் மற்ற பாகங்களைவிட இக்காலத்தில் அவர்கள் வாழ்க்கையின் தரத்தை நன்கு அறிந்துகொள்வார்கள். பொதுவாக அவர்களுக்குச் சிறந்த காலம் மத்திய வயதிலும் அதற்குப் பின்னரும்தான்.




அஸ்வினி, பரணி
கிருத்திகை
(முதல் பாதம் வரை)

மொத்தத்தில் இந்த ராசிக்காரர்களுக்கு கிரக அமைப்பு வசதியாயில்லை. ராசிநாதன் 8க்கு மாறுவது பொதுவாக வெற்றிக்கு அறிகுறியில்லை. சூரியன் 8—ல் குரு, புதனுடனும் நவம்பர் 24—ந் தேதிக்குப்பின் செவ்வாயுடனும் சேர்ந்திருப்பது உங்கள் காரியங்கள் சுலபமாகப் பூர்த்தியடைய தோதில்லை. 8—ல் கிரகங்கள் சேர்க்கை, முக்கியமாக நவம்பர் 24—ந் தேதிக்குப்பின் முக்கிய செல்வ நடவடிக்கையைக் குறிக்கிறது. எதிர் பாராத லாபம் அல்லது உயில்மூலம் சொத்துப் பெறலாம். உங்கள் பெயருக்கு மாசு உண்டுபண்ணும் வகையில் கடுமையான புகார்கள் அல்லது குற்றச்சாட்டுகள் செய்யப்படும். வயிற்றுக் கோளாறு முதலியவற்றால் தேகாரோக்யம் கெடும். முடிவாகக் குடும்பத்தில் இம்மாதம் சௌஜன்யமிராது. உங்கள் விவகாரங்களைச் சீர்படுத்திக்கொள்ளவும் இக்கிரகங்கள் சந்தர்ப்பம் அளிக்கக் கூடும். உங்களிடம் ஒப்படைக்கப்

## 1959-நவ. 17உ கிரஹநிலை

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந்திரன் | |
| | 24-11-59 செவ்வாய் விருச்சி-பி. 2-12-59 சுக்ரன் துலாத்தில்-பி. 3-12-59 புதன் வக்ர நிவர்த்தி | | உரா |
| | | | |
| சனி | புத-வக் குரு சூர்யன் | செவ். நெப்டியூ | சுக், ராகு |

பட்ட பிறர் பணம், மூத்தோர் தேக அசௌக்கியம், மனைவியின் தேக அசௌக்கியம்பற்றிய கவலை அல்லது மனைவியினிடமிருந்து பிரிவு ஆகியவற்றைக் குறிக்கிறது. உங்கள் முயற்சிகளில் எல்லாம் பிறர் ஒத்துழைப்பு அல்லது அனுதாபத்தை எதிர்பார்க்கும்படி இருக்கும். தூரப் பிரயாணம் நேரலாம். சுக்ரன் தனது சொந்த வீடான 7-ம் வீட்டிற்கு வரும்போது மாதத்தின் இரண்டாம் பகுதி சிறிது மேம்படலாம். சாதுர்யம், சமயோசிதம், ஒத்துழைப்பு மனப்பான்மை ஆகியவற்றினால் மற்றவர்களிடமிருந்து சௌகரியங்களைப் பெறலாம்.

செல்வ விஷயம்:- தனாதிபதி முதல் பாதியில் 6-ம் வீட்டில் இருப்பது பலத்த பணமுடையை உண்டு பண்ணும். தாத்காலிக கடன் எழுப்ப நேரிடும். இரண்டாம் பாதி அதிக சௌகரியமானது. செல்வ விஷயத்தில் ஒரு நிலையை உண்டுபண்ணும். ஸ்திரீகள், பொதுஜன தொடர்பு, வியாபார சம்பந்தம் ஆகியவைமூலம் பண வரத்துண்டு. முன்னைவிடச் செலவு அதிகரிக்கும். இரண்டாம் பாதியிலிருந்து பல்வேறு வகைகளில் வெற்றிகரமாகப் பண வரத்துக்கு வழி தேடலாம்.

குடும்ப சூழ்நிலை:- முதல் பாதியில் குடும்ப சௌஜன்யமில்லை. இரண்டாம் பாதி சௌகரியத்தை அளிக்கும். ஒரு விவாக விஷயமாக அக்கறை தோன்றும். புதிய தொடர்புகள் ஏற்படும். இரண்டாம் பாதியிலிருந்து தொடர்பு ஏற்படும். பிறர்மூலம் லாபத்தைப் பெறலாம்.

உத்தியோகம்:- சனியின் பார்வை குறிப்பாக இரண்டாம் பாதியிலிருந்து எஜமானர்கள் பிரியத்தைப் பெற அதிக வசதியளிக்கும். மறைமுகமான பண வரத்துக்கு இடம் உண்டு. உத்தியோக அபிலாஷைகளில் தகராறுக்கு இடம் வைத்துக்கொள்ளக் கூடாது.

வியாபாரிகள்:- எதிர்ப்பு, போட்டி, செல்வக் கஷ்டம் காரணமாக முதல் பாதி லாபகரமாகவிராது. அதிக லாபம் பெறும் வகையில் இரண்டாம் பாதி அதிருஷ்டகரமாகும். இரண்டாம் பாதியிலிருந்து கூட்டு வியாபாரம் நல்ல வருவாய் அளிக்கும்.

அதிருஷ்ட தினங்கள்:- நவ. 17 18 20 21 27 30, டிச. 1 4 5 9 11 16.

சந்தேக தினங்கள்:- நவ. 19 28, டிச. 2 3 6 8 13 15 17.




கிருத்திகை (2, 3, 4 பாதங்கள்), ரோஹிணி, மிருகசீரிஷம் (1, 2 பாதங்கள் வரை)

7-ம் வீட்டில் அதிகக் கிரகங்கள் கூடி வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பலத்த எதிர்ப்பு உண்டுபண்ணும். 7-ம் வீட்டில் சூரியன் மற்றக் கிரகங்களுடன் சேர்ந்திருப்பது குறிப்பாக நவம்பர் 24-ந் தேதிக்குப்பின் உங்கள் காண்டிராக்ட் வேலை, பொது தொடர்பு, வேலை விஸ்தரிப்புகளில் தொல்லை, வீட்டிலோ வெளியிலோ கூட்டு முயற்சிகளில் தோல்வி ஆகியவற்றைக் குறிக்கின்றன. ஆகவே, மிகுந்த மனப் பரபரப்பு, தேகப் பரபரப்பு காணப்படும். சிலர் விஷயத்தில் ஒரு தன்னம்பிக்கை ஏற்பட்டு, எதிராளிகளிடையே உங்கள் உரிமையை நிலைநிறுத்திக் கொள்ள வசதி உண்டுபண்ணும். 7-ல் உள்ள சுப கிரகங்கள் உங்கள் எதிராளிகளைச் சமாளிப்பதில் உதவும். 6-ல் செவ்வாய், 8-ல் சனி, 7-ல் சூரியன் வீட்டிலும் வெளியிலும் உங்களுக்குச் சோதனையைத் தரும். மௌனம், பொறுமை மிகத் தேவை. எதிராளிகளைச் சமாளிப்பதில் மிகுந்த சாதுர்யம் அவசியம். 7-ல் குரு, புதன் இருப்பது படிப்படியான மாறுதல் அல்லது அபிவிருத்தியைக் குறிக்கிறது. புதிய படிப்பு அல்லது அறிவு பெறலாம். டிசம்பர் 2-ந் தேதிவரையில் ராசிநாதன் 5-ல் இருந்து சனியினால் பார்க்கப்படுவதாலும் அதற்குப் பிறகு 6-ம் வீட்டிற்கு மாறுவதாலும் மன நிம்மதியின்மை, பிடிவாதம், சில சமயங்களில் ஆத்திரப்பட்ட போக்கு ஆகிய குணங்களைக் குறிக்கிறது.

செல்வ விஷயம்:- 2-ம் வீட்டு விஷயங்கள் அதாவது செல்வ விஷயம் இம்மாதத்தில் அதிகம் வற்புறுத்தப்படுகிறது. விசேஷக் கவனத்துடன் செல்வ விஷயங்களைத் திருத்தியமைக்கும் தூண்டுதல் காணப்படும். புதன், குரு சேர்க்கை பண விஷயங்களுக்குச் சௌகரியமானது. எதிர்பாராத தனப் பிராப்திக்கு இடமுண்டு. மூத்தோர், தூர தேச வியாபாரம், கோர்ட்டுமூலம் உங்கள் எதிரிகள் ஆகியோர்மூலம் பண வரத்து.


குடும்ப சூழ்நிலை:- நீச சுக்ரன் முதல் பாதியில் குடும்ப சௌஜன்யத்தை அளிப்பதற்கில்லை. 7, 8-ல் உள்ள கிரகங்கள், ராசிக்குள்ள செவ்வாயின் பார்வை ஆகியவைகளினால் விவாக உறவு அல்லது தாம்பத்ய வாழ்க்கையில் கலக்கம் உண்டுபண்ணும். ஒரு ஸ்திரீயால் தொல்லை ஏற்படும். கூடியமட்டும் கோர்ட்டு விவகாரத்தைத் தவிர்க்கவும்.

உத்தியோக விஷயம்:- 10-ம் வீட்டை சனி பார்ப்பதனால் உத்தியோக அபிலாஷைகளுக்கு அனுகூலமுண்டு. தாமதப்பட்டேனும் வெற்றியேற்படும். விவாகமாகாத ஸ்திரீ, புருஷர்களுக்கு விவாகம் நேரலாம்.

வியாபாரிகள்:—இது அதிருஷ்டகரமான மாதம். கூட்டு வியாபாரம் லாபகரம். வெளிநாட்டு வியாபாரம் எதிர்பாராத வகையில் அபிவிருத்தி அடையும். புதிய கூட்டு தென்படும்.

அதிருஷ்ட தினங்கள்:-நவ. 17 18 20 21 27 30, டிச 1 4 5 9 11 13 14.

சந்தேக தினங்கள்:- நவ. 19 22 29, டிச. 2 3 8 15 16.




மிருகசீரிஷம் (3, 4 பாதங்கள்), திருவாதிரை, புனர்வசு (1, 2, 3 பாதங்கள் வரை)

இம்மாத கிரக அமைப்பு உங்கள் விவகாரங்களில் வசதியான போக்கைக் காட்டவில்லை. வேலை, உத்தியோகம், ஆரோக்யம் ஆகிய விஷயங்களில் விசேஷ கவனம் செலுத்தினால் அல்லது இம்மாத கிரக சேர்க்கை அபிவிருத்தி உண்டு பண்ணாது. சூரியன் 6-ம் வீட்டில் சஞ்சரிப்பதால் இம்மாதத்தில் பாக்கியாகவுள்ள பல பிரச்னைகள் சாதகமாக முடிய ஏது உண்டு. 6-ம் வீட்டில் உள்ள கிரகங்கள், முக்கியமாகச் செவ்வாயும் அந்த தனது வீட்டிற்கு மாறும்போது ஒரு புதிய நம்பிக்கையையும் தன்னுறுதியையும் உண்டுபண்ணி, எதிர்பார்த்த அபிவிருத்திக்கு இடம் அளிக்கும். ஆனால், சாதுர்யம், ஒத்துழைப்பு மனோபாவம் தேவை. 6-ம் வீட்டிலுள்ள கிரகங்கள் 12-ம் வீட்டைப் பார்ப்பதால் உங்கள் முயற்சிகளில் வெற்றி ஏற்படுமாவென்ற சந்தேக புத்திதான் உங்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து. காரியங்களை நீங்களே கெடுப்பதால் ஏமாற்றம் ஏற்படக்கூடும். உங்கள் சூரியபுத்திக்கேற்ற துறைகளைத் தேடுவதில் சோர்வு காணப்படும். ராசிநாதன் 6-ம் வீட்டில் இருந்து நவம்பர் 3-ந் தேதியிலிருந்து பின்நோக்குவதால், எதிர்பார்க்கும் வெற்றிகளில் தடங்கல் செய்விக்கலாம்.

செல்வ விஷயம்:- லாபாதிபதி செவ்வாய் 11-ம் வீட்டைப் பார்ப்பதால், இங்குமங்கும் திடீர் லாபம் ஏற்படலாம். அத்துடன் நண்பர்களால் உதவியும் கிட்டும். சுக்ரன் 5-ம் வீடாகிய தன் வீட்டிற்குச் செல்லும்போது இந்த வசதி அதிகரிக்கும். அப்போது முன்னைவிட அதிக தைர்யமும் பிறக்கும். இக்காலத்திலிருந்து வியாபாரத்திலும் ஷேஷ்யத்திலும் அதிகக் கூடுதலைக் காணலாம். புத்திரர்களில் ஒருவர் எதிர்பார்த்தபடி முன்னேறுவார். இருப்பினும் இம்மாதத்தில் கடன்படுவதைத் தவிர்க்க முடியாது.

குடும்ப சூழ்நிலை:- சுக்ரன் ராகுவுடன் சேர்ந்திருப்பதும் சனியால் இவர்கள் பார்க்கப்படுவதும் குடும்ப வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக்காது. முதல் பாதி கலகங்களால் தொல்லை விளைவிக்கும். இரண்டாம் பாதி மகிழ்ச்சிகரமாயும் வசதியாகவுமிருக்கும்.

உத்தியோகம்:- உத்தியோக விஷயங்களில் அபிலாஷை கைகூட இது ஏற்ற மாதமல்ல. உத்தியோகத் துறையில் கலக்கமேற்பட்டு மேலதிகாரிகளின் அபிமானத்தைப் பெறவியலாது. வேலைக்காரர்களால் தொல்லை உண்டு.

வியாபாரிகள்:- 7-ல் சனியும், 6-ல் மற்ற கிரகங்களும் இருப்பது வியாபாரப் போக்கில் தடைகளை உண்டு

பண்ணும். சுக்ரன் தனது வீட்டிற்கே வருகிறபடியால் இரண்டாம் பாதி சற்று மேன்மைப்படும். வெளிநாட்டு வியாபாரத்திற்கு ஆக்கமுண்டு.

அதிருஷ்ட தினங்கள்:— நவ. 17 18 20 21 27 28 29, டிச. 1 4 5 6 9 13.

சந்தேக தினங்கள்:— நவ. 22 26, டிச. 2 3 11 14 15 16.



## கடகம்

**புனர்வசு (4-ம் பாதம்), பூஷ்யம், ஆயில்யம் வரை**

கிரகங்கள் சாதகமாக அமைந்திருப்பதால் உத்தியோகம், நண்பர்கள், யோசனையாளர், குழந்தைகள் மூலம் உங்கள் நலன்களைப் பெருக்கிக் கொள்ளலாம். சூரியன் 5-ம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் அதிக அக்கறை, குழந்தைகள், உறவினர்களிடம் பரிவு தோன்றும். எதிர்கால வாழ்க்கையில் பிடித்தமான மனோராஜ்யம், உணர்ச்சிப் பெருக்கு, ஹேஷ்யங்களில் மன சஞ்சாரம் சம்பவிக்கும். அவசரப்பட்ட நஷ்டமுண்டாக்கும் ஹேஷ்யங்கள் தோன்றும். சொந்த ஊர் சம்பந்தமான உத்தேச திட்டம் அல்லது தொழில் சம்பந்தமான அதிக அக்கறை கவனம் பெறும். அதிக சுதந்திரம், சுகானுபவங்களுக்கான சந்தர்ப்பங்கள், மனதிற்குப் பிடித்த நோக்கங்களில் நாட்டம் இவை தென்படும். காதல் சம்பந்தமான உணர்ச்சி மேலிடும், தவறான நண்பர்கள் வழி போக வேண்டாம். சுக்ரன் 4-ம் வீடு போனதும் நண்பர்கள் அதிகரித்து குடும்ப சௌக்கியம் பெருகும்.

செல்வ விஷயம்:— தனாதிபதி சூரியன் 5-ம் வீட்டில் மற்ற கிரகங்களுடன் சேர்ந்திருப்பதால் செல்வ விஷயமான காரியங்கள் சுலபமாகத் தீரும். இரண்டாம் பாதியில் குறிப்பாக சுக்ரனும் செவ்வாயும் தங்கள் வீடுகளில் இருக்கும்போது இந்த சௌகரியம் தென்படும்.

குடும்ப சூழ்நிலை:— முதல் பாதியை விட இரண்டாம் பாதி மேம்படும். குழந்தைகள் விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்த நேரும். குழந்தைகளின்று எதிர்பார்த்தபடி முன்னேற்றம் அடைந்து, அதனால் மகிழ்ச்சி உண்டாகும். காதல் விஷயங்களில் மன வெழுச்சிக்கு இடம் கொடுக்கலாகாது. இல்லாவிடில் பின்னர் வருந்த நேரும். இம்மாதத்தில் வீட்டுப் பிரச்னை அல்லது இட மாறுதல் வற்புறுத்தப்படுகிறது.

உத்தியோக விஷயம்:—உத்தியோகத் துறையில் மனோபீஷ்டங்களுக்குச் சாதகமான மாதம். நீங்கள் செய்யும் வேலையில் எஜமானருக்குத் திருப்தி ஏற்படும். எதிர்ப்பின்றி மேல் பிரமோஷன் சம்பவிக்கலாம்.

வியாபாரிகள்:— வழக்கத்தையும் மீறி இம்மாதம் லாபகரமாகவிருக்கும். ஹேஷ்யங்கள் வெற்றிகரமாக முடியும். புதிய சாமான்களில் வியாபாரம் கைகூடும். கூட்டு வியாபாரம் சுபிக்ஷமாகும்.

அதிருஷ்ட தினங்கள்:— நவ. 18 20 21 27 29 30, டிச. 1 4 5 9 11 13 15 16.



## சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் (1-ம் பாதம் வரை)**

உங்கள் விவகாரங்களில் இம்மாதத்தில் சாதகப் போக்கைக் காணலாம். குடும்ப விஷயங்கள், சொத்து பிரச்னை, சூழ்நிலை நண்பர்கள் உறவினர்கள், குழந்தைகள் க்ஷேமம் ஆகியவற்றில் அபிவிருத்தியைக்காட்டுகிறது. முக்கியமாக நவம்பர் 24-ந் தேதிக்குப் பின்னர் இவை எடுப்பாகவிருக்கும். குரு 4-ல் இருப்பதால் தப்த ஹிருதயத்தைக் காட்டுகிறது. அதாவது உங்கள் கட்டுக்கு அடங்காது பொதுவாக மனத் தொந்தரவு ஏற்படும். 4-ல் சூரியன் குடும்ப வாழ்க்கை, குடியிருப்புப் பிரச்னை, சூழ்நிலையில் ஜனப் பிரியம் ஆகியவற்றில் புதிய அனுபவங்களைத் தோற்றுவிக்கும். மூத்தோர், பெற்றோர், குடும்பத்தினர் உறவுபற்றியும் குறிக்கிறது. முடிவு பெறாத காரியங்கள் இம்மாதம் முடிவு பெறும். சமூக விஷயங்களில் அதிக அக்கறை. 10-ம் வீட்டிற்குடைய சுக்ரன் நீச ராசியில் இருப்பதாலும், செவ்வாய் மற்ற கிரகங்களுடன் 10-ம் வீட்டைப் பார்ப்பதாலும், உத்தியோக விஷயங்களில் பொறுமையின்மை அல்லது முரட்டுத் தனத்தால் எந்தப் பிரச்னையையும் வற்புறுத்தக்கூடாது.

செல்வ விஷயம்:— 2-ம் வீட்டை சனி பார்ப்பதால் பண விவகாரங்களில் கவலையற்றிருப்பதற்கில்லை. குடும்பத்திலும் தொழிலிலும் எதிர்பாராத செலவினங்கள் சம்பவிக்கும். சிம்ம ராசிக்காரர்களுக்கு பண முடையும், திடீரென அதில் சிரம நிவர்த்தியும் அடிக்கடி காணப்படுவது இம்மாதம் அதிகம் வற்புறுத்தப்படுகிறது.


குடும்ப சூழ்நிலை:— நிச்சயமற்ற எரிச்சல் ஊட்டக்கூடிய சூழ்நிலை இருப்பினும் இம்மாதம் குடும்ப வாழ்க்கைக்கு அதிக சௌகரியமாகவிருக்கும். ஆரோக்ய விஷயத்தில் அதிக அக்கறை செலுத்த நேரிடும். முந்திய மாதத்தில் நோயாளிகளாகவிருந்தவர்கள் இம்மாதம் சௌகரியம் அடைவார்கள். சிலருக்கு வீடு மாற்றம் சம்பவிக்கும்.

உத்தியோக விஷயம்:— உத்தியோக விஷயமான பல கவலைகள் தென்படும். செவ்வாயின் பார்வை அநாவசிய சிக்கல் அல்லது தாத்காலிக ஏமாற்றத்தை உண்டுபண்ணும். முதலீடு லாபகரமாகும். அதிகாரிகள் ஆதரவு காட்டும்.

வியாபாரிகள்:— இம்மாத பலன்கள் கலப்பாகவிருக்கிறது. முதல் பாதி எதிர்பார்த்தபடி வசதியாக இருந்து இரண்டாம் பாதி வெளிநாட்டு வியாபாரத்திற்கு (ஏற்றுமதி இறக்குமதி) அதிர்ஷ்டகரமாகும். எண்ணெய், தங்கம், உலோகங்கள் நல்ல லாபத்தைக் கொடுக்கும்.

அதிருஷ்ட தினங்கள்:— நவ. 17 18 20 21 27 28 29 30, டிச. 1 4 5 9 13 17.

சந்தேக தினங்கள்:— நவ. 19 23, டிச. 2 3 8 11 15 16.

**ஹீரா**

**தையல் மிஷீன்**

உறுதிக்கும், நேர்த்திக்கும், நீடித்த உழைப்பிற்கும் பெயர் பெற்றது. சுத்தமான தையல். எல்லா வகைத் துணிகளையும் எளிதில் தைக்கலாம். வாங்கிப் பாருங்கள்.

2 வருஷ உத்தரவாதம்.

**எம். எம். ராவ் & கோ.,**

(பி ஆர். & ஸன்ஸ் அருகில்) 194, மவுண்டு ரோடு, சென்னை-2.

17/236, என். எச். ரோடு, கோயமுத்தூர்.

டீலர்கள்:—P. T. ராம ராவ், 190/1, லாங் பஜார், வேலூர், (வ. ஆ.) R. K. வாசுதேவன், 38-A, பஜார் வீதி, திண்டிவனம்; V. S. கோவிந்தராவ் டெய்லர், பஜார் தெரு, பவானி; S. S. நாதன் & பிரதர்ஸ், டெய்லரிங் ஹால், பஸ் ஸ்டாண்டு, சித்தூர் (ஆந்திரா)




## கன்னி

**உத்திரம் (2, 3, 4 பாதங்கள்), ஹஸ்தம், சித்திரை (1, 2 பாதங்கள் வரை)**

இம்மாதப் பலன்கள் கலப்பாகவிருக்கின்றன. இம்மாதத்தில் ரொம்ப முக்கியமாகக் கருதக்கூடியது 3-ம் பாவம். அதில் முக்கியமான கிரகங்கள் கூடியிருக்கின்றன. நெருங்கிய உறவினர், தாயார், செலவினங்கள், எழுதும் திறன், பிரயாணம் ஆகிய விஷயங்களில் புதன் அதிகக் கவனஞ் செலுத்தச் செய்வார். (2) குரு மனம் உடையச் செய்து அவநம்பிக்கையை உண்டு பண்ணுவார். சகோதரர்கள் உறவில் கலக்கம் ஏற்படும். (3) சூரியன் பல்வேறு பிரச்னைகளையும் தீர்க்க உதவுவார். (4) கடைசியாக 3-ல் செவ்வாய் பரபரப்பு, திடீர் நடவடிக்கை, உறவினர்பற்றிக் கடுமையான வார்த்தைகள் இவற்றைக் குறிக்கின்றது. இவையெல்லாம் உங்களது நித்திய வாழ்க்கையையே பாதிக்கும். ஆனால், ஒரு தைர்யமும் கூடவே இருக்கும், உத்தேச காரியப் பூர்த்திக்கான கடிதப் போக்குவரத்து நடக்கும். 3-ம் வீட்டில் சூரியன் இருப்பது அக்கம்பக்கத்தில் உள்ளோர் உறவைக் குறிக்கிறது. பத்திரிகையாளர் அல்லது எழுத்தாளர் முறையில் இது அதிகம்பிரதிபலிக்கும். சகோதரர்களில் ஒருவர் உங்களுடைய விசேஷக் கவனத்தைப் பெறுவார்.

செல்வ விஷயம்:— தனாதிபதி நீசம் பெற்றிருப்பது பண விஷயத்தில் லாபகரமாகவிராது. பண முடை அதிகம் தெரியவரும். எதிர்பாராத செலவினங்கள் திடீரென ஏற்படும், கண் பார்வை பாதிக்கப்படும்.

குடும்ப சூழ்நிலை:— 4-ல் சனி குடும்ப சௌஜன்யத்திற்கு வசதியில்லை. உங்கள் ஆரோக்யம், மனைவியின் ஆரோக்யம் பாதிக்கப்படும். அடுத்த மாதம்வரையில் மூத்தவர்களால் தொல்லை உண்டு.

உத்தியோகம்:— 24-ந் தேதிக்குப் பின் சனி செவ்வாய் பார்வை தொழிலில் ஏமாற்றத்தை உண்டு பண்ணும். மேலதிகாரி வேறுபடுவார். இம்மாதம் மேல் பதவிக்கு இடமில்லை. இரண்டாம் பாதி முதல் பாதியைவிட அதிக தைர்யமளிக்கக் கூடும்.

வியாபாரிகள்:— இது சாதகமான மாதம் இல்லை. வியாபாரத்தில் சகஜமான வெற்றி பெறக் கடிதப் போக்குவரத்துதான் ஏற்றது. அதிலும் முக்யமாக முதல் பாதி முடிந்தபின், அதன் பின்னர் செல்வநிலை சீர்படும். காரியாலய அலுவல் முறையில் தீவிர மாறுதல் காணப்படும்.

அதிருஷ்ட தினங்கள்:—நவ. 18 21 27, டிச. 1 4 5 9 11 14 16.

சந்தேக தினங்கள்:— நவ. 17 28 29, டிச. 2 3 8 13 17.




## துலாம்

**சித்திரை (3, 4 பாதங்கள்), சுவாதி, விசாகம் (1, 2, 3 பாதங்கள் வரை)**

பொதுவாக சுபிக்ஷத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இம்மாத முக்கிய நிகழ்ச்சிகள் இரண்டாம் வீட்டைப் பொறுத்தவை. இம்மாதத்தில் அதில் மூன்று நான்கு கிரஹங்கள் சேர்கின்றன. இக்கிரஹங்கள் செல்வவிஷய ஏற்பாடு, நடைமுதல் அனுபவம் இவற்றில் பிரதிபலிக்கும், புதிய அறிவும், வருவாய் பற்றிய புதிய துறைகளை ஆராய்தலும் நிகழும். மற்ற கிரஹங்களுடன் சேர்ந்து சூரியன் இரண்டாம் வீட்டில் இருப்பதால் உங்களைச் சுற்றியுள்ள கெடுதல்களுக்கெல்லாம் அது ஒரு பாதுகாப்பாகவிருக்கும். கண் பார்வை பாதிக்கப்படலாம். புதிய ருசிகளும், புதிய படிப்பும் பெறலாம். குடும்பத்தில் இக்கிரஹங்கள் இருப்பதால் குடும்ப விவகாரங்களில் பிளவும், சச்சரவுகளுக்குப் பரிகாரமும் காணப்படும். செவ்வாய் 24-ம் தேதி தம் வீட்டில் பிரவேசிக்கிறபடியால் பண விவகாரத்தில் திருப்திகரமான தீர்வு காணலாம். கோர்ட்டு தொல்லை ஏதாகிலும் இருந்தால் அது தீரும். குடும்பத்தினருடன் தகராறுகள் இருந்தால் அதுவும் தீரும். 2-ம் வீட்டில் கிரஹங்கள் சேர்க்கை ஒரு உற்சாகத்தையும் தைர்யத்தையும் உண்டுபண்ணும். அவற்றைக் கொண்டு அவ்வப்போது தோன்றும் நிலைமைகளை நன்கு பரிசீலிக்க முடியும். விருப்பம் கைகூட இடமுண்டு. பொதுவில் கிரஹங்கள் அமைப்பு உங்களுக்கு ஒரு பெரிய பின்பலமாகவிருந்து புதிய முயற்சிகள் காரியங்களில் ஈடுபாட்டைத் தோற்றுவிக்கும்.

செல்வ விஷயம்:— கிரஹ சேர்க்கை நம்பிக்கை ஊட்டுவதாயிருக்கிறது. திடீரென பண லாபம் அல்லது பண வரத்தைக் குறிக்கிறது. நண்பர்கள், பாங்கிகள், சங்கங்கள்மூலம் சந்தர்ப்பம்போல் லாபமடையலாம். ராசிநாதன் ராகுவுடன் சேர்ந்து 12-ல் இருப்பதால், எதிர்பாராத வகையில் செலவினங்களைத் தோற்றுவிக்கும்.

குடும்ப சூழ்நிலை:—4ம் வீட்டிற்குரிய சனி சவுகரியமான இடத்தில் இருக்கிறார். மனஅமைதி, சந்தோஷகரமான சூழ்நிலையை உண்டுபண்ணுவார். புத்ர காரகன் குரு, 5-ம் இடத்திற்குரிய சனி அந்த இடத்தைப் பார்ப்பது குடும்ப விருத்தியைக் குறிக்கிறது.

உத்தியோகம்:— உத்தியோக ரீதியில் உங்கள் அபிலாஷைகள் நிறைவேற 2-ம் வீட்டிலுள்ள கிரஹங்கள் உதவி புரியும். உங்கள் எஜமானர்களது பிரீதியைப் பெறலாம். மாதம் செல்லச் செல்ல [illegible]இடத்தில் பிறர் அபிமா[illegible]ரிக்கும்.

வி[illegible]பாரிகள்:— வியாபாரிகள் அதிருஷ்டசாலிகளாக விருப்பர். நல்ல லாபம் பெறக்கூடும். வெளிநாட்டு வியாபாரம் அதிக வசீகரமாகும். கூட்டு வியாபாரம் லாபகரமாகும். புதிய வருவாய் இனங்கள் ஆராயப்படும்.

அதிருஷ்ட தினங்கள்:—நவ. 18 20 21 28 29 30 டிசம்பர் 2 4 5 9 13 16.

சந்தேக தினங்கள்:— 23 27 டிசம்பர் 3 8 11 14 17.




## விருச்சிகம்

**விசாகம் (4-ம் பாதம்), அனுஷம், கேட்டை வரை**

முன்னைவிட இம்மாதம் அதிக அனுகூலமானது. குரு சூரியனுடன் சேர்ந்து ராசியிலிருப்பதால் அதிக ஜனப் பிரியத்திற்கும் தனிப்பட்ட முயற்சிகள் ஓங்கவும் இடமுண்டு. ஆதரவாளர் அபிமானிகள் உதவியுடன் உங்கள் காரியங்களில் அதிக வெற்றி பெறுவீர்கள். ராசிநாதன் செவ்வாய் 24-ம் தேதி ராசியில் பிரவேசித்து மற்ற கிரஹங்களுடன் சேர்ந்திருப்பது மகிழ்ச்சி தரக்கூடியது. இது ஒரு முக்கியமான யோகம். உங்கள் காரியங்களில் புத்திசாலித்தனமாகவும், சாதனை பெறக்கூடிய வகையிலும் முயற்சி தென்படும். எதிர்கால க்ஷேமம் உங்கள் லட்சியமாக அமையும். ஆகவே குடும்ப உறவு, குடும்பப் பிரச்னைகள், வீட்டிலும் வெளியிலும் உங்கள் பிரச்னைகளை ஸ்திரமாகத் தீர்ப்பது ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தலாம். சூரியனுடைய கதி முக்கியமான காலத்தைக் குறிக்கிறது. எதிர்காலம் பற்றித் திட்டமிடுவது காரியகரமாகும். நண்பர்கள் பிரியமேற்பட்டு அவர்கள் உதவியால் சுலபமாக உத்தேசம் நிறைவேறும். கலியாணப் பேச்சு இருந்தால் கைகூடும்.

செல்வ விஷயம்:— 2-ம் வீட்டில் சனி இருந்து 11-ம் வீட்டைப் பார்ப்பது சாதகமில்லை. ஆனால் தனலாபாதிகளான குருவும் புதனும் சேர்ந்திருப்பது பண வசதிக்கும் திடீர் பணத்திற்கும் சாதகமானது. தொழில் துறையில் திடீர் பணம் பெறக்கூடும்.

குடும்ப சூழ்நிலை:— முன் மாதத்தைவிடக் குடும்ப சௌஜன்யத்திற்கு இது அதிகம் ஏற்ற மாதமாகும். 4-ம் வீட்டிற்கு 24-ந் தேதிக்குப் பின் செவ்வாய் பார்வையும் சனி பார்வையும் இருப்பது முதலீடு, வீடு மாற்றம், அல்லது வீடு கட்டுதல் ஆகியவற்றிற்குச் சாதகமாகும், உங்கள் பொது

ஆரோக்யத்தில் அதிகக் கவனம் செலுத்த நேரிடலாம்.

உத்தியோகம்:– உத்தியோக மேம்பாட்டிற்கும் ஸ்திரப்படுவதற்கும் கிரஹங்கள் ஏற்றவாறு அமைந்திருக்கின்றன. மேலேறப் புதிய முயற்சி ஒன்றை வெற்றிகரமாகச் செய்யலாம். உத்தியோகத் துறையில் தப்பபிப்பிராயம் தகராறுக்கு இடம் அளிக்கக்கூடாது.

வியாபாரிகள்:– இவர்களுக்கு மிக அதிருஷ்டகரமான மாதம். முன்னைவிடச் சுலபமாக அதிகப் பணம் பெறக்கூடும். கூட்டு வியாபாரம் செழிக்கும். வெளிநாட்டு வியாபாரமும் முன்னைவிட அதிகம் பெருகும். புதிய கிளைகளை லாபகரமாகத் திறக்கலாம் அல்லது அதிகப்படி ஊழியர்களை அமர்த்தலாம்.

அதிருஷ்ட தினங்கள்:–நவ. 17 19 20 21 27 28 30 டிசம்பர் 1 4 5 9 14 17.

சந்தேக தினங்கள்:–நவ. 29 டிச. 2 3 6 8 11 13 16.



## தனுசு

மூலம், பூராடம், உத்திராடம் (1-ம் பாதம் வரை)

இம்மாதம் தனுர் ராசிக்காரர்களுக்கு அனுகூலங்களும் பிரதிகூலங்களும் கலந்து இருக்கும். செவ்வாயும் 12–ம் வீட்டில் பிரவேசித்து அதில் பல கிரகங்கள் சேர்ந்திருக்கின்றன. உத்தேச காரியங்கள் நிறைவேறுவதில் தடங்கல்களும் தாமதமும் ஏற்படும். சூரியன் மற்ற கிரகங்களுடன் சேர்ந்து 12–ல் இருப்பதால், கடிதங்கள், ரெகார்டுகள், எழுத்து வேலை, மனைவி, குழந்தைகள், உறவினர் ஆகியோர் விஷயத்தில் அதிகக் கவனஞ் செலுத்த நேரிடும். அதிக வேலை, மட்டுப் பலன் என்பதே இம்மாத கோஷமாயிருக்கும். இரண்டாம் பாதியில் சுக்ரன் லாப ஸ்தானமாகிய தன் வீட்டிற்கு வருவதால், உங்களுடைய முக்கிய உத்தேசங்கள் சில கைகூடும். நண்பர்கள், அதிகாரிப்பார்கள். சமூக வாழ்க்கை அதிக ரஸமாகவிருக்கும். நெருங்கிய உறவினர், நண்பர்களால் லாபம் பெறலாம். சுக்ரன் 11–ல் இருப்பதால் தொழில்மூலம் அல்லது மேல்பட்டவர்களுடன் ஏற்படும் சமூக உறவினால் அதிகப் பிரியம் சம்பாதிக்கலாம். தசாதிபதி கெடுதலாகவிருந்தால், 12–ல் இக்கிரகங்கள் சேர்க்கை ஆபத்தாகவிருக்கும். தன் காரியத்தைத் தானே கெடுப்பதும், தவறான நண்பர்களுடன் சேர்க்கையும் சம்பவிக்கும். இதனால் மிகுந்த வேதனையும் ஏமாற்றமும் காணப்படும்.

செல்வ விஷயம்:– தனாதிபதி சனி லாபாதிபதி சுக்ரனைப் பார்ப்பதால் தேவைப்படும்போது பண வரத்து உண்டு. சிலர் விஷயத்தில் இது இரண்டாம் பாதிவரையில் தாத்காலிகக் கடனாகவிருக்கலாம். டிசம்பர் 2–ந் தேதிக்குப்பின் சுக்ரன் லாப ஸ்தானத்திற்கு வந்ததும், முன்னைவிட அதிகப் பண வசதி ஏற்படும். எதிர்பாராத பண வரத்திற்கும் இடமுண்டு.

குடும்ப சூழ்நிலை:– தொல்லைகள், கவலைகள் இன்றிக் குடும்ப வாழ்வு இராது. இரண்டாம் பாதி சற்று மேன்மைப்படலாம். சிலர் விஷயத்தில் தூரப் பிரயாணம், புண்ய ஸ்தல யாத்திரை சம்பவிக்கலாம்.

உத்தியோகம்:– சனி 10–ம் வீட்டைப் பார்ப்பதால், உத்தியோக வகையில் அபிலாஷைகள் அதிகரிக்கும். இரண்டாம் பாதியில் முயற்சி வெற்றி பெறலாம். இரண்டாம் பாதியில் குழந்தைகள் ஒன்றின் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்த நேரும். செலவு அதிகரிக்கும்.

வியாபாரிகள்:– வியாபாரம் நன்கு நடைபெறும். இரண்டாம் பாதியிலிருந்து கூட்டு வியாபாரத்தில் மாறுதல் நேரலாம். புதிய வருவாய் உண்டு. வெளிநாட்டு வியாபாரம் அதிக லாபகரம். கடைசி வாரத்தில் செய்யும் ஷேஷ்யங்கள் தவறாக முடியக்கூடும்.

அதிருஷ்ட தினங்கள்:– நவ. 18 20 21, டிச. 1 4 5 9 11 14 16.

சந்தேக தினங்கள்:– நவ. 28 29, டிச. 2 3 8 13 17.





## மகரம்

உத்திராடம் (2, 3, 4 பாதங்கள்) திருவோணம், அவிட்டம் (1, 2 பாதங்கள் வரை)


முன்னைவிட இம்மாதத்தில் அதிக நம்பிக்கை உதயமாகும். சாதகமான போக்கு ஏற்பட்டு மாதக் கடைசிவரை அது திருப்தியை அளிக்கும். அனுபவ ஸ்தானத்தில் பல கிரகங்கள் சேர்வதால் வழக்கமான வேலைகளுடன்மாத்திரமிராது. 11–ல் சூரியன் இருப்பது உத்தேச முயற்சிகள், உங்கள் ஆதரவு, புகழ், வெளியில் நாணயம், சமூகத் தொழில் துறைகளில் பொதுஜனப் பிரியம், புதிய சிநேகங்கள், நீண்டகால அபிலாஷைகள் கைகூடுதல் இம்மாதம் சம்பவிக்கும். சுக்ரன் இம்மாதம் 9, 10–ம் வீடுகளில் சிறந்த ஸ்தானத்தை அடைந்திருக்கிறார். அத்துடன் அவருக்குப் பக்கபலமாக 11–ம் வீட்டில் பல கிரகங்கள் சேர்ந்திருக்கின்றன. பொது வெற்றிக்கு இது முக்கியமான கிரக சேர்க்கை. மேல்தரப்பில் அதிக அனுகூலம் ஏற்படக்கூடும். செவ்வாய் 11–ம் வீட்டில் பிரவேசிக்க நண்பர்கள் அதிகரிப்பார்கள். சமூகப் பழக்கம் விரிவடையும். உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக்க அனுதாபிகளும் உண்மை நண்பர்களும் உதவுவார்கள். உங்கள் புத்திரர்களில் ஒருவர் க்ஷேமத்தில் விசேஷ அக்கறை பிறக்கும்.

செல்வ விஷயம்:– தனாதிபதி 12–ல் இருந்து தன ஸ்தானத்தையும் பார்ப்பதால் அதிகச் செலவுடன் அதிக வருமானத்தையும் காட்டுகிறது. 10, 11–ம் வீடுகளிலுள்ள மற்ற அனுகூல கிரகங்களும் செல்வ வசதியைப் பெருக்கும். பண விஷயத்திற்கு இம்மாதம் மிக விரும்பத்தக்கது. சந்தர்ப்பமேற்படும் போது அதை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

குடும்ப சூழ்நிலை:– இம்மாதம் குறிப்பாக இரண்டாம்பாதியில் குடும்ப வாழ்க்கை மிக சௌஜன்யமாகவிருக்கும். பல நண்பர்கள் அபிமானமுள்ளவர்கள் விருந்தாளிகளாக வருவார்கள். சமூக வாழ்க்கை அதிக ஆக்கமளிக்கும். இம்மாதத்தில் குறிப்பாகச் சாமான்கள் வாங்குவது முதலீடு செய்வது, ஆடைகள் பெறுவது குறிப்பிடத்தக்கவை.

உத்தியோக விஷயம்:– உத்தியோகத் துறையில் கிரகங்கள் அபிலாஷைகளை நிறைவேற்றி வைப்பார்கள். 2–ம் பாதியில் எஜமானர் உதவிமூலம் அதிகம் சாதிக்க முடியும். பண லேவாதேவிக்காரர்கள், பாங்கிகள், ரொக்கக்காரர்களுக்கு இம்மாதம் சிறந்த காலம்.

வியாபாரிகள்:– சுபிக்ஷத்தில் வெளிநாட்டு வியாபாரம் முக்கியமாகவிருக்கும். சகஜமான வியாபாரத்தில் ஒரு மாறுதல் இருக்கும். வியாபாரம் முழுவதையுமே புது மாதிரியில் வெற்றிகரமாகத் திருத்தியமைக்கத்

எங்கும்
எப்பொழுதும்
குதூகலமளிப்பது
ஜேராட் ரேடியோ
மாடல்-A 96
நிகர விலை ரூ. 295/- (வரிகள் வேறு)
ஜேராட் எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீஸ், 38. தங்கசாலை வீதி. சென்னை-3.

திட்டமிடலாம். ஊழியர்கள் சாதக மாக மாறுவர். லாபம் நன்கு வரும்.

அதிருஷ்ட தினங்கள்:— நவ. 17 18 20 21 27 28 29 30, டிச. 1 4 5 9 11 13 14 16 17.

சந்தேக தினங்கள்:— நவ. 22 26, டிச. 2 3 6 8 15.




அவிட்டம் (3, 4 பாதங்கள்), சதயம், பூரட்டாதி (1. 2. 3 பாதங்கள் வரை)

இம்மாத நிகழ்ச்சிகள் மிக முக்கிய மாகவிருக்கும். உருவானதாகவும் அமையும். நான்கு முக்கிய கிரகங்கள், 24–ந் தேதிக்குப்பின் செவ்வாயுள்பட 10–ம் வீட்டில் சேர்ந்து ராஜ யோகத் தைக் காட்டுகின்றன. உங்களை பிர காசப்படுத்தவும் தொழில் துறையில் இன்னும் மேன்மைப்படுத்தவும் இது பயன்படும். சூரியன் 10–ல் இருப்பது உங்கள் காரியங்கள் கைகூடுவது, நீங் கள் உபகரிப்பது, புகழ் அதிகரிப் பது, சமூகத் துறையில் பொதுஜனப் பிரியம் அடைவது, புதிய நண்பர்களு டன் உண்மையாக நடந்துகொள்வது, நீண்ட கால அபிலாஷைகள் கைகூடு வது ஆகியவற்றைக் குறிக்கிறது. குரு மற்ற கிரகங்களுடன் 10–ம் வீட்டில் இருப்பது உங்களைச் சுறுசுறுப்பாக் கும். வேலை விஷயங்கள், செல்வப் பிரச்னைகள், பொதுவாக உங்களைச் சேர்ந்தவர்களின் க்ஷேமம் ஆகியவற்றி னால் அதிக அலுவல்கள் ஏற்படும். செவ்வாய் 10–ல் தன் வீட்டிலேயே இருப்பது தொழில் அபிலாஷைகளில் உயர்ந்தபடியாக வெற்றி தரும். அத் துடன் அகங்காரமும், பகட்டும் அதி கார கௌரவத்தில் நாட்டமும் ஏற் படும். ராசிநாதன் 11–ல் இருப்பது விருப்பங்கள் நிறைவேற வெகுவாக உதவும்.

செல்வ விஷயம்:— செல்வ விஷயங் களில் இம்மாதம் நிச்சயம் உருவான தாகவிருக்கும். பண விஷயமாக விசேஷ கவனஞ் செலுத்துவது நல் லது. இம்மாதம் அதிகப் பண வரத்தை யும் அதனால் அதிக சௌகரியங்களை யும் கிரக நிலை காட்டுகிறது. பண விவ காரங்களில் ராஜதந்திரத்துடன் நடந்துகொள்வதால் நல்ல நிலைமை இம்மாதம் நீடிக்கும்.

குடும்ப சூழ்நிலை:— சுகாதிபதி சுக் ரன் எட்டில் இருப்பது முதல் பாதியில் குடும்ப சுகத்திற்கு ஏதுவாகமாட் டாது. உங்கள் மனுஷ்யர்களாலும் நண் பர்களாலும் தொல்லையடைவீர்கள். இரண்டாம் பாதி உங்கள் எஜமானர், மேலதிகாரிகள் அல்லது கவர்ன் மெண்டுமூலம் விசேஷ அனுகூலம் ஏற் படும். விவாகப் பிரஸ்தாபமும் காணப் படும்.

உத்தியோகம்:— மேலுக்கு வர இது மிகவும் ஏற்ற மாதம். உத்தியோகத் தில் எதிர்பார்ப்பதில் உயர்ந்த அளவு அனுகூலம் பெறலாம். உத்தியோக ரீதியில் ஒரு மாறுதல் இருக்கலாம்.

வியாபாரிகள்:— எதிர்பார்த்தபடி. முதல் பாதி அனுகூலமாக இல்லாவிட் டாலும், இரண்டாம் பாதி மிகவும் வெற்றிகரமாகவும் அதிருஷ்டகரமாக வும் இருக்கும். கூட்டு வியாபாரமும் பிரகாசமடையும்.

அதிருஷ்ட தினங்கள்:— நவ. 18 20 21 30, டிச. 1 4 5 9 11 14 17.

சந்தேக தினங்கள்:— நவ. 17 27 29, டிச. 2 3 8 13 15.




பூரட்டாதி (4-ம் பாதம்), உத்திரட்டாதி, ரேவதி வரை

கிரக நிலைமையால் இம்மாத பலன் கலப்படமாகக் காணப்பட்டாலும், முந் திய மாதத்தைவிட இது அதிக சோபிதமாகவிருக்கும். பல கிரகங்கள் திரிகோணத்தில் இருப்பது மனதில் சந்துஷ்டியையும் காரியத்தில் எதிர்ப் பின்றி வெற்றியையும் தரும். 9–ல் சூரியன் காரிய சித்தியைக் காட்டு கிறது. நல்ல முடிவு செய்யவும் பிறர் ஒத்துழைப்பு பெறவும் சாத்திய



மைசூர் ராஜ்யத்திலுள்ள
மண்டயம் ஸ்ரீ ஜனார்த்தனப் பெருமாள்.



# இதுதான் அன்பு

ஸி. ஆர். ராஜம்மா

'புஷ்பா' என்று தந்தை கூப்பிட்டபோது இத்தனை சுவாரஸ்யமான விஷயத்தை அவர் சொல்லுவார் என அவள் எதிர்பார்க்கவில்லை. அவளும் இத்தனை ஆச்சரியமான பதிலைச் சொல்லுவாள் என அவரும் எதிர்பார்க்கவில்லை.

'புஷ்பா' என அவளை அன்புடன் அழைத்துக்கொண்டு வரக்கூடியவனில் கண்ணன் ஒருவன். அவளுடைய அத்தை மகன் அவன். ஆசை பொங்க அவளை அழைக்கும் உரிமை பெற்றவன் ஜெயராம். புஷ்பாவின் மாமன் மகன். புஷ்பா இருவரிடமும் ஒரே மாதிரிதான் பழகினாள். இருவரிடம் மட்டுமல்ல, எல்லாரிடமுமே அவள் பழகும் விதம் கொஞ்சம் புரட்சிகரமானதாகத்தான் இருக்கும்.

ஒரே பெண், திரண்ட சொத்துக்கு சொந்தக்காரி, படித்தவள், நாளை ஒருக்கால் மேனாடுகூட போகக்கூடியவள் என்பதனால் சங்கரன் மகளை மிகவும் செல்லம் கொடுத்தே வளர்த்துவிட்டார். தாயாருக்கு இதில் பூரண திருப்தியில்லை என்றாலும் அவள் அதிகமாக எதிர்ப்புச் சொல்லவில்லை. புஷ்பாவைப்பற்றி அவள் எடை போட்டு வைத்திருந்தாள். வேலியைத் தாண்டிப் போகும் கொடியல்ல இந்த புஷ்பா என்று.

பனைமரத்தின்கீழ் இருந்து பாலைப் பருகினாலும் கள்தான்

என்று சொல்லும் காலம் என்றுமே உண்டு. புஷ்பா கண்கவர் அழகி, காலேஜ் மங்கை, பணம் அவைகளுக்கு மெருகேற்றியிருந்தது; கேட்பானேன், புஷ்பத்தைச் சுற்றி வண்டுகள் மொய்க்க.

சகஜமாக எல்லாருடனும் பழகினாள் புஷ்பா. சினிமாக் காட்சிகளுக்கும், மாலையில் உலாவவும் செல்லுவாள். மிதமிஞ்சிப் பேச யாருக்கும் இடம் கொடுக்கமாட்டாள். அவளுடன் பழகும் மாணவர்கள்—ஏன் அவள் தனக்கே உரித்தாக இருக்கக்கூடாது என்று எண்ணினார்கள். இதைப்பற்றி சர்ச்சையில் ஈடுபடுவதும் உண்டு.

'புஷ்பா' என்று தன்னை தந்தை அழைத்தபோது அதில் பாச உணர்ச்சி மட்டும் சுழியிடவில்லை. சோக உணர்ச்சியும் கலந்து வந்தது. வெளிநாட்டு வாழ்வைப்பற்றி அவளுக்குப் போதிக்கும் தந்தை இன்று வெளிநாட்டுப் படிப்பு அவசியம் தானம்மா என்று கேட்டபோது அவள் அசந்துதான் போனாள். 'அப்பாவுக்கு என்ன வந்து விட்டது. அம்மாவின் போதனை மூளையில் ஏறிவிட்டதா?' என்று எண்ணினாள். அவள் முகம் வாடியதைக்கண்ட சங்கரன் 'உன் சம்மதப்படி எங்கு வேண்டுமானாலும் போகலாம் அம்மா, ஆனால் கல்யாணம் என்று ஒன்றைச் செய்துகொண்டபின், ஆகட்டுமே' என்றார். மகள் மறுத்துச் சொல்லுவாளோ என்று எண்ணினார். ஆனால், ஏமாந்தார்.

'வரன் பார்த்துவிட்டீர்களா அப்பா?' என்றாளவள். 'வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவார்களா புஷ்பா? கண்ணனும், ஜெயராமும் இருக்கிறார்களே, உனக்கு யாரைப் பிடித்திருக்கிறது' என்றார் அவர்.

'முறைப் பையன்கள் என்று இருந்துவிட்டால் அவர்களை நான் மணந்துகொண்டே ஆக வேண்டுமா அப்பா. உங்கள் மனதிற்குப் பிடித்த வரனைப் பாருங்கள். நான் யாரையும் மனதுக்குள் கணவன் ஸ்தானத்தில் இன்னும் இருத்தவில்லை' என்று அவள் கூறியபோது, அவருக்கு இதை நம்பச் சற்று அவகாசம் வேண்டியிருந்தது.

அன்றும் வெளியே போய் விட்டு வந்த புஷ்பா, வழக்கம் போல கடிதங்கள் தன் பெயருக்கு வந்திருப்பதையும், தன்னறை மேஜைமேல் அவைகள் இருப்பதையும் கண்டாள். உயிர் சினேகிதிகளின் கடிதங்களுடன் மற்றும் சில கடிதங்கள் அவளுக்கு இப்பொழுது வருவது சகஜமாகி விட்டது. அவளுடன் படிக்கும் பள்ளி மாணவர்களில் யாரோ சிலர் தத்துப்பித்தென்று எழுத ஆரம்பித்திருந்தார்கள். காலேஜ் விடுமுறை சமயமது. இதை பகிரங்கமாக்கி அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதைவிட காலேஜிலேயே சேராமல் இருந்து விடலாமா இனிமேல் என்றுகூட எண்ண ஆரம்பித்துவிட்டாள், புஷ்பா. என்னதான் பலமான அஸ்திவாரத்தோடு கட்டிடம் எழுப்பினாலும் பூமிக்கடியிலேயே அதிர்ச்சி ஏற்படும்போது கட்டிடம் கலகலக்காமல் இருக்குமா? பெண்மனம் எம்மாத்திரம்? ஆண்களுக்கு சரிசமமாகப் பழகினாள் புஷ்பா. அவர்களுடன் தோட்டத்தில் மட்டை பிடித்துப் பந்தாடினாள். என்னதான் இருக்கட்டுமே? இம்மாதிரிச் செயல்களுக்கு அவள் மனம் கட்டுப்பட மறுத்தது.



இந்த நிலையில் கண்ணனிடமும், ஜெயராமிடமும் தன் மனதைப் பூராவாகத் திறந்து காட்டிவிடவில்லை புஷ்பா. மற்றவர்களைவிட அவர்கள் மிகச் சுவாதீனமாகப் பழகினார்கள். புஷ்பா அதற்கு ஒத்துப்போனாள். கண்ணனைவிட ஜெயராம்தான் அவளிடம் உரிமை கொண்டாடினான். இருவருக்குள்ளும் புஷ்பா விஷயமாகப்



பலத்த போட்டி ஏற்பட்டிருந்தது.

நெற்றியில் தவழும் தலைமயிரை ஒதுக்கிவிடுவான் ஜெயராம். இந்தக் கலர் புடவை உனக்கு எடுப்பாக இல்லை புஷ்பா என்பதும் அவன்தான். இரட்டைப் பின்னலுக்கு இந்த நெக்லஸ் அணிந்துகொண்டால் ரம்பையே உன்னிடம் தோற்றுப் போவாளே என்று சொல்லவும் தைரியமுண்டு அவனுக்கு. கொஞ்சம் எட்ட இருந்தே பழகவேண்டும் என்பது கண்ணன் எண்ணம்.

தன் பேனா சரியாக எழுதவில்லை என்று தந்தையின் பேனாவைத் தேடிச் சென்றாள் புஷ்பா. அவர் அறையில் இல்லை. மேஜை மேல் கண்ணோட்டம் விட்டபோது புஷ்பக்கொடி புயலில் ஆடுவதுபோல் அலை பாய்ந்தது அவள் மனம். அவள் பெயருக்கு வரும் சில கடிதங்களின் கையெழுத்துக்கள்போல் இருந்தது. தந்தையின் பெயருக்கு வந்த கடிதங்களை எல்லாமே கூசாமல் உடைத்துப் படித்தாள் புஷ்பா. அவள் சந்தேகித்தது வீண் போகவில்லை. நண்பர்களிடமிருந்தும், வேலை சம்பந்தமான கடிதங்களும் இருந்தன. அதைத் தவிர புஷ்பாவைப்

பற்றிய அவதூறான செய்தியுடைய மொட்டைக் கடிதங்களும் மூன்று, நான்கு இருந்தன. இம்மாதிரியான கடிதங்கள் இதற்கு முன்னாலேயே தகப்பனாருக்கு வந்திருக்கிறது. அதுதான் அவர் கல்யாண சம்பந்தமாகப் பேச்செடுக்கக் காரணம் என்பதையும் தெரிந்துகொண்டாள் புஷ்பா.

'ஜெயராமை கல்யாணம் செய்து கொள்ளேன் புஷ்பா' என்று இப்பொழுதெல்லாம் தாய் சொல்லி வருவதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டாள் அவள். ஜெயராமையும் அவளையும் இணைத்து இருந்த மொட்டைக் கடிதங்கள் அவை. அவளுக்கும் இம்மாதிரி ஒன்றிரண்டு வந்ததுண்டு. அப்பா எத்தனை சங்கடப்பட்டிருப்பார், சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்திருப்பார். தன்மீது அவர் செலுத்தும் அன்புக்கு இதுவா பிரதிபலன்? நினைவு நெஞ்சை உருக்க, கண்ணீர் கண்ணாடிக் கன்னத்தில் வழிய சிலையாகச் சமைந்த புஷ்பாவை அன்புக்கரம் ஒன்று தொட்டது.

'புஷ்பா!'

பெரும் விம்மல் சத்தம் ஒன்றுதான் அவளிடமிருந்து பதிலாக வந்தது.

'வருத்தப்படாதே புஷ்பா. சமூகத்தில் உன்போன்ற பெண்களுக்கு இது சகஜம். இதை எல்லாம் கண்டு பயப்படக்கூடாதம்மா' என்றார் சங்கரன் அன்பொழுக.

'வேறு எங்கெல்லாமோ என் கல்யாணத்திற்காக பிரயத்தனம் செய்து கொண்டிருந்தீர்களே அப்பா' என்றாள் புஷ்பா.

தந்தை பதில் சொல்லத் தயங்கியபோது, எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்த தாய்தான் பதில் சொன்னாள். 'ஏன், ஜெயராமிடம் என்ன குறையைக் கண்டாய் புஷ்பா? உன்னையும், அவனையும் இணைத்துத்தான் மற்றவர்கள் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். நீ அவனையே மணந்துகொண்டால் அவர்களுக்கு சவால்விட்டதுபோல் இருக்கும். வெளியிடங்களில் வரன் பார்க்கலாம்தான் புஷ்பா. ஆனால், நமக்கு வரும் தூஷணைக் கடிதம் அவர்களுக்கும் போகாதா? உனக்குப் பார்த்த இரண்டு பெரிய இடங்கள் இதே மாதிரித் தட்டிப் போய்விட்டது. நாங்கள்தான் உன்னிடம் சொல்லவில்லை. வேறு இடம் அத்தனை சுலபமாக உனக்குக் குதிரும் என்று தோன்றவில்லை. பொதுப்படையாகவே உன்னைப்பற்றி அடக்கமில்லாமல் ஆண்களுக்கு சமமாக வளர்ந்துவிட்டவள் என்ற பேச்சு நிலவி வருகிறது என்றாள் அவள். மகளின் பிடிவாதம் அவளுக்குக் கோபத்தை உண்டாக்கியிருந்தது.

அறைக் கதவுகளைச் சாத்திக் கொண்டு வெகுநேரம் வரை குலுங்கக் குலுங்க அழுதாள் புஷ்பா. களங்கமற்ற தன்னைக் களங்கம் கற்பிக்க முயலும் கண்காணாமல் இருந்தவர்களை மனதார சபித்தாள். ஜெயராமை மணந்து கொள்வதன்மூலம் மற்றவர்கள் தன்மீது சுமத்தும் பழி உண்மை என்றல்லவா ஆகிவிடுகிறது? அம்மாவுக்கு இது ஏன் தெரியமாட்டேன் என்கிறது என்பதுதான் அவள் வாதம். ஆனால், அம்மாதிரி தைரியமாக இறங்கிக் காரியம் நடைபெறாமல் குட்டிச்சுவராகி விட்டதாகக் கூறுகிறாளே அம்மா. இந்த மாதிரி நிலையில் வேறு என்னதான் அவள் செய்ய முடியும் என்றும் புஷ்பாவின் மனம் எண்ணாமலில்லை.

படித்தவள், சுதந்திரமாக வளர்க்கப்பட்டவள், திரண்ட சொத்துக்கு உரிமை கொண்டாடக்கூடியவள், கண்ணுக்குக் கண்ணான பெற்றோர்கள் இருக்கிறார்கள், இத்தனையும் இருந்தும் புஷ்பாவால் மனம் போன போக்கின்படி நடக்க முடியவில்லை. ஜெயராமைக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதை எண்ணிப் பார்க்க முடியவில்லை அவளால்.

ஜெயராமைப் புஷ்பா வெறுக்கவில்லை. ஆனால், கல்யாணம் செய்துகொள்ளும் அளவுக்கு நேசிக்கிறாளா என்பது சிந்திக்க வேண்டிய விஷயம். ஜெயராமையும் தன்னையும் இணைத்து அவதூறு கிளம்பியிருக்கிறது. அதை ருசுப்படுத்துவதுபோல் அவனை நாமே மணந்துகொள்ளக் கூடாது என்பதுதான் அவள் எண்ணம். ஆனால், அதற்கு இத்தனை இடைஞ்சல்களா?

கல்யாணம் என்றவுடன் கண்ணனைப்பற்றி எண்ணுமளவுக்குக் கூட அவன் அவளிடம் பழகவில்லை. அது அவன் போக்கு. அதைப்பற்றி என்ன சொல்வது?

இந்த நிலையை அதிகம் நீடிக்க விடாத சங்கரன் திருமணத் தேதியை நிச்சயித்துவிட்டார். புஷ்பா மறுக்கவில்லை. ஆனால், மகிழவும் இல்லை. அளவிலாத குதூகலம் அடைந்தவன் ஜெயராம்தான். அவன் இப்பொழுது முன்னைவிட அதிகமாகப் பழகினான். புஷ்பாவிடம் உரிமை கொண்டாடினான். அவளை களிப்பில் ஆழ்த்த சிரமம் எடுத்துக் கொண்டான்.

புஷ்பாவை அன்று மேல் மாடியில் சந்தித்தான் ஜெயராம். கல்யாணத்திற்கு மூன்று நாட்களே இருந்ததால் வீடு மிகவும் கலகலப்பாக இருந்தது. கண்ணன் வந்து விட்டுப் போனான்போலிருக்கிறதே' என்று பேச்சை ஆரம்பித்தான் ஜெயராம். 'ஆமாம், ரொம்பவும் பெருந்தன்மை புத்தி, என் சுகவாழ்வுக்குக் கடவுள் அருள் புரியவேண்டும் என ஆசீர்வதித்துவிட்டுப் போனார்' என்றாள் தொட்டிச் செடிகளை ஆராய்ந்து கொண்டிருந்த புஷ்பா.

'தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டான் பாவம்; அதை நீ பெருந்தன்மை என்கிறாய் புஷ்பா. உன்னை மணக்க எத்தனையோ பேருக்கு ஆசை; அதில் எங்கள் இருவருக்கும் பலத்த போட்டி' என்றான் ஜெயராம்.

'சில வேட்டைக்காரர்களாகச் சேர்ந்து ஒரு சாது மிருகத்தைக் குறி வைத்தீர்களாக்கும். நீங்கள் வெற்றி பெற்றீர்களா, கெட்டிக்காரர்தான்' என்ற புஷ்பா துயரத்தை உள்ளடக்கிச் சிரித்தாள்.

'என் கெட்டிக்காரத்தனத்தைப் பூராவாகக் கேட்டால் நீயே திகைப்பாய் புஷ்பா.'

'அப்படியா? கொஞ்சம் சொல்லுங்களேன், கேட்டுவிட்டுப் பாராட்டுகிறேன்.'

'கேள் புஷ்பா, எத்தனை பொறுமையோடு சிரமம் எடுத்துக் கொண்டேன் தெரியுமா? எல்லாம் உன்னை அடையவேண்டும் என்பதற்காகத்தான். கட்டுக்கட்டாக உனக்கும், உன் பெற்றோருக்கும், உன் சினேகிதிகளுக்கும் கூட என்னையும், உன்னையும் சேர்த்து மொட்டைக் கடிதங்கள் எழுதியது நான்தான் புஷ்பா.

இதிலிருந்தே தெரிந்துகொள் உன்மேல் எனக்கிருக்கும் அன்பை.'

கோபமாகச் சிரித்துக் கொண்டே அவனை நெருங்கிய புஷ்பா, 'மறைமுகமாகத் தாக்கும் கோழை நீங்கள் என்று இன்று தெரிந்துகொண்டேன். எனக்கு அன்றே கொஞ்சம் சந்தேகம் தான். கண்ணன்மேல்தான் பெரும்பாலும் என் சந்தேகம் திரும்பியிருந்ததால், அவனைப் பற்றியே நான் எண்ணவில்லை.

பலரிடையேயும் ஒரு பெண்ணைப்பற்றி கெட்ட எண்ணத்தை நிலைக்கச் செய்து உங்களையே மணந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு என்னைக் கொண்டு வந்தீர்களே. பெரிய சூரப்புலிதான். நல்ல காலம்! கல்யாணம் ஆகுமுன் உங்கள் பிரதாபத்தை என்னிடம் அளந்தீர்களே: அந்தமட்டும் சந்தோஷம். கல்யாணமாகுமுன் எல்லாப் பெண்களையும், சகோதரியாக எண்ணவேண்டும். சகோதரிக்கு மாசு கற்பிக்க முனையும் தாங்கள், எதைத்தான் செய்யமாட்டீர்கள்? என் கண்முன் நிற்க வேண்டாம். இந்தக் கல்யாணம் நடக்காது, போங்கள் இங்கிருந்து' என்று புஷ்பா இரைந்தபோது, அவள் குரல் கல்லிலும் கடினமானதாக இருந்தது.

ஜெயராம் பயந்துவிடவில்லை. அலட்சியமாகச் சிரித்தான். 'என்னை மணந்து கொள்ளாது போனால் நீ என்றுமே கன்னியாக இருக்க வேண்டியதுதான். ஏற்கெனவே அவதூறுக்கு அடிபட்டவள் நீ. கல்யாணம் வேறு நமக்கு நடக்க இருக்கிறது. இது நின்றால் உன்னை யார் ஏற்றுக் கொள்ள முன் வருவார்கள்? அப்படியே வந்தாலும் நான் விட்டு விடுவேனா?' என்று கூறிக் கொண்டே புஷ்பாவை நெருங்கினான் ஜெயராம். அவன் முகத்திலே ஒரு வெறி.

ஜெயராமைக் கட்டுப்படுத்தி நிறுத்தியது ஒரு உருவம், இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தபோது, கண்ணன்தான் நின்றுகொண்டிருந்தான். 'கலங்காதே புஷ்பா. என்னை நீ விரும்பும் பட்சத்தில் உன்னை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஜெயராமால் என் மனதைக் கலைக்க முடியாது, ஊராரின் ஏளனப் பேச்சு என்னை ஒன்றும் செய்துவிடமுடியாது. உன்னிடம் விடைபெற்றுக்கொண்டு போகும்போது என் மணிபர்ஸை மறந்து போய் இங்கே வைத்துவிட்டேன் புஷ்பா. கொஞ்ச தூரம் போன பின்தான் நினைவு வந்தது. திரும்பி வந்தேன். உங்கள் சம்பாஷணையைக் கேட்டேன்' என்றான் அமைதியாக அவன்.


இத்தனைக்குப் பின்னும் என்னை ஏற்றுக்கொள்ள வரும் உங்கள் அன்புதான் சிறந்தது என்று புஷ்பா கண்ணன் காலடிகளில் வீழ்ந்தாள்.

திடீரென்று மாற்றப்பட்ட இந்தக் கல்யாணத்தைக்கண்டு எல்லாருமே அதிசயித்தார்கள். அவர்கள் விஷயம் தெரியாதவர்கள். விஷயம் தெரிந்த மூன்று உள்ளங்கள் மட்டும் அதிசயிக்கவில்லை.



கேரள ராஜ்யத்தில் கொச்சி துறைமுகத்தருகில் 'காயல்'களைப் பார்க்காமலிருக்க முடியாது. காயல்கள் சமுத்திரத்தைச் சுற்றியுள்ள பெரிய ஏரிகள். தமிழ்நாட்டில் இருந்ததாகச் சொல்லப்படும் வீராணத்து ஏரிகளைப்போலப் பெரிய ஏரிகள். காயல்களில் பெரிய கப்பல்கள் வரமுடியாது. ஆனால், சிறிய படகுகள் அநேகம் விதவிதமான அமைப்புக்களுடன் கூடிக் குழுமி படகோட்டிகளின் துடுப்புகளின் சப்தங்கள் ஜலத்தில் 'கிறுக்' என்ற சப்தங்களுடன் மிதந்து போகும் காட்சி ரம்மியமாக இருக்கும். காயல் கரையோரங்களில் தென்னந்தோப்புகள் பல 'பெறை இடர்' என்று அழைக்கப்





பட்டு 'குளுகுளு' என்று குளிர்ச்சியுடன் விளங்கும்.

அப்படிப்பட்ட ஒரு தோப்புக்குச் சொந்தமானவர் கேசவப் பிள்ளை. செழித்து வனப்புடன் விளங்கும் தோப்பின் நடுவில் அழகான சிறு வீடு. கூட உதவிக்கு செல்வமாக வளர்த்து வந்த அருமை மகள் கொச்சுக் குட்டி. 'கொச்சுக் குட்டி' பெயரளவில் சிறிய பெண்தான். ஆனால், அவள் வளர்ச்சியைப் பார்த்தால் யாவருமே கொஞ்சம் திகைப்பார்கள். ஆடவர்கள் மயங்குவார்கள். அவளுடைய கேசபாரம் கரிய மேகக் குவியலைக் குறிக்கும். அதன் அடர்த்தியில், நீளத்தில் பாம்பைப்போல் முழங்கால்வரை புரளும். தேங்காய் எண்ணெய் தேய்த்து முழுகிவிட்டு கூந்தலை ஆற்றிக்கொண்டு அள்ளி அழகாக முடிச்சைப் போட்டுக்கொண்டு அதில் சில 'பிச்சிப்பூ' என்ற ஜாதி மல்லிகையைத் தொடுத்து அலங்கரித்துக்கொண்டால், இந்த பின்பாரத்தை அவள் எப்படித் தாங்குகிறாள் என்று அதிசயப்படவேண்டும். அதேபோல அவள் உடம்பு மண்ணிலிருந்து பிடுங்கிய தேர்ந்த மாவள்ளிக்கிழங்கின் நிறமும், முதிர்ந்த வளம் பொருந்திய மார்பகத்தில் நிற்க முடியாமல் புரளும் மேல் முண்டும், அவள் கருவிழிகளும், கொவ்வை உதடுகளும், இவ என்றே 'காவிய நாயகி' என்று கூவத்தோன்றும். அருமையுடன் பெண்ணை வளர்த்தார் கேசவப் பிள்ளை. பாலும் தயிரும் ஊட்டி உடலுக்கு ஊட்டம் கொடுத்தார். அவள் வளரும் வேகத்தைக் கண்டு தன் கண் திருஷ்டிபடாமல் இருக்க வேண்டுமே என்று பகவதி அம்மனை வேண்டிக்கொள்வார். நல்ல மணாளனை அடைந்து அநேகம் குழந்தைகளுக்குத் தாயாக அவள் ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டார். அவருடைய வேலையில், தேங்காய்களை வெட்டும்போது கூட இருந்து அவைகளை எண்ணிக் கூடைகளில் போட்டு காயல்களில் 'வல்லம்' என்னும் படகுகளில் அவைகளை ஏற்றி தீபகற்பங்கள்போன்ற அநேக ஊர்களுக்கு அனுப்பி, வரும் பணத்தை எண்ணி உள்ளே வைத்துப் பூட்டுவதுவரை அநேகமாக எல்லாம் கொச்சுக் குட்டி வேலைதான்.

தென்னை மரங்கள் ஏறுவதற்கு வரும் இளைஞர்கள் மரமேறி தேங்காய்களைப் பறிக்கும்போது கொச்சுக்குட்டியின் அதிகாரமும் அவர்களின் பணிவும் பார்க்க வேடிக்கையாக இருக்கும். அந்த இளைஞர்கள் கும்பலில் அப்புக்குட்டன் என்னும் வாலிபன் ஒருவன். மரமேறுவதில் மர நாய்தான், தேங்காய்களைப் பறித்துப் போடுவதில் மிகுந்த சோகமுடன் செய்வான். அவனுக்குத் தேங்காய்கள் பறிப்பது மட்டுமல்ல, அந்தத் தோப்பையே தன்னுடையது ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற அவா. அதற்கு ஒரே வழி கொச்சுக்குட்டியைஎப்படியாவது அடைந்துவிட்டால் போதும். அவளைக் காணும்போதெல்லாம் ஏதாவது விஷமமாகப் பேசுவது, செய்வது என்று ஆரம்பித்தான். தேங்காய் ஒன்றை எடுத்துக் கொண்டு சீவி அவள் எதிரில் இளநீரை உறிஞ்சிக்குடிப்பான். 'அம்மே! உடம்பு நோகச்சு, கருக்குத் தண்ணீர் பருககம்' என்று அவளை ஒரு மாதிரி பார்ப்பான். இதெல்லாம் கொச்சுக்குட்டிக்குப் பிடிக்கவில்லை. தேங்காய்களை ஏற்றிச் செல்ல வரும் படகோட்டி மணிகண்டன் படகு சொந்தக்காரர் சாத்தனிடம் வேலையாக இருப்பவன். தேங்காய் பறிக்க வரும் அப்புக்குட்டன் எப்படி கொச்சுக்குட்டியின் மேல் கண் வைத்திருந்தானோ அதுபோல் கொச்சுக்குட்டி மணிகண்டன் மேல்ஒருவிதப்பிரேமை.காரணம் மணிகண்டனின் முறுக்கு ஏறி இருந்த உடல் வனப்பும், அடக்கமும், மரியாதையும் அவளைக் கவர்ந்தன. மணிகண்டனும் கொச்சுக்குட்டியின் அழகைப்பருகிக்கொண்டே இருப்பான். இவர்களிடையே காதல் வளர்ந்தது.

அப்புக்குட்டனோ தன் தந்திரத்தாலும், பேச்சினாலும் கேசவப் பிள்ளையை நைச்சியப்படுத்தி அவன்தான் கொச்சுக்குட்டிக்கு முண்டு கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடாகியது. இதையறிந்த கொச்சுக்குட்டி பதறினாள். அவனைக்கண்டால் அவளுக்குப் பிடிக்கவே இல்லை. ஒருநாள் அவன் இரண்டு பெரிய தேங்காய்களைச் சீவிக் குழிதோண்டிப் பூமியில் புதைத்து வைத்து அதை இரண்டு நாட்கள் கழித்து எடுத்து ஏதோ கலந்து குடித்தது தெரிய வந்தது.

அந்திவேளை. மணிகண்டன் தேங்காய்களைப் படகில் ஏற்றி விட்டுப் படகைச் செலுத்தப் போகும் சமயம். தலையைக் குனிந்துகொண்டேஓரக்கண்ணால் தென்னை மரம் ஒன்றில் சாய்ந்து கொண்டிருந்தகொச்சுக்குட்டியை நோக்கினான். 'மணிகண்டா' என்ற குரல் அவனை திடுக்கிடச் செய்தது.

'என்னைக் கூப்பிட்டாயா?' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் மணிகண்டன்.

'ஆமாம். உன்னைக் கூப்பிடக் கூடாதா?'

'கூப்பிடலாம். ஆனால் மரமேறும் மகாராஜன் உன்னை மணப்பான், ஜலத்தில் மிதக்கும் இந்த ஜந்துவை மதிப்பாயா?'

'மணி! அப்படி எல்லாம் பேசாதே. படகோட்டியாக இருந்தாலும் உன்னைத்தான் கட்டிக் கொள்வேன்;உனக்குச் சம்மதமா?'

'என்ன சம்மதமா என்று கேட்கிறாய்? ஆனால், நான் உன்னுடன் பேசுவது தெரிந்தால் அப்பு என் தலையை தேங்காய் சீவுவது போல் சீவி விடுவானே' மேலும் இந்தத் தோட்டம், துரவு எல்லாம் விட்டுவிட்டு இந்த நாடோடியுடன் வாழ்க்கை ரஸிக்குமா கொச்சுக்குட்டி!

'நீ ஆண்பிள்ளை மணி! நான் ஒரு கேரளப் பெண்மணி. கேரள வனிதாமணிகள் மனதில் ஒன்றை நினைத்துவிட்டால் அதை முடி




ப்பதில் எதற்கும் அஞ்சமாட்டார்கள். ஒரு ராஜ்யத்தையே கவிழ்க்கும் திறமை எங்கள் வர்க்கத்துக்கு உண்டு. இந்தத் தோப்பு, துரவு, அந்த அப்பு எல்லாம் எனக்கு எம்மாத்திரம். என் இதயத்தில் உன்னை வைத்துப் பூட்டிவிட்டேன்; மணி! என்னைக் கைவிடாதே' என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்த கொச்சுக்குட்டியின் கண்களில் நீர் கசிந்தது.

'சரி அம்மணி, நான் நாளை இரவு படகுடன் வருகிறேன். இருவரும் ஓடிவிடுவோம். இந்த தீபகற்பங்களைக் கடந்து கொச்சி போய், திருவனந்தபுரம் போய் விடுவோம்.'

'அப்படியா மணி, நான் தயார்' என்று கொச்சுக்குட்டி குதித்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தாள். மணியும் படகைத் தள்ளினான். அங்குள்ள தென்னை மர நிழலிலிருந்து ஒரு உருவம் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டு வாளைத் தடவிக் கொண்டு ஊங்காரம் போட்டது.

அன்று சாத்தன் தன் ஆள் மணிகண்டனின் போக்கில் ஒரு மாறுதலைக் கண்டான். படகு வீட்டில் எல்லாப் படகுகளும் வைத்துப் பூட்டப்பட்டன. ஒரு படகு மட்டும் வெளியில் ஜலத்தில் கரையோரத்தில் நிற்கும். ஆனால் அன்று இரு படகுகள் இருந்தன. அதைக் கவனித்த சாத்தன் ஒன்றும் தெரியாதவன் போலிருந்தான். தவிரவும் இரவு மணிகண்டன் சோறு தின்றதும் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்குவான். அன்று குறட்டை சப்தம் வரவில்லை; படுத்துக் கொண்டு தானிருந்தான் மணி. சட்டை போட்டுக்கொண்டு கட்டிலில் புரண்டு கொண்டிருந்தான். இதை எல்லாம் கவனித்து விட்டுத் தூங்கச் சென்ற சாத்தன் தூங்கியே விட்டான். ஏதோ ஒரு சத்தம் கேட்டு எழுந்து சாரளத்தின் வழியாக வெளியே நோக்கினான். அந்த நிலவொளியில், நீல நிற ஏரியில் ஒரு படகு போய்க் கொண்டிருந்தது. அதில் இரு உருவங்கள் ஒன்று சந்தேகமில்லை; தன் சிஷ்யன் மணிகண்டன் என்று கண்டு கொண்டான். அவன்கூட உட்கார்ந்த உருவத்தைக்கண்டு திடுக்கிட்டான். அது ஒரு பெண் உருவம் 'ஓஹோ, விஷயம் அப்படியா? ஒரிடத்தில் காதலர்கள். பூனைபோலிருந்த மணிகண்டன் இப்படிக் காளை போல் கிளம்பியது அவன் உதடுகளில் புன்சிரிப்பைத் தருவித்தது. 'சரி' என்று யோசனையில் ஆழ்ந்த சாத்தனின் கவனம் அந்தப் படகிற்குப் பின் போகும் மற்றொரு படகின்மேல் சென்றது. இந்தப் படகு போகும் கதியைக்கண்டால் முன்னால் செல்லும் படகைத் துரத்துவதுபோல் தோன்றியது. படகில் இருந்தது ஒரு ஆள். அவன் தோளில் உள்ள ஆயுதம் ஒரு வில். ஏதோ அனர்த்தம் என்று வெளியில் வந்தான் சாத்தன். ஆனால், படகுகளைக் காணோம். அவசரமாக படகு வீட்டைத் திறந்து ஒரு படகை வெளியில் எடுத்து அவசரமாக ஜலத்தில் தள்ளி ஏறி உட்கார்ந்தார். துரிதமாக அதைச் செலுத்தினார். இரண்டாவது படகோட்டி அவ்வப்பொழுது படகு செலுத்துவதை நிறுத்தி வில்லில் ஒரு அம்பை வைப்பதும் குறி பார்ப்பதுமாக இருந்தான். வேகமாகச் செலுத்திய சாத்தன் படகு, இரண்டாவது படகை அணுகியதும்; பின்னால் யாரோ வருவதை உணர்ந்த அந்தப் படகோட்டி அப்புக்குட்டன், தன்



காரியத்தைச் சீக்கிரம் முடிக்கத் தலைப்பட்டு அந்த வில்லின் நாணை இழுத்து ஒரு அம்பை எய்யத் தயாரானான்; அம்பை விட்டேவிட்டான். அடுத்த நிமிடம் அவன் தலைமேல் படகு துடுப்பால் ஓங்கி சாத்தன் போட்ட போடு அவனை நிலைதடுமாறச் செய்து கீழே தள்ளியது; அந்த அம்பும் குறி தவறி மேலே பறந்து சென்று தண்ணீரில் லேசாக விழுந்து மிதந்தது. தம்பதிகள் படகைச் செலுத்திக்கொண்டே தான் போனார்கள். அப்புக்குட்டன் மயக்கம் தெளிந்து விழித்துப் பார்த்தான். சூரியன் கதிர்கள் கண்களைக் கூசின. காயல் கரையில் படுத்திருந்தான். பக்கத்தில் சாத்தன் நின்றுகொண்டு 'அப்பு! நீ செய்தது தப்பு' என்று கூறிச் சிரித்தார். அப்பொழுதுகொச்சுக் குட்டியும், மணிகண்டனும் எதிர் சிரிப்பு சிரித்துக்கொண்டிருந்தார்கள்.



# திருவெம்பாவை

சங்கீதகலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் ஸ்வரப்படுத்தியது

மானேநீ நென்னலே நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணுமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவு அரியான்
தானே வந்துஎம்மைத் தலையளித்துஆட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடுஏல்ஓர் எம்பாவாய். (6)

ராகம்: கமாஸ்.] [தாளம்: ஆதி. (1 களை)
(28-வது மேள ஜன்யம்)

| | | | |
|---|---|---|---|
| 1 | மா, மகக மா ; பா. தநா<br>மா னே . நீ நென்னலே | , . , நிதநிஸா<br>நா ளைவந் | ஸ்ஸ்நித பா மித ‖<br>து . . . ங்களை. ‖ |
| 2 | மதப மகக மா ; பா, தநா<br>மா . னே நீ நென்னலே | x<br>, , , ஸ்ரா நிரிஸ்<br>நாளை வந். | ஸ்ஸ்நித பா பம ‖<br>துங். . க ளை ‖ |
| | பா, பா, பா பமதபமகமா<br>நா னே வந் து . ங்க ளை | , , ஸமா கமா<br>என். றலும் | பாம மநீ தா ‖<br>நா . ணு மே ‖ |
| 1 | , , , நீ த நீ ஸ்ா, ஸ்ஸ்ா ஸ்ா<br>போனதிசை ப க ராய் | , , , நிதநி ஸ்ா<br>இ ன்னம்பு | ஸ்ஸ்நித பா பநி ‖<br>லர்ந் . . தின்றோ ‖ |
| 2 | தாம நீதநீ ஸ்ா, ஸ்ஸ்ா ஸ்ா<br>. போனதிசை ப க ராய் | , , , ஸமகமக<br>இன் னம்பு. | x<br>ரிம்க்ரி ஸ்நி ரிஸ்ஸ்ா ‖<br>லர்ந் தின் றோ ‖ |
| | ம . பமகமபஸ் நித தநிப தநீ<br>வா. . னே நி ல னே பிற | ஸ்ா ; ; ரிஸ்<br>வே அ . | ஸ்நி நித தப பம ‖<br>ரி வ ரி யான். ‖ |
| 1 | நீ, தா, தா தா, நீ ப தா<br>தா னே வந் தெம்மைத்தலை | . . நிதா நிரிஸ்<br>அளித்தா. | ஸ்ஸ்நித பா பம ‖<br>ட்கொண் ட ருளும் ‖ |
| 2 | கமபதநிஸ் தநி தா, நீ ப தா<br>தா. னே . . . வந். தெம்மைத்தலை | , , நிதா நிரிஸ்<br>அளித்தா. | ஸ்ஸ்நித பா பம ‖<br>ட்கொ ண்ட ருளும் ‖ |
| | பா, பா, பா மதப மககமா<br>வான்வார்க ழல் பா டி | ஸமா கா, மா<br>வந் தோர்க்குன் | பா, மநீ தா ‖<br>வாய்தி றவாய் ‖ |
| | x<br>, , மா நிதா நி ஸ்ா ஸ்நி ரிஸ்ஸ்ா;<br>ஊ னே உ ரு . காய் . . | நிதா நீ, ரிஸ்<br>உனக்கே உ . | ஸ்ஸ் நித பாபம ‖<br>றும். எ . மக்கும். ‖ |
| | மதபமககமா பதபதா நிஸ்ா<br>ஏ . னோ ர்க்கும் தம் . கோ னை | x<br>நிரிஸ் தஸ்நி நித<br>பா . . டே. . லோ. | த மா பா, நித ‖<br>ரெம். பா வாய். ‖ |

(மானே நீ நென்னலே)

(x இந்த அடையாளம் தீவ்ர நிஷாதத்தைக் குறிக்கும்.)



# வெற்றியின் ரகசியம்

வே. ராஜம்

'பட்டுவாம் பட்டு; எங்கே தொலைஞ்சானோ? கடைக்குப் போய் காப்பிக்கொட்டை வாங்கி வாடா என்றேன். எங்கே போயிட்டான்?' என்று வீட்டு எஜமானி கூவினாள்.

இரட்டைப் பின்னல் குலுங்க சுமதி மாடியினின்று இறங்கி 'ரேடியோ பெட்டியை இரண்டாக ஆக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று உட்கார்ந்து இருக்கான்' என்று தாய்க்குமேல் உரத்த குரலில் பதிலளித்தாள்.

ரேடியோவின் அருகே அமர்ந்து சங்கீதக் கச்சேரியை ரசித்துக் கொண்டிருந்த பட்டுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் ஒரு நிமிஷம்கூட உட்கார அவன் மாமி மனம் ஒப்புவதில்லை. தாய் தந்தையற்ற அனாதை என்றால் அப்படியா அலட்சியமாக நடத்த வேண்டும்? சுமதியின் தாய்க்குப் பட்டுவைக் கண்டால் அலட்சிய மட்டுமல்ல, அவனை வீட்டில் வைத்துக்கொண்டு சோறு போடுவது வீண் என்று கருதினாள்.

அவள் கணவன் சங்கரன் சிறிது பணிந்து போகக்கூடியவராக இருந்திருந்தால் பட்டுவுக்குச் சீட்டு என்றோ கிழிந்திருக்கும்.

சங்கரனின் சகோதரி இறக்கும்போது ஆறு வயதுச் சிறுவனை பட்டுவைக் கைபிடித்துக் கொடுத்து, அவனை எப்படியாவது காப்பாற்றி முன்னேற்றி விடுமாறு கேட்டுக் கொண்டாள். அவள் கேட்டுக்கொள்ளாவிடினும் அவனைக் காப்பாற்றுவது அவர் கடமையன்றோ? அவரைப் பொறுத்தவரை பட்டுவை அன்புடனே நடத்தி வந்தார்.

சங்கரனின் மனைவிக்கு மட்டும் ஏனோ வெறுப்பு. தாயைப் போலவே அவளது இரண்டு பெண்களும்; மூத்தவளுக்கு அவ்வளவு துடுக்கில்லை; ஆனால் இளையவள் சுமதி தாயையும் சில வேளை மிஞ்சிவிடுவாள்.

காலம் வளர பட்டுவும் வளர்ந்தான். அவனுக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. அவனது உதடுகள் மெல்லிய குரலை எழுப்பும். இசையறிந்தவர்களுக்கு அவை சிறந்த ராகங்களாக அமையும்.

ரேடியோ வாங்கிய பிறகு பட்டுவின் மனவண்டு அதைச் சுற்றியே வட்டமிடும். ஹாலில் உள்ள ஸோபாவைத் துடைக்கும்போதோ, பால்காரனிடம் பால் வாங்கும்போதோ, வண்ணானிடம் துணியை எண்ணிப்போடும்போதோ அவன் முன்பு கேட்ட ஏதாவது பாடலை முணுமுணுத்துக்கொண்டு இருப்பான்.

சங்கரனுக்குத் தெரியும் தன் மனைவி பட்டுவை அலட்சியம் செய்கிறாள் என்று. பேச்சு வாக்கில் சொல்லிப் பார்த்தார். அவள் கேட்கவில்லை. சாதாரணமாகச் சொன்னால் புரியாதென்று சுமதிக்கு ஏற்ற கணவர் பட்டுதான் என்பதையும், தன் சொத்து வெளி இடத்திற்குப் போகாமல் இருக்கவே பட்டுவை வீட்டில் வளர்ப்பதாகவும் சாடையாகத் தெரிவித்தார்.

சங்கரனின் மனைவி சீறி எழுந்தாள். தன் மகளை ஒரு நாளும் உதவாக்கறைக்குக் கொடுக்கமாட்டேனென்று கூறினாள்.

பட்டுவுக்கு அப்போதெல்லாம் கல்யாண நினைவு இல்லை. அவன் எண்ணமெல்லாம் சங்கீத தேவதையிடம் ஈடுபட்டிருந்தது. மணஊர் சுந்தர பாகவதர் பாட்டைக் கேட்கும் போதெல்லாம் அவரிடம் போய்ச் சேர்ந்து அவர் வீட்டு வேலைக்காரனாகி சிக்ஷை பயிலலாமே எனத் துடித்தான்.

அதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. சங்கரனின் ஜவுளிக் கடையில் திடீரென வியாபாரம் வலுவடைந்தது. உடன் இருந்து பார்க்க நம்பிக்கையான ஆள் தேவைப்பட்டது. வீட்டிலேயே பட்டு சும்மா இருப்பதைத் தடுக்க அவனைக் கடைக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தார்.

ஒரு நாள் அவன் எதிர்பார்த்தது நேர்ந்தது. மணஊர் சுந்தர பாகவதர் அந்த ஜவுளிக் கடைக்கு வந்தார். அவரைப் பார்த்தவுடன் சங்கரன் பிரமாதமாக வரவேற்றார். அவருக்கு வேண்டிய வேஷ்டி, புடவை தினுசுகள் எல்லாவற்றையும் தாமே எடுத்துக் காட்டினார். வித்வானை அவர் கவனித்துக்கொண்டிருந்த போது பட்டு வந்திருப்பவர் இன்னார் என அறிந்தான். அவனுக்கு வேலையே ஓடவில்லை. மாமாவின் அருகே சென்று நின்றுகொண்டு




உச்ச நிலைக்கு
விருத்தியடைந்துள்ள
உன்னத
விற்பனை

லோமா உங்கள் கேசத்தை கருமையுடன் விளங்கச் செய்வதுடன் அதை எழிலுடன் பிரகாசிக்கவும் செய்கின்றது. அதனால்தான் பெரியோரும், சிறியோரும், ஆடவரும், பெண்டிரும், எல்லோரும் ஒருமுகமாக, இந்தியாவிலும், மற்றும் வெளிநாடுகளிலும், லோமாவையே விரும்பி வாங்குகிறார்கள்.

லோமா

கேசத்தைக் கருமையாக்குவதில் பாரினில் புகழ்பெற்றது.



பூரண ஏஜெண்டுகள்:
எம். எம். கம்பாத்வாலா அஹமதாபாத்-1
ஏஜெண்டுகள்:
ஸி. நரோத்தம் அண்டு கோ. பம்பாய்-2

TAM.

சென்னை ஏஜண்டுகள்:—J. பலாபாய் & கோ., 260, எஸ்பிளனேட் சென்னை-1. [(போன்: 4022)
சிலோன் ஏஜண்டுகள்: விர்றல் கதிர் & கோ., 41-43, செகண்ட் கிராஸ் தெரு கொழும்பு-11.

வித்வானையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு வழியாக வாங்க வேண்டியவற்றை முடித்துக் கொண்டு காரில் ஏறும்போது 'வீட்டிற்கு யாரையாவது அனுப்புங்கள். செக் அனுப்பி வைக்கிறேன்' என்று சொல்லிப் போனார்.

பட்டுவா அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடுவான்? தானே போய் பணம் வாங்கி வருவதாகத் தெரிவித்தான். சங்கரனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. பட்டுவே வேலையைக் கவனிப்பதாகக் கிளம்பிவிட்டான் என்றால், அவருக்கு இனி கவலை ஏது?

மணலூர் சுந்தர பாகவதரிடமிருந்து பட்டு செக் மட்டுமா வாங்கி வந்தான்? அவர் ஆசியையும் பெற்று வந்தான். ஒரு பாட்டைப் பாடச் சொல்லிக் கேட்ட அவர், உள்ளத்தில் உவகை பூண்டார். வெறும் கேள்வி ஞானத்திலேயே இவ்வளவு அபாரமாகப் பாடும் பட்டுவுக்குச் சாஸ்திரீய சங்கீதம் தெரிந்துவிட்டால்...பட்டு தினமும் அவரிடம் சென்றான். அவன் முகத்தில் தனி ஒளி பரவ ஆரம்பித்தது. சங்கரனுக்கு ரொம்ப சம்மதம்.

ஆனால் அவர் மனைவி வழக்கம் போல் எதிர்த்தாள். 'சுமதியை பட்டுவுக்குக் கொடுக்கப் போகிறேன்; கொடுக்கப் போகிறேன் என்று பெருமை அடித்தீர்களே. கூத்தாடிபோல் போட்டு கத்திக் கதறவனுக்கா கொடுக்கப் போகிறேள்? இதோ பாருங்க; சுமதி கலியாணமாகாத கன்னியாகவே இருக்கட்டும்!' என்றாள்.

சங்கரன் மௌனமானார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த பட்டு திடுக்கிட்டான். அவனுக்கு உள்ளத்தின் மூலையில் ஒரு சபலம். சுமதியைத் தனக்குத்தான் மணம் புரிவிப்பார்கள். சுமதியின் அழகும், தன் கலையும் ஒன்று சேர்ந்தால் இந்த உலகில் வேறு இன்பமே வேண்டாமே என்று எண்ணினான். சுமதிக்கும் தாயின் எண்ணமே வளர்ந்திருந்தது. தன்னை மணக்க வேண்டியவன் நல்ல ஆபீசில் வேலை செய்பவனாகவும் மாதம் பிறந்தால் சம்பளம் வாங்கி வருபவனாகவும் இருக்கவேண்டும் என்ற எண்ணமே அவள் உள்ளத்தே வளர்ந்தது.

'சுமதி' என்று கூப்பிட்டவாறு பட்டு வீட்டிற்குள் நுழைந்தான். அவன் கையில் அந்த வாரத்தின் பிரபல வாரப் பதிப்பின் இதழ் இருந்தது. அவனுடைய போட்டோ வெளிவந்திருந்தது. அவனது கச்சேரியைப் புகழ்ந்து விமர்சனம் எழுதி இருந்தார்கள். சுமதி அதை அலட்சியமாகப் பார்த்தாள். பிறகு அந்தப் பக்கத்தைத் தள்ளிச் சிறு கதை ஒன்றைப் படிக்கலானாள்.

'என்ன சுமதி! என் கச்சேரியைப் பற்றி எப்படி எழுதியிருக்கிறார்கள் பார்த்தாயா?' என்று பேச்சைத் தொடங்கினான். ஆனால் சுமதி பதில் பேசாமல் பத்திரிகையையும் எடுத்துக் கொண்டு கீழே சென்றுவிட்டாள். பட்டு அதற்காக வருத்தப்படவில்லை.

அவனுடைய இசை ஞானம் நாளுக்கு நாள் வளர்ந்தது. சங்கரனுக்குப் பெருமை தாங்கவில்லை. தன் மருமானை ஊரார் மெச்சிப் புகழ்வதை எண்ணி அவர் மகிழ்ந்தார். மனைவியிடம் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்க அவர் தயங்கவில்லை. ஆனால் அவள் தன் பிடிவாதத்தை விடுவ



தாக இல்லை. இன்னும் ஒரு படி அதிகமாகவே போனாள். பட்டு வீட்டில் இருப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதைத் தெரிவிக்கும் விதத்தில் தெரிவித்தாள். 'சுமதிக்குப் பட்டுவைக் கண்டால் பிடிக்கவில்லை. அவள் அவனை மணக்கமாட்டாள். ஆனால் பட்டு அவளை வற்புறுத்துகிறான். இனி அவன் இங்கு இருப்பது உசிதமல்ல' என்று தன் கணவனிடம் அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டாள்.

பட்டு பெட்டி படுக்கையுடன் கிளம்பினான். போகும்போது சுமதியை ஏக்கம் நிறைந்த பார்வையுடன் கண்டதோடன்றி, அவளுடைய புகைப் படமொன்றையும் எடுத்துச் சென்றான்.

பெட்டியின் அடியில் அதை வைத்ததுடன் மனப்பெட்டிக்குள்ளும் அதைப் புதைத்துக்கொண்டான்.

பட்டு வெளியேறிய விவரம் சங்கரனுக்கு தெரிய வந்தபோது அவரடைந்த துக்கத்திற்குக்



குறைவில்லை. பட்டு இருக்குமிடம் சென்று அவனைத் திரும்பவும் வந்துவிடுமாறு அழைத்தார்.

'மாமா! எனக்கு எந்தவிதக் கோபமுமில்லை. எந்த நிமிடமும் தங்கள் இல்லத்திற்கு வர வேண்டியவன்தானே! மாமிக்கும் சுமதிக்கும் என்னைப் பிடிக்கவில்லை. சங்கீத தேவதையை நான் வணங்காமல் ஒரு குமாஸ்தாவாக ஆகி இருந்தால் சுமதிக்குப் பிடித்திருக்கும். இந்த ஜன்மத்தில் சங்கீத அடிமையாயிருப்பேன். அடுத்த ஜன்மத்தில் வேண்டுமானால் சுமதிக்கு விருப்பமானவனாக இருக்கிறேன்' என்று கூறி விட்டான்.

சங்கரன் நீர் நிறைந்த கண்களுடன் திரும்பினார்.

'சுமதி' என்று விளித்தவாறு அவள் தாயார் வந்தாள். சங்கரனும் நிமிர்ந்து பார்த்தார். அவள் கையில் கடிதமொன்று இருந்தது. 'அக்கா கடிதம் போட்டிருக்கிறாள்' என்றாள் மகிழ்ச்சி பொங்க.

'அக்காவா? என்ன எழுதியிருக்கிறாள்!' என்று ஆவலுடன் கடிதத்தை வாங்கினாள் சுமதி. தன் சகோதரியைப் பற்றி அவளுக்கு அபார ஆசை. சகோதரியின் கணவர் பாண்ட்டும் புஷ் கோட்டும் அணிந்து கொண்டு மோட்டார் சைகிளில் ஆபீஸ் செல்வது அவள் கண் முன்பாகவே இருக்கும். இழைய இழைய வாரப்பட்ட கிராப். வெள்ளை வெளேரென்ற உடுப்பு. முகம் தெரியுமளவுக்கு பளபளக்கும் பூட்ஸ்...அவர் எங்கே? என்னை மணக்க அப்பா சொல்கிறாரே மடிமஞ்சி, பட்டு எங்கே? குடுமித்தலை, பொத்தானில்லாத சட்டை, காவி ஏறிய வேஷ்டி. அத்திம்பேர் பேசுவது இங்கிலீஷ். இந்த மடிசஞ்சி உதிர்ப்பது 'ஸரிகரிகமபத' ஆச்சே...! அக்கா சந்தோஷமாகக் குடும்பம் நடத்துவாள்...

'என்ன எழுதியிருக்கிறாள்?' என்று சங்கரன் கேட்டார்.

'சௌக்யமாக இருக்கிறாளாம். என்னை ஒரு தடவை வரச் சொல்லி எழுதியிருக்கிறாள்' என்றாள் சுமதி.

'போயிட்டுத்தான் வாயேன்...'

அப்பாவும், அம்மாவும் ஏகோபித்துக் கூற சுமதிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அக்காவின் இல்லத்திற்கே போய்விட்டது போன்ற பிரமை அவளுக்கு. அக்கா குடும்பம் நடத்துவதைக் கவனித்துக்கொள்ள வேண்டும். அதேபோல்...

சுமதி சகோதரியின் வீட்டிற்குக் கிளம்பிவிட்டாள். ஸ்டேஷனுக்கு அத்திம்பேர் வந்திருப்பார் என்ற ஆவலுடன் இருந்தாள். அக்கா மட்டும்தான் வேலைக்காரியுடன் வந்திருந்தாள்.

டாக்ஸியில் போகும்போது 'அத்திம்பேர் எங்கே அக்கா?' என்று ஆவலுடன் கேட்டாள். அக்கா பதில் பேசவில்லை.

வீட்டிற்குப் போன பிறகு அக்காவின் கணவர் சாப்பிடக்கூட வராதது கண்ட சுமதி, அக்காவை வற்புறுத்திக் கேட்கலானாள். அவள் சகோதரி சலிப்புடன் கூறினாள்.

'உன் அத்திம்பேர் கலியாணமான புதிதில் ஒழுங்காகத்தான் இருந்தார். ஆபீஸ் உண்டு வீடு உண்டு என்று. எப்படியோ அவருக்கு நாடகப் பைத்தியம் பிடித்துக்கொண்டது. அமெச்சூர் நாடகங்களில் நடிக்கலானார். அவரது தோற்றத்திற்கும் குரலுக்கும் எடுத்த எடுப்பிலேயே கதாநாய






மகிழ்வளிக்கும் புதுமை மிகுந்த

OK ஓ.கே சந்தன சோப்

இதோ உங்கள் கனவு நனவாகிறது. பரிபூர்ண அழகும், வசீகரமும், வழி வழியாக வந்த உன்னதச் சிறப்பு மங்காமல், உங்களுக்குச் சுலபமாகக் கிடைக்க வழி. பரவசமூட்டும் புதிய ஓ. கே. சந்தன சோப். பரிசுத்தமான சந்தனத்தைலம் வேண்டிய அளவு இதில் இருக்கிறது. அதோடு நன்மைகள் பல அளிக்கும் நவீன லனோலின்; ஆக்டமொர்; அதிகப்படியான கிளிஸரின் ஆகியவற்றின் தன்மைகளையும் சேர்த்துக் கணக்கிடுங்கள். இந்திய டாய்லெட் சோப்புகளிலேயே சிறந்தது இந்த சோப்புதான் எனக் கூறுகிறோம் நாங்கள். ஏனென்றால்,

- வரளச்செய்யும் வெய்யில், காற்று, உஷ்ணம் ஆகியவற்றை எதிர்த்து, மிருதுவான சருமத்தின் படுத்தன்மைக்கு அவசியமான ஈரப்பசையை பாதுகாக்கிறது லனோலின்.
- அழுக்குக் கிருமிகள் மூலம் அபாயம் நேராமல் பாதுகாத்து, சருமத்திற்கு ஆரோக்கியம் அளிக்கிறது ஆக்டமொர்.
- மிகவும் மென்மையான சருமத்திற்கும் இதம் அளிப்பது அதிகப்படியான கிளிஸரின்.

எல்லாவற்றிற்கும் மேலாக சந்தனத்தின் இனிமை மிகு சுகந்தம்

இனாம்

ஓ. கே. அறிமுகப் பரிசளிப்பு
(3 மாதங்களுக்கு மட்டும்)
3 கட்டி ஓ. கே. சந்தனசோப் வாங்குங்கள். கவர்ச்சிகரமான தந்த முலாம் சோப்புப்பெட்டி ஒன்றை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்.

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

கன் பாத்திரம் கிடைத்தது. நிறைய நாடகங்களில் நடிக்கலானார். சுமதி, என்ன சொல்வேன்? அவர் திடீரென வேலையை ராஜிநாமா செய்துவிட்டு இப்போது சங்கீதம் கற்றுக்கொள்கிறார். சொந்தக் குரலில் பாடக்கூடிய கதாநாயகன் குறைவாம். அதுவும் இருந்துவிட்டால் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கலாமாம். இப்போதே இவருக்கு இரண்டு சினிமா சான்ஸ் வந்துவிட்டது. எடுத்த எடுப்பிலேயே ஐயாயிரம் ரூபாய். குமாஸ்தாவாக இருந்து எந்தக் காலத்தில் இந்தப் பணத்தை சம்பாதிக்க முடியும். ஒரே ஒரு குறை; வீட்டிலே அவர் இருக்க முடிவதில்லையே என்று. அது இருக்கட்டும்; நான் கேள்விப்பட்டது உண்மை தானா சுமதி? நம்மாத்திலே இருந்தானே பட்டு—அவன்தான் இப்போது பிரபல பாடகனாக விளங்குகிறானாமே— அவனுக்குத்தானே உன்னை நிச்சயம் செய்யப்போகிறார் அப்பா — அதிர்ஷ்டசாலி தாண்டி நீ' – என்றாள்.

சுமதி பதில் பேசவில்லை. அவள் கண்கள் கலங்கின.

ஃ ஃ ஃ

ஒரு மாதம் இருக்கப் போகிறேன் என்று போன சுமதி, மூன்றாவது நாளே திரும்பி வந்துவிட்டது வீட்டிலே எல்லோருக்கும் வியப்பாக இருந்தது.

அன்றுதான் சங்கரனின் மனைவி வீடு தேடி வந்து, சுமதியை மணக்கிறேன் என்று வாய்விட்டுக் கேட்ட பட்டுவுக்கு ஈவு இரக்கமின்றி முடியாது முடியாது என்று சொன்னாள். பட்டு இப்போது ஏராளமாக சம்பாதித்து உயர்நிலையில் இருந்தாலும் மாமியின் அவமதிப்பால் ஆத்திரமடையவில்லை. மௌனமாக வீடு திரும்பினான். அன்று மாலையில் வானொலியில் பாடுவதாக இருந்தது. அப்போதிருந்த மனநிலையில் அவனால் ஒரு சிறு குரல்கூட எழுப்ப முடியாதுபோலிருந்தது. நெஞ்சு உடைந்துவிடும் போலிருந்தது. ஒன்று சுமதியை மறக்கவேண்டும்; இல்லாவிடில் சங்கீதத்தை விட்டுவிட வேண்டுமோ? இப்படிக் குழம்பிக் கொண்டிருந்த போது சுமதி ஓடோடி வந்தாள். பட்டுவின் பாதங்களை அவளது கண்ணீர் நனைத்தது.

'என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் மதிப்பு அறியாது மாயையில் சிக்கியிருந்து அலட்சியப்படுத்தினேன். என் சகோதரி என் கண் திறந்துவிட்டாள். அக்கா தேடாமலேயே கலை அவளை அடைந்திருக்கிறது. என்னை அடையக் காத்திருக்கும் கலையையோ அறிந்தும் அலட்சியப்படுத்தினேன். என்னை மன்னித்துவிடுங்கள்' என்று விம்மினாள்.

பட்டுவுக்குப் பேசக்கூட நா எழவில்லை.

ஃ ஃ ஃ

அன்று வானொலியில் பட்டுவின் கச்சேரி மிகச் சிறந்திருந்தது என்று பாராட்டினர் ரசிகர்கள்.

'என்னமா சாதகம் செய்கிறான்? நன்றாக இல்லாமல் என்ன செய்யும்? 'போன ஜன்ம புண்யம்?' குருவின் பூரண ஆசி' என்றெல்லாம் அன்றைய கச்சேரி வெற்றியைப் பற்றி எல்லோரும் பாராட்டினர்.

பட்டுவுக்கு அல்லவா அந்தரங்கம் தெரியும், வெற்றியின் ரகசியம் சுமதி என்று.

✯





# அக்காவுக்குக் கல்யாணம்

பொழுது விடிந்தால் என் அக்காவுக்குத் திருமணம். எங்கள் வீடு கல்யாண வீடாகக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது. வாசலில் போட்டிருந்த பந்தலில் நண்பர்கள், உறவினர்கள் என்ற பெயரில் அமர்ந்திருந்த வாலிபர் குழாம் சீட்டாட்டத்திலும், சினிமா விமரிசனத்திலும், உள்ளுக்கும் வாசலுக்கும் நடைபோட்டுக்கொண்டிருந்த அன்னங்களின் பார்வையிலும் தங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தனர். வராந்தாவிலே 'பலாப்பூர் பிரதர்ஸ்' தங்களது திறமையை நாதஸ்வர குழல்களின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். சமையலறையில் அம்மா 'பரிசாரகனிடம்' இரவு சமையலைப்பற்றிக் கூறிக் கொண்டிருந்தாள். என் அப்பா புரோகிதரிடம் நாளைய வைபவத்தின் நிகழ்ச்சி நிரலைப்பற்றிச் சொல்ல, நெருங்கிய உறவினர் ஒருவர் பால்காரனிடம் 'சண்டை' பிடித்துக்கொண்டிருக்க [illegible]திக்கொண்டிருந்தது.

'காமிரா' அறையில் என் சகோதரி உமாவுக்கு அருகில் அமர்ந்து அவளைக் கேலி செய்துகொண்டிருந்தேன் நான். மணப்பெண்ணுக்கு உள்ள நாணம் அவள் முகத்திலே விளையாடிக்கொண்டிருந்தது. இருந்தாலும் என்வேடிக்கைப் பேச்சுக்கு அவள் அடிக்கடி புன்முறுவல் பூத்தபடி இருந்தாள்.

'பெண்களின் அழகு ஆண்களுக்குத்தான் தெரியும்' என்று சொல்வார்கள். ஆனால் என் அக்காவின் அப்போதைய அலங்காரத்திலே நானே சொக்கிப் போனேன்.

பழுப்பு கலந்த அவளது சிவந்த மேனியில் இளமையின் ரேக்கு பொன்னாக மின்னியது. மையுண்டு சிரிக்கும் கண்கள், சிலிர்ப்பும் இமைகள். நேர் வகிடு விரித்து வாரிய தலையில் பாம்புபோல் நெளிந்து நெகிழும் பின்னல். அவள் உடலுக்கு ஏற்ற பச்சை நிற சேலையும், இரத்த ஓட்டத்தை தடை செய்யும் அளவுக்கு அவள் அணிந்திருந்த பாக்கு நிற சோளியும் என் உள்ளத்தையே சிறிது சிரிக்க வைத்தன.

'அக்கா! உன் கரம் பிடிக்கும் அந்த மகானுபாவர் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலியாக இருக்க வேண்டும், சொந்த தங்கைக்குக்கூடத் தெரியப்படுத்தாமல் 'அவரை'த் தேர்ந்தெடுத்

காண்டாயல்லவா?' வேடிக்கையாக து ரோஜாக் கன்னங்களைக் ரினேன்.

ன் என்ன செய்யட்டும் உஷா! ான்று எல்லாம் முடிந்துவிட்டது. ா பார்க்கும் படலத்தில்'கூட நீ ாமல் எனக்கு எவ்வளவு குறை இருந்தது தெரியுமா! என் அக்கா அழகிய வதனத்தில் கண்ணீரும் பும் கண்ணாமூச்சி ஆடின.

ீட்சை மட்டும் இல்லாவிட்டால் பட்டாம்பூச்சியைப்போல் பறந்து ருக்கமாட்டேனா! இருக்கட்டும். 'அவர்' இன்னும் வரவில்லை. தும் பார்த்துவிட்டு என் நற் ிப் பத்திரத்தை உனக்கு வழங்கு ன்' என் விழிகளில் வழிந்த பு என் சொற்களிலும் தெறித்தா

ாதும் உஷா! உன் அரட்டையை ணம் முடியும் வரையிலும் நிறுத் ாள். கல்லூரி படிப்பினால் உன ாய்தான் 'நீளமாக'ப் போய்விட் அவர்களெல்லோரும்கூட வந்து ார்களாம். நீயும் முகம் கழுவி யை மாற்றிக்கொள்' உள்ளே ந்த என் தாய் எங்கள் பேச்சுக்கு போட்டாள்.

மா! நான் போய் மாப்பிள்ளையை துவிட்டு வரட்டுமா!' ஆவலும் ாமும் ஒன்றையொன்று மோதக் டன் நான்.

ச வந்த பெண். வெட்கமில்லாமல் ளெதிரில் எல்லாம் போய் நிற்கக் ு. ஜானவாஸ சமயத்திலே துக்கொள்ளலாம்' என் ஆசைத் மண்ணைத் தூவினாள் என் தாய்.

யிலில் கூட்டம் குழுமியிருந் ஜானவாஸம் அங்கிருந்துதான் ம். நான் வீட்டிலிருந்து கிளம் ாழுதே நேரம் கழித்துப் புறப்பட் நான் சென்றபொழுது 'மாப் ா' மாமனாரின் 'சீர் வரிசைகளை' ் ஏற்றிக்கொள்ள எங்கேயோ திருந்தார்.

உள்ளம் பூராவும் என் சகோதரி ணவரையே எதிர்நோக்கியிருந் விழிகள் நாலாபுறமும் சுற்றிச் ுகொண்டிருந்தன. அக்காவின் ்கேற்ற மாப்பிள்ளையாக வருப வர் இருக்க வேண்டும் என்று என் வாய் பிரார்த்தித்துக்கொண்டிருந்தது.

'மாப்பிள்ளை ஸார்! இந்த மாலையைப் போட்டுக்கொண்டு மாமனாரை நமஸ்காரம் செய்யுங்கோ!' குரல் வந்த திக்கில் என் பார்வை பறந்தது.

ரோஜா மாலை கழுத்திலே தவழ ட்வீட் பாண்ட்டும், கோட்டும் அணிந்து வணங்கி எழுந்த உருவத்தை என் கண்கள் ஒருகணம் கூர்ந்து கவனித்தன. அவ்வளவுதான்! எனக்கு உலகமே சுற்றுவதுபோல் தென்பட்டது. ஆம்! அவரேதான். இந்த நேரம்வரை என் இதய கோயிலில் அமர்ந்திருந்த அதே ராம்குமார்தான். என் உள்ளக் கடலில் உணர்ச்சி அலைகள் பொங்கியெழும்படி. சூறாவளி அடித்தது. அடுத்த நிமிடம் இதயத்தை இரும்பாக்கிக்கொண்டு வேதனை நிறைந்த உள்ளத்துடன் வீடு திரும்பினேன்.

கல்யாண வீடு என் மன வீட்டைப் போல் காட்சி அளித்துக்கொண்டிருந்தது. வந்திருந்த அத்தனை பேரும் ஜானவாஸத் தென்றலில் மிதந்துகொண்டிருக்கிறார்களே!

அக்கா கேட்டாள்: 'அவரைப் பார்த்தாயாடி!' அவள் சொற்களில் ஒரு துடிதுடிப்பும் பதட்டமும் காணப்பட்டன.

'உஷா! ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய்! எப்படி இருக்கிறார் உன் அத்திம்பேர்?' அம்மா ஆசையோடு கேட்டாள்.

'அக்கா கொடுத்து வைத்தவள். அவள் வாழ்க்கைப் பாலம் நல்ல இடத்தில் அமைந்திருக்கிறது.'

அக்காவின் முகமெங்கும் எல்லையில்லா மகிழ்ச்சிக் கோடுகள் அழகு கோலங்கள் போடுவதை நான் காணத் தவறவில்லை.

'அம்மா! எனக்குத் தலைவலி தாங்க முடியவில்லை. அதனால்தான் முன்னாலே வந்துவிட்டேன். சிறிது நேரமாவது 'ரெஸ்டு' எடுக்கணும். மாடி அறைக்குப் போகிறேன்' உள்ளத்தில் எழுந்த புயலை வெளிக்காட்டாமல் சொற்களை வெடித்தேன்.

'ராத்திரி பூராவும் வண்டியில் வந்த அலைச்சல். போய் படுத்துக்கொள். அப்பொதான் நாளைக்கு உமாவின் கல்யாண வேலைகளைக் கவனிக்க முடியும்' என் தாயின் பேச்சில் பெற்ற பாசம் பின்னிக் கிடந்தது.


'மாலையே திருஷ்டி எடுக்கணும்னு நினைச்சேன். என் இரண்டு செல்லங்களும் சேர்ந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கும்பொழுதே எனக்கு நன்றாகத் தெரியும். யார் பட்ட கண்ணோ...' தாயின் சொற்கள் மாடிப் படிகளில் சென்றுகொண்டிருந்த என் செவிகளில் விழாமலில்லை.

'ஆமாம்! அக்காவாம் அக்கா! கடைசியில் எனக்கு வைரியாகத் தானே வந்தாள்!' என் மனம் நினைத்தது.

அறையில் போட்டிருந்த படுக்கை எனக்கு அடைக்கலம் தந்தது.

இரும்புபோலிருந்த எனது இதய கபாடம், எண்ணம் என்னும் எரிதீயில் உருகி வெளி வாங்கியது. கண்ணீரைப் பெருக்கிக் கதற வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், கண்ணீர் வரவில்லை. கோயிலில் கண்டவை என் நெஞ்சில் சூட்டுக்கோல் சுட்டது போலிருந்தது. பழைய சம்பவங்களின் நினைவு அலைகள் மெல்ல மெல்ல என் மனக்கரையிலே மோதிச் சிதறின.

என் அக்கா உமா. அவளுக்கு அடுத்துப் பிறந்ததுதான் இந்த தரித்திரம் பிடித்த கட்டை. எனக்கும் அவளுக்கும் வயதில் இரண்டு வருடங்கள் வித்தியாசம். இருந்தாலும் பெயரிலும், உருவத்திலும், மனப்போக்கிலும் ஒன்றாகவே அமைந்திருந்தோம் நாங்கள். ஆனால், சிறு வயதிலிருந்தே ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் நான் அக்காவுக்கு



நேர்மாறாக இருந்தேன். யாரிடமும் கலகலவென்று பழகும் சுபாவமும், மற்றவர்களை வேடிக்கையாக கேலி செய்வதிலும் பெயர் பெற்றிருந்தேன் நான். ஆனால், உமாவோ யாருடனும் அதிகமாகக் கூட பேசமாட்டாள். பள்ளி விடுமுறை நாட்களில் எங்கள் சக மாணவிகள் அத்தனை பேரும் எங்கள் வீட்டுக்கு வந்து என்னுடன் அரட்டை அடித்துக்கொண்டிருப்பார்கள். அதே சமயம் உமாவோ சமையலறையில் அம்மாவுக்கு அருகில் அமர்ந்து கொண்டோ அல்லது வாசல் அறையில் புத்தகங்களுக்கு இடையிலோ மூழ்கிக் கொண்டோ இருப்பாள்.

நான் யாருடனும் தாராளமாகப் பழகும் சுபாவம் படைத்தவள். என் தகப்பனார் திருச்சியில் ரெவின்யூ இலாகாவில் பணியாற்றி வந்தார். அவரைத் தேடிவரும் அத்தனை பேருக்கும் தகுந்த பதில்களைக் கூறி அனுப்புவேன் நான்.

பள்ளிப் படிப்பை நாங்கள் இரண்டு பேரும் ஒன்றாக முடித்தோம். அதற்கு மேல் என் சகோதரி தொடர்ந்து படிக்க விரும்பவில்லை. ஆனால், நானோ! என் பெயருடன் இரண்டு எழுத்துக்களையும் சூட்டிக்கொள்ள விரும்பினேன். என் தந்தையும் படித்தவர், பட்டம் பெற்றவர். என் ஆசைக்கு அணை போட விரும்பவில்லை. அதன் முடிவு! சென்னைக் கல்லூரி ஒன்று எனக்கு இடம் தந்தது. என் உறவினர் ஒருவர் வீட்டிலிருந்து கல்லூரிக்குச் சென்று படிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

சென்னைக்குப் புறப்படும்வரையிலும் கூட என் தாய்க்கும் சகோதரிக்கும் சிறிதுகூட விருப்பமில்லை. வயது வந்த பெண்ணை வெளியே அனுப்பிப் படிக்க வைப்பது அவ்வளவு நல்லதல்ல என்பது அவர்கள் எண்ணம். ஆனால், முற்போக்காளரான என் அப்பாவின் பிடிவாதத்தின்முன் அவர்களின் பேச்சு எடுபடவில்லை.

சென்னை செல்லும் வண்டியில் சன்னலோரத்தில் அமர்ந்திருந்தேன். என் அப்பா அன்றைய தினசரித் தாளில் தன் தலையை விட்டுக்கொண்டிருந்தார்.



என் சகோதரி உமாவின் விரல்கள் என் கரத்தில் விளையாடிக்கொண்டிருந்தன.

'உஷே! போவது சென்னை, திருச்சி அல்ல, நினைவிருக்கட்டும்.' இரண்டே சொற்களில் அவளுடைய உபதேசம் அமைந்திருந்தது.

அம்மாவின் விழிகளில் கண்ணீர் குளம் கட்டி நின்றது. 'தன் கண்களில் ஒன்றைப் பிரியப் போகிறோம் என்ற நினைப்போ அல்லது இந்தப் பெண் 'சரியாக' நடந்துகொள்ள வேண்டுமே என்ற வேதனையோ!

அம்மா அமைதியான குரலில் அன்பு வார்த்தைகளாகத் தொடுத்து என்னிடம் கொடுத்தாள்.

'உஷா! இந்த உலகம் மிகவும் பொல்லாதது. நீயோ வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவள். இனி நீ அறியாச் சிறுமி அல்ல, நம் வீட்டில் இருந்ததுபோல் இருக்கக் கூடாது. உமாவின் குணத்தில் சிறிதளவாவது எடுத்துச் செல்லம்மா. இங்கு எல்லோரிடமும் சகஜமாகப் பழகியதுபோல் இனி ஒரு நாளும் இருக்கக்கூடாது'.

உள்ளம் சென்னையிலும், கல்லூரிக் கட்டிடத்திலும் சிறகடித்து பறக்கும் பொழுது எனக்கு இதனைப்பற்றி சிந்தித்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

கல்லூரி வகுப்பில் முதன்முதலாகக் காலெடுத்து வைக்கும்பொழுது அறுபது ஜோடி கண்களும் என்னை நோட்டம் விட்டன.

'டேப்ளிகேட் பத்மினி டோய்!' காலரியின் கோடியிலிருந்து எழுந்த குரல் என் செவிகளைத் தாக்கிற்று.

'அவ்வளவு அழகாகவா உஷா நீ இருக்கிறாய்?' உள்ளம் வினாவைத் தானாக எழுப்பிக்கொண்டது.

நாட்கள் உருண்டோடிக்கொண்டிருந்தன. கல்லூரி வாழ்க்கையும் பள்ளி வாழ்க்கையைப்போல் எனக்குப் பழகிவிட்டது.

அன்று 'புதிய ஆசிரியர் வரப் போகிறார்' என்ற செய்தி என் வகுப்பு பூராவும் அறிவிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்டவர் வந்தார். பெயர் ராம்குமார். அவர் காரம் குவித்து உள்ளே நுழைந்த விதமே என் உடலைச் சிறிது சிலிர்த்துவிட்டது.

சீவி விட்ட கிராப்பு தலை. அது சுருள் சுருளாக இருந்த நேர்த்தி. அவர் அணிந்திருந்த உடை உடலில் பொருந்தியிருந்த காட்சி. நிறம் கறுப்பாக இருந்தாலும் அவரது களை பொருந்திய முகம் கவர்ச்சியைக் கொடுத்தது. அவரது கண்கள் காந்தக் கற்கள். இரும்பு உள்ளம் படைத்த எவரையும் இழுக்க வைக்கும் சக்தி அதற்கு உண்டு.

அதிகம் வளர்த்துவானேன்? எனக்காக அவர் இருக்கிறார் என்றே நான் நினைத்தேன். பாடங்களில் சந்தேகம் எழும்பொழுது நான் படபடப்புடன் கேட்கும் தோரணை, அதற்கு அவர் அமைதியான குரலில் சாந்தம் தவழும் முகத்தோடு அளிக்கும் விடை—எல்லாம் எனக்கு ஏதோ புரியாத புதிராக இருந்தன.

கல்லூரி நாட்கள் தேய்ந்துகொண்டிருந்தன. என் காதலும் என் உள்ளத்துக்குள்ளேயே வளர்ந்துகொண்டு வந்தது. பாட நேரம் தவிர, பல சமயங்களில் நான் அவர் இருப்பிடம் தேடி கல்லூரி அறையில் மணிக் கணக்கில் பேசியதுண்டு.

ஒரு நாள் பேச்சின் நடுவே அவர் கூறினார்: 'உஷா! உன்னைப்போல நான் யாரையும் பார்த்ததுகூட இல்லை.'

'ஏன்!' என் இமைகள் படபடத்தன.

'உன்னிடத்தில் அழகு இருக்கிறது. அழகாகப் பேசும் திறமை இருக்கிறது. ஆனால்...' வாக்கியத்தை முடிக்கவில்லை அவர்.

'என்ன?' ஆவலோடு கேட்டேன் நான்.

'இப்பொழுது உன்னிடம் அதனை வெளியிட விரும்பவில்லை. சமயம் வரும்பொழுது சொல்கிறேன்' ராம்குமார் கூறினார்.

சின்னஞ்சிறு காயத்தில் தூசி பட்டால் அது எப்படி சீழ் வைக்கின்றதோ, அதைப்போல அவரது சொற்கள் என் உள்ளப் புண்ணில் பலவித எண்ணங்களை எழுப்பின.

மற்றொரு நாள் நானே என் உள்ளக் கிடக்கையை வெளியிட எண்ணியிருந்தேன். சந்தர்ப்பமும் சமயமும் அதற்குக் கிட்டவில்லை.



பிரமுகர்:—ஒரு சிக்கலான வியாபாரத்திலே மாட்டிக்கிட்டு முளிக்கறேனுங்க.

மற்றவர்:—அப்படி என்ன வியாபாரம்?

பிரமுகர்:— நூல் வியாபாரங்க...

மறுநாள் வழக்கம்போல் கல்லூரிக்கு வந்தேன். ஆனால், ராம்குமாரைக் காணவில்லை. பெற்றோருக்கு உடல் அசௌகரியமென்றும், கிராமத்துக்கு ஒரு மாத லீவு பெற்றுக்கொண்டு சென்றிருப்பதாகவும் எனக்குத் தெரியவந்தது. பரீட்சை நாட்கள் நெருங்கி வந்தாலும், என் அக்காவுக்குத் திருமணம் என்ற செய்தி கிட்டியதாலும் என் மனம் அவைகளில் திரும்பியது. இன்று அதே ராம்குமார் என் அக்காவின் கணவராக வந்திருக்கிறார்.

சிந்தனை கலைந்தது. என் உடல் பூராவும் வியர்வை நிரம்பி வழிந்தது. என் மனம் புதிய முடிவுக்கு வந்திருந்தது. சிந்தனையின் கணநேர அலை என்பது மின்மினிப் பூச்சியின் ஒளி. இருள் நீங்குவதற்கு பதில் பயங்கரம் தோன்றும்.

பொறுமை பெண்களுக்கே உரித்தான ஒரு தனி குணம். அதுவும் தனக்காக என்று எண்ணி ஏங்கிய பொருள் மற்றவருக்கு சொந்தமாகப் போவதென்றால்...

ராம் குமார் நல்ல குணமும், சிறந்த உள்ளமும் படைத்தவர். வயதான பெற்றோர்களின் ஆத்ம சாந்திக்காக அவர் ஒருவேளை இந்த திருமணத்திற்கு சம்மதித்திருக்கலாம். உமா என்னுடைய சகோதரி என்றுகூட அவருக்குத் தெரியாது. அவரைப்போன்ற ஒரு உத்தமரை இனி நாம் பார்க்க முடியாது. ஆம்! அப்படிப்பட்டவரை, என் அக்கா அடைந்து ஆனந்தமடைய வேண்டும். நான் வாழ்நாள் முழுதும் வெந்து சாம்பலாகிப் போக வேண்டும்.

தீர்மானித்துவிட்டேன். அதன்படி என் சோதனையையும் நடத்த முடிவு செய்துவிட்டேன். 'அக்கா! நான் அடைய முடியாத ஒன்றை நீமட்டும் அடைவதா! கூடவே கூடாது! அதனைப் பார்த்துக்கொண்டிருக்க இந்தப் பாழும் மனம் ஒப்பாது.'

'ஆம்! அந்த ராம்குமாரைத் தேடித் தான் நான் போகப் போகிறேன். என் உள்ளம் கவர்ந்த அவரிடம் உன்னைப் பற்றித் தவறுகச் சொல்லி எப்படியேனும் இந்தத் திருமணத்தை நிறுத்தப் போகிறேன்.'

படுக்கையைவிட்டு எழுந்தேன். திருமணத்திற்கு வந்திருந்த அத்தனை பேரும் சாப்பாட்டு பந்தியில் இருந்தார்கள். ராம்குமார்மட்டும் தனியாக இருப்பார், இந்தத் தருணத்தை விட்டால், வேறு சமயம் கிடைக்காது என்று எனக்கு தோன்றியது. ஒரு கணம் கண்ணீர் திரைக்கு அப்பால் ஒளி செய்யும் அன்பான கண்களைக் கொண்ட என் அக்காளின் வேதனை முகம் தோன்றியது. ஆனுல், அடுத்த நிமிடம் என் உள்ளத்தில் ஏற்பட்ட சூழுவளி அதனை இருந்த இடம் தெரியாமல் அடித்துவிரட்டியது. இதயம் படபடக்க, சிவப்பேறிய கண்களுடன் ராம்குமார் தங்கியிருந்த அறைக்குச் சென்றேன். பார்ப்பவர்கள் தவறுக நினைத்துக்கொள்ளப் போகிறுர்கள் என்று என் மனம் ஒரு சமயம் பயத்தால் நடுநடுங்கினுலும் ஒரு பயங்கரத் துணிவில் என் கால்கள் நடை போட்டன.

அறைக்குள் ராம்குமாரும் அவருடன் திருமணத்துக்கு வந்திருந்த அவரது நண்பர் ஒருவரும் பேசிக்கொண்டிருந்தனர். வார்த்தையாடிக்கொண்டிருந்தது வேறு யாருமல்ல. என் கல்லூரியின் மற்ருெரு ஆசிரியர்.

'நம் கல்லூரி மாணவி உஷா உங்களைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தாளே! அவள் திருமணத்தைப்பற்றி அறிந்தால்...!'


ராம்குமார் நண்பரின் வினுவுக்குக் கூறிய விடையை வெளியே நின்று கொண்டிருந்த நான் கேட்கத் தவறவில்லை.

'ஓஹோ! உஷாவைப்பற்றிச் சொல்கிறீர்களா? பெண்ணின் இலக்கணத்தைப்பற்றிச் சிறிதளவாவது தெரியுமா! வெட்கம், மானம் இல்லாமல் என்னிடம் அடிக்கடி வந்து நின்று கொண்டு...அந்தப் பெண்ணிடமே கூற வேண்டுமென்று பார்த்தேன். அவளைத் திருமணம் செய்துகொள்பவர்கள் பாடு அதோகதிதான். மாணவி என்ற எண்ணத்தில் அவளிடத்தில் உறவாடியது என்னவோ உண்மை. ஆனுல், அவளை யார் காதலித்தார்கள்...நல்ல பாம்பு கூட...'

என் இதயத்திற்கு அதற்குமேல் சொற்களைத் தாங்கிக்கொள்ளும் சக்தியில்லை. வந்த சுவடு தெரியாமல் திரும்பினேன். உள்ளத்துப் புண்ணிலிருந்து இரத்தம் மளமளவென்று கொட்டியது. அனலில் பட்ட மெழுகுபோல் என் உள்ளம் சிக்கித் தவித்தது. 'அக்கா! நீ வாழத் தெரிந்தவள். இந்த உலகம் எப்படிப்பட்டது என்பதை அன்றே நீ அறிந்தவள்! என் மனம் மனதார வாழ்த்தியது அவளை. வாழ்க்கைச் சகடம் இன்ருவது நேர் வழியில் திரும்பியதே! இதய வெள்ளம் கண் ம டை யை உடைத்துக்கொண்டு தரையைச் சேருக்கியது.

பூத்து மலர்ந்த உள்ளத்தோடு, புதுவித வைராக்கியம் மின்னலிட, என் அக்காவின் இருப்பிடத்தைத் தேடி விரைந்தேன் நான்.






## 9

'அதோ போகிறது இந்திரா தானே?' என்று சொல்லிக்கொண்டே, தெருப்பக்கம் வந்து பார்த்த காமுப் பாட்டி, 'இந்திரா!' என்று கைதட்டிக் கூப்பிட்டாள்.

'ஒரே நிமிஷம். வீட்டுக்குப் போய் வந்துவிடுகிறேன் பாட்டி' என்ருள் இந்திரா.

'அதிக நேரமில்லை. ஒரே ஒரு வார்த்தைதான்' என்ருள் காமுப் பாட்டி.

இந்திரா வந்து சேர்ந்தாள். காமுப் பாட்டி ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.

'ஏதோ ரகசியம்போலிருக்கிறது' என்ருள், உள்ளே உட்கார்ந்திருந்த கோகிலா.

'நான் என்ன கள்ள மார்க்கெட் பேரம் செய்கிறேனு? தேர்தலுக்கு ஏதாவது வேலை செய்கிறேனு? அல்லது திருட்டுப் பொருள்களை விற்பனை செய்து தருகிறேனு? எல்லாம் கிடக்க எனக்கென்னடியம்மா ரகசியம் வைத்திருக்கிறது? ஏதோ அவசரமாக வீட்டுக்குப் போகவேண்டுமென்ருள். அதனுல், இப்படியே ஒரு தகவல் விசாரித்து அனுப்பிவிடலாமென்று இங்கே நின்றேன்' என்ருள் காமுப் பாட்டி.

'அகத்துக்காரர்தான் ஊரில் இல்லை. பெங்களூர் போயிருக்கிருர். வருவதற்கு ஒரு வாரம் ஆகும் என்ருர். மாமியார் தான், பெண்ணினுடைய பிரசவத்துக்கு சகாயத்திற்காகப் போயிருக்கிருள். ஆகக்கூடி மைத்துனன் ஒருவன் தானே இருக்கிருன்! அது எங்கே சினிமாவுக்குப் போயிருக்கிறதோ? ஒன்றும் தலைபோய்விடாது. வா உள்ளே. ரங்கமணிகூட வந்திருக்கிருள். சற்று நேரம் பேசிவிட்டுப் போகலாம்' என்ருள் கோகிலா. இந்திராவை நோக்கி,

‘யார் சொன்னது தலைபோய்விடாது என்று? தலை போயேவிட்டது’ என்று சிரித்துக்கொண்டே உள்ளே வந்தாள் இந்திரா.

காமுப் பாட்டியும் வந்து உட்கார்ந்தாள்.

‘அதென்னடி பையில்?’ என்றாள் இந்திராவை நோக்கி, வனஜா.

‘கொலுவுக்கு பொம்மை ஏதாவது வாங்கிக்கொண்டு போவாள்’ என்றாள் கமலா பாட்டி.

‘நேற்றுகூடக் கொஞ்சம் பொம்மைகள் வாங்கிக்கொண்டு போனாப்போலிருக்கிறதே!’ என்றாள் சாந்தா.

‘நேற்று வாங்கினால், இன்று வாங்கக்கூடாது என்று ஏதாவது சட்டமா? அதற்குக்கூட ரேஷனா?’ என்றாள் கோகிலா.

‘ஏன்? திடீர் திடீரென்று மற்றப் பொருள்களுக்குப் ‘பற்றாக்குறை’ வந்துவிடுகிற மாதிரி பொம்மைகள் விஷயத்திலும், அந்த பற்றாக்குறை வரக்கூடாதா என்ன? யார் கண்டிருக்கிறார்கள். இந்தக் காலத்தில் எது நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை’ என்றாள் கமலா பாட்டி.

‘பொம்மையுமில்லை ஒன்றுமில்லை’ என்று சொல்லிக்கொண்டே, தலைக்கு போட்டுக்கொள்ளும் இரும்புத் தொப்பி ஒன்றைப் பையிலிருந்து வெளியே எடுத்தாள் இந்திரா.

‘இதென்னடி கூத்து? போலீஸில் சேரப் போகிறாயா என்ன?’ என்றாள் கோகிலா.

‘அது ஒன்றுதான் குறைவு எனக்கு!’ என்றாள் இந்திரா.

‘பின்னே எதற்காக இந்த இரும்புத் தொப்பி?’ என்று கேட்டாள் கோகிலா.

‘இப்பொழுது நவராத்திரி இல்லையோ?’ என்றாள் இந்திரா.

‘சரிதான்! சரிதான்! புரிந்துவிட்டது. பெண்ணுக்கு போலீஸ் வேஷம் போட்டு அனுப்புவதற்காக இருக்கும்’ என்றாள் வனஜா.

‘அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கேதான். நானேதான் போட்டுக்கொள்ளப் போகிறேன்’ என்று லேசாகச் சிரித்தாள் இந்திரா.

‘போடி. உன் விளையாட்டையெல்லாம் அப்புறம் வைத்துக்கொள்ளலாம். எதற்கு இதை வாங்கிக்கொண்டு போகிறாய்?’ என்றாள் கோகிலா.

‘இன்று கனகாவை கொலுவுக்கு அழைக்க, அவளுடைய வீட்டுக்குப் போகப் போகிறேன். அதற்காகத்தான்’ என்றாள் இந்திரா.

‘கனகாவை அழைப்பதற்கு இரும்புத் தொப்பி எதற்கடி?’ என்றாள் காமுப் பாட்டி.

‘கனகாவின் அகத்துக்காரர் போலீஸ் இலாகாவில் உத்தியோகத்திலிருக்கிறாரல்லவா? அதற்காக அந்த பாணியில் சென்று அழைத்தால், அவரைத் திருப்தி செய்த மாதிரி இருக்குமல்லவா?’ என்றாள் கமலா பாட்டி.

‘நேற்று நடந்த சமாச்சாரம் தெரியுமோல்லியோ?’ என்றாள் இந்திரா.

‘என்ன விசேஷம்?’ என்றாள் காமுப் பாட்டி.

‘சந்திரா தலையில் கட்டு கட்டிக்கொண்டிருக்கிறாளே, பார்த்தீர்களல்லவா?’ என்றாள் இந்திரா.

‘ஆமாம். காலையில்தான் பார்த்தேன். அப்பொழுதே கேட்க வேண்டுமென்றிருந்தேன். கட்டியோ என்னவோவென்று பேசாமல் வந்துவிட்டேன்’ என்றாள் கமலா பாட்டி.

‘கட்டியுமில்லை ஒன்றுமில்லை’ என்றாள் இந்திரா.

‘பின்னே என்னவாம்?’ என்றாள் கமலா பாட்டி.

‘கனகாவின் அகத்துக்காரர் குட்டிய குட்டு’ என்றாள் இந்திரா.

‘போடி. உன் விளையாட்டையெல்லாம் அப்புறம் வைத்துக்கொள்ளலாம். எல்லாங்கிடக்க கனகாவின் அகத்துக்காரர் சந்திராவை எதற்கடி குட்டுகிறார்? யாராவது சிரிக்கப்போகிறார்கள்’ என்றாள் கமலா பாட்டி.

‘நிஜமாகவேதான் பாட்டி. பொய் இல்லை’ என்றாள் இந்திரா.



‘அவர் எதற்கு இவளைக் குட்டுகிறார். அதுவும் கட்டு கட்டிக்கொள்ளும் அளவுக்கு?’ என்றாள் கமலா பாட்டி.

‘அவரும் வேண்டுமென்று குட்டவில்லை. பாவம்! அது ஒரு ரசமான சம்பவம். சொல்கிறேன் கேளுங்கள். நேற்று கனகா, வத்ஸலாவின் வீட்டுக்குக் கொலுவுக்குப் போயிருந்தாள். சீக்கிரமே வந்துவிடுவதாக அகத்துக்காருடன் சொல்லிவிட்டுப்போயிருக்கிறாள்போலிருக்கிறது. போன இடத்தில் அவளுடைய பால்ய சிநேகிதி மாலதியும் பெங்களூரிலிருந்து வந்திருந்தாள். இன்னும் ஏழெட்டு பேர் வந்திருந்தார்கள். மாலதி, தனது பெண் கிரிஜாவையும் அழைத்து வந்திருந்தாள். அதற்கு பரத நாட்டியம் சொல்லிவைத்திருக்கிறாளாம். கிரிஜாவை ‘டான்ஸ்’ ஆடும்படி வத்ஸலா கேட்டுக்கொண்டாளாம். மாலதியும், அதற்காகத்தான் கிரிஜாவை அழைத்து வந்திருக்கிறாள். கிரிஜா டான்ஸ் ஆடினாளாம். ரொம்ப நன்றாக ஆடினாளாம். சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டுமென்று கனகா இரண்டு, மூன்று தரம் புறப்பட்டாளாம். ‘இரு, போகலாம்; இரு, போகலாம்’ என்று சொல்லி நிறுத்திவிட்டாளாம் மாலதி. ஆட்டம் சுவாரசியத்தில் நேரமானதே தெரியவில்லையாம். அத்துடன் தன்னுடைய பெண் ஆடுவதை முழுதும் பார்த்து ரசிக்க வேண்டுமென்று மாலதி எண்ணுகையில், நடுவில் எழுந்து வந்தால் நன்றாக இருக்குமா? ஆதலால், கடைசிவரை இருந்து விட்டாளாம். இதற்கிடையில், கனகாவின் அகத்துக்காரர், வீட்டில் கனகாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு உள்ளுக்கும் வாசலுக்கும் நடை போட்டுக்கொண்டிருக்கிறார். அவர் எட்டரை மணிக்கே யாரையோ பார்க்கவேண்டுமென்று திட்டமிட்டிருந்தாராம். மணி ஒன்பதரையாகிவிட்டது. பெட்டியின் சாவி கனகாவிடம் இருந்ததாம். ஆகவே, கனகா வந்த பிறகுதான் அவர் போகவேண்டும். நேரம் ஆக ஆக கனகாவின்மீது அவருக்குக் கோபம் அதிகரித்துக்கொண்டு வந்தது. அளவு கடந்த நிலைமையில் இருந்தது. கனகா வரவேண்டியதுதான். அவளை என்னதான் செய்வாரோ, ஏதுதான் செய்வாரோ அந்த நிலைமையில்தான் இருந்தார் அவர். இந்த நிலைமையில், சந்திரா, கனகாவிடம் ஏதோ தகவல் கேட்பதற்காக, கனகா வீட்டில் இருக்கிறாள் என்று எண்ணிக்கொண்டு, அவளுடைய வீட்டுக்குப் போயிருக்கிறாள். தெருப்பக்கம் விளக்கு வெளிச்சம் இல்லை; இருட்டு. அப்பொழுதான் கனகாவின் அகத்துக்காரர் உள்ளேயிருந்து தெருப்பக்கம் வந்து கொண்டிருக்கிறார். நவராத்திரி சமயமல்லவா? சந்திரா புதுப் புடவை உடுத்தியிருந்தாள். ‘சருக், சருக்’ என்று புதுப் புடவையின் ஓசையுடன் சந்திரா, வாசற்படியைக் கடந்து ரேழிப்பக்கம் சென்றாள். அப்பொழுது அவள் எதிரே வந்து கொண்டிருந்த கனகாவின் அகத்துக்காரர், அங்கே வந்து கொண்டிருப்பது கனகாதான் என்று எண்ணிக்கொண்டு, ஒரு பேச்சுக்கூடப் பேசாமல், சந்திராவின் தலையில் தனது ஆத்திரமெல்லாம் தீர நறுக்கென்று ஓங்கி ஒரு குட்டு குட்டினாராம். ஏற்கெனவே, சந்திராவின் தலையில் ஓர் கட்டி புறப்பட்டு, ஒரு மாத காலம் வைத்தியம் செய்து, அப்பொழுதான் அது ஆறியிருந்ததாம். சொல்லிவைத்த மாதிரி கட்டி இருந்த இடத்தில் இந்தக் குட்டு விழுந்ததாம். ‘அம்மாடி’ என்று குட்டு விழுந்த இடத்தைக் கையில் அழுத்திக்கொண்டு, அங்கேயே உட்கார்ந்துவிட்டாளாம், சந்திரா. ‘தடிக் கழுதை! என்னவென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய் உன் மனதில்? கேட்பார், புடைப்பார் யாருமில்லை என்ற எண்ணமா உனக்கு! பொறுப்பு உணர்ச்சி என்று ஒன்று இருந்தால் இவ்வளவு நேரம் கழித்து வருவாயா நீ? அடியாத மாடு படியாது என்று தெரியாமலா சொன்னார்கள்?’ என்று சொல்லிக்கொண்டே கூடத்தில் இருந்த ஓர் கழியை எடுத்துக்கொண்டு, அதை ஓங்கிக்கொண்டு வந்தாராம். திடீர் அதிர்ச்சி தாளாமல், சந்திரா மூர்ச்சித்து உட்கார்ந்து கிடந்தாளாம். சொல்லிவைத்த மாதிரி அப்பொழுதான் கனகா அங்கே வந்து சேர்ந்தாளாம். தனது அகத்துக்காரர்

செய்யும் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்து விட்டு, 'என்ன இது! பைத்தியம் கியித்தியம் பிடித்துவிட்டதா என்ன?' என்று சொல்லிக்கொண்டே, தனது அகத்துக்காரரின் கையைப் பிடித்துக் கொண்டுவிட்டாளாம். உடனே 'யாரடி அது? சந்திரா வாடி?' என்றாளாம் கனகா. இதற்குள் சந்திரா. சமாளித்துக்கொண்டு, 'ஆமாண்டியம்மா! வந்த வேளை சரியாக இல்லை' என்று சொல்லிக்கொண்டே விடுவிடென்று வீட்டை நோக்கிச் சென்றுவிட்டாளாம். 'அட சனியனே! நீ என்றல்லவோ எண்ணி விட்டேன்' என்றாராம், கனகாவின் அகத்துக்காரர். 'ரொம்ப நன்றாக இருக்கிறது! போன இடத்தில் எதிர்பாராத விதமாகச் சிறிது நேரமாகிவிட்டது. சொன்னபடி வரவில்லை, வாஸ்தவம் தான். அதற்கு இப்படிக்கூடவா கண் மண் தெரியாமல் ஓர் ஆத்திரம் வரும்?' நம்மைப்பற்றி என்ன தான் நினைப்பாள் அவள்?' என்று 'விடுவிடென்று விட்டாளாம்' கனகா. பாவம்! அசந்து விட்டாராம், அந்த மனுஷன்' என்றாள் இந்திரா.

'சரிதான் போ! தன் கணவர் அப்படியாக்கும், இப்படியாக்கும். - தன் பேச்சுக்கு மறுப்பேச்சு பேசமாட்டார். வீட்டில் தான் இட்டதுதான் சட்டம். அது, இது என்று தன் கணவரைப் பற்றிப் பிரமாதமாக 'பீற்றி'க்கொண்டாளே சந்திரா, இவ்வளவுதானா விஷயம்?' என்றாள் வனஜா.

'போடி பைத்தியமே! அவள்தானடி ரசிகை. சில அசடுகள், கோடி வீட்டு மாமி, பக்கத்து வீடு மாமி, எதிர் வீட்டு மாமிகளிடமெல்லாம். தங்கள் குடும்பத்திலுள்ள 'பொத்தல்களை' ஒன்றுக்குப் பத்தாக தம்பட்டமடித்து தங்களுக்கும், தங்கள் குடும்பத்துக்கும் அகௌரவத்தைத் தேடிக் கொள்ளுகிறதுகளே, அந்த மாதிரி இல்லாமல் எவ்வளவு பெருந்தன்மையுடன், தன் குடும்பக் கௌரவத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறாள்! அவள்தான் கெட்டிக்காரி' என்றாள் கமலா பாட்டி.

'இன்னொரு விஷயம்கூட இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. பிறர் வீட்டுக்குச் சென்றோமானால், முதலில் குரல் கொடுத்து விட்டோ அல்லது இதர சமிக்ஞைகள் மூலமோ நாம் வருவதை அவ்வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் நாம் எக்கச்சக்கமான நிலைமையில் சிக்கிக் கொள்ளாமலிருப்பதுடன், வீட்டிலுள்ளவர்களையும் உஷார்படுத்தியவர்களாவோம்' என்றாள் காமுப் பாட்டி.

'ஆகையால். எல்லாரும் ஓர் இரும்புத் தொப்பி வாங்க வேண்டுமென்கிறாய்?' என்றாள் கோகிலா.

'சேச்சே! நான் வேடிக்கைக்காகச் சொன்னேன். கனகாவின் வீட்டில் நடந்ததைச் சொல்வதற்கு இதை அஸ்திவாரமாக உபயோகித்துக்கொண்டேன். நான் வரும்போது ரோட்டில் விழுந்து கிடந்தது இது. என் மைத்துனனிடம் சொல்லி, இதைப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்கலாமென்று சென்றேன். அதற்குள் பாட்டி கூப்பிட்டார். வந்தேன்' என்றாள் இந்திரா.

'பிரமாதம்! பிரமாதம்!' என்றாள் கோகிலா.

'நிஜமாகவே இதைக் கனகாவின் வீட்டில் நடந்த சம்பவத்துக்கு என்ன தான் பொருத்தமாக உபயோகப்படுத்திக்கொண்டு விட்டாயடி' என்றாள் வனஜா.

'நான் வருகிறேனடி! மைத்துனன் ஒரு இரண்டுங்கெட்டான். தான் எவ்வளவு நேரமானாலும், அங்கே, இங்கே என்று ஊர் சுற்றிவிட்டு வரலாம். நாம் சற்று நேரம் எங்காவது வெளியில் சென்று, அது வரும் நேரத்திற்கு வீட்டில் ஆஜர் இல்லையென்றால் 'புர்' என்று மூக்குக்குமேல் கோபம் வந்துவிடும் அதற்கு. என் அகத்துக்காரரிடம்கூட நான் பயப்படவில்லை. இதனிடம் அப்படி 'நடுங்கிச் சாகிறேன்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள் இந்திரா.

தொகுப்பு : **எம்பியெஸ்.** ★ புகைப்படம் : **கோபு.**



சாயி சுப்புலட்சுமி, பிரபல பின்னணி பாடகி பி. ஏ பெரிய நாயகியின் உறவினர்கள். இவர்களை நடன உலகிலும் பட உலகிலும் பிரபலமடையச் செய்ய பெரியநாயகி அரும்பாடுபட்டார். ஆரம்ப காலத்தில் பெரியநாயகியின் பதத்திற்காகத்தான் இவர்களது கச்சேரிக்கு ரசிகர்கள் பெருவாரியாக சென்றார்கள்.

# வீட்டில் சாயி சுப்புலட்சுமி

சாயியும் சுப்புலட்சுமியும் சொந்தச் சகோதரிகள் அலல. ஆனால் இவர்கள் சிறு வயதிலிருந்தே ஒன்றாக வளர்ந்து வந்தவர்கள். நடனத்தையும் ஆரம்பம் முதல் ஒன்றாகப் பயின்றார்கள். இவர்களது நடன ஆசிரியர் வைதீஸ்வரன் கோயில் முத்துஸ்வாமி பிள்ளை.



**அடுத்த இதழில் அஞ்சலி தேவி.**

சாயி மிகவும் துடுக்கானவர். எதிலும் பயம் என்பது அவருக்கு கிடையாது. அவர் வீட்டிலுள்ள ராக்ஷஸ நாயும் அவரிடம் தான் பயப்படுகிறது. சலிக்காமல் தண்ணீர் இழுக்கிறார். சுப்புலட்சுமி மிகவும் அடக்கமானவர். வாய் திறந்து பேசுவதே அபூர்வம். அது அவரது சுபாவம்.







சைகிளில் அக்காவை ஏற்றிக்கொண்டு வேகமாக போய்க்கொண்டிருக்கும் போது எடுத்த படம்தான் இது. இவருக்கும் சிறு வயதிலிருந்தே சைகிள் விட தெரியுமாம். பிரபலமாவதற்கு முன்னால் தெருவிலும்இப்படித்தான் சைகிளில் 'டபிள்ஸ்' போய்க் கொண்டிருந்தார்களாம்.





இருவருமே இனிய குரலில் அழகாகப் பாடுகிறார்கள். சொந்தக் குரலில் பாடிக் கொண்டே ஆடவும் ஆடுவார்கள். சங்கீதம் இவர்களது பரம்பரைச் சொத்தாயிற்றே! எப்போதும் கௌரியிடம்தான் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.







ஒருவருக்கு ஒருவர் தலைவாரி பூ முடிப்பதில் ஆனந்தம் அடைகிறார்கள் இவர்கள். மிகவும் உற்சாகத்துடன் தங்கைக்கு பூ சூட்டுகிறார் அக்கா. தெய்வ பக்தி அதிகம் உண்டு இவர்களுக்கு. கடவுள் பொம்மைகள் ஏராளமாக வைத்து பூசித்து வருகிறார்கள் சாயியும் சுப்புலட்சுமியும்.

…யா, சுப்புலட்சுமி இருவர்களையும், அவர்களது பாட்டி கூண்டுக் கிளிகள்போல் பாதுகாத்து வருகிறார். வெளி உலகமே அவர்களுக்குத் தெரியாதாம்.




இவர்கள் இருவரை யும் தனித் தனி யாக பார்க்கவும் முடியாது. சினிமா விற்குப் போனா லும் சேர்ந்துதான் போவார்கள். பத் திரிகை படித்தா லும் ஒரே பத்திரி கையை வைத்துக் கொண்டு ஒருவர் படிக்க மற்றொருவர் கேட்பார். அவர் களுக்கு பிடிக் காதது விவாகம்.



இருவருமே கார் ஓட்டக் கற்றுக் கொண்டுள்ளார்கள். விரைவில் பலப் படங்களில் நடிக்க விருக்கும் இவர் களுக்கு எதையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏராளமாக இருக்கிறது. இரு வருமே சூட்டிகை யானவர்கள்.

பம்பரம்போல் சுழன்று சுழன்று ஆடும் இவர்களது பாணியே படவுலகி… அலாதி. ரசிகர்களுக்குமட்டும் இவர்களது நடனமென்றால் அபார ஆசை ஏன் இருக்காது!

# உயிர்ப் புதையல்



சோலை இருசன்

இன்பத்திலே துன்பமும், துன்பத்திலே இன்பமும்தான் மனிதர்களாகிய நமக்கு இயற்கை எழுதிய மாற்ற முடியாத விதி. காலதேவியின் கருணையால் எல்லாம் சரியாகிவிடும் என்கிற தன் நம்பிக்கையில்தான் மனித வாழ்வு சுற்றிச் சுழல்கிறது. ஆம்.

கிராமப் பள்ளிகளின் தணிக்கை அதிகாரியாக அன்று நான் சாரங்கப்பட்டி என்னும் அந்தக் கிராமத்திற்குப் போக நேர்ந்தது. அது சிறிய ஊர்தான் என்றாலும் அழகிய கிராமம். மலைகிரிமலைத் தொடர் அந்த ஊரைச் சுற்றிலும் அமைந்து அழகை அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தது.

எனது சுற்றுப் பிரயாணத் திட்டப்படி மாலை 3-30 மணிக்கெல்லாம் நான் சாரங்கப்பட்டியை அடைந்துவிட்டேன். இரவு வேளைகளில் அந்தந்த கிராமப் பள்ளிகளில்தான் தங்க வேண்டும். வழக்கப்படி சாரங்கப்பட்டியிலும் நேராக பள்ளிக்கே போய்விட்டேன்.

சைகிளைக் கொண்டு போய் வெளியே நிறுத்திவிட்டு பள்ளியினுள் நுழைந்தேன். பள்ளி இன்னும் முடியவில்லை. மாணவ, மாணவிகள் எல்லோரும் எழுந்து ஒரே குரலில் 'வணக்கம் ஐயா' என்று நீட்டி முழக்கி அவர்களுக்கே உரித்தான கலவைக் குரலில் மரியாதையும், வரவேற்பும் அளித்தார்கள்.

'வணக்கம்!' என்றொரு தனிக் குரல் என்னை மீண்டும் திரும்பிப் பார்க்கச் செய்தது. அவள் என்னைப் பார்த்ததினால் ஏற்பட்ட அதிர்ச்சியை சமாளிக்க

பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தாள். மிகப் பழகிய நினைவுக் குரலாக இருக்கவே நான் மீண்டும் பார்த்தேன். அது என் உயிர்க் குரல்தான்! அவள் என் யமுனாதான்! அவள் நெற்றியில் வியர்வை துளிர்த்துக்கொண்டிருந்தது. சேலைத் தலைப்பை எடுத்து ஒற்றிக்கொண்டாள்.

எவ்வளவு பெரிய மாற்றம்! கூப்பிய கைகளுடன் என்னிடம் வந்துகொண்டிருந்தாள். பதில் வணக்கம் சொல்லக்கூட என் உள்ளம் ஒத்துழைக்கவில்லை. நான் ஒரு கோழையிலும் கோழை. நிரந்தரமான கோழை. அவள் எதிரில் நிற்கக்கூட எனக்கே வெட்கமாகிவிட்டது. வியப்பும், அதிர்ச்சியும் என்னைச் சுற்றி வேலியிட்டுவிட்டது.

இவள் எப்படி, இங்கே......அதுவும் ஆசிரியையாக......?

என்னைப் பழையபடி ஏற்றுக்கொள்வாளா? மாட்டாள். அந்த வணக்கம் கூட தன் மேலதிகாரிக்கு காட்டும் மரியாதை முறையில்தான் செய்தாள்.

'உறுதியற்ற உள்ளங்கொண்டவர்களை – கோழைகளை மனித இனத்திலிருந்தே மாய்த்துவிட நான் முழுதும் முனைந்துவிட்டேன்' என்பதுபோல வன்மையான போக்கு; நிமிர்ந்த நடை; ஒளி வீசும் கண்கள்; மெல்லிய நிலை; துல்லிய ஆடை; என் நிலை துள்ளிக் குதித்தது. ஆனாலும், நான் கோழை என்பதைமட்டும் நினைந்து வெட்கம் என்னைச் சூழ்ந்துகொள்ளும்.

நான் பேசாமல் மூலையிலிருந்த பெஞ்சியில் உட்காரப் போனேன். அதற்குள் ஒரு மாணவனை அனுப்பி நாற்காலியை எடுத்து போடச் செய்தாள். போய் உட்கார்ந்தேன்.

கொடு வெய்யிலில் வந்தது. களைப்புத் தீர கைக்குட்டையால் முகத்தை ஒற்றிக்கொண்டு சாடையாக அவளைப் பார்த்தேன். அவளுடைய ஒளியிழந்த விழிகள் என்னை ஒரு முறை பார்த்துவிட்டு கண்ணீரைக் கக்கிக்கொண்டிருந்தது. அதற்குமேல் நான் அவளைப் பார்க்கவில்லை. எதிரே மாட்டியிருந்த உலகப் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் தோற்றமும் செயலும் என் மனதை உறுத்தியது.

நான்கு மணி!

பள்ளி முடிந்தது. மாணவ, மாணவிகள் எல்லோரும் வெளியேறிவிட்டார்கள். ஆனால், என் யமுனாமட்டும்...... ஊஹூம், இல்லை, அவள் யாருடைய மனைவியோ? அவள் காலால் தரையில் கோடு கிழித்தபடி குனிந்து நின்றுகொண்டிருந்தாள். நான் அவள் கழுத்தைப் பார்த்தேன்.

அங்கே கிளியின் கழுத்து மாலையைப் போல ஒரு சரம் முத்து மாலைதான் தவழ்ந்துகொண்டிருந்தது.

நான் அப்படிப் பார்த்ததை குறிப்பறிந்துகொண்டவள்போல 'இன்னும் இல்லை!' என்றாள். நறுக்கென்று என் தலையில் யாரோ குட்டியதுபோலிருந்தது.

ஒரு மாணவன் காபியைக் கொண்டு வந்து மேசைமேல் வைத்தான்.

'யார் அனுப்பினது?'

'டீச்சரம்மா வீட்டிலிருந்து சார்!'

'நான் வருவது உனக்கு ஏற்கெனவே தெரியுமா யமுனா? என்றேன். சற்று தைரியமடைந்துவிட்டதாக உணர்ந்தேன்.

'தெரியும்! சுற்றுப் பிரயாண திட்ட அறிக்கை நேற்று முன் தினம்தான் வந்தது. இந்த பஞ்சாயத்தின் தலைவர் கொண்டு வந்து கொடுத்தார். கையெழுத்திலிருந்து அது நீங்கள்தான் என்று தெரிந்துக்கொண்டேன்' எங்கேயோ பார்த்துக்கொண்டே பதில் சொன்னாள்.

எதிரே இருந்த காபியில் ஆவி பறந்துகொண்டிருந்தது. காபியை சாப்பிடலாமா, 'வேண்டாமா என்றுதான் யோசித்துக்கொண்டிருந்தேன்.

'காபி ஆறிப்போகிறதே...சாப்பிடுங்கள்!'

'இல்லை யமுனா......இப்போதான் டவுனில் சாப்பிட்டேன்.'

'பரவாயில்லை, நீங்கள் 'காபி பித்தர்' என்பதை என்னிடம்கூட மறைத்துவிட வேண்டாமா?' ஒரு ஒயிலாகப் பார்த்து 'களுக்'கென்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்புக்குதான் என்ன பொருள்? உரிமைச் சிரிப்பா? போலிச் சிரிப்பா? எந்தச் சிரிப்போ, ஒரு சிரிப்பு. அன்பைக் காட்டுகிறாள் என்று நானாக நினைத்துக்கொண்டு காபியை சாப்பிட்டு முடித்தேன்.

அப்போது புது அழகைப் பெற்று பூரிப்புடன் திகழ்ந்தாள். மொத்தத்தில் புதிய மகிழ்வு பெற்றேன்.

காபி தம்ளரை கீழே வைக்கப் போனேன். 'இப்படிக் கொடுங்கள்' என்று தம்ளரை வாங்க கையை நீட்டினாள். என் கையோடு அவள் கையின் உராசல் – அந்தப் புதிய ஸ்பரிசம் அதிர்ச்சியால் தம்ளர் தரையில் விழுந்து புரண்டது. ஆனாலும், அது உடையவில்லை. அது வெங்கலத் தம்ளர்.

'இப்படித்தான் என்னையும் நீங்கள்–' என்றாள். ஆயிரம் பொருள் கொண்டது, இந்த ஒரு சொல், கீழே விழுந்த தம்ளரை எடுத்துக்கொண்டு நிமிர்ந்தாள். முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள்.

'யமுனா......'

எதையோ என்னிடம் எதிர்பார்ப்பதைப்போல நிமிர்ந்து பார்த்தாள்.

'அழாதே யமுனா!' என்பதோடு நிறுத்திக்கொண்டேன் வார்த்தையை.

அவள் எதிர்பார்த்த, 'அந்த ஒன்று' என்னிடம் கிடைக்கவில்லைபோலும்.

முதலில் அவளைத் தேடி அலைந்துகொண்டிருந்தேன். அவளைக் கண்டதும் களிப்படைந்தேன். நீண்ட நாட்களாகத் தேடிக்கொண்டிருந்த மகிழ்வைப் பெற்றேன். ஆயினும் அவள் உள்ளத்தைத் தெரிந்துகொள்வதற்குமுன் என்ன பேசுவது? பேசாதிருந்தேன்.

'எழுந்திருங்க போகலாம்!' உரிமை அழைப்புதான்.

'எங்கே போவது?' தெரியாதவன் போல கேட்டேன்.

'வீட்டுக்கு!' மீண்டும் அன்பை அறிவித்தாள்.

அந்தக் கலை முகத்திலே சிறிது கவலை படர்ந்தது. நான் வருவேனா? மாட்டேனா? என்று.

'இல்லை யமுனா. இன்று நான் இங்கே தங்குவதாக ஆபீசுக்கு செய்தி அனுப்பிவிட்டேன். பியூனும், குமாஸ்தாவும்கூட இங்கேதான் வருவார்கள். ஆனால்–'

'அது யமுனா?'

'உங்க..... மனைவி சௌக்கியமா?' அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாமல், அவள் இதயத்தில் வெடித்த வினா இவை.

இந்த ஒரு கேள்வியின் முடிவில் தானே பெண்களின் வாழ்க்கை அமைக்கப்படவேண்டும். அதனால்தான் பண்பாடு தெரிந்த பெண்கள் அதை முக்கியமாகக் கொள்ளுகிறார்கள்.

'மனைவியா? அப்படி என்று ஒருத்தி எனக்கு இல்லவே இல்லை யமுனா! என் உள்ளம் சோனின் அறியாசனம். அதில் அந்த ஒருவரைத் தவிர வேறு யாரும் அமர முடியாது. நான் உனக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னும் அதைத்தான் சொன்னேன். இன்றும் அதைத்தான் சொல்லுகிறேன். ஆனால்–'

திரும்பிப் பார்ப்பதற்குள் சித்திரமே அசைந்தாடிச் செல்வதுபோல் பள்ளி வாயிற்படியைத் தாண்டிக்கொண்டிருந்தாள். நான் நடந்து வந்த பாதையை என் சிந்தனை இதயம் திரும்பிப் பார்த்தது.

❀ ❀ ❀

அப்போது நாங்கள் காட்பாடியில் இருந்தோம். என் அப்பாவுக்கு தபால் ஆபீசில் வேலை. நான் இண்டர் படித்துவிட்டு, ஒரு நிரந்தர வேலை கிடைக்காததால் சும்மா இருந்தேன்.

எங்கள் வீட்டுக்கு நான்காவது வீடுதான் கந்தசாமி வீடு. சில்லறைக் கடை நாயுடு என்றால்தான் எல்லோருக்கும் அவரைத் தெரியும். அப்போதுதான் புதிதாக பக்கத்து கிராமத்தில் கணக்கர் வேலையையும் மேற்கொண்டிருந்தார்.

யமுனா நாயுடுவின் ஒரே புதல்வி. கள்ளமறியாத அன்புள்ளங்கொண்டவள். நிலவெழில் பூசிய பருவக் குமரி. பள்ளியிலே என் தங்கை வசந்தாவுடன் படித்துக்கொண்டிருந்தாள். இருவரும் உயிர்த் தோழிகள். தினமும் பள்ளிக்குப் போகும்போது யமுனா எங்கள் வீட்டுக்கு வந்து, என் தங்கையை அழைத்துச் செல்வாள். இது வழக்கம்.

வருவாள், என் தங்கையை அழைத்துக்கொண்டு போவாள். போகும்போது என் உள்ளத்தையும், அந்த ஒரு மின்வெட்டுப் பார்வையின் [illegible]

பிடித்து அழைத்துக்கொண்டு போய் விடுவாள். இவ்வளவும் ஊமை நாடகம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை.

நான் என் அறையில் உட்கார்ந்து கொண்டு 'ஜெகசிற்பிய'னின் 'நரிக்குறத்தி'யை படித்துக்கொண்டிருந்தேன். யமுனா வந்து என் தங்கையுடன் வம்பளந்துகொண்டிருந்தாள்.

நான் யமுனாவைப் பார்ப்பது இது தான் முதல் தடவையல்ல; இருந்தாலும் பார்க்கவே தூண்டியது எனது ரசிக்கும் உள்ளம். எழுந்து அப்படியே கூடத்துப் பக்கம் போனேன். வசந்தா குதித்துக்கொண்டோடி வந்து, என் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய் தன் சினேகிதியின் முன் நிறுத்திக்கொண்டு,

'இவர்தான் நான் முன்பு சொன்னேனே—என் அண்ணா. கலைக் கழகத்தின் சார்பில் இலங்கைக்கு சுற்றுப் பயணம் போகப் போகிறார். இவருடைய கதைகள் தமிழ்நாட்டு எல்லா பிரபல பத்திரிகைகளிலும் அடிக்கடி வெளியாகும். இந்த வார 'கன்னி'யில்கூட ஒரு கதை வந்திருக்கிறதே! அதை அப்புறம் பார்க்கலாம்...அப்புறம்...இந்த ஊர் கழகத்தின் காரியதரிசி...அப்புறம்...இன்னும்—' என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போனாள்.

'குறும்புக்காரி!' என்று வசந்தாவின் தாடையில் தட்டப் போனேன்.

'வணக்கம்!' என்று கூறி, அழகாகக் கை கூப்பியபடி, தன் முல்லைப் பற்கள் தெரியக் குறுநகை புரிந்தாள். அப்போது என் இதயத்தில் தென்றலின் குளிர்ச்சி படர்ந்து படிந்தது. பதில் வணக்கம் சொல்லி முடிப்பதற்குள்,

'உங்களைப்பற்றி இவள் நிறையச் சொல்லியிருக்கிறாள். அன்றைக்கு எங்கள் பள்ளிக்கூடத்து இலக்கியத் திருவிழாவில் நடந்த பேச்சுப் போட்டிக் கேட்பதற்குக்கூட நான் வந்திருந்து தங்கள் பேச்சைக் 'கேட்டேன்' என்றாள் பெருமையுடன்.

கலைந்து அலை பாயும் கேசம் ஒன்றிரண்டு காற்றில் திரிந்து அலை மோதியது. அந்த நிலை அவளைக் காவியத்தின் சுவையேற்றி அழகுபடுத்தியது.

நான் அப்படிப் பார்ப்பது அவளுக்குப் பிடிக்கவில்லைபோலும். 'சரி வசந்தா, அம்மா தேடுவாங்க, நான் போய் வருகிறேன், அந்தப் புத்தகத்தைக் கொடுக்கிறாயா?'

'எந்தப் புத்தகத்தை?'

'அதுதான்—'

எதையோ எனக்குத் தெரியாமல் மறைத்துப் பேசுகிறார்கள். ஏதோ மறைமுகமான பேச்சு.

'ஓ, அதுவா? அது அண்ணாவிடம் தான் இருக்கிறது' என்று என் பக்கம் திரும்பினாள் வசந்தா.

'எந்தப் புத்தகம்?'

'இந்த இதழ் 'கன்னி' படிக்கக் கேட்கிறாள்!' ந

'முடியாது. புத்தகம் இரவல் கொடுப்பது என் வழக்கமில்லை. அவசியம் படிக்கத்தான் வேண்டுமானால், விலை கொடுக்கச் சொல்லு; கொடுக்கிறேன். ரசிகர்கள் எல்லாம் இரவல் வாங்கியே படிப்பதை வழக்கப்படுத்திக்கொண்டால், எழுத்தாளர்களின் 'பசி' பிரச்னை இருக்கிறதே அதற்கு யாரிடம் போய் நிவாரணம் கேட்பது?' என்றேன். சிரித்தாள்.

கடைசியில் நாலணா கொடுத்துவிட்டுத்தான் புத்தகத்தை வாங்கிக் கொண்டு போனாள். அதில் என் கதையான 'காதல் சகாப்தம்' என்பதைமட்டும் கிழித்துக்கொண்டு கொடுத்தனுப்பினேன்.

அவள் போய்விட்டாள். அந்தப் பின்னழகைக் கண்டு ரசித்துக்கொண்டிருந்தேன் நான்.


என் அம்மா ஊருக்குப் போய்விட்டிருந்தாள். தங்கைகூட வீட்டில் இல்லை. எங்கேயோ போய்விட்டிருந்தாள். நான் மட்டும்தான் உட்கார்ந்து 'பேசும் விழிகள்' எனும் கதையை எழுதிக்கொண்டிருந்தேன், எதிர் பார்த்தபடி அரைமணிக்கெல்லாம் யமுனா வந்தாள்,

'வசந்தா—வசந்தா—' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தாள்.

'அவள் இல்லை. என்ன வேணும்?'

'ஒன்றுமில்லை—ஹூம், அந்தக் கதையை அதில் காணோமே. பொருளடக்கத்தில்மட்டும் போட்டிருக்கிறது. உள்ளே கிழித்து விட்டிருக்கிறது!'

'எந்தக் கதையை?' அவள் [illegible] அதைச் சொல்லி, அந்த அழகை [illegible] விக்கவேண்டும் என்றுதான் [illegible] கேட்டேன்.



நினைத்தபடி அவளும் தயங்கினாள். வேறு வழியின்றி 'காதல் சகாப்தம்' காணோமே?' என்றாள்.

இதைச் சொல்லுவதற்குள், அவள் கன்னம் தக்காளிப் பழம்போல் சிவந்துவிட்டது. வெளியே போவதற்கு அவள் பரபரப்படைந்தாள்.

'இப்போ தம்முடைய சகாப்தம்தான் என்ன சகாப்தம்னு நினைத்துக்கொண்டிருக்கிறே யமுனா? இதுவும் 'காதல் சகாப்தம்'தான் என்றேன். அவள் நெற்றியில் குப்பென்று மாணிக்கப் பரல்களை உடைத்து அப்பியதைப் போல வியர்த்துவிட்டது.

அவள் முகத்தில் என் உள்ளமே உயிர் கொண்டியங்கியது. இருந்தாலும் போவதற்காகத் திரும்பினாள். 'இதோ வாங்கிக்கொண்டு போ!' என்று என் தலையணையின் கீழே வைத்திருந்த 'காதல் சகாப்த'த்தை எடுத்துக் கொடுத்தேன்.

'வேறு ஏதாவது புத்தகம் இருந்தால் கொடுங்களேன்?' என்றாள்.

'வாழும் காதல் வேணுமா?'

'யார் எழுதியது?'

'துறவி'

'கொடுங்களேன்!'

கொடுத்தேன். வாங்கிக்கொண்டு போய்விட்டாள். என்னைப்பற்றி அவள் எவ்வளவு தாழ்வாக நினைத்துக்கொண்டிருக்கிறாளோ?

'சேற்றிலே புதிதாக
மலர்ந்த சோதி

செய்ய தாமரைத்
தேமலர் போலொளி.'

வாய்த்தவள் யமுனா. ஆம், அவள் பாரதியார் கூறிய 'புதுமைப் பெண்' அவளைப் பலவிதமான கோணங்களில் இருத்திப் பார்த்தேன், என் கற்பனைப் பூங்காவில்.

அவள்மீது எனக்கு அர்த்தமில்லாத ஆழ்ந்த அன்பு ஏற்பட்டுவிட்டது. அது அவளின் விரிந்த கலையுள்ளமும், தெளிவான புதுமையும், பண்பும் ஏற்படுத்திய பாசமோ?—இதைத்தான் காதல் என்று கற்று அறிந்தவர்கள் கூறினாலும் பெருமையுடன் ஏற்றுக்கொள்ளுவேன். ஆனால்—

'இது' நடக்குமா? யாரைப் போய் எப்படிக் கேட்பது? இந்தக் கேள்வி தான் என்னைக் கோழையாக்கிவிட்டது. அச்சம் நிரம்பிய அந்தக் கேள்விக்கு நான் பயந்தேன்.

'காதல் ஒரு மனிதனை பித்தனாக்குகிறது; வெட்கங்கெட்டவனாக்குகிறது; கோழையாகவும், கொடியோனாகவும் ஆக்குகிறது; அறிஞனாகவும் ஆக்குகிறது!' ஆம்; நான் காதலைத் தேடிப் பிடித்தேன். கோழைத்தனம் என்னும் நச்சுகுளத்திலே — பூத்து மலர்ந்த புதுத் தாமரையாக.

இப்போதெல்லாம் எனக்கு இரண்டே உள்ளம்தான். முதற்பகுதி யமுனா. இரண்டாவது பகுதி என் வாழ்வில் தேரும் அத்தனையும்.

கதைகளில் வருவதைப்போல வழக்கமான போராட்டங்கள் எங்களில் குறுக்கிடவில்லை. எதற்காகவும், யாரும் எங்களைக் கோபிக்கவில்லை. இருந்தும் பிரியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஆம், என் அப்பாவை திடீரென்று கவிபுரம் என்னும் ஊருக்கு மாற்றிவிட்டார்கள். இந்த திடுக்கிடும் செய்தி என் இதயத்தில்பட்டு அவள் இதயத்தில் மோதி எதிரொலித்தது.

அன்று மாலை.

கலைக் கழகத்தில் எனக்குப் பிரிவுபசாரக் கூட்டம் நடத்திப் பாராட்டினார்கள்.

தேனீர் விருந்துக்குப்பின் கூட்டம். எனக்கு மலர் மாலை அணிவித்தனர். பெண்கள் பகுதியில் என் கண்கள் அவளைத் தேடியது. அதோ அவளும் இருக்கிறாள். மாலையுடன் இருந்த என்னைப் பார்த்து பெருமூச்சு விடுகிறாள். ஒரு நிமிஷம் அந்தக் கண்களைப் பார்த்தேன். மின்னல் மின்னி மறைந்தது.

அந்தக் கூட்டத்தில் அவளும், ஒரு கதர் நூல் மாலையையும், 'அவள்' எழுதிய 'நினைவு' என்னும் சிறு கதை கையெழுத்துப் பிரதியையும் எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாள். பாராட்டு உபசாரங்கள் முடிந்தது. நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன்.

வரும் வழியில் யமுனா என்னைப் பார்த்தாள். 'அடிக்கடி கடிதம் எழுதுங்கள்' என்றுமட்டும் கேட்டுக்கொண்டாள். நானும் 'சரி' என்றேன். நண்பர்கள் சிலர் தொடர்ந்து வந்ததால், அதற்குமேல் அவளிடம் பேச முடியவில்லை. அவள்மட்டும் பேசத்தான் துடித்தாள். நான்தான் கோழையாகிவிட்டேன்.

ஃ ஃ ஃ

கவிபுரம் செழிப்பான நகரம். சோழநாட்டுப் பகுதி வேறு எப்படி இருக்கும்? அமைதியின் நிலைக்களம்தான் கவிபுரம். கலைத் தாயின் கண்ணோக்கு அங்கேதான் நிலைத்து நின்றுவிட்டது போலும்.

வசந்தபுரத்து வெங்கடேஸ்வர சுவாமி கோயிலுக்குச் சென்றுவிட்டால், காலத்தின் நினைவு மாய்ந்தே போகும். அந்த மலைமேல் நின்று பார்த்தால் கவிபுரம் சிந்தனையின் உறைவிடமாக விளங்கும் பண்பான இடம்; அன்பான நண்பர்கள்; இவை அத்தனையும்கூட என் மனதுக்கு அமைதியளிக்க முடியவில்லை.

'அமைதி' அது என்னைப் பொருத்த வரையில் மனிதனுக்கு சாவில்தான் கிடைக்கும்போலிருக்கிறது.

யமுனாவுக்கு கடிதம் எழுதலாம் என்று என் எண்ணத்தைப் பிரதிபலித்து ஒரு கடிதம் எழுதி முடித்தேன். அந்தக் கடிதத்தில் என் நெஞ்சமே துடித்தது. ஆனால், எப்படி அனுப்புவது? எந்த விலாசத்திற்கு? அவள் வீட்டு விலாசத்திற்கு அனுப்பினால், அது விபரீதமாக முடிந்தாலும் முடியலாம் என்கிற நினைப்பில் என் கோழைத்தனம் குறுக்கிட்டது. அச்சப்பட்டேன்.

அவளிடமிருந்து மட்டும் அடிக்கடி கடிதம் வந்துகொண்டிருந்தது. கலைக்கழகம்தான் யாருக்கும் என் விலாசத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தது. எனது தமிழ் பணியைப் பாராட்டி எழுதுவாள் ஒரு கடிதத்தில். காதலையும், பிரிவையும் ஏக்கமும் பற்றியும் எழுதுவாள் ஒரு கடிதத்தில்.

காலதேவி புன்சிரிப்போடு பறந்து கொண்டேயிருந்தாள். பல முழு நிலாவும், முழு இருளும் போட்டி போட்டுக்கொண்டு வந்து வந்துபோய்க் கொண்டிருந்தது. இதற்கிடையில் ஒரு மாதம் இலங்கை சுற்றுப் பிரயாணத்தையும் முடித்துக் கொண்டு வந்துவிட்டேன்.

யமுனா எழுதிய கடிதங்களில்தான் எத்தனை துடி துடிப்பு! அவைகள் அத்தனையும் தொகுத்து 'காதல் காவியம்' என்று ஒரு நூல் வடிவாகவே வெளியிடலாம்! அத்தனை சுவையான சம்பவங்கள்; வியப்பான அனுபவங்கள், தொடர்ச்சியான எண்ணங்கள்!

அவள் தன் புகைப்படத்தை அனுப்பி, எனது படம் ஒன்றும் கேட்டு எழுதியிருந்தாள். எப்படி அனுப்புவது? நான்தான்—பேசாதிருந்துவிட்டேன்.

இப்பொழுது நாட்களை மிகுந்த சிரமத்துடன் கழிக்க வேண்டியிருக்கிறது. ஆமாம், ஒவ்வொரு நாளும் [illegible]மாக வளர்ந்து நின்று என்னை பயமுறுத்திக் கொண்டிருந்தது. யமுனா தன் கடிதங்களைக் காதலுக்கு கண்ணீரைக் காணிக்கையாக்கி எழுதியிருந்தாள்.

யாரோ பெண் கேட்க வந்தார்களாம், ஜாதகம் பெயர்ப் பொருத்தம் எல்லாம் சரியாக இருந்ததாம். பழைய உறவாம். வேறென்ன அழுது வடிக்கிறாளாம், யமுனா. பாவம், நேரிலேயே போய்ப் பார்க்கலாம் என்றும் நினைவு எழாமல் இல்லை. ஆனால்—

கடைசியாக ஒரு கடிதம் வந்தது. இல்லை, இல்லை.. என்னைச் சுட்டெரிக்கும் 'தீப்பந்தம்' வந்தது. வெந்த புண்ணிலே செருகும் விஷம் தோய்ந்த வாள் வந்தது.

எமலோகம் என்று ஏதோ ஒன்று இருப்பதாகவும் பாவம் செய்தவர்களுக்கு அங்கே பாம்புக்கடியும், தேள் கடியும் ஏற்படுவதாக எல்லாம் பெரியவர்கள் சொல்லுகிறார்களே, அவர்கள் எல்லாம் ஒன்றிய இரு உள்ளங்கள் பிரிந்து நிற்கும்போது ஏற்படுகிற வேதனையை உணர்ந்திருப்பார்களானால் அந்த நரகத்தைப் பற்றியெல்லாம் பெரிதாக பேசமாட்டார்கள். ஆமாம், இதோ அந்தக் கடிதம்:—

ஆருயிர்த் துணைவரே,

வணக்கம். நான் இந்தத் திருமணத்திலிருந்து மீளவே முடியாது. எனவே இதுதான் நான் தங்களுக்கு எழுதும் கடைசிக் கடிதம் அடுத்த தை மாதம் திருமணம் நிச்சயித்துவிட்டார்கள். என் பெற்றோர்களுக்கு நான் பெரும் பாரமாக இருந்தேனாம். என்ன செய்ய?

முருங்கை மரத்தை நம்பி ஏறிய குரங்கின் கதையாகிவிட்டது, என் நிலை. இப்போது நான் தப்பவேண்டுமானால் எங்காவது ஓடி விடுவதுதான் வழி. உண்மை உள்ளத்தை நாடும் தங்களுடன் ஒன்றி இன்பமாக வாழலாம் என்று மனக்கோட்டை கட்டினேன். பாவம், நீங்கள் ஒரு கோழை. நான்தான் விஷயம் தெரியாமல் அன்பை அர்ப்பணித்துவிட்டேன். அதைக் குறித்து வருந்துகிறேன். ஊருக்கு வந்த காலரா என்னைக் கொண்டு போகவில்லை. அதற்கும் [illegible]— என்னைத் தேட முயலமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். உங்களுக்கு நான் ஏன் கடிதம் எழுதவேண்டும் என்று நினைப்பும் வராமல் இல்லை. இருந்தும் எழுதுகிறேன். ஏன்? ஏனோ? ஆனாலும் உங்களுக்கு இந்தக் கடிதம் எழுதக்கூட கைகூசுகிறது. பாவம், நீங்கள் என்ன செய்வீர்கள்! நான் தான் அறிவிலி.

அபலை, யமுனா.

இந்தக் கடிதத்தைக் கண்டதும் நான் மறுநாளே புறப்பட்டு காட்பாடி சென்றேன். அப்போதும் கூட அவள் வீட்டுக்கு நேராகப் போய் பேசத் துணிவு இல்லை. நண்பர்களைக் கண்டு பேசிவிட்டு சாவகாசமாக —ஆனால் உள்ளத் துடிப்போடு நாங்கள் குடியிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டு பாலாமணியை சந்தித்து ஒப்புக்கு கேட்பது போலக் கேட்டேன்.

யமுனா நேற்று இரவோடு இரவாக எங்கேயோ ஓடிவிட்டாள் என்கிற விஷயத்தை அறிந்தேன். வேறு ஒன்றும் விசாரிக்க மனமில்லாமல் அங்கிருந்து திரும்பிவிட்டேன்.

நான் அங்கு போகும்போது கதிரவன் இருந்தான். உலகுக்கே ஒளி ஊட்டிக் கொண்டு. ஆனால் திரும்பும்போது உலகம் இருண்டு கிடந்தது, என் உள்ளம் போல.

வான வெளியிலே மட்டும் ஒன்றிரண்டு விண்மீன்கள் ஒளி உமிழ்ந்து கொண்டிருந்தது. என் வாழ்விலே?

ஆமாம், 'தொடரும்' என்று போட்டுவிட்டு தொடராமலே விட்டுவிட்ட துயரத் தொடர்கதை போலானது என் நிலை.

இன்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது அவளைப் பார்த்து.

இப்போதுதான் நான் கிராமப் பள்ளிகளின் தணிக்கை அதிகாரியாக நியமிக்கப்பட்டேன். இந்தப் புதிய வேலையின் கவனிப்பில் சிறிது அவளை மறந்திருந்தேன். ஆனால்—கடவுளின் கருணையை யாரால் மாற்ற முடியும்?

ஃ ஃ ஃ

'என்ன சார் எழுத்தாளரே, பலமான சிந்தனை? எந்த கோட்டையைப் பிடிக்க நான் வந்து எவ்வளவு நேரமா நின்றுகொண்டிருக்கிறேன். கவனிக்கவே இல்லையே? இரு

ட்டிவிட்டது. இப்படியே உட்கார்ந்திருக்கிறீர்களே? விளக்கு கொண்டு வரவா?'

'சீக்கிரம் கொண்டு வா யமுனா? இருட்டிலே இருந்து இருட்டிலே வாழ்ந்து வந்த எனக்கு விளக்கு வேண்டியதுதான். இதோ பார் சன்னல் வழியாக, புது நிலா!' என்றேன்.

'இங்கே மட்டும் என்னவாம். சரி சரி, சாப்பாடு தயாராகிவிட்டது எழுந்து வாங்க சாப்பிடலாம்!' என்று முன்னே நடந்தாள்.

நானும் எழுந்து நடந்தேன்.

பள்ளிக்கடுத்த வீதியில் முதல் வீட்டின் ஒரு பகுதியை தனக்கு வீடு என அமர்த்திக் கொண்டிருந்தாள்.

கைகழுவ தண்ணீர் கொண்டு வந்தாள்.

'நீங்கள் ஏன் எனக்கு கடிதமே எழுதவில்லை?'

'நான்தான் கோழை என்று முடிவு கட்டிவிட்டாயே? நான் எந்த விலாசத்திற்கு கடிதம் எழுதுவது?'

இலையைப் போட்டு சாதம் பரிமாறினாள்.

'அந்த முடிவு நான் கட்டியதில்லையே. நீங்களே தேடிக் கொண்டது தான். நான் எங்கே போனால், எக்கேடு கெட்டால் உங்களுக்கென்ன?'

'நீதான் எங்கேயோ போய்விட்டதாக காட்பாடியில் வந்து கேள்விப்பட்டேன். அதன்பிறகு எங்கெல்லாம் தேடினேன் என்பது உனக்கெப்படித் தெரியும்? ஆமாம், இங்கே எப்படி வேலைக்கு வந்தே? உன் அப்பா, அம்மா எல்லாம் எங்கே?'

அதைத்தான் கடைசி கடிதத்தில் எழுதியிருந்தேனே? காலராவில் இறந்துவிட்டார்கள் என்று, நான் மட்டும் வாழ்கிறேன். ஏனோ அர்த்தமில்லாமல்! வேலூருக்குச் சென்றேன், என் தோழி ஒருத்தியைப் பார்க்க. அவள் தான் யாரிடமோ சொல்லி இந்த வேலைக்கு ஏற்பாடு செய்தாள். உங்களைப் பற்றி எனக்கு எல்லாம் தெரியும். நீங்கள் எழுதிய கதைகள் அத்தனையும் என்னிடம் இருக்கிறது!'

நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

'சாப்பாடு எப்படி இருக்கிறது?'

'தமிழமுதம் போல்!'

'தமிழமுதம்?'

'உன்னைப் போல!' என்றேன் சிரித்தாள்.

அன்று இரவு பள்ளியில் படுத்துக் கொண்டேன். தூங்காமல் தூங்கிய அந்தப் புதிய இரவு கழிந்தது. மறுநாள் காலை என்னை யாரோ தட்டி எழுப்பினார்கள். நான் தூங்கும்போது யாராவது என்னை எழுப்பினால் எனக்கு கோபம் வந்துவிடும். ஆனால் எழுப்பியது வேறு யாருமல்ல. என் 'அவள்' தான். கையில் காபியுடன் நின்று கொண்டிருந்தாள்.

அதிகாலையில் குளித்துவிட்டு ஈரத் தலை மயிரைத் தளர்த்தி முடிந்து கொண்டு காலைத் தேவியைப் போல

'காபி சாப்பிட்டுவிட்டு எழுந்து வாங்க!' என்றாள்.

'உத்தரவு!' என்று எழுந்து உட்கார்ந்தேன். அவள் சிரிப்பு என்னை மயக்கியது. அவள் வீட்டுக்குப் போய் குளித்து டிபன் சாப்பிட்டுவிட்டு வந்து பள்ளியின் தணிக்கை வேலைகளைக் கவனித்தேன். வேலையும் முடிந்தது.

ராஜிநாமாவை எழுதி கையெழுத்து போடச் சொல்லி யமுனாவிடம் நீட்டினேன்.

'இதற்கென்ன அர்த்தம்?' என்று கேட்பது போல என்னைப் பார்த்தாள்.

'இரண்டு பேர் வேலை செய்வது, தேவைக்கு மேல் சம்பாதிப்பது இப்படியெல்லாம் நாட்டுக்கும், அரசாங்கத்திற்கும் துரோகம் செய்யலாமா?' என்று சொல்லிவிட்டு, பியூனை அனுப்பி வண்டி கொண்டுவந்து யமுனாவின் சாமான்களை ஏற்றச் சொன்னேன்.

'என்னங்க இது?'

'ஒன்றுமில்லை யமுனா, என்து கோழைத்தனத்தை கொளுத்திவிட்டேன். போய் வண்டியில் ஏறு, என்றேன்.

எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு வந்து வண்டியில் ஏறினாள். உயிர்ப் புதையலைப் பெற்றதாக மனம் நிறைவு கண்டது.

'என்ன அது கையில்?'

'இதுவா? காதல் சகாப்தம்!' என்று ரகசியமாக சொல்லிய, யமுனாவின் கண்களிலே புது ஒளி வீசிக்கொண்டிருந்தது. இனம் புரியாத உயிர்ப்பு அவள் முக மண்டலத்தில் இயங்கிக் கொண்டிருந்தது.

காலதேவியின் கருணையைத்தான் என்னென்பது!

# பட்டுப்பூச்சி

சுபத்ரா




5

'ஸ்வர்ணா'வில் தோட்டக்காரனாக முனுசாமி பதவியேற்று மூன்று வருடங்கள் முடிந்துவிட்டன. சேலம் ஜில்லாவில் மானம் பார்த்த மேட்டாங் கொல்லைகளை குத்தகைக்குப் பிடித்து, நஷ்டப்பட்டுப் பட்டு சலிப்பு முற்றிப் போய், ஜில்லாவுக்கும் விவசாயத்துக்கும் சேர்த்து ஒரு முழுக்கு போட்டுவிட்டு, குடும்பத்துடன் பட்டணக்கரைக்கு பிழைப்பை நாடி வந்தவனுக்காகவே போல் 'ஸ்வர்ணா'வில் வேலை காத்திருந்தது. அதைப் பிடித்துக்கொண்டு அதிலேயே ஊன்றிவிட்டான் முனுசாமி. அவன் மகன் சிவத்தானுக்கு அப்போது ஐந்து வயது.

'ஸ்வர்ணா' என்ற பெயருக்கேற்றபடி பொன்முலாம் பூசப்பட்டது போல் பளபளத்துக் கொண்டிருந்த பங்களாவைச் சுற்றி மரகதப் பாய் விரித்தாற்போன்ற பசும்புல் வெளிகளும், ஆங்காங்கே அழகாய் வெட்டப்பட்ட செடி கொடிகளும், பூத்துச் சொரியும் மலர் வகைகளும் முனுசாமியின் கைவண்மையை எடுத்துக் காட்டும் காட்சிகளாய் நின்றன. ரப்பர் குழாயின்மூலம் நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தான் அவன். அருகே நின்று பராக்கு பார்த்துக்கொண்டிருந்த அவன் மகன் - சிவத்தான், பங்களாவின் விஸ்தாரமான 'போர்டிகோ' படிகளில் கைகடியாரத்துக்கு சாவி கொடுத்தவண்ணம் இறங்கிவரும் டாக்டர் சுதாகரைக் கண்டவுடன் தாய் நோக்கி பாயும் கன்றென அவரருகில் ஓடினான்.

சுதாகர், மருத்துவக் கல்லூரியில் படித்து பட்டம்பெற்ற டாக்

டரல்ல. சரித்திர ஆராய்ச்சியாளர். அவரது அறிவின் முதிர்ச்சியைப் பாராட்டி, சர்வகலாசாலை, 'டாக்டர்' பட்டத்தை அவருக்களித்து தன்னை கௌரவித்துக் கொண்டது. அதன் எதிரொலியேபோல் குடியரசு தினத்தன்று பாரத அரசாங்கமும் 'பத்மபூஷண்' விருதை அவருக்கு வழங்கியது.

அவர் 'பத்மபூஷண்' பட்டம் பெற்றதையொட்டி, நகரசபை ஏற்பாடு செய்திருந்த பாராட்டுக் கூட்டத்துக்கு சுதாகர் புறப்பட்டுக் கொண்டிருந்தார். விழாவின் இறுதியில் பிரபல நாட்டிய நக்ஷத்திரம் குமாரி சுசித்ராவின் ஓரியண்டல் நடனக் கச்சேரி இடம் பெற்றிருந்தது.

பட்டுக்கரை வேட்டியும், ஜிப்பாவும், சன்னச்சரிபோட்ட சரிகை அங்கவஸ்திரமும் தரித்திருந்தார் சுதாகர். காதோரங்களிலும் நெற்றிப் பொட்டருகிலும் நரையோடியிருந்த தலைமயிர் அழுந்த வாரப்பட்டு மாமியாருக்கடங்கிய மருமகள்போல் சிலும்பாமல் சீராக இருந்தது.

இத்தனை அலங்காரங்களுடன் எஜமானரை என்றுமே பார்த்தறியாத சிவத்தான் வியப்பால் விழிபிதுங்க நின்றான். நிற்கையிலேயே, கறுப்பு அன்னப் பறவை மிதந்து வருவதுபோல வந்து நின்ற காரில் ஏறிக் கொண்டு, சுதாகர் கதவைச் சாத்தினார். கழுத்தை மட்டும் வெளியே நீட்டி, 'சிவா, உனக்கு பூமாலை கொண்டு வருகிறேனடா' என்று கூறி கைகளை ஆட்டினார். சிவத்தான், முத்து கோத்தாற் போல் முறுவலில் ஒளிவிடும் அரிசிப் பற்களைக் காட்டினான்.

## 2

நாட்டிய நக்ஷத்திரம் குமாரி சுசித்ரா, திரைவானில் பவனி வரும் தேய்வில்லாத நிலா. வானத்தில் தாரகைகள் பல இருந்தாலும் வெண்மதி ஒன்று தானே! அதுபோல் திரைவானிலும் சுசித்ராவின் அழகு, நடிப்பு, புகழ் இவற்றுக்குப் போட்டியாக நிற்கக்கூடிய நடிகை இன்னும் பிறக்கவேயில்லை.

அவளுடைய வாழ்க்கை வரலாறு, ருசி வகைகள், பழக்க வழக்கங்கள் போன்ற தகவல்களுக்காக தவம் செய்யும் ரசிகர் குழாமை திருப்தி செய்யும் பொருட்டு, பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அவள் அளித்த பேட்டியில், தனக்கு சமீபத்தில் விவாகம் செய்து கொள்ளும் நோக்கமேயில்லை எனக் கூறியிருந்தாள். அப்படிக் கூறி, மூன்று திங்கள் முடியுமுன், கட்டழகி சுசித்ரா, சினிமா உலகின் வாசனையையே சிறிதும் அறியாத சரித்திர ஆராய்ச்சியாளரை, நாற்பதின் எல்லையை எட்டிவிட்ட புத்தகப் புழுவை மணந்துகொள்ளப் போகிறாள் என்ற செய்தி எட்டியபோது, ரசிகர் உலகமே திக்பிரமித்துவிட்டது. எங்கு பார்த்தாலும் அதே பேச்சுதான்; வம்புதான்.

'டாக்டர் சுதாகரிடம் அழகி சுசித்ரா மயங்கும்படி என்ன கவர்ச்சி இருக்கிறது?' என்று ஒருவர் 'சினிமா வம்பு' பத்திரிகையின் கேள்வி பதில் பகுதியில் எழுதியிருந்தார். இதுபோல் எத்தனையோ! 'நிச்சயமாக அவரது அழகல்ல; இளமையுமல்ல. ஒருகால் சமூக அந்தஸ்து அளிக்கும் பாதுகாப்பின் கவர்ச்சியாக இருக்கலாம். வேறுபட்ட அம்சங்களின் ஆகர்ஷண சக்தியைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்குமே!' என்று குறும்பாக ஆசிரியர் பதில் எழுதினார். எதுவோ! பழைய வரலாற்று ஏடுகளிலும் கல்வெட்டுகளிலும் புதைந்து போய் பெண்களை ஏறிட்டு நோக்கவும் நேரமற்றிருந்தவர், பாராட்டு விழாவில் பரதமாடிய சுசித்ராவின் எழிலில் சொக்கிவிட்டார். காலமல்லாக் காலத்தில் அவரது வாழ்வில் வசந்தத்தின் சாயை படிந்தது.

அல்லும் பகலும் 'ஷூட்டிங்'குகளுக்குச் சென்று வந்து சுசித்ரா ஓய்ந்து போயிருந்த சமயம் அது. உடலும் உள்ளமும் அலுத்து வந்த நிலையில், 'ஓய்வு அத்தியாவசியம்' என்று டாக்டர் கூறியதை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். அந்த வேளையில் டாக்டர் சுதாகர் வலுவில் காட்டிய அன்பும், அவர் சித்தரித்துக் காட்டிய 'ஸ்வர்ண'வின் இனிமையான அமைதியும் சுசித்ராவுக்கு மிகவும் இதமாக இருந்தன. படப்பிடிப்பு சம்பந்தமான தொல்லைகள், விசிறிகளின் ஓய்வற்ற தொந்தரவுகள் இவைகளிலிருந்து விடுபட விவாக தேவதையிடம் சரண் புகுவதே சரியான வழி என்று அவளுக்குப் புலப்பட்டது. மனம் மாறியிருந்த அப்பொன்னான சமயத்தில் சுதாகர் தன் இச்சையை வெளிப்படுத்தினார். அவரது அதிருஷ்டமோ அல்லது துரதிருஷ்டமோ, குமாரி சுசித்ரா, ஸ்ரீமதி சுதாகராக, 'ஸ்வர்ண'வில் அரசாள வந்துவிட்டாள்.

திருமண வைபவ கோலாகலங்கள் ஒருவாறு ஓய்ந்ததும், ஏற்கனவே ஒப்பந்தமான படங்களில் நடித்து முடித்துவிட்டு அத்துடன் நடிப்பதை விட்டுவிடப் போவதாக சுசித்ரா அறிக்கைகள் வெளியிட்டாள். அதனால் அவள் அப்போது நடித்துக்கொண்டிருந்த படங்களுக்கு மவுசு அதிகரித்தது.

சுசித்ராவுக்கு அமைதியை அளித்த அதே விவாக பந்தம், சுதாகரின் உள்ளச் சாந்தியை அடியோடு பறித்துவிட்டதென்றால் ஆச்சரியமாயிருக்கிறதல்லவா! அப்படித்தான் நேர்ந்தது. நாற்பது வயதுவரை அடக்கப்பட்டு கிடந்த ஆண்மை விழித்தெழுந்து வீறுடன் முழங்கியது. தீவிர காதல் உணர்ச்சியின் வேகம் அவரைத் திணறி திக்கு முக்காடச் செய்தது. உலகமே சுசித்ராவில் ஒடுங்கிவிட்டதை உணர்ந்தார். சுசித்ரா – அவள்தான் உடல், உள்ளம், உயிர்; எல்லாமே சுசித்ராதான்.

## 3

கடந்துபோன சம்பவங்களைப் பற்றி எண்ணி எண்ணியே புண்ணான சிவத்தானின் சின்ன நெஞ்சில் சொல்ல முடியாத வலி! ஏன், எதற்காக என்று யாரும் அவனை விசாரிக்கவில்லை. கேட்டாலும் என்ன? பதிலளித்துவிடுவது அத்தனை எளிதா! முன்போல எஜமானர், 'அடே சிவா' என்று அன்பாகக் கூப்பிட்டுப் பேசுவதில்லை. ஆதரவாக அவனைத் தட்டிக் கொடுப்பதில்லை. அவனைப் போய் எதிரில் நின்றாலும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. அவர் அடித்தால்கூட பொறுத்துக்கொள்ளலாம்; ஆனால் அவருடைய பாராமுகம் உள்ளத்தை வாட்டி வதைக்கிறது. முன்போல பசிதாகம்கூடதெரியாமல் மணிக்கணக்காக எழுதிக்கொண்டும் படித்துக் கொண்டும் இருப்பதே தேவலை போலிருக்கிறது; என்

றெல்லாம் கோர்வையாக எடுத்துச் சொல்லியழ குழந்தைக்கு என்ன தெரியும்?

காலத்தையெல்லாம் கண்டவன் போல் பெருமூச்சுவிட்டுக் கொண்டு கண்ணையும் கருத்தையும் அலையவிட்டபோதுதான் அந்த பட்டுப்பூச்சி அவனருகிலிருந்த ரோஜாச் செடியில் வந்து உட்கார்ந்தது. பொன்னிறமான இறக்கையில் சிவப்பும், கறுப்புமாக புள்ளிகள், சூரிய வொளியில் மின்னி மினுக்கின. அப்பப்பா! எத்தனை அழகு! இறக்கைகளை மடக்கிக் கொண்டு ரோஜா இலையின்மேல் அசையாமல் இருந்த பட்டுப்பூச்சியின் அழகைக் காண சிவத்தானின் மனம் நிலைகொள்ளாமல் அலைந்தது. அதுவரை அப்படிப்பட்ட அழகை அவன் கண்டதேயில்லை.

உள்ளத்தில் முளைத்தெழுந்த ஆசைக்கு உருகொடுக்கும் பொருட்டு ஓடினான் சிவத்தான். சிட்டாகப் பறந்து சென்று திரும்பியவனின் கையில் பெரியதோர் அட்டைப்பெட்டி இருந்தது. ஓசையின்றி மிகவும் மெதுவாக பூச்சியை அணுகினான். பூச்சி அசையவில்லை. கண்கொட்டும் நேரத்தில் பட்டுப்பூச்சி பெட்டிக்குள் இருந்தது. பிரமாத காரியத்தை சாதித்துவிட்டவனின் பெருமிதம் பிஞ்சு முகத்தில் கூத்தாடியது. போகட்டுமே! சுதாகர் அவனிடம் முன்போல பிரியமாயிராமற் போனால் போகட்டுமே! அவர் அன்புக்குப் பாத்திரமாக ஒரு அழகிய சுசித்ரா இருந்தால் அவனிடமும்தான் கண்ணைக் கவரும் ஒரு பட்டாம்பூச்சி இருக்கிறது! அவருக்கு அவள்; அவனுக்கு அது. நியாயந்தானே!

சுதாகரின் பாராமுகத்துக்கு சிவத்தானின் பதில் அது தான். அன்று முதல் அவர் எதிரில்கூட அவன் செல்வதில்லை. தன் அருமைப் பட்டுப்பூச்சியுண்டு, தானுண்டு என்றிருக்க துவங்கிவிட்டான்.

இப்போதெல்லாம் சிவத்தானுக்கு எஜமானியின் அறையை ஒழுங்காக வைப்பது, அவளுக்கு எடுபிடி வேலைகள் செய்வது ஆகிய கடமைகள் அமைந்துவிட்டன. அவனுக்கு அது லவலேசமும் பிடிக்கவில்லை. அன்புக்கு போட்டியாக வந்து வெற்றி கண்டவள் என்பதாலோ அல்லது வேறென்னவோ, அவனுக்கும் சுசித்ராவுக்கும் பொருத்தமேயிருக்கவில்லை. அவளுடைய பகட்டான அழகில் அவன் கண்கள் மயங்கினவே தவிர மனம் மயங்கிவிடவில்லை. ஓட ஓட விரட்டும் அவளது அன்பின்மையை பெரியவர்கள் பொறுத்துப் போனார்கள். சிறுவனுக்குத்தான் மிகவும் ரோசமாக இருந்தது. வெறுப்பை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவும் வழியிருக்கவில்லை.

## 4

நிச்சலமானதொரு நீர் நிலை; முன்னறிவிப்பின்றி அதன் பரப்பின் மத்தியில் பெரியகல்லொன்று எங்கிருந்தோ விழுந்தது. கல் வந்து தாக்கிய வேகம் தாங்காமல் அது விழுந்த இடத்தில் சலனம் உண்டாயிற்று. அடுக்கடுக்காக, வட்டவட்டமாக அலைகள் எழும்பி குளப்பரப்பு முழுவதும் வியாபித்து கரைவரை சென்று மோதி உடைந்தன. சலனத்தின் வேகம் முழுவதும் ஒருவாறு அடங்கி மீண்டும் பழைய அமைதியை சிறிது சிறிதாக பெற்று வந்தபோது, அதன் கரையில் கருத்த எருமை யொன்று வந்து நின்றது. முன்





னங்கால்கள் இரண்டையும் தண்ணீரில் விட்டு லேசாக அலைக்கவும் ஆரம்பித்துவிட்டது. மேலே என்ன செய்யுமோ!

சுதாகரின் உள்ளம் காற்றில் ஆடும் கொடிபோல் அலையத் துவங்கிவிட்டது. ஏதேதோ எண்ணமிட்டபடி அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தபோது, கண்மண் தெரியாமல் விசித்துக் கொண்டு ஓடிவந்த சிவத்தான் அவருடன் மோதிக்கொண்டான்.

'அடேடே, சிவா, என்னடா? ஏன் அழுகிறாய்?' என்று அவர் கேட்டதை காதில் வாங்கிக் கொள்ளாமலே தோட்டத்து மூலையிலிருந்த தங்கள் குடிசையை நோக்கி ஓட்டமாய் ஓடினான். சிறிது நின்று, சுதாகரும் அவனைப் பின்பற்றிச் சென்றார். குடிசைக்குள்ளிருந்து முனுசாமியும், அவன் மனைவி கண்ணம்மாவும் பேசும் குரல் சிறுவனின் விசும்பலுடன் கலந்து வெளியே வந்தது. சுதாகர் தயங்கி நின்றார்.

சிவந்துபோன சிறுவனின் காதை தடவியபடி 'அம்மாக்கு கோவம் ரொம்ப வருது' என்றாள் கண்ணம்மா. முனுசாமி படபடத்தான். 'நான் யசமான் கிட்டே சொல்லிடலாம்னுதான் பார்க்கறேன். ஆனா, கொஞ்ச நாளா அம்மாவோட போக்கை கவனிச்சயா? ஐயா மேலேயே 'சள்ளு சள்ளு'ன்னு விளுறாங்க. மோகத்தை முறிக்கறாங்க. ஐயா

[illegible] கஷ்டப்படறாரு. அப்படியிருக்கச்சே நாமும் துன்பம் குடுப்பானேன்னு பாத்தா, புள்ளேயை கொன்னே போட்டுடுவாங்க போலக்கீது. நமக்கிருக்கறது ஒண்ணு. அது அடி வாங்கியே சாகணுமா? என்ன கண்ணம்மா, சும்மாவே இருக்கே?'

'பொறு; அவசரப்படாதே. இன்னும் எட்டு மாசம் போகட்டும்; கஷ்டப்பட்டு பெத்த புள்ளேயோட அருமையை அம்மாவும் தெரிஞ்சுக்குவாங்க. ஆமாம் மச்சான். அம்மா முளுவாமே இருக்குது. அசதி; அப்படித்தான் கோவம் வரும். யசமான் மூகத்தைப் பாத்து நாம் பொறுத்துதான் போகணும். அம்மாக்கு கொளந்தை பிறக்கட்டும்; அப்பறம் பாரேன்...' அவள் முடிக்கவில்லை; அதற்குள் குடிசைக்கு வெளியே ஏதோ அரவம் கேட்டு, அழுகையை மறந்து ஓடி வந்து பார்த்த சிவத்தான் சிறிது தூரத்தில் மிக விரைவாக வீட்டை நோக்கிச் செல்லும் சுதாகரைக் கண்டான்.

## 5

மாடியில் பேச்சுக் குரல் கேட்டது. படிகளை இரண்டிரண்டாகத் தாண்டி வந்த சுதாகர், சுசித்ராவுடன் அந்நிய மனிதர் உரையாடிக்கொண்டிருப்பதைக் கண்டு நிதானம் பெற்றார். 'ஹலோ, வாருங்கள் சுதாகர் சார்' என்று அட்டகாசமாய் வீட்டுச் சொந்தக்காரருக்கு வரவேற்பளித்த மனிதரின் கழுத்தில் மைனர் செயின் நெளிந்து விளையாடியது.

'என்ன போங்கள்! சுசித்ரா தேவி இல்லாமல் எங்கள் சினிமா உலகமே இருண்டுபோய்விட்டது. [illegible]ங்கள் பிழைப்பில் மண்ணைப் போட்டுவிட்டீர்களே சார். இன்று எப்படியாவது ஒப்பந்தத்தில் கையெழுத்தை பெற்றுவிடுவது என்ற உறுதியுடன் புறப்பட்டுவிட்டேன். இனி பொறுக்கவே முடியாது; ஹ — ஹ — ஹ—' என்று பெருங்குரலில் செயற்கையாக அவர் சிரித்தார். சுசித்ரா முறுவலித்தாள்; சுதாகர் முகம் சுளித்தார்.

'மன்னியுங்கள், என் மனைவிக்கு உடல்நலம் சரியில்லை...'

'ஹே ஹே. தம்புவேறு நான்! பூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக சுசித்ரா தேவி இப்போது தான் கூறுகிறார்கள். ஆனாலும் உங்களுக்கு இவ்வளவு சுயநலம் கூடாது சார்.' அமர்க்களமாக சிரித்தார் அவர்.

'உங்களுக்குத் தெரியாது. என் மனைவி இனிமேல் படங்களில் நடிக்கமாட்டாள். வீண் ஆசையை விட்டுவிடுங்கள்.' சுதாகரின் படபடப்பும் குரலில் தொனித்த கண்டிப்பு நிறைந்த உறுதியும் வந்தவரின் வாயை அடைத்து வெளியேற்றிவிட்டன. அவர் வாசல் கேட்டைத் தாண்டு முன், எரிமலை வெடித்தது. சுசித்ரா அனற்குழம்பைக் கக்கினாள்.

'என்ன தைரியம் உங்களுக்கு! வந்த மனிதர் முன் என்னை அவமானப்படுத்த உங்களுக்கு யார் உரிமை கொடுத்தது? நான் பேசக்கூட இடமளிக்காமல், மரியாதை தெரியாமல் [illegible] மிராண்டி போல் உளறிக் [illegible]டினீர்களே! 'இனி நடிக்க[illegible]டாள்' என்று முகத்தில் [illegible]தாற் போல் கூறின[illegible] ஏனும்? ஏன் என்று கேட்[illegible] நான் நடிப்பேன். நடிக்க[illegible] போகிறேன். மறுபடியும் [illegible]லையே' கூப்பிட்டனுப்பி, [illegible]

[illegible]ப் பத்திரத்தில் கையெழுத்திடப் போகிறேன். தடுக்க முடிந்தால் தடுத்துக் கொள்ளுங்கள்.'

'அலட்டிக்கொள்ளாதே சுசி. [illegible]உனக்கு உடம்பு நன்றாயில்லை...'

'வீண் பசப்பு தேவையில்லை. இனி என்னால் இந்த சிறை வாழ்க்கையில்கட்டுப்பட்டுஇருக்க முடியாது. கலையின் வாசனைகூட தெரியாத உங்களோடு வாழ்வதை அடியோடு வெறுக்கிறேன்.'

'இருக்கட்டும் சுசி. எனக்காக இல்லாவிட்டாலும்...உன் கடமையை நீ உதறிவிட முடியுமா?'

'கடமை! என்ன கடமை! நானு[illegible]ம் பிரியப்பட்டு உங்களை மணந்து விட்டதாலேயே அடிமையாகிவிட்டேன் என்று அர்த்தமில்லை. எனக்கு இயற்கையான சூழ்நிலையை என்னிடமிருந்து பிரித்துவிட்டீர்கள். இதைவிட்டு வெளியேற என் உயிர் தவிக்கிறது. வெளியேற எனக்கு வலிமையும் உண்டு.'

'தாய்மையின் கடமையைக்கூட துறந்துவிடும் அளவுக்கு உன் மனம் மாறிவிட்டதா சுசீ? நான் நம்பவில்லை. சில காலமாகவே நீ மாறிவருவது எனக்குத் தெரிந்துதானிருக்கிறது. அன்பு, அலட்சியமாய் மாறிவருவதும் புரிந்திருக்கிறது. இருந்தாலும் சுசி, நாம் சேர்ந்து அனுபவித்த இன்பங்களை எண்ணிப் பார். வாழ்க்கைப் பயனைப் பெற்று நாம் பெறப்போகும் குதூகலத்தை நினைத்துப் பார். இந்த சமயம் உன்னை பாதுகாக்கவேண்டியது என் பொறுப்பு...நீ...'

'தேவையில்லை. என்னைப் பார்த்[illegible] எனக்குத் தெரியும். [illegible] என் வழியில் குறுக்கிடவேண்டாம்; அதிகாரம் [illegible] என் இஷ்டப்படித்தான் நான் நடப்பேன்.'

'இல்லை; உன் இஷ்டப்படி நீ இருப்பதற்கில்லை. நீ தாய்; என் குழந்தையைத் தாங்கியிருப்பவள். என் குழந்தை உன் வயிற்றைவிட்டு வெளிவரும்வரை உன் இஷ்டம்போல் நடக்க விடமாட்டேன். தெரிந்துகொள்.' திடீரென்று நெற்றி நரம்புகள் புடைத்தெழ, முகம் சிவந்து, உணர்ச்சியால் உடல் பதற நின்ற சுதாகரைக் கண்டு சுசித்ரா அநாகரீகமாய் நகைத்தாள். நைலான் புடவையின் நழுவிய மேலாக்கை அலட்சிய பாவனையில் வீசிப் போட்டுக்கொண்டு வெளியே சென்றாள்.

'அம்மா முழுகாமே இருக்கிற அசதி; அப்படித்தான் கோவம் வரும்' என்று கூறிய கண்ணம்மாவின் சொற்கள் நெஞ்சில் எதிரொலிக்க, சற்றுமுன் தான் பொறுமையிழந்து சுசித்ராவைக் கடிந்து கொண்டதை நினைத்து கழிவிரக்கம் கொண்டார் சுதா[illegible]கர். 'சே! என்ன புத்தியில்லாத்தனம். அவளுக்கு உடம்பு பலவீனம். தவிர, மசக்கையின் போது பெண்கள் தோன்றினபடியெல்லாம் செய்வார்களாமே! அது தெரியாமல் அவள் மாறிவிட்டாள் என்று வீணாக பழி சுமத்தி மாய்ந்தது என் அறி[illegible]யாமை.' அவளுக்குச் சரியா[illegible] தானும் ஏதேதோ கடிந்து கூறி விட்டதற்காக தன்னைத்தானே நொந்துகொண்டு, சுசித்ராவை நாடிச் சென்றார். அறைக்கு[illegible] சுசித்ரா ஏதோ மாத்திரைகளை விழுங்குவதைக் கண்டார். அரு[illegible]கில்சென்று அவள் கரத்திலிருந்த மருந்து புட்டியின் 'லேபி[illegible]'ளைப் படித்ததும் முகம் கறுத்த[illegible] அடக்க முடியாத சினமும் வெறுப்பும் நெஞ்சையடை[illegible] 'சுசி, என்ன இது?' என்[illegible] மாறினார். சுசித்ரா [illegible]

மரமாய், கல்லாய், சிலையாய் நின்றாள். 'இது தருமா? நியாயம் தானா சுசி? வேண்டாம். உன் இஷ்டப்படியே ஆகட்டும். நீ ஆடு, பாடு; சினிமாவில் மீண்டும் நடி. நான் குறுக்கே நிற்கவில்லை. அதற்காக என் குழந்தை...என் குழந்தையை...' பெரும் விம்மல்கள் அடிவயிற்றிலிருந்து கிளம்பி நெஞ்சைப் பிளக்க, சுதாகர், இரு கைகளாலும் தலையை இறுகப் பிடித்துக்கொண்டார்.

## 6

சிவத்தானுக்கு மனசே சரியாகயில்லை. சுதாகரை பழிவாங்கும் எண்ணத்துடன் விலகியே இருக்கத் தலைப்பட்டவன், சதா தானுண்டு தன் செல்லப் பட்டுப் பூச்சியுண்டு என்றுதான் இருந்தான். தன் உயிரையே அதன் மேல் வைத்திருந்தான். தன் போஷணையில் அது மிகவும் சுகமாக இருப்பதாக அவன் நினைத்தான். ஆனால் அதுவோ சமயம் கிடைத்தபோது பறந்தோடவே காத்திருந்தது. அவன் கொட்டிய அன்பை பொல்லாத பூச்சி புரிந்துகொள்ளவேயில்லை. அன்பு மனம் வருந்துமே என்று அந்த நன்றி கெட்டது நினைத்துப் பார்க்கவேயில்லை.

என்னதான் அவன் சுதாகரிடமிருந்து ஓட யத்தனித்தபோதிலும், மனதை முழுவதும் இழுத்துக் கட்ட முடியவில்லை. அவர் துக்கம் அவனைக் கௌவியது. அவர் சரியாகச் சாப்பிடுவதேயில்லை என்று சமையற்காரர், முனுசாமியிடம் வருத்தப்பட்டதை காதில் கேட்ட பிறகு சிவத்தானுக்கு தாங்க முடியவில்லை.

அதற்குத் தகுந்தாற் போல் எஜமானியம்மாவுக்கும் உடம்பு சரியில்லை. இரண்டு நாட்களுக்கு முன் லேடி டாக்டரும், நர்சுமாக வீடே திமிலோகப்பட்டது. அவன் தாய்கூட ஏதோ சொன்னாளே! என்ன அது? 'வேணுமின்னு செய்த வேலை; குளந்தைப் பாவம் பொல்லாது; சீ. சீ' என்று அவனுக்குப் புரியாமல் ஏதேதோ சொன்னாள். கடைசியில் அவனுக்கு ஒன்று மட்டும் நன்றாகப் புரிந்தது. பிறக்கப் போகிறது என்று சொன்னார்களே, அந்தக் குழந்தை இனிமேல் பிறக்காதாம்!

ஒரே வாரத்தில் உடம்பு குணமாகி, சுசித்ரா நடமாடத் தொடங்கியும் சுதாகரின் முகம் மலரவில்லை. ஆகவே சிவத்தானின் அகமும் குவிந்தே இருந்தது.

அன்று பொழுது எந்த நேரத்தில் விடிந்ததோ! 'ஸ்வர்ண'வில் மயான அமைதி ஆட்சி புரிந்து கொண்டிருந்தது. விசுவாகாரமாய் வியாபித்துவிட்ட ஆசாபங்கத்தில்சுதாகர், தன்னையேஇழந்து மயங்கியிருந்த சமயம் பார்த்து அவரது பட்டுப்பூச்சி பறந்து போய்விட்டது, முதல்நாள் மாலை வெளியே சென்ற மனைவி, மீண்டும் வீடு திரும்பாத காரணத்தை அவர் கரத்தில் நடுங்கிய கடிதம் தெரிவித்தது. சுசித்ராவினால் எழுதப்பட்ட ஒவ்வொரு எழுத்தும், அவள் கையாய், காலாய், முகமாய், விழியாய், வாயாய், விரலாய் உருமாறி, ஒன்று சேர்ந்து அவள் எழிலுருவமாய் முழுமை பெற்றது. அந்த அழகுருவம் பேசிற்று:—'பொன்னால் ஆனதென்றாலும் விலங்கு விலங்குதான். அதை அணிய நான் விரும்பவில்லை. பட்டுப் பூச்சி போல் இச்சைபடி திரிவது எனக்கு உகந்த விளையாட்டு. அது உங்களுக்குக் கசந்தது. குடும்பம் நடத்தவும், பிள்ளைபெறவும் பல பெண்கள் கிடைப்பார்கள். நடிக்க, ஒரு சுசித்ரைதான்! அவள் இனி பந்தத்தில் சிக்க மாட்டாள். போகிறேன்.


சுசித்ரா.'

சுதாகரின் நெஞ்சை, நெஞ்சில் நிரம்பிய அன்பைச் சுட்டுப் பொசுக்கவென்றே தணல் துண்டுகளால் எழுதப்பட்ட கடிதம் கரங்களைத் தீய்த்தது. மனம், எரிந்து எரிந்து நீறுகிச் சாம்பியது.

## 7

பொழுது புலர்ந்தவேளை சிவத்தானுக்கும் பொருந்தா வேளையாகவே இருந்தது. யார், எப்பொழுது அவன் அட்டைப் பெட்டியைத் திறந்தார்களோ! கண்ணான பூச்சி மறைந்தே போய்விட்டது. காலிப்பெட்டியைப் பார்த்துப் பார்த்து, கை கால்களை உதறிக்கொண்டு கத்திக் கதறி அழுதான் அவன் மகனை அணைத்துக்கொண்டு முனுசாமிதான் தேறுதல் கூற வேண்டியிருந்தது.

'கண்ணல்ல? அளக்கூடாது. பூவுக்கு பூ பறந்து திரியற பட்டுப் பூச்சியை புடிச்சு பெட்டிக்குள்ளே வச்சா அது நிக்குமா? அது இருக்க வேண்டிய இடத்திலே இருந்தாத்தான் அதுக்கும் சந்தோசம்; நமக்கும் தொந்தரவில்லே. போனாப்போகுது. அதை மறந்துட்டு, எளுதப் படிக்க தெரிஞ்சுக்கோ. பொழுதும் போகும்; வருத்தமும் மறையும்' என்று பலவிதமாக ஆச்வாசப் படுத்தினான். சிவத்தான் கேவினான்; மூக்கை உறிஞ்சினான். அவனையும் மீறி அழுகை வெடித்து வந்தது. 'இப்போது அப்படித்தானிருக்கும். புதிதாக அடிபட்டு ரணமான மனம் காலப் போக்கில் மறதிச் சஞ்சீவியின் இதமான துணையால், குணமாகி ஆறிவிடும்' என்ற நம்பிக்கையளித்த பலத்தில், வேலையை கவனிக்க முனுசாமி எழுந்து சென்றான்.



டாக்டர்:—ஏன்டா தம்பி நாம்ப போஸத்துக்கு போகணும்னு என்ன பண்ணணும்னு சொல்லு பார்க்கலாம்...

பையன்:—செத்துப்போகணும்...

டாக்டர்:—அதுக்கு முன்னாலே என்ன செய்ய வேண்டும்...

பையன்:—ஜீரம் வரவழைத்துக் கொண்டு உங்களிடம் மருந்து சாப்பிடணும்...

# கல்பனைகளும் பரம்பொருளும்

பேராசிரியர் கே. ஆர். ஆர். சாஸ்திரி

**வாக்** மயகோசரங்களுக்கப்பாலுள்ள பரம்பொருளை கல்பனைகளாலேயே நிரூபிக்க முடியும். ஆதி சங்கராசாரியார் 'அபரோக்ஷானுபூதி' என்று சொல்வதை, யந்திரங்களாலும், தந்திரங்களாலும், மந்திரங்களாலுமே தெரிவிக்க முடியும்.

ஸ்ரீ ஏ. ஆர். ஆஸ்பர்ன் என்ற மேதாவி ஸ்ரீ ரமணாசிரமத்திலுள்ளவர். மஹருஷி ரமணரைப்பற்றியும், 'நம்பவே முடியாத ஸ்ரீ ஸாயிபாபா' சரிதமும் வெகு ருசிகரமாக எழுதியிருக்கிறார். ஓரிடத்தில் எழுதுகிறார்:—'கல்பனைகள்—ஒரு மதமோ, ஆசாரிய புருஷனோ கண்டுபிடித்தவையல்ல. அண்டத்திற்கும் பிண்டத்திற்குமுள்ள ஒற்றுமைகளைத் துலங்கச் செய்பவையே'. எகிப்து தேச ரஸாயன சாஸ்திர முறையில் 'மேலேபோல், கீழேயும்' என்று குறிக்கப்படுகிறது. ஏகநாதர் திவ்ய மொழிகளாலும், கொரானிலிருந்தும் இந்த தத்வத்தை நிரூபிக்கலாம்.

தென்னிந்தியாவில் வசித்த பதினெண் சித்தர்களும் தங்கள் அரிய அனுபவங்களை பரி பாஷையில் மறைத்துரைக்கின்றனர். திருவள்ளுவர் பஞ்சதந்திரத்தில் ஆறுவது பாடலில்,

'தெளிவாகக் கூறுத குற்றத்தாலே
றொந்து கெட்டார் ஞாலமதில்
மாந்தர் கோடி'

என்று கதறுகிறார். கல்பனைகள் வெவ்வேறு.

ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அவரது குணம், பிறந்த இடம், பண்பு, தொழிலிலிருந்தும் தனக்குகந்த உபாசனை முறையையும் தாந்திரீக வழிகளையும் பின்பற்றுகிறார். உபநிஷத் கால ருஷிகள், கிறிஸ்தவ சாதுக்கள் (ஏகநாதர் முதல் அமெரிக்க தத்வ ஞானியான தோரோ வரை) தமிழ் நால்வர்கள், ஆழ்வார்கள், பாரஸீக ஸூபிகள், இதாரர்கள், மகாராஷ்டிர முனிவர்களான ஏகநாதர், ஞானேச்வார் முதலியோர், கர்நாடக தீர்க்கதரிசிகள், கோஸ்வாமி துளஸிதாஸர், ஸூர்தாஸ் மீராபாய் முதலியோர்—இவர்களது ஜீவிய சரித்திரங்களிலும் கையாண்ட மார்க்கங்களிலும் வெவ்வேறு கல்பனைகளும், சாதனைகளும் தென்படுகின்றன.

## மனிதனது ஆர்வம்

குரங்குபோல் எங்கும் செல்லும் மனதை 'மனதற்ற பரிசுத்த நிலை'யில் (தாயுமானவர்) அடக்கிவைப்பதெப்படி? நாம் தியானம் செய்யும் பொழுது, நம் மனதினமைப்பையும் (புத்தி, மனசு, சித்தம், அகங்காரம்) அகில புவனங்களும் உடலைம்பூராகம் செய்வது, அவைகளெல்லாவற்றிலும் உள்ளடங்கி நிற்கும் பொதுவான ஒரு தத்வம் என்பதை உள்ளுணர்விதே. தியானம், தாரணை, சமாதி என மூன்று படிகளாக ராஜயோகத்தில் பதஞ்சலி முனி உபதேசிக்கிறார்.

## தீர்க்கதரிசிகளின் அனுபவங்கள்

கிறிஸ்தவ சகோதரர்களுடைய பைபிள் யோகிகளது அனுபவங்களை மறைத்துரைத்திருக்கிற சான்றியென (செயின்ட் ஜான்; லூக் X—ll; செயின்ட் பால் 7 அஸிஸியூரிலவதரித்த பிரான்ஸிஸ், தம் பட்டிணத்தடிகள் மாதிரி அளவற்ற ஐஸ்வரியத்தை உதறித் தள்ளி ஏழ்மையையே தம் வாழ்வாக மாற்றிய மகான்—தெரஸா என்ற யோகினிதன் 'சுய சரிதை'யில், பரமாத்மாவைத் தோட்டமாகவும், கடவுள்களை களைப்பிடுங்கி, புஷ்பச் செடிகளை நட்டு, மனமாரத் துதிக்கும் பிரார்த்தனையென்ற நீரைப் பாய்ச்சி, ஊரும் கேணியாகிய (இதயம்) கிணறிலிருந்து இறைத்து, நீரோடையாக ஓடி. பரமண்டலத்திலிருந்து பொழியும் மழையால் (தெய்வீகக் கருணை) வாழ வேண்டுமென்று வர்ணிக்கிறார்.

## அப்பரின் பண்பு

அப்பர் சுவாமிகளின் விவசாயத்தைப் புரிந்தோமாயின் அன்றே சிவகதி என்ற பயிர் விளையும்:—

'மெய்ம்மை யாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்

பொய்ம்மை யாம் களையை வாங்கி
பொறை யெனும் நீரைப் பாய்ச்சி

தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்

செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையும் அன்றே.'

## காதரனும் ஆண்டாளும்

ஸியன்னு நகர்வாசியான காதரீன் என்ற பக்த திலகம் (1347—1380) தீராத நோயால் வாடினாள். ஆண்டவனை தன் நாயகனாக பாவித்து ஒரு முத்துமாலை அணிந்தாள். ஸ்ரீ ஆண்டாள் விஷ்ணு சித்தர் விவசாயம் செய்த நந்தவனத்திலிருந்து பூமாலை அணிந்து, தன் பாமாலைகளால் ஸ்ரீரங்கநாதனை அலங்கரித்து மணக்கிற ஞாபகமூட்டுகிறது.

## ஸூபியும் வேதாந்தமும்

தன்னை ஒரு பிரயாணி (ஸாலிக்) யாகவும், படிப்படியாக கிரம முக்தி (மாகமாட்) சன்மார்க்க நெறியால், (தரீகாட்) பரம்பொருளுடன் ஐக்கியமடைகிறான் ஒரு ஸூபி (பஹு, பில், ஹாக்) ஏழு படிகள் (முக்தி முறையில் ஏழென்பது ஒரு முக்கியமான எண்) கூறுகிறார்கள் :—(1) பச்சாத்தாபம், (2) அபரிக்ரஹம், (3) வைராக்கியம், (4) எளிமை, (5) பொறுமை, (6) கடவுள்மேல் தளரா பக்தி, (7) ஆத்ம துஷ்டி.

வேதாந்தியும், ஸூபியும் பின்வரும் வழிகளைப் பின்பற்றுகிறார்கள்:— பிராணாயாமம், மனனம், பீர் அல்லது குருவிற்கு சேவை; பட்டினியும் தவமும்; ஸிகிர் அல்லது மந்திரமோதல்; ஜபமாலை அணிவது; பரமாத்மாவுடன் ஐக்கியம்; எம்மதமும் சம்மதமே: பராபக்தி, ஸகுண நிர்க்குண உபாசனை.

## ஏழு பள்ளத்தாக்குகள்

ஸூபி ஞானிகள் ஏழு திரைகளைப் பின்வருமாறு கல்பிக்கிறார்கள்:—

(1) ஆர்வம், (2) ப்ரேமை, (3) ஞானம், (4) வைராக்கியம், (5) ஒருமைப்படல், (6) ஆச்சரியம், (7) ஒன்றாகக் கலத்தல்.

வர்ண கல்பனையில் இவ்வேழு அவஸ்தைகளும் பின்வருமாறு தியானத்தில் தோற்றம்:—(1) கருப்பு, (2) நீலம், (3) பச்சை, (4) சிவப்பு, (5) மஞ்சள், (6) வெண்மை, (7) பல நிறக் கலப்பு.

# நஞ்சல்ல, நண்பன்.



அந்த வீட்டில் திருமணம் நடக்கப் போகிறது. அதற்காகத்தான் போலும் அவ்வளவு பெரிய பந்தலை அந்தத் தெருவையே அடைத்துக் கொள்ளும்படி போட்டிருந்தார்கள். அழகு செய்யப்பட்டிருந்த அப்பந்தல் காண்போர் கண்களுக்குப் பெருவிருந்தளித்துக் கொண்டிருந்தது.

திருமணத்திற்கு முன் தின இரவு. இன்னும் மாப்பிள்ளை அழைப்பு நடைபெறவில்லை.

வெளியே காருக்கு மாலைகளிட்டு அலங்கரித்துக்கொண்டிருந்தனர். உள்ளே அந்த அறையில், பெண்கள் குழாமிருந்தது. அவர்கள் தமக்குள் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.



'என்ன, இன்னும் எல்லோரும் உட்கார்ந்திருக்கிறீர்கள்? மாப்பிள்ளை அழைப்பிற்கு நேரமாகவில்லையா?'

யாரோ ஒருவர் வந்து உரக்கக் கத்தினார். ஒரு பெண்மணி எழுந்தாள்.

'இந்தக் கல்யாணம் வேண்டாம்! நாங்கள் இதற்குச் சம்மதிக்க முடியாது!'

ஒன்றும் புரியாமல் பேசினாள் அவள்.

'ஏன்? எதற்காக? ஒன்றுமே புரியவில்லையே எனக்கு!'

'ஒன்றும் புரியாது. ஒரு பெண்ணைப் பார்த்தால் 'எப்படி என்ன, ஏது' என்று பார்த்து விசாரிப்பது கிடையாது. இந்தப் பெண்ணின் அப்பா எங்கே?'

'ஏன், அவர் எங்கோ தூர தேசத்தில் இருக்கிறாராம்.'

'இருப்பார்! இருப்பார்! இந்தப் பெண் இளவயதினளாக இருந்த



போது இவளுடைய தந்தை வீட்டைவிட்டு எங்கோ ஓடிவிட்டாராம். அப்படி, ஆண் துணையின்றி வளர்ந்த பெண்…எங்களுக்கு வேண்டாம். மனசுக்குப் பிடித்தமாயில்லை அவ்வளவுதான்!'

இத்திடுக்கிடும் செய்தியைப் புயல் வேகத்தில் தன் உறவினர்க்கெல்லாம் பரப்பி விட்டார் அந்தப் புண்ணியவான். இத்தீ மணமகனின் பெற்றோர் இருந்த இடத்திலும் பரவியது.

'விடுவிடு'வென்று பையனின் தந்தை பெண் வீட்டாரிடம் வந்தார். பெண்ணைப் பெற்ற தந்தைக்குப் பதிலாக அந்த இடத்தில், பெண்ணின் அத்தான், தாயார், அத்தை, அத்தையின் கணவர் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர்.

உரக்க வைக்கப்பட்ட ஒலி பெருக்கி போன்று அலறினார் அவர்.

'எங்களை யெல்லாம் அவமானப் படுத்தத்தானே இந்தத் திருமணத்தை ஏற்பாடு செய்தீர்கள்? பெண்ணின் தந்தை ஓடிவிட்டார் என்பதை ஏன் முதலிலேயே கூறவில்லை? இந்தத் திருமணம் நடக்கக்கூடாது. நடந்தால் எங்கள் குடும்பத்தின் கௌரவத்திற்குக் களங்கம் ஏற்படும்!'

'ஐயா, தாங்கள் இப்படியெல்லாம் கோபித்துக் கொண்டால் எப்படி? நான் சொல்லுவதைக் கொஞ்சம் செவி கொடுத்துக் கேளுங்கள்!' என்ற பீடிகையுடன் தொடங்கினான் பெண்ணின் அத்தான்.

'என்ன சொல்லப் போகிறாய்? சொல்லித் தொலை.'

'பெண்ணின் தந்தை ஓடிவிட்டார் என்பதற்காகப் பெண்ணை வெறுத்து ஒதுக்குவது சரியா? சேற்றில்தான் மலர்கிறது செந்தாமரை. அதற்காகச் செந்தாமரையை மட்டம் என்றா கூறுகிறீர்கள்? இல்லையே!'

'ஆமாம், ஆமாம்! இந்த மாதிரி நயச் சொற்கள் பல கேட்டிருக்கிறேன் நான். அப்படி அவர் ஓடிவிட்டதற்குக் காரணம் ஏதோ இருக்கிறது, இல்லையா? அப்படியானால் பெண்ணின் தந்தை இருக்கும்போதே வீட்டில் கெடுதலான காரியங்கள் நடந்து கொண்டிருந்தன என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?'

'ஐயா, அவருக்குச் சித்தப்பிரமை! அதன் காரணமாகத்தான் அவர் ஓடினார். அது பலருக்குத் தெரியாது. ஊரார் உளறலைக் கேட்டுக் கொண்டு வருங்கால உறவினர்களாகிய எங்களைக் கோபிக்கலாமா?'

'அப்படி நல்ல இடமாக இருந்தால் நீங்கள் ஏன் அந்தப் பெண்ணை மணந்து கொண்டிருக்கக்கூடாது? கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு ஏன் நெய்க்கு அலைகிறீர்கள்? தாங்கள் தானே அப்பெண்ணை மணக்க வேண்டிய முறை? நீங்கள்தானே பெண்ணின் அத்தான். அப்படியிருக்க வேறு இடம் ஏன்?

ஆத்திரம் அளவை மீறியது அத்தான் வாசுதேவனுக்கு!

'சார்; தங்களுக்கு விருப்பமில்லை யென்றால் திருமணத்தை நிறுத்திக்கொள்ளலாம்! இதற்காக நாங்கள் ஒன்றும் கவலைப் படவில்லை. எங்களைப் பார்த்துச் சிரிக்கப் போகிறது ஊர். அவ்வளவுதானே? எதற்குத்தான் சிரிக்காத ஊர் இதற்கு மட்டும் சிரிக்காமல் இருக்கப் போகிறது? தயவு செய்து வெளியே போய்விடுங்கள்!'

பொறுமையுடன் பேசி வந்தவனுக்குப் பொறுமை எல்லை மீறியது. பொங்கிவந்த சினத்தை அடக்கிக்கொண்டு உள்ளே சென்றான்.

படுக்கையில் படுத்து முடிந்த மட்டிலும் கதறி அழுதாள். என்ன செய்வது?

ஃ ஃ ஃ

வாசுதேவனுக்கு அப்போது வயது பதினொன்று இருக்கும். சித்தப்பிரமைப் பிடித்துத் தந்தை ஓடிவிட்ட பிறகு மகளும், மனைவியும் வாசுதேவனின் தந்தை இல்லத்தைத் தன்னில்லமாகப் பாவித்து வந்து சேர்ந்தனர். பூர்வீகச் சொத்து இருந்தது அவர்களுக்கு.

வாசுதேவனும், ராஜியும் மிகவும் அன்புடன் பழகி வந்தனர். இருவர்க்கும் இடையே இரண்டு ஆண்டுகள்தாம் வித்தியாசம்!

கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டனர் இருவரும்.

திருமணப் பேச்சை மெல்லத் தொடங்கினர்.

'வாசு, நீதான் ராஜியை மணந்துகொள்ள வேண்டும்' என்று கூறியபோது மனமகிழ்ந்தான் வாசு. தன்னோடு நீண்ட நாட்களாகப் பழகும் பெண்ணாயிற்றே அவள்!

அவன் மறுக்காமல் ஒப்புக் கொண்டான். ஆனால் ராஜியோ மறுத்துவிட்டாள்.

'அம்மா, நானும் வாசுவும் ... ... தங்கை மாதிரியே பழ... ...ட்டோம். என் மனத்தில் அந்த எண்ணம் நிலைத்துவிட்டது அம்மா!'



கணவர்:—லாட்டரியிலே ரெண்டு ரூபாய் கொடுத்து இரண்டு டிக்கட் வாங்கினேன்பாரு அதிலே ஒரு டிக்கட்டுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு விழுந்திருக்கு.

மனைவி:—எதற்காக ரெண்டு வாங்கினேள். அந்த ஒரு டிக்கட்டை மட்டும் வாங்கியிருக்கப்படாதோ!

இதைக் கேட்ட அவளுடைய அன்னை பிரமித்துப் போய் நின்றுவிட்டாள்.

'அடி பைத்தியமே! என்னதான் தங்கை மாதிரி பழகினாலும் அவன் உன் அத்தான் தானே?'

அவள் பதிலேதும் கூறவில்லை.

முன்பு பழகுவதுபோல் வாசுவுடன் அவள் நெருங்கிப் பழகுவதில்லை. அவனுடன் கலகலப்பாக அதிகமாகப் பேசுவதுகூடக் கிடையாது.

கடற்கரைக்கு முன்பெல்லாம் இருவரும் சேர்ந்தே போவார்கள். ஆனால் இப்போது அப்படி அல்ல!

அன்று மணி ஏழரை ஆகியிருந்தது. குளிர்காலம் ஆன

தால் விரைவிலேயே இருள் சூழ்ந்து கொண்டது.

கவலையிலாழ்ந்து கடற்கரையின் வெண் மணற் பரப்பில் ஓர் படகின் பின்புறம் படுத்திருந்தான். அதன் முன்பக்கம் இருவர் பேசும் குரல் கேட்டது.

'சங்கர், என் வீட்டிலிருக்கும் அத்தானைத் தெரியுமா உங்களுக்கு?'

'ஏன்? சொல்லேன் கேட்கலாம்.'

'அவர் ரொம்ப நல்லவர். ஆனால் அவரைத்தான் மணந்துகொள்ள வேண்டும் என்று என் வீட்டில் எல்லோரும் ஒற்றைக் காலில் நிற்கிறார்கள்!'

'ஐயோ பாவம்! ஏன் அப்படி நிற்கவேண்டும்? நன்றாக இரண்டு காலாலேயே நிற்கட்டுமே! பாவம்! காலை வலிக்கப் போகிறது!'

'நான் அவரை அத்தான் என்றே கருதவில்லை. என் அண்ணனைப் போலவே கருதுகிறேன். அவரும் அப்படிப் பழகி இருப்பார் என நினைத்தேன். ஆனால், அவர் அப்படி நினைக்கவேயில்லை. என்னை அவருடைய வருங்கால இல்லாளாகவே கருதுகிறார்!'

சத்தம் செய்யாது எட்டிப் பார்த்தான் வாசுதேவன். சிநேகிதியுடன் சினிமாவுக்குப் போகப் போகிறேன் என்று கூறிவிட்டுக் கடற்கரையில்...! கூடப் பேசிக் கொண்டிருந்தவன் யார் என்று நோக்கினான். அவனுடைய நெருங்கிய நண்பன் சங்கரன் தான் அவ்வளவு நேரமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

ஓட்டமும், நடையுமாக வீட்டை அடைந்தான். அரை வயிறு சாப்பிட்டுவிட்டுப் படுத்தான்.

'நாம் எவ்வளவு பெரிய முட்டாள்? பெண் ஒருத்தியின் மனத்தைப் புரிந்துகொள்ள முடியாத ஒருவனாக இருந்து விட்டோமே! நம் சுகவாழ்வுக்காக ஒரு பெண்ணின் வாழ்வை வீணாக்குதல் சரியான செயலல்ல. ஆதலால், அவளை எப்படியாவது சங்கரனுக்கே மணமுடிக்க வேண்டும்!'

வேகமாகத் தன் தாயிடம் சென்றான்.

'அம்மா, ராஜிக்குத் தகுந்த மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்து விட்டேன். மாப்பிள்ளை ராஜிக்கு முன்னமேயே தெரியும். என்னை விடக் கெட்டிக்காரர் அவர்.'

'எப்படியோ கெஞ்சிக் கூத்தாடி அனுமதி பெற்றுவிட்டான் ராஜியின் திருமணத்திற்கு.

திருமணத்திற்கு இன்னும் இரண்டு வாரங்களே இருந்தன. வாசுவின் இல்லத்துக்கு அடிக்கடி வருவான் சங்கரன். அன்றும் திடீரென்று வந்தான்.

நெடுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு ஒரு பெரிய தாவலை எடுத்துச் சென்றான். அதன்பின் திருமணத்திற்கு முன்தினம்தான் அவனை வாசுதேவன் பார்த்தான்.

திடீரென்று இப்படித் திருமணம் தடைப்பட்டுவிடும் என்று அவன் நினைக்கவேயில்லை.

மாப்பிள்ளை வீட்டார் கிளம்பி விட்டனர் மூட்டைகளைக் கட்டுவதற்கு! காலை வண்டிக்குப் போகப் போகிறார்கள் போல இருந்தது அவர்களது பேச்சிலிருந்து!

படுத்துக் கொண்டு அழுது கொண்டிருந்த வாசுவின் கால்களை யாரோ வந்து பற்றினார்கள்.

'அத்தான், என்னை மன்னித்து விடுங்கள்! இந்த மாபாவிக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்! அத்தான்! தங்கள் உண்மை அன்பை அறிய முடியாத நான் எவ்வளவு பெரிய முட்டாள்? படித்து என்ன பயன்? அன்பை அறிந்துகொள்ள முடியாத உள்ளத்தைப் பெற்றிருக்கிறேன். கொடிய நஞ்சை நல்லதென நினைத்தேனே அத்தான்! என்னை மன்னித்துவிடுங்கள்! நீங்கள்தான் எனக்குப் புகலிடம். என்னைக் காப்பாற்றுங்கள் அத்தான்!'




ராஜி கதறி அழுதாள். வாசுவும் மனமாறினான்.

மறுநாள் அதே முகூர்த்தத்தில் திருமணம் ராஜிக்கும், வாசுவுக்கும் நடந்தேறியது.

கலங்கிய கண்களுக்கும், மனங்களுக்கும் ஆறுதல் அளித்தது இவர்களது திருமணம்.

திருமணம் நடந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. எங்கோ வெளி

யில் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான் வாசு.

'மிஸ்டர் வாசுதேவன், கொஞ்சம் நில்லுங்கள்!'

சங்கரன்தான் கூப்பிட்டான். திரும்பிப் பார்த்தான் வாசு.

'எதற்காகக் கூப்பிட்டீர்கள்?' எரிச்சலுடன் கேட்டான்.

'வாசு, என்மேல் கோபமா? தயவு செய்து என்னை மன்னியுங்கள். தங்களிடமிருந்து வாங்கிச் சென்ற நாவல் இந்தாருங்கள். அதில் அந்தக் கடிதம் அப்படியே உள்ளது!'

தூக்கிவாரிப் போட்டது வாசுவுக்கு.

'என்ன கடிதமா?' ஒன்றும் புரியாமல் கேட்டான்.

'ஆமாம். இதைப் பாருங்கள்!'

...க அழைத்துப் போய்ப் ...டினேன்.

'தங்கை'யின் எப்படியாவது வேண்டும் என ...ன். தாங்கள் நன் மறை ...டைத்தீர்கள்.

என் ஆசை நிறைவேறியது. இக்கடிதத்தை நீங்கள் படிக்கும் போது வாசுவை நஞ்சு இவ்வுலக வாழ்க்கையிலிருந்து பிரித்திருக்கும்.

அன்பு நண்பன்,

வாசுதேவன்.'

படித்து முடித்ததும் 'ஆ! இது தங்களுக்கு எப்படிக் கிடைத்தது? ஞாபக மறதியாக எழுதியதைப் புத்தக மறைவில் வைத்து விட்டேன் போலிருக்கிறது. சரி, சரி. அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் படுகிறேன்!'

'மிஸ்டர், கொஞ்சம் நில்லுங்கள். நான் மட்டும் கவலை கொண்டிராவிடில் இப்போது ஒரு நல்ல மகனை—வாசுவை, உங்கள் பெற்றோர் இழந்திருப்பார்கள்! ஒரு அருமை அத்தானை ராஜி இழந்திருப்பாள். எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் இம்முடிவுக்கு வந்தேன்.

'என் தங்கை மங்களம் இவ் விஷயத்தில் எனக்கு ஒத்துழைப்பதாகச் சொன்னாள். கல்யாணக் கூட்டத்தில் அவளுடைய சாதுரியம் நிறைந்த பேச்சினால் உங்கள் உயிர் மீண்டது! வாயாடிப் பெண் மங்களத்தின் திறமை எப்படிப்பட்டது பார்த்தீர்களா?

'எங்கள் எண்ணம் நிறைவேறி நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம்! இவ்விஷயம் என் பெற்றோருக்குத் தெரியவே தெரியாது. ஆனால் தாங்கள் ஆராய்ந்து பாராமல் தவறாக எண்ணிவிட்டீர்கள்.

'எனக்கு இன்னும் இரண்டு வாரத்தில் கல்யாணம்! நிச்சயம் நீங்கள் வரவேண்டும்!'

அழைப்பிதழைக் கொடுத்தான் சங்கரன்.

இருவர் கண்களிலும் நீர் கொட்டியது. கரங்கள் நடுங்கிய படியே அந்த அழைப்பிதழை வாங்கிக் கொண்டான் வாசு தேவன்.



# சாகாதே சரளா!

தி. அண்ணுமலை B.A. (Hons)



ரஷ்ய 'ஜூனிக்' மூன்றாவது 'காஸ்மிக்' வேகத்தைத் தாண்டிவிட்டதா எனக் கேட்கும் விஞ்ஞானியின் ஆர்வத்துடன்தான் ஜயபாலன் கடைவீதி யில் அந்த அவலைக்காய் மீசைக்காரனிடம் கேட்டான். 'வெண்டைக்காய் படி என்ன விலை?' என விரலை நீட்டிபடி என்னையக் காட்டியபடி. 'களுக்'கென மெல்லிய சிரிப்பொலி ஒன்று கேட்டது. ஜயபாலன் நிமிர்ந்து பார்த்தான். அவலைக்காய் மீசை புடலங்காய் போல நீள பயமுறுத்தும் தோற்றத்தில் காய்க்காரன் சிரித்துக் கொண்டிருந்தான். நிச்சயம் 'களுக்' இவன் கண்டத்திலிருந்து கிளம்பியிருக்காது.

வலதுபுறம் திரும்பினான். ஒரு நொண்டிக் கழுதை ஏக்கத்துடன் நடந்து கொண்டிருந்தது. கழுதைக் குரலிலா இருந்தது 'களுக்' சேசே...

இடப்புறம்—ஆ. இந்தத் தங்க உடலின் தந்தக் கண்டம்தான் 'களுக்'கின் பிறப்பிடம். தனக்காக சேலை கட்டி கட்டி நிற்கும் அந்த இளம் பெண்ணைக் கோபித்துக்கொண்டு ... வேண்டுமென ஜயபாலன் ஆசைப்பட்டான். முடிந்தால்தானே—

எனவே, குழைவாகவே 'ஏன் சிரித்தீர்கள்?' என்றான். அடுத்த கடைக் கிழவி விரலை விட்டு விழிகளை விரித்தபடி 'பின்னே சிரிக்காமே என்னப்பா பண்ணுவாங்க. வெண்டைக்கா படி என்ன விலைன்னு கேட்டியே, இனிமே முருங்கைக்காகூட படியிலே அளக்கச் சொல்லுவேபோலிருக்கே' என்றாள்.

முதல் முறையாக கடைவீதியில் காய் வாங்கவந்ததால் அவசரத்தில் சுண்டைக்காயைக் காட்டி அதன் விலை கேட்பதாக எண்ணி 'சு'ளைவை விலக்கி ஆனாலும் கேவலம் புகையிலை நாற்ற மடிக்கும் ஒரு காய்க்காரக் கிழவியும், பீடிப்புகை நடுவே வீற்றிருக்கும் ஒரு காய்க்காரனும் சிரிப்பது, அதைக் கேட்டும் சும்மா விடுவதாவது:—

'என்ன பாட்டி ரொம்ப அளக்கறே ரஷியாவிலே 'மார்ஸ்'க்கே மனுசனை அனுப்பறாங்க தெரியுமா? என்னமோ நீ!...... சம்மந்தமில்லாமல் தன் அறிவை நீட்டிக் கிழவியை மடக்க முயன்ற ஜயபாலன் படுதோல்வியடைந்தான்.

கிழவி ஆரம்பித்துவிட்டாள். 'ஏம்பா மாசிக்கே ஆள் அனுப்பறாங்களா? அங்கே ஒரு வீடு பாத்து தரச் சொல்லேன் இப்போ இருக்க வீடு ரொம்பச் சங்கடமாயிருக்கு ஆமா எந்த மாசிக்கு முருங்கப்பேட்டை கிட்டே கிழக்கே மூணாவது கல்லுக்குப் பக்கத்திலே......'

'குட்டிச் சுவத்துக்கிட்டே இருக்க மாசியேதான். பாட்டி இது மார்ஸ்...... செவ்வாய் மண்டலம் சந்திரன் மாதிரி ஆகாயத்திலே இருக்கிற இடம்.'

'அடடே செத்தவங்கதான் ஆகாசத்துக்குப் போவாங்க. இப்போ உயிரோடேயே போறாங்களா. நல்லதா போச்சு. எங்க பாட்டியோட அம்மா ஒரு மாசம் முந்திதான் செத்தா. ஏதோ முடிஞ்சா நான் போயி அவகிட்டே ரெண்டு வார்த்தை பேசிட்டு வரேன். ஏம்பா அந்த மாசிக்கு ரயில் சீட்டு எம்புட்டு?' கிழவியின் அபிலாஷை வெளியாயிற்று கேள்வியில்.

ஜயபாலனுக்கோ தெரியாத்தனமாய் வாய் கொடுத்து மாட்டிக்கொண்டோமே என ஒரே எரிச்சல் பதில் சொல்லாமல் நின்றான்.

இப்போது 'களுக்' பெண் பேசினாள், ஜயபாலனோடல்ல — கடைக்காரனோடு. 'வள்ளய்யா சேர் நாலே முக்காலுன்னு இரண்டே முக்கா சேர் பீன்ஸ், டலம் நாலே காலணான்னு நாலரை புடலங்கா, கத்தரிக்கா ஒன்றரை யணாவுக்கு ஒன்பதுன்னு முப்பத்தி நாலு, அரைக்காபடி மூணு ஒண்ணேகா வீசம் பட்டாணி எல்லாமா எத்தனையாச்சு. இரண்டு ரூபாய் பத்தே முக்காலணா. இந்த மீதி ஏழு ரூபாய் ஐந்தே காலணா தா' எனக் கணக்குச் சொல்லி ரூ. 10 நோட்டை நீட்டினாள்.

ஜயபாலன் மயக்கமடையும் நிலைக்கு வந்துவிட்டான், இந்த 'ரெடி ரெக்கனரை' கண்டு, ஜயபாலனுக்கு எப்போதும் கணக்கே வீக். மூணு பதினாலு நாப்பத்திரெண்டா, நாலு பதிமூணு நாப்பத்திரெண்டா என இன்றைக்கும் வாய்ப்பாடு பார்க்காமல் சொல்லமாட்டான் யாரிடமும். மனதிலேயே இத்தனை கணக்குப் போட்ட அந்தப் பெண்ணைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தவனை 'அவரைக்காய் மீசை' ஐயா சுண்டைக்கா, அப்புறம் என்னவேணும்? எனக் குரல் கொடுத்து சுய நினைவுக்கு இழுத்தான்.

ஜயபாலன் சுதாரித்துக்கொண்டான். 'சுண்டைக்கா போட்டியா. கேரட், முருங்கைக்கா முத்தலா இருக்கா' என விசாரித்தான்.

'ஏன் அடுப்புக்கா? நல்ல இளம் முருங்கைக் காயா ஒரு கட்டு போடப்பா. முத்தலா ரெண்டு கேரட் எடு. பணத்தைக் கொடுத்திட்டு நடங்க'. 'களுக்' பெண் கேட்காமலே உதவி செய்தாள் ஜயபாலனுக்கு. 'தாங்ஸ்' சொல்லக்கூடத் தோன்றாமல் அவள் சொன்னபடி செய்தான் ஜயபாலன்.

இருவரும் நகர்ந்தார்கள் 'மிஸ்டர் ஜயபாலன் கறிகாய் பத்திய அறிவு உங்களுக்கு இத்தனை குறைவா இருக்கே' எனப் பேச்சை ஆரம்பித்தாள் அந்தப் பெண். ஜயபாலன் திகைப்பிலால் பையை கை நழுவவிட்டான்.

'என் பெயர்—உங்களுக்கு...எப்படி... உங்கள் பெயர்...எனக்கு...' என்று தடுமாறினான்.

'உங்களைப்பற்றி எல்லாம் எனக்குத் தெரியும். பி. எஸ். ஸி பரீட்சை தேறிவிட்டு அடித்துவிட்டு 'சாரா' டியூட்டோரியல் காலேஜில் படிக்கிறீர்களே அந்த டியூட்டோரியல் காலேஜ் [illegible] எங்க அப்பா. [illegible]

'சாராவா பேஷ்.'

'அது மட்டுமல்ல எங்கள் வீடு. உங்கள் வீட்டுக்கு அடுத்த வீடு. அதனால் தான் உங்கம்மா நான் கடைக்கு வரும்போது சரளா, என் பிள்ளை ஜயபாலன் காய் வாங்க போயிருக்கான் இன்னிக்குத்தான் முதல்தரமா கடை வீதிப் பக்கம் போறான். நல்லதா ஏதாவது பாத்து வாங்கி குடுன்னு சொல்லியனுப்பினாங்க. புரியுதா மிஸ்டர் 'மார்ஸ் ராக்கட்.'

'எங்க வேலைக்காரனுக்குத்தான் இன்னிக்கு வேலை செய்ய முடியா நோய். மட்டம் போட்டிட்டான். உங்களுக்கு என்ன?'

'நான் பாடனி பி. எஸ். ஸி. பாஸ் எனக்கு ஹாப்பியே காய்கறி வாங்கறது தான்.'

'வீடு வந்திடுச்சு ரொம்பத் தாங்ஸ். நான் போயிட்டு வரேன் அத்தை.'

'என்ன அத்தையா?' சரளா திகைத்தாள்.

'ஓ சாரி சரளா எனக்கு ஏழெட்டு அத்தைக எப்பவும் அவங்களோடேயே பழகி எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அத்தேன்னே சொல்ல வந்திடுது. வரட்டுமா அப்புறமா...ஹிஹி...அடிக்கடி மீட்பண்ணலாம்' என விடைபெற்று வீட்டுக்குள் நுழைந்தான் ஜயபாலன்.

அவன் வாய் சரளா, சரளா என உருப்போட்டுக் கொண்டிருந்தது. அவன் அப்பா அதைப் பார்த்துவிட்டு 'கரெக்ட் ஜயபாலா' அப்படி 'பார்முலா' எல்லாம் உருப்போட்டாதான் உருப்பட முடியும் என சர்டிபிகேட் கொடுத்ததும், அசடு வழியும் முகத்தோடு கறிகாய் பையை அம்மாவிடம் கொடுத்தான்.

* * *

சரளாவின் அப்பா கெட்டிக்காரர். இக்கணம் பிடிப்பதில் மன்னன். சரளாவையே தன் டியூட்டோரியல் காலேஜில் கெமிஸ்ட்ரிக்கும், பாடனிக்கும் லெக்சரராக வைத்துக்கொண்டு, தானும் ரெண்டு, மூன்று சப்ஜெக்ட் சொல்லிக் கொடுத்து வந்தார்.

ஜயபாலன் முதல் நாள் வகுப்பில் நுழைந்ததும் லெக்சரராக சரளாவைக் கண்டதும் பிரமித்தான். பிறகு சிரித்துக் கொண்டே தன்னிடத்தில் போய் அமர்ந்தான். ஆனால், சரளா ஜெயபாலனைத் தெரிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. தன்னைவிட வயதில் பெரிய பல ஆண் மாணவர்களுக்கிடையில் ஒருவன் என்பது போலவே நடந்துகொண்டாள்.

வகுப்பு நடக்கும்போது திடீரென சரளா கேள்வி கேட்க ஆரம்பித்தாள். 'மிஸ்டர் ஜயபாலன் நைட்ரிக் ஆஸிட்டை பொட்டாசியம் பர்மாங்கனேட்டோடு ஊற்றிக் காய்ச்சினால் என்ன வாகும்?' என்றாள் ஜயபாலனைப் பார்த்து.

'கேள்வி என்ன. இன்னொருதரம் சொல்லுங்க 'அத்தை'. ஜயபாலனின் அத்தைப் பைத்தியம் இன்னும் தெளியவில்லை. பையன்கள் ஓவென சிரித்தார்கள்.

'ஸ்டுப்பிட். இங்கே அத்தையுமில்லை, மாமியாருமில்லை. ஆன்ஸர் சொல்லுங்க கேள்விக்கு!—சரளா உறுமினாள்.

'ஓ கேள்வி, ஐயாம் சாரி, பொட்டாசியம் பர்மாங்கனேட் நைட்ரிக் ஆஸிட் ஹீட்—ஓ டியூப் வெடிச்சு முகமெல்லாம் ஆஸிட் தெறிக்கும்! பையன்கள் இந்த ஹாஸ்யத்தைப் பெரிதும் ரசித்தனர். சரளா சீறினாள்.

'விளையாட்டு வேடிக்கைக்கு இது இடமில்லை மிஸ்டர்.'

'என்ன சரளா கோவிச்சுக்கறே' என சகஜமாக ஆரம்பித்த ஜயபாலனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிற்று சரளாவின் 'கெட்அவுட்' என்ற குரல்.

சகமாணவர்களின் பார்வைப் பொருளாய் அவமானத்துடன் பொருமிக் கொண்டே வெளியேறினான் ஜயபாலன். பாஸ் செய்துவிட்ட திமிரா இவளுக்கு. வீட்டில் வந்து அரட்டை அடிக்கிறாள். பழகுகிறாள். இங்கே இத்தனை ஆணவமா? என மனதிற்குள் உறுமியபடி ஜயபாலன் வீட்டை அடைந்தான்.

அன்று மாலை வழக்கம்போல் சரளா வந்துவிட்டாள். ஜயபாலன் அறைக்

குள் சுவாதீனமாய் நுழைந்து 'ஹலோ மிஸ்டர் ஜயபாலன்' என ஒயிலாய்க் கூப்பிட்டாள். ஜயபாலன் 'கெட் அவுட்' என கர்ஜித்தான். சாரா அவன் கோபத்தை லட்சியம் செய்யவேயில்லை.

'காலை வகுப்பில் அவமானப்படுத்தி விட்டதற்கு மன்னிப்பு கேட்கிறேன் இப்போது. உங்கள் காலில் வேண்டுமானாலும் விழுந்து எழுகிறேனே போதுமா?'—சொற்கள் மனதின் அடித்தளத்திலிருந்து வந்தவை என்பதை குரல் காட்டியது. ஜயபாலன் கோபம் பாதி மாறிவிட்டது.

'செய்வதைச் செய்துவிட்டு நீலி வேஷமா? நீ படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியை நான் கேவலம் பரீட்சையில் 'கோட்' அடித்த ஸ்டூடண்டு. அதனால் தானே அப்படி நடத்தினாய் வகுப்பில். போதும் உன் நட்பு போய்வா?'

'எனக்கு உண்மையிலேயே கர்வமோ திமிரோ இருப்பதாக நீங்கள் கருதினால் பெரிய தவறு செய்தவர்களாகிறீர்கள். வகுப்பில் என்ன இருந்தாலும் மற்ற முப்பதுபேர் மாதிரி நீங்களும் ஒரு மாணவர்தானே. ஆசிரியைக்கான மரியாதை தர வேண்டாமா? நீங்கள் எனக்கு மதிப்பு தர வேண்டுமென நான் நினைத்ததேயில்லை. ஆனால், உங்கள் போக்கில் விட்டால் மற்ற மாணவர்களும் இப்படியே அவமரியாதை செய்ய ஆரம்பித்தால் என்னவாகும். நமக்குள் ஆயிரம் இருக்கும். அதெல்லாம் அந்நியர் முன்னிலையில் காட்டிக்கொள்ள வேண்டுமா?

சாராவின் பேச்சில் உள்ள உண்மை ஜெயபாலனுக்குப் புரிந்தது. உடனே லேசாக் சிரித்தபடி 'சாரா நமக்குள் இருக்கும் ஆயிரத்தில் இதுவும் ஒன்று தானே?' என்றான்.

'எது?'

'லவ்.'

அரட்டி ஒடுக்கிய ஆசிரியை அடங்கி ஒடுங்கித் தலைகுனிந்தாள். ஜயபாலனுக்கு அவளின் நாணம் கலந்த பரவச நிலையைப் பார்க்க கொள்ளை இன்பமாயிருந்தது.

'சாரா.'

'உம்! சொல்லுங்கள்.'

'நீ இரண்டு சாராக்களா? அதுதானே நீ விரும்பும் நிலை. வகுப்பாசிரியை மதிப்பிற்குகந்த சாரா பி. என்னி. அப்புறம் ஜயபாலனின் சாரா இரண்டாவது உருவம் அப்படித்தானே?'

'ஆமாம். அது சரி, காலையில் உங்களை நான்...' பேசமாட்டாமல் குரல் கம்மிவிட்டது. விழிகள் விரிய ஆரம்பித்தன. நீரை வெளியேற்ற. ஜயபாலனுக்கு காலையிலிருந்தே அவள் செயலுக்காக மனம் புழுங்கிக்கொண்டிருந்திருக்கிறாள் எனத் தெரிந்தது. உடனே லேசாக அவளை அணைத்து கண்களைத் துடைத்து இதழ்க்கடையில் இளநகை அரும்புமட்டும் ஆறுதல் கூறினான்.

* * *

நாட்கள் நகர்ந்தன. சாரா தனிப்பட வேறு சொல்லிக் கொடுத்து ஜயபாலனைத் தயாராக்கினாள் எப்படியோ பரீட்சைகள் முடிந்தன. ஜயபாலனின் அப்பா ரிசல்ட் வரும் நாளுக்கு இரண்டு நாள் முன்பாகவே யாரையோ பிடித்து மகன் பெயில் என்ற செய்தியைக் கொண்டு வந்து சேர்ந்தார்.

ஜயபாலன் சாராவைப் பார்த்து வரப் புறப்பட்டான். அவளைக் கண்டதும், 'சாரா ஒரு நல்ல சேதி. நான் பெயிலனு எங்கப்பா யார் யாரையோ விசாரிச்சு தெரிஞ்சு வந்திருக்கார். இன்னும் கொஞ்ச நாள் நிம்மதியா இருக்கலாம்' என்றான்.

சாரா திடுக்கிட்டாள். தன்னுடைய அத்தனை முயற்சியும் வீண் எனத் தெரிந்ததும் அவளுக்கு பெரிய ஏமாற்றமாயிருந்தது. சாரா, 'உங்க நல்ல சேதியை நினைச்சு பூரிச்சு போங்க. எங்கப்பா எனக்கு இந்த வருசம் கல்யாணம் பண்ணி வெச்சிடறதுன்னு தீர்மானிச்சட்டார். நானும் மெள்ள அவரிடம் நம் காதலைச் சொன்னேன் அவர் நீங்க பி. எஸ்ஸி எக்ஸாம்லே பஸ்ட் கிளாஸ்லே பாசானா உங்களுக்கும் எனக்கும் மணம். இல்லையேல் முடியாது என்று சொல்லிவிட்டார். நீங்க செகண்ட் கிளாஸ்கூட இல்லாமே கோட் அடிச்சிட்டு வந்து நிக்கறீங்க. நம் ஆசையெல்லாம் மண்ணாக கூறினாள். ஏக்கப் பெருமூச்சொன்று மிகப் பெரிதாகப் பிறந்திருக்க வேண்டும். அவள் மார்பில் விளையாடிய ரிப்பன் சற்றுப் பறந்து பின் தங்கியது.

ஜயபாலன் பிசிக்ஸ் எக்ஸ்பெரிமெண்டின்போது கரெக்ட் ஆன்ஸர் கிடைத்தவனைப்போல பிரமித்து நின்றான். சாராவின் அப்பா இப்படியொரு புது மின்சார ஜன்னி உண்டாக்கி ஷாக் அடிக்க வைப்பார் என அவன் நினைக்கவேயில்லை. நிச்சயம் சாராவுக்கும் தனக்கும் கல்யாணம் என்றுதான் அவன் கனவு கண்டுகொண்டிருந்தான்.

குரல் கம்ம (ஜலதோஷம் வேறு) மூக்கைச் சிந்தாத குறையால் உணர்ச்சியுடன் ஜயபாலன் சாரா நேற்றைய 'சந்துதாசன்' பத்திரிகை படித்தாயா? என்றான். சாரா ஏமாற்ற அதிர்ச்சியில் ஜயபாலனுக்கு சித்தம் கலங்கிவிட்டதோ எனச் சந்தேகத்துடன் அவனைப் பார்த்தபடி 'அந்தக் கருமமெல்லாம் நான் ஏன் படிக்கிறேன்' என்றாள்.

'அதில் முந்தாநாள் சினிமா தியேட்டரில் பிரபல சினிமா ஸ்டார் பாபுஷ்லதா சடையைப் பிடித்து இழுத்த அயோக்கியன் அப்படின்னு ஒரு நியூஸ் வந்திருக்கு. அந்த அயோக்கியன் பேர் போடலை அதிலே. ஆனா அது யார் தெரியுமா? நான்தான். தியேட்டரிலே நீயாக்கும்னு நினைச்சு அந்த எக்ஸ்ட்ராவைத் தொட்டிட்டேன். இதிலேயிருந்து என்ன தெரியுது.'

'உங்களுக்கு ஷார்ட் சைட்டுன்னு.'

'ஐயோ கொல்லறியே. அல்ல சாரா அதல்ல காரணம். எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் எனக்கு நீயாத் தெரியுது. நீ நம்புவியோ மாட்டியோ. உன் நிலைமை என்ன?'

'நீங்க நம்புவீங்களோ மாட்டீங்களோ. எந்த ஆம்பிளையைப் பாத்தாலும் உங்க மாதிரியே...'

'ஐயோ சொல்லாதே. என்னைக் கொல்லாதே. சாரா நீ என் ஜீவன். நம் இருவருக்கும் காதல், லிமிட்டையெல்லாம் தாண்டிப் பெருகிடிச்சு. நம் கல்யாணத்துக்கு உங்கப்பா விதிச்ச நிபந்தனை நம்மை இணையவொட்டாமே செய்திடுச்சு. சாரா நீ தைரியசாலி தானே'.

'ஆமாம். பின்னே உங்க மாதிரியா?'

'கேலி பேசாதே மகனே.'

'இப்போ அத்தைப் பைத்தியம் போய் மகள் பைத்தியம் ஆரம்பமாயிடுச்சா?'

'இல்லை மகனே. நான் உலகை வெறுத்துவிட்டேன். என் மனம் ஆசாபாசங்களைக் கடந்து இப்போது டென்சிங் மாதிரி இமயமலை உச்சிமீது ஏறிக் கொண்டிருக்கிறது. நான் சாகத் துணிந்துவிட்டேன். ஒரு முழு விஷம், அல்லது ஒரு துளி தூக்கு.'

'என் இதயமே எனக்கும் அதில் பங்கு தாருங்கள். நாமிருவரும் தற்கொலை செய்து இறந்தபின் ஆவிகளாக அலைவோம். பெயில் மார்க் போடும் புரொபசர்களையெல்லாம் அடித்து ரத்தம் கக்கி சாக வைப்போம். நமக்குப் பின் வருவோராவது மகிழ்வுடனிருக்கட்டும்.'

'சாரா உலகம் நம் வீரமும் காதலும் கண்டு வியப்படைய வேண்டும். பேப்பரில் ரிசல்ட் வர வேண்டும். உடனே நாம் கிணற்றில் குதித்துவிட வேண்டும்—சே கிணற்றில் விழுந்தால் அடிபடும். நமக்கோ நீச்சலும் தெரியாது.'

'சுவாமி. நாம் சாகப் போகிறோம்.'

'ஓ மறந்தேன் மகனே. எதற்கும் விஷம்தான் நல்லது. எங்கள் குடும்ப டாக்டரிடம் போய் நல்ல விஷமாக வாங்கி வருகிறேன். நாளன்றைக்கு காலை சரியாக எட்டு பதினேழுக்கு மக்மல்பூர் ஆகாஷ்வாணி மண்ணுங் கட்டி நிகழ்ச்சி ஆரம்பமாகும்போது நாம் விஷமருந்த வேண்டும். விஷம் கசந்தாலும் கசக்கும். எதற்கும் கொஞ்சம் சர்க்கரை எடுத்து வைக்கிறேன்.'

'மிஸ்டர் ஜெயபாலன் இன்னும் இரண்டு நாளில் தற்கொலை செய்துகொள்ளப் போகிறோமேயென இஷ்டப்பட்டதைச் சாப்பிட்டு வைக்காதீர்கள். பிறகு தற்கொலை செய்துகொள்ள முடியாது.'

'உனக்கும் அதே வார்த்தைதான்.'

இரண்டு நாள் கழித்து—

'சரளா தயாரா. இதோ இந்த விஷம் சரியாகக் கால் மணி நேரத்தில் கொன்றுவிடுமாம். டாக்டரே சொல்லிக் கொடுத்தார்.'

'ரொம்ப நல்ல டாக்டர்.'

'சரளா இறக்குமுன் எனக்கொரு சின்ன ஆசை. என்னருகே வா.

'என்ன சொல்லுங்கள்.'

'இதோ இங்கே என் கன்னத்தில் ஒரே ஒரு..'

'ஐயோ எனக்கு வெட்கமாயிருக்குங்க.'

'சாகப் போகையில் வெட்கமா, இந்தச் சாதாரண விஷயத்துக்கு. கூடாது சரளா கூடாது. சரளா என்னை நிம்மதியாக, அமைதியுடன் - சாகவிடு. என் ஆசையைத் தட்டாதே. என் கன்னத்தில் ஒரே ஒரு சின்ன மைப் பொட்டு வை.'

'சீ! இத்தனைதானா? சரி சாப்பிடலாமா?'

'சரளா விஷம் சர்பத் மாதிரி இனிப்பா இருக்கல்ல.'

'ஆமாம் ரொம்ப சர்க்கரை போட்டிட்டாங்க.'

கடிகாரம் கண்ணெதிரே பயங்கரமாய் காட்சியளித்தது. விநாடிகளை விழுங்கி நிமிடங்கள் வளர்ந்தன. தற்கொலை செய்து கொள்பவர்களைப் பிடிக்கும் இறுதி நேர வாழ்வாசை இவர்களையும் பிடித்தது.

'ஐயோ மிஸ்டர் ஜயபாலன் அநியாயமா வாழ்க்கையை அனுபவிக்காமே இத்தனை சின்ன வயசிலே சாகிறோமே என சரளா விம்மினாள்.'

'ஆமாம் சரளா டாக்டருக்கு போன் செய் பிழைக்க முயற்சிக்கலாம்' என்ற ஜயபாலன் சத்தம் போட்டு அம்மா, அப்பா எல்லோரையும் தாங்களிருந்த இடத்திற்கு அழைத்து விஷயமெல்லாம் கூறிவிட்டு விசும்பினான். ஜயபாலனின் அம்மா சரளாவைக் கட்டிக் கொண்டு ஒப்பாரியே ஆரம்பித்துவிட்டாள். சரளாவின் அப்பா டாக்டருக்காக ஓடினார். எல்லோரும் பதறினர்.

'ஐயோ கால் மணியில் விஷம் கொன்றுவிடுமே பதிமூனு நிமிஷம் ஆயிடுச்சே' ஜயபாலன் அலறினான்.

'பாவி மகனே முதலிலேயே அந்த புத்தி எங்கேடா போச்சு. பெத்த வயிறு வேகுதடா சண்டாளா' என அம்மா புலம்பினாள்.

பதினைந்காவது நிமிடம் விஷம் கொடுத்த டாக்டரே வந்தார். வந்தவர் சாவகாசமாக பேப்பரை எடுத்து ரிசல்ட் பார்த்து 'என்ன ஜயபாலா யுனிவர்சிடியிலேயே இந்த செப்டம்பர் நீ ஒருத்தன் தான் பஸ்ட்கிளாஸ்லே இருக்கே' என்றார்.

எல்லாருக்கும் மாளா வியப்பு. ஜயபாலனும், சரளாவும் துடித்தார்கள். வெற்றியை அனுபவிக்க முடியவில்லையே. இன்னும் ஒரு நிமிட வாழ்வு தானே—


பதினைந்தாவது நிமிடம் கடந்தது.

பதினாறு—பதினேழு— இருபது— இருபத்தைந்து—முப்பது. ஒன்றும் நடக்கவில்லை. சரளாவும், ஜயபாலனும் திருதிருவென விழித்தபடி அமர்ந்திருந்தனர். இன்னும் சாகவில்லையே ஏன்?

டாக்டர் சிரித்தபடி 'சார் யாரும் கவலைப்பட வேண்டாம். காதல் தோல்வி விஷம் கொடுன்னு கேட்டதும் தூக்கித் தர எந்த டாக்டரும் பைத்தியமல்ல. சர்பத்தைக் கொடுத்து 15 நிமிஷத்திலே கொன்னுடும்னு சும்மா மிரட்டி அனுப்பினேன். நா வரட்டுமா' என்றார்.

எல்லோருக்கும் போன உயிர் திரும்பி வந்தது. ஜயபாலனின் அப்பா 'பாவிப் பய என் மகன் பர்ஸ்ட் கிளாஸ்லே பாசாயிருக்கான் பெயிலுன்னு சொல்லி இத்தனை கலாட்டா பண்ணிட்டானே.' என ராம நிழல் தந்த ஆளை திட்டித் தீர்த்தார்.

கல்யாண விருந்துக்கு காய்கறி வாங்க சரளாவும், ஜயபாலனும் சைவ வீதிக்குப் போனபோது புல்லைக் கிழவி அடே வெண்டைக்காய் தம்பியா தம்பி மாசிக்கு எப்போ என்னை அனுப்பப் போறே' எனப் பிடித்துக் கொண்டாள். ஜயபாலன் சரளாவின் பின்னால் ஒளிந்து கொண்டான்.






# பொருளடக்கம்


Vol: XXX] [No 43

விகாரிஹூகார்த்திகை13 நவம்பர் 29



வரதட்சணை ஒழிய வழி 3

மக்கள் மன்றம் 5

அரசியல் துக்கடா 7

காற்றுவாக்கிலே —அரட்டை 9

நாடகமும் நாட்டியமும் —சஞ்சாரி 15

மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம் —தமிழ்வாணன் 17

பண்பா, பணமா —கே. ஆர். மீனாட்சி 25

நவநாகரீகக் குறிப்புகள் —சுமங்கலி 33

மாதர் மகாசபை —குங்குமம் 35

வாழப் பிறந்தவள் —எல்லார்வி 39

நாய்வால் —தீக் விஜயன் 47

திருவெம்பாவை —செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர் 54

நாகரிகமாரி —கோ. கந்தசாமி 56

புதையல் —ப. ராதாகிருஷ்ணன் 57

பைரவி பாலாமணி —கே. பி. நீலமணி 65

காளையின் காதலி —எஸ். ஜி. ஆர். 77

ஓ...ஓ... சாரதா —வி. ஆர். பாலன் 84

நத்தையும் மின்மினியும் —தமிழ்முடி 92

நாராயணீயம் —சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் 94



"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

# இவ்விளம்பர இடம் என்ன விலை பெறும்?

ஒரு பத்தி அங்குலத்திற்கு கட்டணம் தெரிந்தால் பாதி விடைதான் தெரிந்துகொள்கிறீர்கள். விளம்பரதாரர் அந்த கட்டணத்திற்கு எத்தனை பிரதிகளில் விளம்பரம் வெளியாகிறது, அதாவது, பத்திரிகையின் விற்பனை எண்ணிக்கை எவ்வளவு என்பதை நிச்சயத்துடன் தெரிந்துகொள்ள வேண்டும்.

நிச்சயத்துடன் எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் இன்று ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லிமிடெட் என்ற ஒரு சுயேச்சையான சங்கத்தில் அங்கம் வகித்துவருகின்றன. இந்த சங்கத்தில் பத்திரிகைகள் தவிர, விளம்பரதாரர்கள், விளம்பர ஏஜன்ஸிகள் ஆகியோரும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஏபிஸி யின் ஆடிட்டர்கள் பத்திரிகைகளின் விற்பனைக் கணக்கை ஒரு நிர்ணயமான முறையில் ஆராய்ந்து பரிசீலனை செய்கிறார்கள்.

ஏபிஸி சர்டிபிகேட் பத்திரிகைகளின் விற்பனைக்கு ஒரு நல்ல அத்தாட்சி; விளம்பரதாரருக்கு அவர் பெறும் மதிப்புக்கு ஒரு உத்தரவாதம்.

## நீங்கள் வாங்கும் விளம்பர இடத்தை மதிப்பிட ஏபிஸி யில் சேருங்கள்

விவரங்களுக்கு எழுதுங்கள்:

**ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லிட்.,**

வேக்பீல்ட் ஹவுஸ், பாலார்ட் எஸ்டேட், பம்பாய் 1.

ஏபிஸி யில் இந்தியா, பாகிஸ்தான், ஸிலோன் நாடுகளின் பத்திரிகைகள், விளம்பரதாரர்கள், விளம்பர ஏஜன்ஸிகள் ஆகியோர் சுமார் 300 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.

வெளியிட்டவர்:

**சுதேசமித்திரன் வாரப் பதிப்பு**

ஏபிஸியின் அத்தாட்சி பெற்ற விற்பனையுள்ள வாரப் பத்திரிகை



வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்


★

# வரதட்சணை ஒழிய வழி

**வ**ரதட்சணைத் தடுப்பு மசோதாவைப் பரிசீலித்த பார்லிமெண்டரிக் கமிட்டி அதை இன்னும் கடுமையாக்கச் சிபார்சு செய்திருக்கிறது. மீறுவோர்க்கு அபராதம், சிறைவாசம் இரண்டும் விதிக்க வேண்டுமென்பது அதன் சிபார்சுகளில் ஒன்று. நகைகள், ஜவுளி, பாத்திரங்கள் முதலிய வகைகளில் ரூ. 2000-க்கு மேற்படாமல் சீர்வரிசையாகக் கொடுக்கலாமென்று அசல் மசோதாவில் ஒரு ஷரத்து இருக்கிறது. அதை அடியோடு நீக்கிவிட வேண்டும்; ஏனெனில் அதைக் காட்டி அந்த அளவுக்கு வரதட்சணை வசூலிப்பதற்கு சட்ட சம்மதம் கொடுப்பதாகிவிடும் என்றும் மேற்குறித்த கமிட்டி தெரிவித்திருக்கிறது. பெண்களுக்கும் சட்டப்படி சொத்துரிமை ஏற்பட்ட பின், வரதட்சணை முறை நீடிப்பது சிறிதும் பொருத்தமல்ல என்று வாதிக்கலாம். ஆனால் நம் நாட்டில் உருவான சொத்துள்ள குடும்பங்கள் சொற்பம். மிக்கப் பெரும்பாலான ஏழைக் குடும்பங்கள் கடன் வாங்கியே விவாகச் செலவுகளை நடத்த வேண்டியிருக்கிறது. அவர்களெல்லாம் இத்தகைய மசோதாவை வரவேற்பது இயற்கை.

ஆனால் வரதட்சணை முறை நெடுநாளையது. எளிதில் **அதைத் தீர்த்துக் கட்டிவிட முடியுமென்று எண்ணுவது...**

பிரமை. ஒரு வழியில் இல்லாவிட்டால் இன்னொரு வகையில் அதை வசூலிக்க விதவிதமான முயற்சிகள் நடப்பது நிச்சயம். அவற்றில் எதற்கும் சிறிதும் இடமில்லாமல் சட்டத்தின் மூலம் வகை செய்வதென்பது சாத்தியமல்ல. எந்தச் சட்டத்தையும் மீறி நடக்கத்தக்க குயுக்தியுள்ளவர்கள் உண்டு. அதிலும் வரதட்சணை பற்றிய ஒரு சட்ட விஷயத்தில் அவ்வித வாய்ப்புகள் இன்னும் அதிகம். அது கொடுப்போர், வாங்குவோர் இரு தரப்பாரும் ரகசியமாக உடன்பட்டுச் செய்யக்கூடிய ஒரு குற்றமாதலால் அதைக் கண்டுபிடிப்பது கஷ்டம். மேலும் அவர்களிடை ஏற்படும் உறவு ஒருவரை யொருவர் காப்பதற்கின்றி காட்டிக் கொடுக்க உதவக்கூடியதல்ல. எனவே வரதட்சணைத் தடுப்புச் சட்டம் கடுமையாக அமைவதால் மட்டும் அதன் அடிப்படையான நோக்கம் ஈடேறிவிடுமா என்பது சந்தேகம்.

வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தை மீறக்கூடியவர்கள் மீது மற்ற கொடிய குற்றங்களைப் போல் போலீசாரே நேரடியாக வழக்குத் தொடுக்க சட்டத்தில் வகை செய்ய வேண்டுமெனப் பரிசீலனைக் கமிட்டியைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள் தெரிவித்திருக்கின்றனர். போலீஸின் அலுவல் ஜாப்தா, சமீப காலத்தில், அதிலும் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து விசேஷமாக வளர்ந்து விட்டது. இனி விவாகம் நடக்குமிடங்களில் எல்லாம் அவர்கள் வரதட்சணைக் குற்றவாளிகளைத் தேட வேண்டுமென விதிப்பது வரவேற்கத்தக்கதல்ல. அதனால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களும், ஊழல்களும் பல. எனவே வரதட்சணைத் தடுப்பு மசோதாவை பரிசீலனைக் கமிட்டியின் திருத்தங்களின்றி, அசல் உருவத்திலேயே நிறைவேற்றி வைப்பது நலமென்று எண்ணுகிறோம். பிறகு ஏற்படும் அனுபவத்தைக் கொண்டு அதில் தேவையான திருத்தங்கள் செய்யத் தடையில்லை. சட்டம் உருவாகும் இச்சமயத்தில் அதன் நோக்கத்திற்கிணங்க சமுதாயத் தலைவர்களும், முக்கியமாக மதத் துறையில் செல்வாக்குள்ளவர்களும் மக்கள் மனத்தைத் திருப்புவதில் முனைவாராயின், நாம் உருவான பலன் காணலாம்.

# மக்கள் மன்றம்

15ந்தேதி இதழுடன் முடிவடைந்த 'சியாமா'வின் 'நிழலும் நிஜமும்' ஓர் அற்புதமான மனோதத்துவ நெடுங் கதை. எளிய நடையிலே, இதயத்தைத் தொடும்படி எழுதப்பட்ட ஒரு உணர்ச்சிக் களஞ்சியம். முடிவு எதிர்பாராதது! இறுதியில் டாக்டர் ரிஷிராமின் வாயிலாக ஆசிரியர் கூறும் கருத்துக்கள் வரவேற்கத்தக்கன!

ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
புது டில்லி.

ஃ ஃ ஃ

25ந்தேதி இதழில் 'பாலாஜி' எழுதிய 'வாழ்வளித்த தெய்வம்' என்ற கதை பாராட்டத்தக்க முறையில் இருந்தது. என்னதான் ஒரு பெண் அசடாக இருந்தாலும், காலப்போக்கில் பெண்மைக்கு அடிபணிந்துதான் ஆகவேண்டும் என்ற கருத்தைத் தெளிவாக எழுதியுள்ளார். அத்துடன் அண்ணன், தம்பி ஒற்றுமையும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் நன்றாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

மைதிலி சேஷாத்ரி,
பங்களூர்.

ஃ ஃ ஃ

மித்திரன் தீபாவளி மலர் சிறந்த முறையில் அமைந்து தமிழைச் சிறப்பிக்கிறது, சிங்காரிக்கிறது. சிந்தனை வேந்தர் ஸ்ரீ லா. சா. ராமாமிருதத்தின் 'இதழ்கள்' அபாரமான படைப்பு. மித்திரனில் 'ஆதித்தன் காத'லுக்கப்புறம் சரித்திர நாவலே வரவில்லையே! வரலாற்றுக் கதை மன்னர் ஸ்ரீ சாண்டில்யனின் சரித்திர நாவல் மித்திரனில் வந்தால் மிக மகிழ்ச்சியடைவோம்.

வ. சி. நாராயணன்,
பம்பாய்.

ஃ ஃ ஃ

8–11–59 மித்திரன் இதழ் கண்டேன். 'சிறப்பித்த செங்கரும்பு', 'ஏகாங்கி', 'நினைத்ததென்ன நடந்ததென்ன' ஆகிய கதைகள் மிகவும் நன்றாக இருந்தன. 'பகல் தூக்கம்' பலே ஜோர்.

மு. சு. சங்கரன்,
திருநெல்வேலி.

ஃ ஃ ஃ

தீபாவளி மலர் அட்டைப் படம் மிக்க கவர்ச்சிகரமானது. ஒவ்வொரு பக்கத்திலும் வர்ணப் படங்களும் துக்கடாக்களும் போற்றத்தக்கவை. 8ந்தேதி இதழில் நீலாராமமூர்த்தி எழுதிய 'மனமாற்றம்' என்ற கதை மிகவும் நன்றாக இருந்தது. மூடிக்கிடக்குதே உள் நெஞ்சம் தொடர்கதையை மிகவும் ஆவலுடன் தவறாமல் படித்து வருகின்றேன்.

மீனாட்சி நடராஜன்,
திருச்சி.

ஃ ஃ ஃ

தங்கள் 'மித்ரன் தீபாவளி மலர்' கண்டு பூரித்தேன். இவ்வளவு திறமையாகவும், பொலிவுடனும், குறைந்த விலையிலும் 'மித்திரன்' சரித்திரத்திலேயே வெளியிட்டு, வந்ததே இல்லை. இந்த முயற்சி பாராட்டற்குரியதுதான். வாசகர்கள் மிகவும் ஸந்தோஷமடைவார்கள்.

வ. கிருஷ்ணமூர்த்தி
கோயமுத்தூர்.

ஃ ஃ ஃ

8–11–59ந்தேதி சுதேசமித்திரன் வார இதழ் அட்டைப்படம் நன்றாக இருந்தது; என் மனத்தை மிகவும் கவர்ந்தது. இதுபோன்ற இயற்கைக் காட்சிகளைத் தங்கள் வாரப் பதிப்பின் அட்டைப் படத்தில் வெளியிடுவீர்கள் என்று நம்புகின்றேன்.

வி. தங்கராஜு,
காரைக்குடி.

8ந்தேதி இதழில் 'கல்வித் துறையில் அபாயம்' என்று மகுடமிட்டு வெளியான தலையங்கம், மிகச் சிறந்த முறையில் ஆணித்தரமான ஆதாரங்களுடன் கூடியதாய் அமைந்திருந்தது. கல்வியெனும் ஆழ்நீர்ப் பரப்பைக் கலக்கிச் சேறுக்காமல் தெளிநீர்த் தடாகமாகப் பாதுகாப்பது அரசினர் கடன். பாட புத்தகங்கள், அவைகளைத் தோற்றுவித்தோரின் திறமையின் எடுத்துக் காட்டாய் விளங்கும் உண்மையினை யாவரும் தெளிவர். மாணவர்களுக்குத் தேவையான கருத்துச்செறிவும் நடைச் சிறப்பும் இன்னோரன்ன பலவும் போட்டியின் மூலமாகத்தான் விழுப்பம் பெறும் என்பதைத் தாங்கள் குறிப்பிட்டிருந்தது மகிழ்ச்சியளித்தது. தங்களின் இச்சீரிய கருத்துக்கள் அரசியலாரின் கவனத்தை ஈர்த்து, வேலியே பயிரை மேய்வதற்கொப்பான செயலைத் துறக்கச் செய்ய உதவுமானால் என்போன்ற ஆசிரியர் குழாம் பெரிதும் உவகை கொள்ளுவர். தங்கள் துணிவுக்கு நன்றி.

நீ. சு. பத்மநாபன் பி. ஏ. பி. டி.
நீடாமங்கலம்

ஃ ஃ ஃ

15-ந் தேதி 'சுதேசமித்திரன்' அட்டைப் படம் வெகு கவர்ச்சிகரமாக இருந்தது. சிறுவர் தொடர் கதையாக வந்த 'சுதந்திர யானை'யும், 'மந்திரவாதி'யும் வெகு பிரமாதமாக இருந்தன அக்கதைகளை எழுதிய ஆசிரியருக்கு என் பாராட்டுக்கள். 'கண் திறந்தது' ஒரு அற்புதப் படைப்பு. அதனை எழுதிய ஆசிரியர் ஸ்ரீவத்ஸனுக்கும் என் நன்றி.

எஸ். வெங்கடராஜன்:
புதுடில்லி.

ஃ ஃ ஃ

மலர் கண்டேன்; மகிழ்ச்சிப் பெருக்கால் உளம் கனிந்தது. குறைந்த விலையில் இவ்வளவு சிறப்பாக அமைந்துத் தந்த தங்களுக்கு என் அன்பு மிக்க நன்றி. 22-ந் தேதி இதழின் அட்டைப் படம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. போன ஆண்டு வாசகர்களுக்கு 'மித்திரன்' காலண்டர் அளித்தது போல், இவ்வாண்டும் பல தலைவர்களுடைய புகைப்படம் போட்டு காலண்டர் அளிக்கும்படி. கேட்டுக் கொள்கின்றேன்.

எஸ். செல்லையா.
மேல் மாம்பலம், சென்னை.

ஃ ஃ ஃ

25-10-59 மித்திரனில் வெளியான கதைகளில் பாலாஜி, ராஜ்யஸ்ரீ, இருவரின் கதைகள் தெளிய நடையில் உயர்ந்த கருத்துக்களைக்கொண்டு வெளியாகியிருக்கின்றன. பி. கோதண்டராமன் அவர்களின் மொழிபெயர்ப்புக் கதை ஒரு 'இலக்கியப் பொக்கிஷம்'

ஸ்ரீ அனந்தகிருஷ்ணன்.
மானாமதுரை,

ஃ ஃ ஃ

25-10-59ந்தேதிய சுதேசமித்திரனைக் கண்டோம். ஆனந்தம் மிகக் கொண்டோம். அதிலுள்ள கதைகள் யாவும் மிகவும் நன்றாக இருந்தது. குறிப்பாக 'இருபத்தெட்டாவது நட்சத்திரம்' கதை, ஒரு நடிகையின் மனவெக்கத்தைப் பிரதிபலிக்கிறது. 'குங்குமம்' அவர்கள் எழுதி வரும் 'மாதர் மகாசபை' மிகவும் பிரமாதம்.

த. சாந்தகுமாரி.-த. ஹேமலதா.
மதுரை.

ஃ ஃ ஃ

25-10-59 வார மலர் கண்டேன். அட்டைப்படம் மிக்க கவர்ச்சி. பாலாஜி எழுதிய 'வாழவைத்த தெய்வம்' என்ற கதை மிகவும் நன்றாக இருந்தது. 'மாரி, அறவாழி, அப்பாவி' என்ற எல்லாக் கதைகளுமே மிகவும் போற்றத்தக்கது. இந்த வார சுதேசமித்திரன் கதைகள் பலே ஜோர்.

மீனாட்சி நடராஜன்.
அல்லூர்.

ஃ ஃ ஃ

25-10-59 இதழைக் கண்டேன். அட்டைப்பட விமர்சனத்தை பார்த்தேன். அட்டைப் படத்தில் உள்ள சித்திரம் என் மனதைக் கவர்ந்துவிட்டது. அதில் தெய்வீக மணம் வீசுகிறது. 'மன்னிப்பு' என்ற தலைப்பு உள்ள கதையைப் படித்தேன். என் மனதை அப்படியே உருக்கி விட்டது

வி வி நாகராஜன்.
வைதீசுவரன் கோயில்.

# அரசியல் திக்கடா

இலங்கைப் பிரதமர் திரு தகநாயகா புத்தபிக்கு ஆகிவிட வேண்டுமென்று எண்ணம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

—ஒரு செய்தி.

அரசியல் குழப்பங்கள் என்னும் பிக்கு பிடுங்கல்களில் கிடந்து சுவிப் படுவதைவிடப் பிக்குவாகிவிடுவது மேல் தான்!

ஃ ஃ ஃ

கரம்சிங்கின் கையும் காலும் உறைபனியால் பாதிக்கப்பட்டுள்ளன.

—ஸ்ரீநகர் செய்தி.

'கரம்' சிங்கின் கையும் காலும் பட்டவுடன் உறைபனி உருகி ஓடிவிடவில்லையா?

ஃ ஃ ஃ

சைகிள் திருட்டு வழக்கு ஒன்றில் தண்டனை அடைந்த நபர், விடுதலைக்குப் பிறகு இரண்டு ஆண்டுகாலம், தனது இருப்பிடத்தை அன்றாடம் போலீசுக்கு அறிவித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார்.

—ஒரு செய்தி

அப்படி அன்றாடம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தகவல் கொடுத்து வர ஒரு சைகிள் இருந்தால் நல்லது என்று அந்த நபர் மீண்டும் சைகிள் திருடாமலிருக்கவேண்டுமே.

ஃ ஃ ஃ

சென்னை அரசாங்கக் கோழிப் பண்ணை தொழிலாளர் சங்கம் சமீபத்தில் கூடியது.

—செய்தி.

'கூவுவதைக் கூலி வைக்கலாம் பொழுது விடிகிறபோது விடியட்டும்' என்ற மனப்பான்மையுடன் அவர்கள் பல தீர்மானங்களை நிறைவேற்றி இருக்கக்கூடும்!

ஃ ஃ ஃ

எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் குழப்பம்.

—ஒரு செய்தித் தலைப்பு.

தங்களுடைய எழுத்துக்கள் மூலம் வாசகர்கள் மனத்தைக் குழப்பி வந்தவர்கள், அன்று தங்களைத் தாங்களே குழப்பிக்கொள்ளத் தீர்மானித்தார்கள் போலும்!

ஃ ஃ ஃ

அன்னிய நாட்டு சாய கெமிகல்களின் இறக்குமதியைத் தடுத்துவிட்ட இந்திய சர்க்காரின் ஆதரவில், சில உள்நாட்டுச் சாய உற்பத்தி ஸ்தாபனங்கள் கொள்ளை லாபம் அடிக்கின்றன. இதனால் பொதுஜனங்களே பாதிக்கப்படுகின்றனர்.

—ஒரு பேச்சாளர்.

உள்நாட்டுச் சாய உற்பத்தியாளரின் கொள்ளை லாப மனப்பான்மையினால் மத்ய சர்க்காரின் சாயம் வெளுத்து விடும் போலிருக்கிறதே!

ஃ ஃ ஃ

தரங்கம்பாடி கடல் கொந்தளிப்பில் மீன் பிடிக்கச் சென்ற ஒரு கோஷ்டியின் கட்டுமரம் பாறையில் மோதியதில் வலை கிழிந்து சின்னபின்னமாகி விட்டது.

—ஒரு செய்தி.

தங்கள் தலைக்கு வந்த ஆபத்து வலையோடு போய்விட்டபோது, அதற்காக, அந்த மீனவர்கள் கவலையா பட்டுக் கொண்டிருக்கப் போகிறார்கள்?

ஸ்ரீ என்றால் பெண் என்று அர்த்தம்.

—ஒரு திருமதி

ஸ்ரீ என்பதற்கும் ஸ்திரீ என்பதற்கும் வித்தியாசம் தெரிந்துகொள்ளாத 'மதி'களும் நம்மிடையே இருக்கிறார்களே!

ஃ ஃ ஃ

தேர்தலில் தோற்ற ஒருவர் தம் கட்சித் தலைவரை முதலில் கொன்று விட்டுப் பிறகு தற்கொலையும் செய்து கொண்டார்.

—மணிலா செய்தி

நம் நாட்டு அரசியல் வாதிகள் தேர்தலில் தோற்றுப் போனால் தற்கொலை கூடச் செய்து கொள்வதில்லையே என்கிறார் ஒரு 'சூடுசுரணை' உள்ளவர்!

ஃ ஃ ஃ

முதலாளித்வ நாடுகள் ஒரு கையால் உதவி செய்து மறு கையால் அதைப் பறிக்கிறார்கள்.

—டாக்டர் சுகர்னோ

அவர்கள் வலது கையால் கொடுத்ததை அவர்களுடைய இடது கை தெரிந்துகொள்ளாமல், 'யாரோ கொடுத்தது' என நினைத்துப் பறித்து இருக்கலாம்.

★

## அட்டைப் படம்:

## விரும்பிய விரஸம்

'கீத கோவிந்த'த்தை இயற்றுவதில் இரவு பகலாக ஜயதேவர் ஈடுபட்டிருந்த சமயம். ஓரிரவு பதினெட்டு பாடல்கள் முடிந்துவிட்டன. பத்தொன்பதாவதி லும்கூட ஏழு சரணங்கள் பூர்த்தியாகி விட்டன. அடுத்ததாக 'ஸ்மரகரள கண்டனம் மமசிரஸி மண்டனம்' என்று எழுதலாமாவென நினைத்தார். ஆனால், அவரது எழுத்தாணி நகர மறுத்து விட்டது. அதன் கருத்து அவருக்கு விரஸமாகப்பட்டதே காரணம். என்ன முயன்றும் அவர் கற்பனை விரியவில்லை; வேறு வார்த்தைச் சேர்க்கை புலப்படவில்லை. அலுத்துப் போனவராய் எழுந்தார். அப்போது விடிந்துவிடவே, குளிப்பதற்காக ஆற்றுக்கு விரைந்தார், தலையில் எண்ணெயைத் தேய்த்துக்கொண்டே.

சற்று நேரம் சென்றது. குளிக்காமலேயே வீடு திரும்பியவர், எழுத்தாணியை எடுத்தார். மளமளவென அந்த எட்டாவது சரணத்தை எழுதினார். பின்னர் திரும்பக் குளிக்கச் சென்றுவிட்டார்.

மேலும் சிறிது நேரம் சென்றது. குளித்து முடித்து ஆற்றிலிருந்து திரும்பியதும் மறுபடியும் ஏடுகளை எடுத்துப் பார்த்தார். அவ்வளவுதான், பெருங்கோபம் வந்துவிட்டது அவருக்கு. 'பத்மாவதி' என்று இரைந்தார். என்னவோ ஏதோவென்று பயந்து வந்தாள் மனைவி. 'யார் இந்த விஷமத்தைச் செய்தது? அந்தக் கருத்தை எழுத வேண்டாமென்று விட்டேனே, அது இங்கே எழுதப்பட்டிருக்கிறதே' என்று கூச்சல் போட்டார். அதைக் கேட்ட அவர் மனைவிக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'குளிக்கச் சென்றதும் சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து எழுதியதை மறந்துவிட்டீர்களா, என்ன?' அந்த ஏட்டில் உங்கள் எண்ணெய்க் கை பட்டிருப்பதைப் பாருங்கள்' என்றாள் மனைவி.

பார்த்த ஜயதேவர் பிரமித்துவிட்டார். பத்மாவதி கூறியது உண்மைதான். ஏட்டின் ஓரத்தில் பெருவிரல் அழுந்திய இடத்தில் எண்ணெய்க் கறை படிந்திருந்தது. சாதாரணக் கறையல்ல, அழகிய சங்க முத்திரை! விஷயம் புரிந்துவிட்டது; தம்மைப் போல் வந்தவர் பகவான்தான் என்பது அவருக்கு விளங்கிவிட்டது. மனிதனாகிய தமக்கு விரஸமாகப்பட்ட அந்தக் கற்பனை, பரந்தாமனுக்கு உகந்ததாக இருந்தது கண்டு புளகாங்கிதம் எய்தினார்.

அந்தச் சரணத்தின் கருத்து இதுதான்: 'காமத் தீ தலைக்கேறிய கண்ணன், ராதையின் குளிர்ந்த பாதங்களைத் தன் தலைமேல் வைக்கும்படி வேண்டுகிறான். தலைக்கேறிய காமத்தீ அந்தக் குளிர்ச்சியினால் குறையும் என்கிறான்'—உன்னதக் கற்பனையாயினும் பரம பக்தராகிய ஜயதேவரின் உள்ளத்தை இது உலைத்தது இயல்பேயல்லவா? அவர் விரஸமாகக் கருதியபோதிலும் பரந்தாமன் விரும்பிச் சேர்த்த இந்த ரஸமான காட்சிதான் இவ்வார அட்டையை அலங்கரிக்கிறது.

# காற்று வாக்கிலே!

### எல்லாம் நன்மைக்கே!

எல்லாம் நன்மைக்கே. பெரியோர் வாக்கு. வட எல்லையில் சீனாவின் தொல்லை; அதனாலும் எத்தனை நன்மை? சோர்வழிந்தது; சீறியெழுந்தனர் பாரத மக்கள். பசுத்தோல் போர்த்த புலிகளின் உண்மை சொரூபம் வெளியாகியது. தேச பக்தர்கள் யார்? தேசத் துரோகிகள் யார்? கண்டறிய உரைகல்லாகியது சீனாவின் அக்கிரமம்.

அது மட்டுமா? வேத, சாஸ்திர, புராணங்களின் அருமை பெருமையை நாத்திகரும் நன்கறிய நல்வாய்ப்பு கிட்டியது. பண்டை சம்ஸ்கிருத இலக்கியங்களின் மேன்மையை பலரும் புரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இமயத்தின் சிகரங்கள் இந்தியாவின் பரம்பரைச் சொத்து, புராதனமான எல்லைப்புறம் என்பதை ஊர்ஜிதப் படுத்த சமயச் சார்பிலா சர்க்காரே வேத, சாஸ்திர, புராணங்களிலிருந்து மேற்கோள்கள் காட்ட நேர்ந்தது. விஷ்ணு புராணம், ரிக்வேதம், உபநிஷத், ராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை மற்றும் பல இதிகாசங்களைப் புரட்டிப் படித்து, கரைத்துக் குடித்து சான்றுகளை அள்ளி வீச நேர்ந்தது. இந்தியர் இதயத்தில் இடங்கொண்ட இமயத்துக்கு ஏற்பட்ட ஆபத்து காளிதாசனையும், பட்டபாணனையும் பாமரருக்கும் அறிமுகப்படுத்தியது. ஒரே பழைய நூல்களின் பட்டியல். தற்காலத்துக்கு ஒவ்வாதவை என்று தூர விலக்கியவற்றையே துணைக்கு அழைக்க நேர்ந்தது. புதிய நிகழ்ச்சியால் பழையன மீண்டும் புகுந்தன! காலம் மாறிப் போச்சு; பழமொழியும் மாறிவிட்டது!

எல்லைச் சண்டையில் பழங்கால ஏடுகளைச் சாட்சிக்கு அழைப்பது நம் அண்டையிலுள்ள ஆந்திரருக்குப் பிடிக்கவில்லையாம்! வடவேங்கடமும், தென்குமரியுமே கன்னித் தமிழ் நாட்டின் எல்லைகள் என்று மிகமிகத் தொன்மையான தமிழ் நூல்கள் வர்ணிக்கின்றனவே?

ஃ ஃ ஃ

உணவைப்பற்றி இனிக் கவலையே தேவையில்லை. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் உற்பத்தி லட்சியம் பத்து கோடி டன்னா அல்லது பதினொரு கோடி டன்னா? இது ஒன்றுதான் முடிவு செய்ய வேண்டிய விஷயம். உணவுக்கே முதலிடம்; கர்ப்பத்தடைக்கு அல்ல என்று பிரதமரும் கூறிவிட்டார். நமது அரசாங்கத்துக்குத் தீர்க்க தரிசனம் இல்லையென்று பழிக்கமுடியுமா? குடும்ப விருத்திக் கட்டுப்பாட்டில் நாட்டமுள்ள சீமாட்டி சீறலாம். ஆனால், பட்டினியைப் போக்கப் பாதிரியாரும் வழி காட்டிவிட்டார். வருடந்தோறும் இரண்டு கோடி மக்களின் உணவைக் குரங்குகள் அழிப்பதைத் தடுத்து விட்டால் போதுமாம். சபாஷ்! வருங்கால சந்ததியைக் கட்டுப்படுத்துவதை விட மனிதனின் மூதாதையரைக் கட்டுப்படுத்துவதே விசேஷமல்லவா? அதிக சிரமமில்லாமல் வருஷத்துக்கு 90 லட்சம் டன் உணவுத் தானியத்தை மிச்சப்படுத்த ஆராய்ச்சிக் கழகமும் அழகான யோசனை சொல்லிவிட்டது. சாணத்தை எரிப்பதற்குப் பதிலாக எருவாக உபயோகித்தால் போதும். புதுமையான கருத்தல்ல. இருந்தாலும் பிரமாதமான ஆராய்ச்சி செய்து கூறியிருக்கிறார்கள். ரொம்ப சரி. பாரதத்தில் பெரும்பான்மையான ஏழைகள் அன்றாடம் ஒருவேளை அடுப்பை மூட்டுவதையும் நிறுத்தவேண்டும்! அவ்வளவு

தானே? வயற்கரையிலேயே தானியத்தைக் களவாடிக் கழுத்தறுக்கும் எலிகளை வேட்டையாடவும் விசேஷமான திட்டம் தயாராகி வருகிறதாம். நமக்கினி பயமேது?

ஆற அமர யோசித்து, இரண்டு பெரிய திட்டங்களைத் தீட்டி அமுலாக்கியும் இன்னும் நாம் அந்நியரிடம் கையேந்தி நிற்கிறோமே? அது வேறு விஷயம். இரண்டாவது திட்ட இலக்கை எட்டிப் பிடிக்கவே இன்னும் ஐந்தாண்டுகளாகும் என்று மதிப்புப் போடுகிறார்களா? அந்த நிபுணர்களுக்கெல்லாம் [illegible]யந்தான் பிடித்திருக்கிறது! ஆ[illegible], பார் புகழும் பண்டிதரே மனம் வெ[illegible]புகிறாரே? முதல் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து இதுவரை விவசாய வளர்ச்சிக்காக 900 கோடி ரூபாய் கொட்டியமுதும் உணவு உற்பத்தி எதிர்பார்த்த அளவு பெருகவில்லையாம்; மிகுந்த மனவருத்தத்துடன் ஒப்புக் கொள்கிறார் பிரதம மந்திரி. சமீப காலத்தில் எந்த நாட்டிலும் விவசாயத்திற்காக இவ்வளவு ஏராளமான பணம் செலவிட்டதில்லை. ஆயினும் பலனைக் காணோம். ஏன்? எங்கே கோளாறு? பணமெல்லாம் எங்கே போயிற்று? பெருச்சாளிகள் விழுங்கிவிட்டனவா? மேலே இருப்பவர்கள் நல்ல விதி முறைகள் வகுத்தும் கீழேயுள்ளவர்கள் அவற்றை நாணயமாக அமுலாக்கவில்லையா? மென்று விழுங்குவதில் பயனில்லை. கண்டிப்பாக, கடுமையாக நடவடிக்கையெடுக்க நடுக்கம். சுயநலமிகளின் அட்டகாசம் தெரிந்திருந்தும் அவர்களைத் தட்டிக் கேட்கத் தடுமாற்றம். உற்பத்தியாவது தானியமல்ல; திட்டங்களே. ஆனால், இதிலும் ஒரு சௌகரியம். ஜாகர்த்தா மகாநாடு மருண்டாலும் நாளடைவில் ஜனப் பெருக்க அபாயம் தானே ஒழிந்து விடும். குடும்ப விருத்திக் கட்டுப்பாடே தேவைப்படாது! எல்லா பிரச்னைகளும் தீர்ந்துவிடும்!

—[illegible]ாட்டை:

# தில்லிநகர்த் தபால்

★

## முருகன் விழா

முருக பிரானின் சஷ்டித் திருநாள் உரிய சம்பிரதாயப் பாணியில் இவ்வாண்டும் குதூகலமாய் கொண்டாடப்பட்டது. ஐந்தாறு நாட்களாகவே லட்சுமிபாய் நகர் தனிச்சோபையுடன் நடந்தேறிற்று. உபன்யாசங்கள் ஹரிகதா காலட்சேபங்கள், பஜனைகள் இசை நிகழ்ச்சிகள், பிரசாதம் வழங்குதல் முருகனின் பவனி, நாதஸ்வர இசை முதலானவை எல்லோரையுமே தமிழகமோ என்று சற்று திகைக்கவே அடிக்கும்.

திருச்சேறை நாதஸ்வர இசைமணி டி. வி. எஸ். சிவசுப்ரமண்ய பிள்ளை—நாகை கே. ஏ. கோவிந்தராஜு பிள்ளை நாதஸ்வரமும் யாழ்ப்பாணத்து சின்னராஜா கிவளூர் முத்துவீரப்பிள்ளை—ஜயராமப் பிள்ளை தவிலும் ஜமாய்த்து விட்டன. கரோல்பாக் சௌத் இந்தியன் ஹோட்டல் மாடியிலிருந்தும் அவர்கள் அற்புதமான இசை விருந்தளித்து மகிழ்வித்தார்கள் தில்லியைப் பொறுத்தவரை ஹரிகதை சொல்லும் கலை மேன்மேலும் வளர்ந்து வருகிறதென்றே சொல்லவேண்டும். இவ்வகையில் அமெச்சூர்காரர்கள், தொழிலில் இருப்பவர்களுக்கே உரிய லாவகம் முதலானவற்றைக் காட்டினர். ஏ. வி. குப்புசாமி—சுப்பராமன்—கே. எஸ். சுப்ரமண்யன் கோஷ்டியும் வி. ராமச்சந்திர பாகவதர்—பஞ்சு—பட்டாபி கோஷ்டியும் அழகுற ஹரிகதை நிகழ்ச்சியை நடத்தின. எல்லோருடைய ஒருமனதான பாராட்டுதலைப் பெற்றான், [illegible]ல வசந்தவல்லியாக வந்த குமாரி ஹேமா சுந்தரராஜன், தேர்ந்த நர்த்தகி போலவே அநாயசமாக ஆடிக் காட்டினான், குமாரி ஜயலட்சுமி ராமன், பிரேமா ராமச்சந்திரன், சியாமளா பாலகிருஷ்ணன், கல்யாணிகிருஷ்ணன் ஆகியோர் தோழிகளாக வந்து தத்தம் கலை ஈடுபாட்டைப் பறைசாற்றினர். குமாரி வி. எஸ். கோமதி நல்ல ஞானமும் சாரீரமுமுள்ளவர் என்பதை அவர் பாடிய பதங்கள் நன்கு எடுத்துக் காட்டின. வழக்கம்போல ஸ்ரீமதி காமாட்சி குப்புஸ்வாமி அழகுறப் பாடினார் சப்ரூ மாளிகையில் சென்ற ஞாயிறு ஒரு 'ஸீட்'கூட காலியில்லை என்றால் மக்கள் தொகையைக் கண்டு கொள்ளலாம். பல ஐரோப்பியர்களும் கூடியிருந்தார்கள். இந்த நிகழ்ச்சி மொத்தத்தில் நன்றாயிருந்தது.

தில்லியில் சமீபகாலமாக நாடகக் கலை ஆர்வம் என்னவோ பிரமாதமாய் தலைதூக்கியுள்ளது. சென்ற சனிக்கிழமையன்று கந்தர் கலாமன்றத்தின் சார்பில் கலைநிகழ்ச்சி ஒன்றை நடத்திக் காட்டியது. மத்ய அரசாங்கத்து நிதி இலாகாவின் உதவி காரியதரிசி ஸ்ரீ பாலகிருஷ்ணய்யர் தலைமை வகித்து ஆதரவளித்தார். பல இளைஞர்கள் தமக்கு உள்ள செல்வாக்கையும் கலை ஆர்வத்தையும் பாராட்டினார்கள்.

## சிற்றம்பலக் குறவஞ்சி

தலைநகரில் கடந்த பத்தாண்டு காலமாக மிக வெற்றிச் சிறப்புடன் நடனக் கலையில் பணியாற்றிவரும் நாட்டியக் கலாலயத்தினர் தமது நூல் நிலைய உதவிக்கென நடன, நாடக நிகழ்ச்சி ஒன்றை நடத்திக் காட்டினர். சென்னையில் பிரபல நடன ஆசிரியரான ஸ்ரீ கே என். தண்டாயுதபாணி பிள்ளை இயற்றிய இந்த நாட்டிய நாடகம் சிறப்பானது. பார்வதி பரமசிவன் வாழ்க்கையின் சிறு சம்பவம்பற்றிய கதையை ஆதாரமாகக் கொண்டது. இறைவனோடு நாட்டியத்தில் போட்டியிட்ட தேவி கர்வபங்கம் அடையும் வகையில் வசந்தவல்லியாக பூமியில் வந்து இறைவனையே சதா காதலித்துக் கொண்டிருக்கிறாள். குறி சொல்லும் குறத்தி ஒருத்தியின் தூண்டுதலின் பேரில் வசந்தவல்லி சிதம்பரம் சென்று சிவனை அடையுமாறு கூறுகிறாள். தில்லையில் சிவபிரானுடன் சேர்ந்து நடனமாடுகிறாள் தேவி. இதைச் சிறப்புற நாட்டிய நாடகமாகியிருக்கிறார்கள்.

கலாலயத்தின் தலைவி ஸ்ரீமதி கிரிஜா பக்கிரிசாமி பார்வதியாகவும் வசந்தவல்லியாகவும் வருகிறார். குறத்தியாய் வந்து பிரமாத அப்ளாஸ் வாங்கிய குமாரி பிரேமா கணபதி சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவள், பொருத்தமான பாகம். ஆர்வப் பெருக்குடன் ஆடினாள். வட நாட்டினாயினும் குமாரி பிரமீளா சுந்தரராஜன், சிவன் பாகத்தை ஏற்று வெகு சுச்சிதமாக ஆடி விழாவின் மணியான நிகழ்ச்சியாக விளங்கியது மணி கிருஷ்ணசாமியின் அருமையான இன்னிசை. வசந்தா கோபாலனின் வயலினும், கே. வி. கிருஷ்ணமூர்த்தி மிருதங்கமும் நன்கு அமைந்திருந்தன. தஞ்சையைச்சேர்ந்த வேங்கடேசன் சுச்சேரியும் ராமமூர்த்தி, ராமசுப்பு ஆகியோரின் பஜனைகளும் உபன்யாசமும் நாகசுப்ரமண்யத்தின் கருத்துச் செறிந்த பிரசங்கமும் குறிப்பிடத்தக்கவை.

தென்னாட்டு திரையுலக நட்சத்திரங்கள் பல, இப்போது தில்லியிலும் ஆக்ராவிலும் குழுமியுள்ளன. 'ஜீவ பூமி', 'பாவை விளக்கு' படப் பிடிப்பிற்காக சிவாஜி கணேசன், ஸ்ரீராம், வி. கே. ஆர்., சாரங்கபாணி, எம். ஆர். ராதா, குலதெய்வம் ராஜகோபால், சரோஜாதேவி முதலானோர் வந்துள்ளனர். தில்லியில் அகிலனது கதாநாயகனும் கதாநாயகியும் பல்வேறு ஸ்தலங்களையும் சுற்றிப் பார்த்து மகிழும் காட்சிகள் பல எடுக்கப்பட்டன. புது தில்லி ரயில்வே நிலையத்தில் படப்பிடிப்பை மக்களின் அளவுகடந்த அன்பானது பெரும் பிரச்னையாக்கிவிட்டது.

---

ஆடவருக்கு ஆக்கமூட்டுகிறான் நல்ல பெண்மணி; சிரத்தையூட்டுகிறா[illegible] சிந்தையைக் கவர்பவன்; பிரப[illegible] கிறான், பேரழகு படைத்தவள். ஆயினும் அனுதாபமூட்டுபவளே அவனை அடைகிறான், இறுதியில்.

—பிரெஞ்சு பழமொழி.

★


# புத்தகம் படிக்கப் படிக்க

## அறிவு வளரும்....

உலகிலேயே அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தோர் எழுதி வைத்த அரிய விஷயங்கள் பாமரரும் படிக்கும்படி புத்தகங்களாக வெளிவந்துள்ளன. ஒரு நல்ல புத்தகத்தில் அடங்கியவிஷயங்கள் உண்மையாகவோ, கற்பனையாகவோ எப்படியிருந்தாலும் அதன் கருத்து உங்கள் சிந்தனு சக்தியைத் தூண்டி அறிவை வளர்க்கும். இன்றே ஒரு நல்ல புத்தகம் படித்து வாழ்வில் சிறப்பும், நிறைவும் பெருக!

## இப்புது முறையில் படியுங்கள்— சிறந்தவற்றை வாசியுங்கள்

இந்நாட்டு இலக்கியங்களையும் அகில உலகப் புத்தகங்களையும் உங்கள் சொந்த மொழியிலேயே வாசிக்க ஒரு வாய்ப்பு. விலைகளும் உங்கள் சக்திக்கு உட்பட்டவைகளே. தென்மொழிகள் புக் டிரஸ்ட் முதன்முறையாக உங்களுக்கு உலகிற் சிறந்த புத்தகங்களைத் தமிழில், பாமரரும் புரிந்து மகிழத்தக்க எளிய நடையில் உயர்தரமாக அச்சிட்டு மலிவு விலைகளில் வழங்குகின்றனர்.



இந்தக் கூப்பனை

இந்த புத்தகங்களை உள்ளூர் புத்தக வியாபாரியிடம் வாங்குங்கள். 6, விக்டோரியா கிரஸண்ட், எழும்பூர், சென்னை-8, என்ற

## சமீபத்தில் வெளியான இப்புத்தகங்களை வாசித்தீர்களா?




அறிவுக் களஞ்சியத்தின் அடையாளச் சின்னம்

## தென் மொழிகள் புக் டிரஸ்ட்,

**3, வீட்கிராப்ட் ரோட், நுங்கம்பாக்கம், சென்னை-31.**

எமது எதிர்கால வெளியீடுகளின் விவரங்களை உடனுக்குடன் அறிய விரும்புவோர் இந்தக் கூப்பனைப் பூர்த்திசெய்து அனுப்புக. எமது நிரந்தரப் பட்டியலில் உங்கள் பெயரை பதிவு செய்துகொள்வோம். இதனால் உங்களுக்கு எவ்விதப் பொறுப்பும் ஏற்படாது.

**இப்பொழுதே அனுப்புங்கள்**

தயவுசெய்து உங்கள் புத்தகங்களின பட்டியலை இலவசமாக எனககு அனுப்புங்கள். எதிர்கால வெளியீடுகளைப பற்றியும் அவ்வப்பொழுது அறிவிககவும். இதனல் எனக்கு எவ்விதப் பொறுப்பும் ஏற்படாது.

பெயர்...............................

விலாசம்...............................

...............................

அல்லது தென் மொழிகள் புக் டிரஸ்ட், மார்க்கெட்டிங் இலாகா, விலாசத்துக்கு நேராக எழுதி வரவழைத்துக் கொள்ளுங்கள்.



புதிய பொறுப்பு

# நாடகமும் நாட்டியமும்

## முகூர்த்த நாள்

கற்பகா அமெச்சூர்ஸார் சமீபத்தில் அபிராமபுரம் வெங்கடரமண எலிமெண்டரி ஸ்கூல் தியேட்டரில் அபிராமபுரம் அசோஸியேஷன் ஆதரவில் 'முகூர்த்த நாள்' நாடகத்தை நடித்தனர்.

மோகனின் அன்புத் தங்கை சுந்தரி ராஜாவைக் காதலிக்கிறாள். ராஜாவோ கல்லூரி மாணவி (மாமன் மகள்) சுகுணாவைக் காதலிக்கிறான். விஷயமறிந்த மோகன் எப்படியும் தன் தங்கைதான் ராஜாவை மணக்கப் போகிறாள் என்று சபதம் செய்கிறான். வியாபாரம் நடத்த சுகுணாவின் தந்தைக்கு மோகனே பணம் கடன் கொடுத்து, தன் சூழ்ச்சியாலேயே வியாபாரத்தைக் கவிழ்த்து அவர் கடன் திருப்பித்தர முடியாத நிலையில் ராஜா–சுகுணா திருமணத்துக்கு தடை போடுகிறான். கடைசியில் நியாயம் வெல்ல, சூழ்ச்சி தோல்வி அடைகிறது. யாருக்காக அதையெல்லாம் செய்தானோ அந்த சகோதரியையே அவன் கைத்துப்பாக்கி சுட்டு வீழ்த்துகிறது. மனமுடைந்த மோகன் தங்கையின் பிரேதத்தை சுமந்து கொண்டு திரையுள் மறைகிறான். இது தான் கதைச் சுருக்கம்.

பொதுவாகக் கதை அமைப்பில் புதுமை ஏதும் இல்லாவிட்டாலும் இச் சிறிய கதை மூன்று மணிநேரம் அலுப்புத்தட்டாமல் நடிக்கப்பட்டால் அது பாராட்டுக்குரியதே.

நடிப்பில் முதலிடம் பெறுபவர் மோகனாக நடித்த ராம பூஷணம். கடைசி காட்சியில் இவரது நடிப்பு எளிதில் மறக்கக்கூடியதன்று. நல்ல வாய்ப்பு அளிக்கப்பட்டால் எதிர்காலத்தில் இவர் ஒரு சிறந்த நடிகராக விளங்கக் கூடும்.

'பாகவத'ராகத் தோன்றிய பாலுவின் நகைச்சுவை விருந்து தரமாக இருந்தது. கதாநாயகனாக வந்தவர் சுமார்.

'சுகுணா' ராஜேஸ்வரி தமக்குள்ள அனுபவ ஆற்றலை சீராக வெளிக் காட்டினார். மற்றும் காந்திமதி, ராஜகோபால் முதலியவர்களும் அந்நாடகத்தில் பங்கு கொண்டனர்.

காட்சி ஜோடனைகள் கவர்ச்சிகரமாக இல்லை.

❀ ❀ ❀

ஸ்ரீ லக்ஷ்மி தியேட்டர்ஸ் ஆதரவில் குமாரி மல்லிகா தியாகராயநகர் வாணி மஹாலில் பரதநாட்டியமும், கீழ் திசை நடனங்களையும் நவம்பர் 14ந்தேதி அழகாக ஆடிக் காட்டினார். தஞ்சை ஜில்லா கோமல் கிராமத்திலிருக்கும் ஸ்ரீ விநாயகர், எல்லையம்மன்



நவம்பர் 14உ. தியாகராய நகர் கான விகாரில் ஸ்ரீ பி. எஸ். சோம சுந்தரத்தின் புதல்வி எஸ். மாலதியின் நடன அரங்கேற்றம் திரு. கொத்தமங்கலம் சுப்புவின் தலைமையில் நடந்தது. திரு. 'சாண்டில்யன்' முதலானோர் மாலதியின் நடனத்தைப் பாராட்டினர்.




கோவில் ஜீர்ணோத்தாரண நிதி உதவிக்காக அன்றைய திரை வசூல் அனுப்பி வைக்கப்படும்.

—ஸஞ்சாரி.

## பாண்டியன்மாதேவி

சாமிநாத கான சபாவினர் 'பாண்டியன் மாதேவி' என்ற சரித்திர நாடகத்தை சென்ற 7ந் தேதியில் ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடித்தார்கள். சமணப் போராட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு பின்னப்பட்ட இந்த நாடகத்தில், பழம் பெரும் நடிகர்களான பி. பி. ரங்காச்சாரி, செருகளத்தூர் சாமா, எம். ஆர். சாமிநாதன் முதலியோரும், தற்கால நாடக மேடையில் சிறப்புற நடித்துவரும் ஓ. ஏ. கே. தேவரும் பங்கு கொண்டு நாடகத்தைச் சிறப்பித்தார்கள். இதில் கதாநாயகனைத் தோன்றிய எஸ். ஜீ. சுப்பையா தியாகராஜ பாகவதரைப் போலவே நடை, உடை, பாவனைகளைக் கொண்டிருந்ததோடு, அம்மாதிரியே பாடவும் முயற்சி செய்தார். சமயப் போரினால் விளையும் தீமைகளை விவரிப்பதை முன்னிட்டு இந்த நாடகத்தைப் பாராட்டுகிறோம்.

## புலித்தேவன்

பிரபல நாவலாசிரியர் 'தமிழ்வாணன்' எழுதிய 'புலித்தேவன்' நாடகத்தை புலித்தேவன் நாடக மன்றத்தார் சென்ற 18–ந் தேதியன்று மிகச் சிறப்பாக நடித்தார்கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்தையும், ஆற்காட்டு நவாபுகளின் சதிச் செயல்களையும் எதிர்த்துப் போராடிய தமிழ் வீரன் புலித்தேவனாகத் தோன்றிய ஜெமினி சம்பத், தமது பாகத்தைத் திறம்பட நடித்தார். புலித்தேவன் மகன் புலிசங்கரன் காதலியாகத் தோன்றிய ஜானகியின் தோற்றம் மட்டுமின்றி நடிப்பும் நன்றாயிருந்தது. மற்றவர்களின் நடிப்பும் பாதகமில்லை. வசனம் விறுவிறுப்பாக இருந்தாலும் காட்சிகள் துரிதமாக மாறியதாலும் நாடகத்தை நன்றாக ரசித்துப் பார்க்க முடிந்தது.

★



# மூடிக்கிடக்குதே உன் நெஞ்சம்



அறையின் வெளியே எவரோ நடமாடுவதைப் போலிருந்தது.

பூமகள் கட்டழகியைப் பார்த்துப் பேசாமலிருக்கும்படி சாடை காட்டிவிட்டு எழுந்து சென்று, கதவருகில் நின்று கவனித்தாள். கதவுக்கு அப்பால் வெளியே எவரோ நடமாடும் ஓசை தெளிவாகக் கேட்டது!

தேவமணிதான் வந்துவிட்டானோ?

தேவமணி வந்திருந்தால் கதவின் வெளித்தாழ் திறந்திருப்பதைக் கண்டுபிடித்து விடுவானே! பூமகள் வெளியே போய்வந்தது அவனுக்குத் தெரிந்துவிடுமே!

பூமகள் அச்சத்துடன் சிறிது நேரம் அப்படியே நின்றாள். அவள் மனம் எண்ணியது: 'தேவமணிக்கு அவன் அன்னை எப்படியும் உண்மையைச் சொல்லிவிடுவாள். கிழவியைச் சரிக்கட்ட முடியாது! நடக்கிறது நடக்கட்டும்!'

அவள் இப்போது துணிவுடன் கதவைத் திறந்து பார்த்தாள். இலேசாகத் திறந்து, கதவின் இடுக்கில் நின்றுகொண்டு பார்த்தாள். அவர்கள் அறையைக் கடந்து சென்ற உருவம்—

கிழவிதான்!

விளக்கை அணைத்து விட்டுப் படுத்துவிட்டிருப்பாள் கிழவி என்று எண்ணியிருந்தாள் பூமகள். ஆனால் அவள் படுக்கவில்லையே! இருட்டில், அந்தப்

புரட்சி எழுத்தாளர்
தமிழ்வாணன்

பெண்கள் இருவரும் வெளியே போகாமல் அவர்களைப் பாது காப்பதுபோல் அல்லவா உலவிக்கொண்டிருக்கிறாள்!

கிழவி, கூடத்தைக் கடந்து, வெளிக் கதவைத் திறந்து கொண்டு வாயிற்படியிலேயே உட்கார்ந்து விட்டாள்! அவள் அங்கிருந்து அசைவதாகக் காணோம்!

பூமகள் திரும்பிக் கட்டழகியைப் பார்த்தாள்.

'என்ன அக்கா? தேவமணி வந்துவிட்டாரா?'

'இல்லை, அந்தக் கிழவிக்கு இரவில் தூக்கம் வருவதில்லையோ, என்னவோ! இருட்டில் இங்கும் அங்கும் உலவிக்கொண்டிருக்கிறாள். தெருக் கதவைத் திறந்து கொண்டு வாயிற்படியிலேயே பேயைப்போல் உட்கார்ந்து விட்டாள்!'

'இப்போது என்ன செய்யலாம்?'

'புறக்கடை வழியாக நாம் வெளியே போய்விடலாம்!'

'புறக்கடைப் பக்கம் வழி இருக்கிறதா அக்கா?'

'இருக்கிறது. தேவமணி புறக்கடைப் பக்கமாகத்தான் வீட்டுக்குள் வந்து, மீண்டும் வெளியே வந்தார்!'

'புறக்கடைப் பக்கமாகப் போனால் அச்சமாக இருக்காதா அக்கா? புறக்கடைக் கதவு எங்கே இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லையே!'

'இங்கே இருப்பது அதைவிட அச்சமாக இல்லையா? துணிந்து இதைவிட்டு வெளியேறுவது தான் சிறந்த வழி!'

கட்டழகி எழுந்து கொண்டாள். அவள் எழுந்ததும் காலணியைத் தேடினாள்.

'காலணி வேண்டாமடி! காலணி அணிந்துகொண்டால், நாம் நடக்கும்போது அது ஓசை செய்யும்!'

கட்டழகி தயங்கினாள். கல்லிலும் முள்ளிலும் எப்படி நடப்பது?

'இப்போது நான் நடந்து போய்விட்டு வரவில்லையா? புறப்படு!' என்று சொல்லி, அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வந்தாள் பூமகள். அறையின் வெளியே வந்ததும் இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அங்கிருந்த கிழவியின் முதுகு நன்றாகத் தெரிந்தது!

'கிழவி வாயிற்படியில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால், எவரையோ எதிர்பார்த்து அவள் உட்கார்ந்திருப்பதைப்போல் இருக்கிறது!' என்றாள் கட்டழகி.

'தேவமணி வெளியே போயிருப்பதைக் கண்டுபிடித்து விட்டாளோ என்னவோ? அவள் அங்கேயே உட்கார்ந்திருக்கட்டும்!' என்று சொல்லிவிட்டு, பூமகள் அறையின் கதவை மெல்லச் சாத்தி வெளிப்பக்கம் தாழிட்டாள்.

'வெளியே எதற்குத் தாழிடுகிறாய்? தேவமணி வந்ததும் நாம் வெளியே போயிருக்கிறோம் என்று தெரிந்து கொள்வாரே!' என்று கேட்டாள் கட்டழகி.

'அவர் போகும்போது நம் அறையின் வெளித்தாழைப் போட்டுவிட்டுப் போயிருக்கிறார்! நான் வெளியே போயிருந்தது அவருக்குத் தெரியாது! இப்போது வந்ததும், தாழ் போட்டபடியே இருந்தால், நாம் அறைக்குள்ளேயே இருப்பதாக தேவமணி எண்ணிக்கொள்வார்!'



'கிழவி நீ வெளியே போய் வந்ததைச் சொல்லிவிட மாட்டாளோ!'

'கிழவி சொல்லும் வரையிலாவது உண்மை தெரியாது அல்லவா?'

கட்டழகி அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. அவள் பூமகளின் கையைப் பிடித்துக் கொண்டு குழந்தையைப்போல் அவளைத் தொடர்ந்து நடந்தாள்.

பூமகள் மெல்ல நடந்து புறக்கடைக் கதவைக் கண்டுபிடித்தாள். கதவு மூடிக்கிடந்தது. அதைத் திறந்து பார்த்தாள் அவள். கதவைத் திறந்ததும், குளிர்ந்த காற்று உள்ளே வந்தது!

தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தாள் கட்டழகி. அவளுடைய தலையுடன் தலை இடிபடும்படி பூமகள் பார்த்தாள். பிறகு கட்டழகியின் தலையில் தட்டி, தனக்குப் பின்னால் நிற்கும்படி சொல்லிவிட்டு, பூமகள் எல்லாப் பக்கங்களிலும் பார்த்தாள்!

கண்ணுக்கு எட்டியவரையில் எந்த உருவமும் நடமாடுவது தெரியவில்லை!

'மெல்ல என் பின்னாலேயே வா' என்று சொல்லி, அவளை இழுத்துக்கொண்டு வெளியே வந்தாள் பூமகள்.

கட்டழகி நின்று புறக்கடைக் கதவைச் சாத்தினாள். அவள் கதவைச் சாத்தியபோது—

படாரென்று ஓசை கேட்டது!

'கதவை மெல்லச் சாத்தக் கூடாதா?' என்று கட்டழகியை அதட்டினாள் பூமகள்.

'எவருக்கும் கேட்காது! கிழவி தான் முழுச் செவிடாயிற்றே?'

'கிழவிக்குக் கேட்காவிட்டாலும், தேவமணி வந்துகொண்டிருந்தால், கதவு சாத்திய ஓசை நன்றாக அவருக்குக் கேட்கும்!'

'தேவமணியைத்தான் காணோமே!'

'பேசாமல் வா.'

குளிர்ந்த காற்று உடலின்மீது பட்டதும் பூமகள் சேலைத் தலைப்பை எடுத்து உடலை இறுகப் போர்த்திக்கொண்டாள். கட்டழகியும் சேலைத்தலைப்பால் உடலைப் போர்த்திக்கொண்டு, பூமகளின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நடந்தாள்.

காற்று வலுத்தது.


இருவரும் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு, மங்கிய நிலவொளியில் நடந்தபோது, வானத்திலிருந்த நிலவு மேகத்திரையின் மறைவில் ஒளிந்து ஒளிந்து எட்டிப் பார்ப்பதைப் போலிருந்தது. காற்று வலிவுடன் வீசத் தொடங்கியதும், வானத்தில் தேங்கிக் கிடந்த மேகக் கூட்டங்களும் ஓடத் தொடங்கின!

'இந்தக் காற்றிலே சேலையே நம்மைவிட்டுப் பறந்துவிடும் போலிருக்கிறதே!' என்றாள் கட்டழகி!

'வெளியே வந்துவிட்டோம். இனிப் புயலே வந்தாலும் திரும்பிப் போகக்கூடாது! விரைந்து நட!' என்றாள் பூமகள்.

இருவரும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். புயல் அடிப்பதைப்போல் காற்று வீசிக் கொண்டே இருந்தது. காற்று வீசிய எதிர்ப்பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு இருவரும் நடந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

பூமகளின் கருமைக் கண்கள் தேவமணி வருகிறானா என்று பார்த்துக்கொண்டே இருந்தன. அவள் ஏற்கனவே அவனைத் தொடர்ந்து சென்று திரும்பி வந்திருந்ததால், அவன் எந்தப்



பக்கத்தில் வருவான் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது!

சிறிது தொலைவு நடந்ததும், தொலைவில் மலைச்சரிவில் ஓர் உருவம் தள்ளாடிக்கொண்டு வருவதைப் பார்த்தாள் பூமகள்.

'கட்டழகி, அதோ வருவது தேவமணியாகத்தான் இருக்க வேண்டும்!'

'அவர் நம்மைப் பார்த்துவிட்டால்?'

'இப்படி வந்துவிடு. அவர் எதிர்க்காற்றில் தள்ளாடிக் கொண்டு நடந்து வருகிறார்! நம்மைப் பார்த்திருக்க மாட்டார். நாம் இந்த மொட்டைப் பாறையின் பக்கம் ஒளிந்துகொள்வோம்!'

'ஆகட்டும் அக்கா!'

இருவரும் பதுங்கிப் பதுங்கிச் சென்று, சிறிது தொலைவிலிருந்த மொட்டைப் பாறையின் பக்கத்தில் ஒளிந்து கொண்டார்கள். அவர்கள் தலையை மட்டும் தூக்கி மெல்லப் பார்த்தார்கள்.

தொலைவில் வநத உருவம், அவர்கள் பதுங்கியிருந்த பக்கம் நெருங்கி வந்துகொண்டிருந்தது!

'அக்கா!'

'என்னடி?'

'எனக்கு அச்சமாக இருக்கிறது! இந்தமாதிரி ஓர் அச்சம் தரும் இரவை இதற்குமுன் நான் கண்டதில்லை!'

பூமகள் சிந்தனையுள் ஆழ்ந்தாள். கட்டழகி சொன்னது உண்மைதான். நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த அவளை எழுப்பி, நடந்தவைகளை அப்படியே சொன்னது தன் தவறுதான் என்பதை உணர்ந்துகொண்டாள், அவள்! ஆனால்—

அவளிடம் ஒன்றும் சொல்லாமல், இனிமேலும் அந்த வீட்டிலேயே இருந்தால், அவர்கள் உயிருக்கே ஆபத்து வந்தாலும் வரக்கூடும் என்பதை அறிந்திருந்தாள், பூமகள்.

அந்த உருவம் நெருங்கிக் கொண்டிருந்தது. இப்போது தானா வானத்தில் நிலவு, மேகத் திரையினால் தன் முகம் முழுவதையும் மறைத்துக் கொள்ள வேண்டும்!

அண்மையில் நடந்து சென்ற அந்த உருவத்தை இருவரும் கூர்ந்து கவனித்தார்கள். முகம் சரியாகத் தெரியவில்லை! ஆனால்—

அசைப்பில், நடையில் பார்ப்பதற்கு தேவமணியைப் போலத்தான் இருந்தது!

'தேவமணிதான் அக்கா!' என்றாள் கட்டழகி.

அவள் வாயைப் பொத்தினாள் பூமகள்.

அந்த மனிதன் எதிர்காற்றைக் கிழித்துக்கொண்டு மலைச் சரிவில் ஏறிப்போய்க்கொண்டிருந்தான். அவன் தொலைவில்



சென்று மறையும்வரையில் இருவரும் எழுந்திருக்கவே இல்லை!

'அவர் மறைந்து விட்டார். நாம் போகலாமே!' என்றாள் கட்டழகி.

இருவரும் எழுந்து நடந்தார்கள்.

காற்று சிறிதும் அடங்கவே இல்லை.

கட்டழகியை அணைத்துக் கொண்டு பூமகள் நடந்துகொண்டிருந்தாள்.

மலைச்சரிவின் கீழே இருவரும் வந்துவிட்டார்கள்.

'கட்டழகி அதோ பார்!'

அவள் கையைக் காட்டிய பக்கம் பார்த்தாள் கட்டழகி.

'ஆமாம் அக்கா, அங்கே ஒரு வீடு தெரிகிறது!'

'அந்த வீட்டில்தான் அடிபட்ட மனிதன் இருக்கிறான்!'

அந்த வீட்டை நெருங்க நெருங்கக் கட்டழகிக்கு உடல் நடுக்கம் கண்டது. பூமகளுக்கும் நடுக்கம்தான்!

'அக்கா!'

'என்னடி?'

'அவன் நம்மை ஒன்றும் செய்ய மாட்டானே!'

'நான் அவனிடம் பேசுகிறேன். நீ பேசாமல் இரு. பெண் என்றால் பேயும் பரிவு காட்டும் என்பார்கள்!'

இருவரும் வீட்டை நெருங்கி விட்டார்கள். சன்னல் பக்கமாக முன்பு தெரிந்த வெளிச்சம் இப்போது தெரியவில்லை!

'முன்பு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இப்போது விளக்கைக் காணோமே!' என்றாள் பூமகள்.

'விளக்கு எங்கே எரிந்து கொண்டிருந்தது?'

'சன்னல் பக்கமாக வெளிச்சம் வந்துகொண்டிருந்தது! இப்போது அந்த வெளிச்சத்தைக் காணோமே!'

'சரியாகப் பார் அக்கா!'

வீட்டின் அருகிலேயே வந்து விட்டார்கள் அவர்கள். முன்பு விளக்கு வெளிச்சம் தெரிந்த அந்தச் சன்னல் மூடப்பட்டிருந்தது!

'சன்னல் மூடிக்கிடக்கிறதே!' என்றாள் கட்டழகி.

மூடிக்கிடக்கிறதே என்றதும், 'தேவமணி, மூடிக்கிடக்கிறதே உன் நெஞ்சம்!' என்ற நினைவு படர்ந்தது பூமகளின் பூப் போன்ற நெஞ்சத்தில். இருந்தாலும் இதைப் பூமகள் உடனே மறந்து—

'சன்னலைத் திறந்து பார்ப்போம்' என்று சொல்லிக் கொண்டே, சன்னலின் பக்கமாகச் சென்று சன்னலைத் திறந்து பார்த்தாள் பூமகள். அதைத் திறக்க முடியவில்லை! பூமகள் திரும்பிக் கட்டழகியைப் பார்த்து, 'உள் பக்கம் தாழிட்டுக் கொண்டிருக்கிறான்! வாயிற் கதவைத் திறந்துகொண்டு உள்ளே தான் போவோமே!' என்றாள்.

'சரி' என்றாள் கட்டழகி.

அவர்கள் இருவரும் சுற்றிக் கொண்டு, அந்த வீட்டின் முன்புற வழியைக் கண்டுபிடித்தார்கள். வீட்டின் திண்ணைகளில் இருபுறங்களிலும் சிறிதுகூட இடம் விடாமல் வைக்கோலைப் போட்டிருந்தார்கள் எவரோ!

கதவைத் திறந்தாள் பூமகள்.

அந்தக் கதவு, ஒரு கல் கொலைக்கு ஓசை கேட்கும்படி ஓசை போட்டுக்கொண்டு திறந்து கொண்டது! அந்தக் கதவு போட்ட ஓசையைக் கேட்டுக் கட்டழகியும் பூமகளும் அஞ்சினார்கள்!

'மெல்லத் திறக்கக்கூடாதா?' என்றாள் கட்டழகி.

'இந்தக் கதவு என்னையைக் கண்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றனவோ! கதவு கீழே விழாமல் இருந்ததே!'

அங்கிருந்தே இருவரும் கவனித்தார்கள். அப்பால் இருந்த அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த அறையில் உடைந்த நாற்காலிகளும், பழைய ஓட்டை மேசையும் கிடந்தன. கைவிளக்கு மேசை மேல் இருந்தது.

அந்த மனிதன், புது மனிதன் அந்த அறையில்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிப் பூமகள் நடந்தாள். அந்த அறையின்முன் வந்து நின்றாள். அவள் பின்னாலேயே கட்டழகியும் வந்து நின்றாள்.

பூமகள் எட்டிப் பார்த்தாள். உள்ளே—

எவரையும் காணோம்!

கட்டழகியும் எட்டிப் பார்த்தாள்.

எவரையும் காணோமே!

இருவரும் உள்ளே சென்று பார்த்தார்கள்.

அந்த அறையில் தேவமணி கொண்டுவந்த மருந்துப் பெட்டி அப்படியே கிடந்தது. ஆனால்—

வேறு எதையுமே எவரையுமே காணோம்!

அங்கே படிந்திருந்த தூசு சுமார் அரை அங்குல கனத்துக்கு இருக்கும்!

'எங்கே அக்கா அந்த மனிதன்?'

'காணோமே! இந்த அறையில் தான் இருந்தான்!'

'மருந்துப் பெட்டி மட்டும் இருக்கிறது!'

'வெளியே போய் வேறு அறை ஏதாவது இருக்கிறதா பார்க்கலாம்!'

இருவருமே அந்த அறையை விட்டு வெளியே வந்தார்கள். தாழ்வாரத்தை அடுத்து, இடக் கைப் பக்கம் மிகப் பெரிய முற்றம் அமைந்திருந்தது. முற்றத்தின் கோடியில் மற்றொரு பெரிய வழி இருந்தது. முற்றத்தின் ஓரங்களில் வைக்கோல் போர்கள் குவிந்திருந்தன.

'விளக்கைக் கொண்டு வா' என்றாள் பூமகள்.

கட்டழகி ஓடிப்போய் விளக்கைக் கொண்டு வந்தாள். அவர்கள் இருவரும் முற்றத்தில் சுற்றிப் பார்த்தபோது, முற்றத்தின் ஒரு மூலையில் இருந்த ஒரு பெரிய ஷெட்டிற்குள் எட்டிப் பார்த்தார்கள். அங்கே—

வைக்கோல் போர் அடைத்துக்கொண்டிருந்தது. ஆனால், வைக்கோல் போரின் இடுக்கில் பளபளவென்று ஏதோ தெரிந்தது! பூமகள் வைக்கோலை விலக்கிவிட்டுப் பார்த்தாள். உள்ளே—

ஒரு பெரிய கார் நின்றிருந்தது!

மழையில் நனைந்து இன்னும் ஈரமாக இருந்த அந்தக் கார் அவர்களுடைய காரேதான்!

'நம்முடைய கார் அல்லவா இது!' என்று கேட்டாள் தங்கை கட்டழகி.

'ஆமாம், இது நம்முடைய காரேதான்!' என்றாள் அக்கா பூமகள்.

(தொடரும்)

பம்பாய்த் தபால்:

# முயற்சி திருவினையாக்கும் —ஷியாமா

'நல்ல உழைப்பும், விடாமுயற்சியும், கொஞ்சம் அதிர்ஷ்டமும் இருந்தால், எந்தத்தொழிலிலும் வெற்றி கிடைப்பது நிச்சயம்' என்று குமாரி ஷியாமா என்னிடம் அன்றொரு நாள் பேசிக்கொண்டிருக்கையில் சொன்னார். அவர் சொல்லிய உண்மைக்கு உதாரணம் அவரே தான்.

குமாரி ஷியாமா முதன்முதலில் சினிமாவில் ஒரு 'எக்ஸ்டிரா'வாகச் சேர்ந்தார். அப்பொழுது அவருக்கு



வயது ஒன்பது. வருஷம் 1944. இப்போது (1959), பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு, அவர் ஒரு பிரபல நக்ஷத்திரமாகத் திகழ்கிறார். அவருடைய உழைப்பும், விடாமுயற்சியும் தான் அவருடைய வெற்றிக்குக் காரணம்.

குமாரி ஷியாமாவின் உண்மைப் பெயர் குர்ஷீத் அக்தர். அவர் ஒரு சாதாரண முஸ்லீம் குடும்பத்தில், லாகூரில் 1935-ம் வருஷம் பிறந்தார். அவருடைய தந்தை ஒரு சாதாரண பழ வியாபாரியாக இருக்கும்பொழுதே அவர் தம் பெற்றோர்களுடன் பம்பாய்க்கு வந்து சேர்ந்துவிட்டார்.


ஒரு நாள் குமாரி ஷியாமா தம் பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பும் போது, தம் சிநேகிதி ஷஷிகலாவுடன் ஷ்ரீ சவுண்டு ஸ்டுடியோவுக்குச் சென்றார் அங்கே டைரக்டர் ஸ்ரீ ஷௌகத் ஹுஸேன், அச்சமயம் தாம் தயாரித்து வந்த 'ஜீனத்' என்ற படத்தில் ஒரு 'எக்ஸ்டிரா'வாக ஷியாமாவை நடிக்கச் சொன்னார். படத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு சிறு வயதிலிருந்தே இருந்தபடியால், பெற்றோர்களின் அனுமதியில்லாமலேயே அவர் அப்படத்தில் நடிப்பதற்கு ஒப்புக்கொண்டுவிட்டார்.

'ஜீனத்'திற்குப் பிறகு அவருக்குப் படிப்பு ஓடவில்லை. எப்படியோ பெற்றோர்களின் அனுமதி பெற்று, அனேக படங்களில் நடிக்க ஆரம்பித்துவிட்டார். 'ஷீராமதிஜீ' என்ற படத்தில் தான் அவருக்குக் கதாநாயகி பாத்திரம் கிடைத்தது. அப்படத்தில் அவர் மிகவும் அபாரமாக நடித்ததால், அதற்குப் பிறகு அனேக படங்களில் நடிக்க அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

குமாரி ஷியாமா சென்ற 15 வருஷங்களில் 60 படங்களில் நடித்திருக்கிறார். அனேகமாக எல்லாப் படங்களும் வெற்றிகரமாக ஓடியிருக்கின்றன. அவர் தற்சமயம் எட்டுப் படங்களில் நடித்து வருகிறார். அவற்றில் 'அப்ஸர்' என்ற படத்தை முக்கியமாகச் சொல்லவேண்டும்.

'கலியாணத்தைப்பற்றி எனக்குச் சிந்தையேயில்லை. கலியாண பந்தம் இல்லாமல், சுயேச்சையாக வாழ்க்கையை நடத்த வேண்டும்போலிருக்கிறது' என்று குமாரி ஷியாமா தம் கருத்தை என்னிடம் வெளிப்படையாகத் தெரிவித்தார்.

—தி. மா. ராமச்சந்திரன்




'விசு...! நீ மூவாயிரத்திற்கு இன்ஷூர் செய்திருக்கிறாயாமே நிஜம்தானா...'

'உம்...! அதற்கென்ன வந்தது இப்போ...?'

'ஒன்றுமில்லையப்பா...! இப்போது வரும் வருமானத்தில் குடும்பம் நடத்துவதே சிரமமாயிருக்கும்போது அதை வேறு சமாளிக்க முடியுமா என்றுதான் கேட்டேன்...!' கொஞ்சும் குரலில் குழைந்தாள் அலமு.

'ஆயிரக்கணக்கில் வருமானம் வந்தால்கூட நம் குடும்பப் பஞ்சம் தீராது. அதைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் அவனவன் வாழவே வேண்டாம்போலிருக்கிறது...!' இறுமாப்பும் ஏளனமும் இழைந்தோடி வந்தன விசுவின் குரலுடன்.

'அப்படி எவரும் ஆயிரக்கணக்கில் கொண்டுவந்து கொடுக்கவில்லை என்னிடம். மாதா மாதம் நீ என்னிடம் கொடுப்பது உன் சாப்பாட்டிற்குக்கூடப் போதாது...!' அலமு சிறிதும் விரும்பாதபோதே நாவின் நுனியிலிருந்து வந்துவிட்டன இந்த வார்த்தைகள்.

'ஓ...! அப்படியா...? என்னால் இனி நஷ்டமடைய வேண்டாம் நீ! இன்றே ஒழிந்து போகிறேன் இங்கிருந்து...!' இடி போன்ற குரலில் பேசினான் விசு.

'வேண்டாமடா இரைந்து பேசாதே...! எவர் காதிலாவது விழப்போகிறது...!' இதற்கு மேல் பேச முடியாமல் திணறிப் போய் சேலைத் தலைப்பினால் வாயைப் பொத்திக்கொண்டு விம்மினாள் அலமு.

அவள் நிலையைக் கண்டு அனுதாபம் கொள்வதற்குப் பதில் ஆத்திரம்தான் மூண்டது விசு

வின் அகத்தில்... 'சீ...! இந்தச் சனியன் பிடித்த வீட்டில் இனி ஒரு நிமிடம்கூட இருக்க முடியாது என்றால்...?' எனக் கூறிவிட்டுத் தன் துணிமணிகளைக் கைப்பெட்டியில் அள்ளித் திணித்துக்கொண்டு வேகமாக வெளியேறினாள்.

பத்து மாதம் சுமந்து பல இன்னல்களுக்காளாகிப் பெற்ற தாயும் தந்தையுமாக இருந்து வளர்த்து ஆளாக்கிய அருமை மகனின் பேச்சைக் கேட்டு விதிர்த்துப்போன அலமு வெளியே செல்பவனைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதைக் கூட மறந்து சிலைபோல் அமர்ந்து விட்டாள் தரையில்.

மளமளவென்று எண்ண அலைகள் வந்து மோதின இதயப் பாறையின்மீது.

ஃ ஃ ஃ

செல்வச் சூழ்நிலையில் உள்ள குடும்பத்தில் பிறந்து சீரும் சிறப்புமாக வளர்ந்த அலமு, பின் அதே நிலையிலுள்ள வேங்கடராமனின் வாழ்க்கைத் துணைவியாகி இனிதான இல்வாழ்க்கையை அனுபவித்து வந்தாள். ரகு, விசு மற்றும் மூன்று பெண் மக்கள் ஆக ஐந்து குழந்தைகளுக்கு அன்னையுமாகி இன்பத்தின் இறுதிக் கோட்டையே அடைந்து விட்டாள் அவள். அந்தோ! அந்த அயோமயமான ஆனந்த வாழ்வு வெகு நாட்கள் நீடிக்கவில்லை. ஒரு நாள் மாலை காரியாலயத்திலிருந்து திரும்பும் வழியில் கார் விபத்தொன்றில் சிக்கிய வேங்கடராமன் காலனுக்கிரையானார்.

நிலைகுலைந்துபோன அலமு, பின் எப்படியோ தன் துயரைத் தேற்றிக்கொண்டு, குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் பணியில் ஈடுபட்டாள். அப்பப்பா! அந்த இமாலயப் பொறுப்பை எவ்வாறாக நிறைவேற்ற முடிந்ததா அவளால்? தான் அணிந்திருந்த ஏராளமான தங்க நகைகள் கணவர் விட்டுச் சென்ற பூர்வீக சொத்து. வீட்டிலிருந்த வெள்ளிப் பாத்திரங்கள் அனைத்தையும் ஜீரணித்துக்கொண்டு பி.எஸ்ஸி வரையில் படித்து முடித்தனர் ரகு, விசு இருவரும். ஆனாலும் சட்டென்று உத்தியோகம் கிடைக்கவில்லை. இந்நிலையால், பெண்கள் மூவருடைய படிப்பும் சேர்ந்துகொண்டது. எப்படியோ சிரமத்துடன் நாட்களை கடத்தி வந்தாள் அலமு. அவள் இஷ்டதெய்வம் கண் திறந்து பார்த்தது. ரகுவிற்கும், விசுவிற்கும் வெவ்வேறு இடத்தில் வேலை கிடைத்தது. ஆனாலும் பற்றாக்குறை தீரவில்லை குடும்பத்தில்.

...குழந்தைகளாக இருந்தவர்களை ஆளாக்க அனுபவித்த தொல்லையைக் காட்டிலும் அதிகக் கஷ்டமாக இருந்தது, வளர்ந்தவர்களை வைத்துச் சமாளிக்க அலமுவிற்கு.

ஒரே உதிரத்தில் ஊறிப் பிறந்த ரகு, விசு இருவர் குணத்திலும் எண்ணற்ற வேற்றுமைகள் இருந்தன. பண்பும் பதவிசும் நிரம்பிய ரகு தன்னலம் கருதா தியாகியாக இருந்தான். சுயநலமே குறியாகவிருந்த விசு பகட்டையும் பணத்தையுமே அதிகம் விரும்பினான். வேலை கிடைத்ததும் விசுவின் நிலை முன்னிலும் மோசமாகி விட்டது. தான் வாங்கும் சம்பளத்தில் பாதிக்குமேல் தன்னிடமே வைத்துக்கொண்டு எஞ்சியதைத் தான் அன்னையிடம் கொடுத்து வந்தான். சில முக்கியமான செலவுகளைச் சமாளிக்கும்பொருட்டு அவனிடம் ஏதாவது பணம் கேட்பாள் அலமு. பதிலுக்குச் சீறி விழுவான் விசு. சகோதரனின் சரியில்லாத நடத்தையைக் கண்டு சாந்தமாகவே அவனை நல்வழிப்படுத்த முயன்ற ரகு முடிவில் விசுவின் வெறுப்பைத்தான் சம்பாதித்துக்கொண்டான்.

இந்நிலையில்தான் சென்னைக்கு வந்தார் அலமுவின் ஒன்று விட்ட சகோதரான் வேதமூர்த்தி, தன் அருமை மகள் சுதாவுடன். பருவத்தின் முதற் படியில் காலடி வைத்திருந்த சுதாவின் அழகைப்பற்றி நீண்டதோர் காவியமே இயற்றி விடலாம் போலிருந்தது விசுவிற்கு. வேதமூர்த்தி தங்கியிருந்த அந்த ஒரு வார காலமும் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக் காரியாலயத்திற்கு மட்டம் போட்டுவிட்டு சுதாவுடன் சென்னை நகரை வலம் வந்தான் அவன்.

எளிமையான ஆடைகளுடன் அமைதியாக வளைய வந்து கொண்டிருக்கும் ரகுவின்பால் எல்லையற்ற இரக்கமும், மேல்நாட்டுப் பாணியில் ஆடையணிந்து அட்டகாசமாகப் பேசிச் சிரித்துவந்த விசுவினிடம் மட்டற்ற காதலும் பிறந்தது சுதாவிற்கு. அந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே ஒருடலும் ஈருயிருமாயினர் சுதா—விசு இருவரும்.

வந்த காரியம் முடிந்தது. சுதாவுடன் ஊருக்குப் பயணமான வேதமூர்த்தியிடம் 'சுதா இருக்கட்டுமே என்னிடம் இன்னும் சில நாட்கள்...' என்றாள் அலமு.

'இப்போது என்னுடன் அழைத்துப் போகிறேன்! அவள் என்றென்றும் உனனுடன இருக்கப்போகும் நாள் விரைவில் வரத்தான் போகிறது!' என்றார் வேதமூர்த்தி அடக்கமாகச் சிரித்த வண்ணம். அவர் பேச்சைக் கேட்ட விசுவின் மனம் ஆனந்தத்தினால் துள்ளிக் குதித்தது. ஊடே அவர் குறிப்பிட்டது ஒரு வேளை ரகுவாக இருந்துவிட்டால்...? என்ற சந்தேகமும் எழுந்தது. எதற்கும் 'மாமா ஊருக்குப்போய் எழுதமாட்டாரா...?' என்ற நம்பிக்கையில் மலர்ந்த முகத்துடன் சுதாவிற்கு விடை கொடுத்தான் அவன். ஆனால் இரண்டாண்டுகள் உருண்டும் வேதமூர்த்தி அதைப்பற்றி எதுவும் எழுதாமலிருந்து வந்தார். இந்நிலையில் ரகுவின் ஜாதகத்தைக் கேட்டனர் அலமுவிடம் பெண்ணைப் பெற்றவர்கள்.

'அவன் சம்மதத்தைக் கேட்டுக்கொண்டுதான் ஜாதகம் கொடுக்க வேண்டும்' என்று கூறிய அலமு அன்றிரவு ரகு, விசு இருவரது கலத்திலும் பரிமாறிக்கொண்டே பிரஸ்தாபித்தாள் அதைப்பற்றி.

'தற்போது நம் குடும்பம் இருக்கும் நிலையில் அந்தத் தொல்லையை வேறு விலை கொடுத்து வாங்குவதற்குத் துணிந்துவிட்டாயா அம்மா நீ? என் தங்கைகள் மூவருக்கும் சரியான வழி வகுத்துக் கொடுத்த பின்னர் தான் யோசிக்க வேண்டும் அதைப்பற்றி...!' என்றான் ரகு இரும்பினும் இறுக்கமான குரலில்.

அருகில் அமர்ந்துகொண்டிருந்த விசுவிற்குப் 'பக்'கென்றது அண்ணனின் பேச்சைக் கேட்டதும். 'சுதாவை மனதில் வைத்துக்கொண்டுதான் சாமர்த்திய

மாகப் பேசி மழுப்புகிறான்' என்ற முடிவிற்கு வந்த அவனுக்கு மேலே சாப்பிடக்கூடப் பிடிக்கவில்லை. அன்று இரவு முழுவதும் கண் இமைக்காமல் சிந்தித்துக் கொண்டிருந்தவன் ஒரு முடிவிற்கும் வந்துவிட்டான்.

விசுவின் திட்டம் இதுதான்: 'இனி காசைக் கண்டபடி செலவு



செய்யாமல் கணிசமான தொகையை மாதா மாதம் சேமிப்பு நிதியில் போட்டு வரவேண்டும்! பின் மெல்ல வீட்டிலிருந்து விலகித் தனியே வாழ வழி வகுத்துக்கொள்ள வேண்டும். அதன்பின் கணிசமான தொகையுடன் பிக்கல் பிடுங்கல் இல்லாமல் தனியே வாழும் தம்மை மருமகனைத் தேர்ந்தெடுப்பாரே தவிர, மாமா கசமுசவென்ற குடும்பக் குட்டையில் உழன்று கொண்டிருக்கும் ரகுவைத் தேர்ந்தெடுக்கவே மாட்டார் ஒரு நாளும்!' இந்த முடிவிற்கு வந்த விசு தன் திட்டத்தைச் செயலாக்கத் தகுந்த சமயத்தை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தான். அவன் கோபித்துக்கொள்ளும் படியாக சிறு பூசல்கூட ஏற்படவில்லை வீட்டில்.

கடைசியில்தான் அலமுவின் வாயினால் வந்தது 'இன்ஷூர்' அம்பலம். பாவம் அலமு! மகனுடைய திட்டங்கள் எதையும் அறியாததுடன் தன்னால்தான் அவன் வீட்டை விட்டே வெளியேறிவிட்டான் என்று மனம் வெதும்பினாள்.

'ஏனம்மா இப்படி சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்...? உடம்பிற்கு ஏதாவதா...?' எல்லையற்ற பரபரப்புடன் வினவிய வண்ணம் அலமுவின் அருகில் வந்தமர்ந்தான் ரகு. அடைபட்டுக்கிடந்த துயரம் பீறிட்டுக் கொண்டு புறப்பட்டது அலமுவின் இதயத்தினின்றும். ரகுவின் நிர்ப்பந்தத்தின்பேரில் எப்படியோ நடந்ததைக் கூறி முடித்தாள் அவனிடம் அவள்.

'அவன் சுபாவம்தான் தெரிந்ததாயிற்றே! பின் ஏனம்மா அதிகமாகப் பேச்சு வைத்துக்கொள்கிறாய் அவனிடம்? அனாவசியமாக அழுது அலட்டிக்கொள்ளாதே எங்கிருந்தாலும் இதோ நான் போய் அழைத்து வருகிறேன்?' அன்பும் ஆதரவும் நிரம்பிய குரலில் கூறிவிட்டு வெளியே சென்ற ரகு, பின் இரவு பன்னிரெண்டு மணிக்கு மேல்தான் வீடு திரும்பினான்.



'அம்மா! இனி அவனுக்காத் தோன்றியபோதுதான் வீட்டிற்கு வருவானாம்! நாம் அடிக்கடி போய் தொந்தரவு செய்தால் ஊரைவிட்டே ஓடி விடுவானாம்...!' என்று துயரத்துடன் அவன் கூறுவதைக் கேட்டு இடிந்து போய்விட்டாள் அலமு.

மாதங்கள் பல மறைந்தன. மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் பலவும் நடந்தன, அலமுவின் குடும்பத்தில். ஆனாலும் விசுவின் பிரிவினால் ஏற்பட்ட துயரம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது, அலமுவின் மனதில். நெருக்கமான ஒரு குலைத் தேங்காயில் ஒரே ஒரு காய் உதிர்ந்தால்கூடக் குலை கலகலத்துப் போய்விடுவது சகஜம் தானே...?

* * *

விசு தனி வாழ்க்கையைத் துவங்கி விளையாட்டுப்போல் இரண்டாண்டுகள் உருண்டன. அவன் எதிர்பார்த்த அளவிற்கு அதிகமாகவே பாங்கில் கணக்கு ஏறியது. 'இனி வெற்றி நிச்சயம்!' என்று எக்காளமிட்டது அவன் மனம் தான் தனி வாழ்க்கை துவங்கிய காரணத்தையும், அதன்பலன் கணிசமானதொகை சேர்ந்திருப்பதையும், சுதாவிற்காகத் தான் காத்திருப்பதையும் பற்றித் துணிவுடன் வேதமூர்த்திக்கு எழுதிவிட்டு அவர் பதிலுக்காக ஆவலுடன் காத்திருந்தான் அவன்.

நான்கு வாரங்கள் கழிந்து வந்தது கடிதம். அதையும் சுதாவே எழுதியிருந்தாள். குதிபோடும் இதயத்துடன் பிரித்தான் கடிதத்தை.

'அன்புள்ள அத்தான்...!

கடிதம் ஒன்றை எழுதி காதலையே சாக வைத்துவிட்டீர்களே...? நியாயமா இது...? இரண்டு வருடங்களாக— அதாவது நாம் இருவரும் சென்னையில் சந்தித்த நாள் முதலாக என்னைத் தங்களுக்கே கொடுப்பது என்ற உறுதியுடன் இருந்த அப்பா உங்கள் கடிதம் கண்டது முதற்கொண்டே அந்த எண்ணத்தைக்



கைவிட்டு விட்டார். சங்கோசத்தை விட்டுக் கெஞ்சிக் குழைந்தேன் அவரிடம்.

'வேண்டாம் அவன் சம்பந்தம்! அலைகடல் துரும்பெனத் தத்தளித்துக்கொண்டிருந்த குடும்பத்தைத் துறந்துவிட்டுச் சுயநலமே குறியாகவிருக்கும் அவன் எதைத்தான் செய்வதற்குத் துணியமாட்டான்! ரகு உத்

தமன்! பணத்தையும் பகட்டையும் விரும்பாத தியாகி. பண்பு நிரம்பிய அவனையடைந்தால் உன் வாழ்வு மணக்கும்!' என்று எனக்கு உபதேசம் செய்ததுடன் இன்று அத்தைக்கும் எழுதிவிட்டார் என்னைப் பெரிய அத்தானுக்குக் கொடுக்க விரும்புவதாக!

'அத்தான்! இனி என் கதி என்ன...? மணமா...? மாணமா...? மனம்மாறி அப்பாவின் மனதிலும் நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தி என்னை ஏற்றுக்கொள்வதானால் கீழே கொடுத்திருக்கும் என் தோழியின் முகவரிக்கு விரைவாக வரைந்து அனுப்புங்கள் தங்கள் பதிலை. தங்களிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிடில் தற்கொலைதான் எனக்குப் புகலிடம்.

இப்படிக்கு,

சுதா.

கடிதம், கண் எதிரிலிருந்த பொருள்கள் எல்லாமே தலைகீழாகத் தெரிந்தன விசுவின் கண்களுக்கு. நேரம் நீண்டு கொண்டே போயிற்று. அலை கடலின் கொந்தளிப்பினூடே சிக்கித் தவிக்கும் சிறு படகைப் போல் தவித்தது அவன் இதயம்.

'சீ! போயும் போயும் அந்த இதயமற்ற அரக்கனின் மகளாகப் பிறந்தாளே என் சுதா...! அம்மாவையும் அண்ணாவையும் பகைத்துக்கொண்டும் பணம் சேர்த்தும் பலன் இல்லையே...? ஏன்...? ஏன்...? ஒருவேளை மாமா கூறுவதைப்போல் பணத்தைக் காட்டிலும் பண்புதான் உயர்ந்ததாக இருக்குமோ...? பணம் பெரிதா...? பண்பு பெரிதா...? பணத்திற்கு மதிப்பா...? பண்பிற்கு மதிப்பா...? இதையே திரும்பத் திரும்ப எண்ணிய வண்ணம் அன்று பகல் பொழுதை விரட்டியடித்தான் அவன்.

மாலை ஆறு மணியிருக்கும். அப்போதுதான் உளப் போராட்டம் சிறிதளவு ஓய்ந்து படுக்கையில் சாய்ந்துகொண்டிருந்தான் விசு, அறைக் கதவை வெறுமே மூடிவிட்டு.

மூடியிருந்த கதவை லேசாகத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த ரகுவை வெறித்து நோக்கினான் விசு. அந்தப் பார்வை தன்னை நோக்கி உமிழ்ந்த வெறுப்பையும் குரோதத்தையும் கண்டு வேதனையடைந்த ரகு தானாகவே அமர்ந்துகொண்டான் அறையின் நடுவில் கிடந்த ஆசனமொன்றில்.

'விசு...! மாமாவிடமிருந்து கடிதம் வந்தது இன்று...!' பத்து நிமிட நேர மௌனத்திற்குப் பின் மெல்லிய குரலில் பேசினான் ரகு.

'.....'

'சுதாவை எனக்குக் கொடுப்பதென்று தீர்மானித்திருக்கிறாராம் அவர்...!'

'சந்தோஷம்...!'

'நிஜமாகவே உனக்கு இதில் சந்தோஷம்தானா விசு...?'

'.....'

முத்து முத்தாக முகம் வேர்க்க, உணர்ச்சிப் பெருக்கினால் அதரங்கள் துடிக்கத் தன் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையின்றிப் பரிதாபமாக விழித்துக்கொண்டிருக்கும் விசுவின் இரு கரங்களையும் அள்ளியெடுத்துக்கொண்ட ரகு 'விசு! எங்கே என்னைப் பார்த்துச் சொல்! சுதாவை நான் அடைவதில் சந்தோஷம்தானா உனக்கு...? அவளை உன் உயிரினும் மேலாகக் காதலிக்கவில்லையா நீ...?' ரகுவின் குரலினூடே பின்னிப் பிணைந்துவந்த பரிவும் பாசமும் விசுவின் உள்ளத்தை ஈர்த்தது. இனம் புரியாத கலக்கத்துடன் தமையனின் பிரகாசமான கண்களையே கூர்ந்து நோக்கியவண்ணமிருந்தான்.

'எனக்கும் தெரியும் விசு உன் மனம்! மாமாதான் என்னமோ அப்படி எழுதியிருக்கிறார்! சுதா உன் உயிர்! இல்லையா...?' இதைக் கூறிவிட்டு விசுவின் உள்ளத்தையே அலச முயல்பவனைப் போல் நோக்கினான் ரகு.

அந்தப் பார்வைக்கு அடிமையானான் விசு!' அவளும்தான் என்னை...!' இதற்கு மேல் பேசும் வகையறியாமல் சுதாவின் கடிதத்தை எடுத்து ரகுவிடம் கொடுத்தான் விசு. பரபரப்புடன் அதைப் படித்து முடித்த ரகு தன் சட்டைப் பையினுள் வைத்திருந்த கடிதம் ஒன்றை விசுவிடம் கொடுத்து 'சீக்கிரம் படித்துப் பார்த்துவிட்டுக் கொடு! தபாலில் சேர்க்க வேண்டும்!' என்றான்.

விசுவை அறியாமலே கரங்கள் கடிதத்தைப் பிரித்தன. பார்வை அதில் பதிந்தது.

'அன்புள்ள மாமாவுக்கு ரகு அநேக நமஸ்காரம்! தங்கள் கடிதம் கிடைத்தது. ஆனால், அதில் கண்டபடி சுதாவை நான் மணந்துகொள்ள முடியாமற் போனதற்கு வருந்துகிறேன்! ஏற்கெனவே ஒரு பெண்ணை மணந்து கொள்வதென்று தீர்மானித்திருக்கிறேன் நான்! தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.



'நிற்க, சுதாவும் விசுவும் ஒருவரை யொருவர் மிகவும் விரும்புகின்றனர்! அவர்கள் இருவரையும் ஒன்றுசேர்க்க வேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன். விசுவிற்குச் சற்று முன்கோபம் வருமே தவிர உண்மையில் அவன் உள்ளம் தங்கம். எனவே தயவு செய்து அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும்படி மீண்டுமொரு முறை தங்களைப் பிரார்த்திக்கிறேன்.

'ஒரு முக்கியமான செய்தி! விசு தன் தவறை உணர்ந்து புது மனிதனாக மாறி எங்களுடன் வசிக்கிறான் இரண்டு நாட்களாக. எல்லாவற்றிற்கும் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,

ரகு...'

'கடிதம் முடிந்தது. அதில் பதிந்திருந்த விசுவின் பார்வை

க்கு நீர் திரையிட்டது. 'அண்ணா! இதுதான் பண்பின் பெருமையா...? இதை உணராமல் பணம்தான் பெரிதென்று எண்ணிப் பொன்னான உன் உள்ளத்தையும் அம்மாவின் உள்ளத்தையும் புண்ணாக்கி விட்டேனே பாவி நான்...! என்னை மன்னிப்பாயா...?சொல் அண்ணா சொல்!' என்று உணர்ச்சி பொங்கும் குரலில் கூறியவண்ணம் ரகுவின் கரங்களைப் பற்றிக்கொண்டு குழந்தைபோல் குலுங்கியழுதான் விசு.

அன்புடன் தம்பியின் முகத்தைத் தன்பக்கம் திருப்பி, அவன் கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீரை ஆதரவுடன் துடைத்த ரகு 'விசு! இவ்வளவு நாட்களாக நான் உன்னை கள்ளமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவன் என்று மட்டும்தான் எண்ணியிருந்தேன்! இவ்வளவு கோழையாக வேறு இருக்கிறாயே...? உம்! சீக்கிரம் அறையில் கிடக்கும் சாமான்களையெல்லாம் ஒன்று சேர்த்து வை! நான் இந்தக் கடிதத்தை தபாலில் சேர்த்துவிட்டு டாக்ஸியுடன் திரும்பி வருகிறேன்!' என்று உரிமையுடன் உத்தரவிட்டுவிட்டு வேகமாக வெளியேறினான் ரகு. அவன் சென்ற திசையை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்ட விசு பரபரப்புடன் தன் சாமான்களை ஒன்றுசேர்ப்பதில் ஈடுபட்டான்.

எதிர்பாராத சமயத்தில் திடுதிப்பென்று ரகுவுடன் வந்திறங்கிய விசுவைக் கண்டதும் மகிழ்ச்சியின் எல்லைக் கோட்டைத் தாண்டிவிட்டனர் அலமுவும் அவள் பெண்களும்.

'எப்படியடா குழந்தாய் உன் மனம் மாறியது...?' உணர்ச்சி பொங்கும் குரலில் இதைக் கூறியவண்ணம் விசுவின் கரங்களைப் பற்றிக்கொண்டாள் அலமு.

'தானாக மாறவில்லையம்மா என் மனம்! அண்ணாவின் உயர்ந்த பண்பு என்னைப் புது மனிதனாக்கியது...!' நெகிழ்ந்த குரலில் கூறியவண்ணம் வாழ்நாளிலேயே முதன் முறையாகத் தாயின் பாதங்களருகே குனிந்து நமஸ்கரித்தான் விசு. அந்தக் காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் உகுத்தான் உத்தமன் ரகு.

அன்றிரவு ரகுவின் படுக்கைக்கருகில் படுத்திருந்த விசு 'அண்ணா! நீ விரும்பும் என் அண்ணி எங்கிருக்கிறாள்? எப்படியிருப்பாள்...? எனக்கு மட்டும் சொல்லேன்!' என்று மெல்லிய குரலில் கிசுகிசுத்தான்.

'ஓ! அதுவா? அம்மாவையல்லவா கேட்கவேண்டும் அதைப் பற்றி!' என்றான் ரகு லேசாக நகைத்தவண்ணம்.

'அப்படியானால் நீ மாமாவின் கடிதத்தில் எழுதியிருந்தது பொய்யா...?'

'இல்லாவிட்டால் மாமாவிடமிருந்து நான் விடுபட முடியுமா...?' என்று கூறிய ரகுவின் கரங்களை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டான் விசு.

அடுத்த மாதம் ஒரு சுபயோக சுப தினத்தில் அலமு பார்த்துத் திருப்தி அடைந்த சௌபாக்கியவதி சுதாவிற்கும் ரகுவிற்கும் திருமணம் நடந்தேறியது. மறுவாரமே விசுவும் சுதாவும் சதிபதிகளாயினர்.



அஞ்சலிதேவி பாவாடை சொக்காய போட்டுக்கொண்டிருந்தபோதே நடிக்க ஆரம்பித்து விட்டார் எந்த வேளையில் திரையுலகில் காலடி வைத்தாரோ அந்த வேளையிலிருந்து இன்றுவரை ஏற்றத்தைத்தான் கண்டுள்ளார். நிரந்தரநட்சத்திரமான இவர் இன்றும பதினாறு வயது பருவப் பெண்ணாகததான் காட்சியளிக்கிறார் சுமார் பத்து வருட காலமாக ஒரேமாதிரி தோன்றும இவருக்குப் பெரும் அதிர்ஷ்டம்என்னவென்றால் ஆதிநாராயணாராவை கணவனாக பெற்றதுதான்.

ராவ் ஒரு தயாரிப்பாளர், சங்கீத டைரக்டர். இவர் பெற்ற அதிர்ஷ்டம் அஞ்சலியை மனைவியாக அடைந்தது



அஞ்சலியை படம் பிடிக்க கேட்ட போது வெடுக்கென்று 'முடியாது' என்று, சொல்லிவிட்டார். 'படங்களைப் பிடித்து பலர் தங்கள் இஷ்டம்போல் வெளியிடுகின்றனர். தங்களுக்கு எப்படி எழுதத் தோன்றுகிறதோ அப்படியெல்லாம் எழுதித் தள்ளுகின்றனர். அப்பப்பா... வேண்டாம்... வேண்டாம் பத்திரிகைகளுக்கு நான் 'போஸ்' கொடுப்பதில்லை. என்னை மன்னித்து விடுங்கள்' என்றார். இப்பகுதிக்கு ஒன்றும் விசேஷ உடைகளோ, முடி அலங்காரமோ தேவை இல்லை என்று சொன்னவுடன் 'அப்படியானால் நாளைக்கே எடுத்து விடுங்கள்' என்றார். இவைகள் எல்லாம் அரை மணி நேரத்தில் எடுக்கப்பட்டவை.







அஞ்சலிக்கு எ
போதும் ஏதாவ
செய்துகொண்டே இ
க்க வேண்டும். த
சொந்தப் படமா
அடுத்த வீட்டுப் பெ
படப் பிடிப்பு வே
களை ஜரூராக க
னித்து வருகிறார். இ
ஞல் ஆதிநாராய
ராவுக்கு பெரும் சிர
குறைகிறது. அஞ்சலி
குத் தெரியாதது ஒ
றுமே கிடையா
ராவும் மனைவியிட
எதையும் ஒளிப்ப
கிடையாது. எடிட்டி
அறையில் படச் சுரு
சரி பார்ப்பதை
பாருங்கள். மித்திர
'எம்பியெஸ்' ஆல்ப
த்தைப் பார்த்த அஞ்ச
'அப்பப்பா இத்தனை
படங்களை எப்படி ச
எடுத்தீர்கள்? ரொம்
வும் பொறுமையு
விடாமுயற்சியும் வே
டும். பாராட்டுகிறேன்
என்றார். வீட்டு வே
களையும், தோட்
வேலைகளையும் இ
இடையே

தெரியும். அழகிய கண்ணாடியை அவர் போட்டுக்கொண்டிருப்பது அழகுக்கு அழகு செய்வதுபோல் இல்லையா? மொத்தத்தில் அஞ்சலிக்கு எதுவுமே நன்றாக அமைகிறது. இவருக்கு பிள்ளைகள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் அஞ்சலி நின்றால் அவர்களை பெற்ற தாயென்றே சொல்ல முடியாது!






[சுமங்கலி]

★

# பேதை மனம்

இயற்கையாகவே பெண்கள் பேதை மனம் உள்ளவர்கள். அதாவது, எந்த விஷயத்தையும் ஆராய்ந்தறியாமல், அதன் தோற்றத்தைக்கொண்டே நம்பி விடும் இயல்புள்ளவர்கள். இதற்கு அனுசரணையாக மூட நம்பிக்கையும் அவர்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. மூடநம்பிக்கையில் உள்ள முழு நம்பிக்கையால் அவர்கள் எதையும் ஆராய்ந்தறியத் தாமதிப்பதில்லை. இதனால் அவர்கள் பலவிதங்களில் இன்னல்களுக்குள்ளாகிறார்கள். தாங்கள் அவதிப்படுவதோடு மட்டுமல்லாமல் தங்களைச் சேர்ந்தவர்களையும் அவதிக்குள்ளாக்கிவிடுவார்கள். தகுந்த ஆராய்ச்சியின் பயனை ஏற்படாத அவர்களது தெய்வபக்தி, இவ்விதக் அரைகுறை பக்திக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் காரணமாக ஏற்படுகிறது. அன்றாடம் பத்திரிகைகளில் எவ்வளவு சாமியார்களையும், சந்நியாசினிகளையும், மந்திரவாதிகளையும்பற்றி நாம் படிக்கிறோம். அவர்களிடம் சிக்கி, பிறகு மீள வகையறியாது, பழிச் சொற்களுக்கு ஆளாகி அல்லலுறும் பெண்கள் எத்தனை பேர்கள்பற்றிப் படிக்கிறோம். இந்த மூட நம்பிக்கையும், மூடமான தெய்வ பக்தியும் எத்தனை குடும்பங்களைப் பாழாக்கியிருக்கின்றன!

ஆனால், இவைகளிலிருந்து ஏழைப் பெண்குலத்தை மீட்க வகையே கிடையாதா?—என்றால், உண்டு. இப்பொழுது ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை. இப் பேதைப் பெண்கள் சிறிதளவு தம் பகுத்தறிவை உபயோகித்துத் தம்மிடமுள்ள குறைபாட்டின் காரணத்தை ஆராயவேண்டும். அவ்வாறு செய்யின் அவர்களுக்கு அக்காரணம் நன்கு விளங்கும். முதலாவதாகப் பெண்கள், இயற்கையிலும், தொன்றுதொட்டு வழங்கிவரும் பண்பாட்டினாலும் அபரிமிதமான தெய்வபக்தி, ஆராய்ந்தறிந்து தெளியாத மூடபக்தி உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு தெய்வத்தினிடத்தில் — அத்தெய்வத்தை எந்த ரூப, நாம, பேதகுண விசேஷங்களுடையனவாக மதித்து வணங்கினாலும்—பூர்ணமான, ஆனால் மூடமான பக்தி உண்டு. தெய்வம் எது? அதன் குண விசேஷம் என்ன? அதற்கும் நம் ஆத்மாவுக்கும் உள்ள தொடர்பு யாது என்று ஆராய்வதே கிடையாது ஏன்? அத்தெய்வத்தினிடத்தில் அவர்களுக்கு உள்ள மூடபக்தியினால் குருட்டு நம்பிக்கையும், ஆதாரமற்ற பக்தியும் ஏற்பட்டு விடுகிறது இதனால். ஆகவே, மூட நம்பிக்கைகள் உதயமாகி, ஆழ வேரூன்றி விடுகின்றன. இதனால் உண்மையான சிறந்த பக்திக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. இதனால் பயனற்ற ஆடம்பரமான சடங்குகள் வழிபாடுகள் தோன்றி விடுகின்றன. இவைகளுக்கெல்லாம் வழி காட்டிகளாகவும் கர்த்தாக்களாகவும் சாமியார்களும், சந்நியாசினிகளும், மந்திரவாதிகளும் தோன்றி, இந்தப் பேதை மனத்தின் பண்பும் பயனும் அற்ற நிலையைத் தம் ஆதாரமாகக்கொண்டு, தம் ஜீவனோபாயத்தை நடத்தி வருகிறார்கள். ஏன்? நான் கேட்கின்றேன். சர்ஜீவ தயாபரனாகிய அந்தக் கருணாமூர்த்தியை இந்தப் போலிச் சாமியார்களின், சந்யாசினிகளின் மூலமாகத் தான் நாம் காணவேண்டுமா? கடவுள் நம்மிடத்திலேயே இல்லையா? ஒவ்வொரு ஆத்மாவும் எந்த ஜாதி, மத பேதங்களைச் சேர்ந்ததானாலும், சித்தத்தை ஒருவழிப்படுத்தி, தூய மனத்துடன் போற்றினால், தன்னுள்ளேயே அந்தக் கடவுளைக் காண முடியாதா? நிச்சயமாகக் காணலாம். அவ்வாறு சித்தத்தைப் பிறவழிச் செல்லாமல் ஒருவழிப்படுத்தி, கடவுளை த்யானிக்கத் தான் இந்தப் பேதை மனத்திற்கு சக்தி

யில்லையே. இதுதான் பெண்களிடத்தில் வருந்தத்தக்க ஒரு மாபெரும் குறையாகும். ஆகவே, அவர்கள் சாமியாரோ, அல்லது சந்நியாசினியோ அல்லது மந்திரவாதியோ சொல்லும் ஏமாற்று வித்தைகளுக்காளாகிக் கடைசியில் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பேதைப் பெண்கள் முதலில் தம்முள் நம்பிக்கையுடையவர்களாகி, தம் சபல புத்தியை ஒருவழிப்படுத்தி, த்யானித்து, கடவுளை வழிபட்டால், அவ்வாறு வழிபடக் கூடிய மன உறுதியை அடைந்தால் தான் விமோசனம் உண்டு.

இரண்டாவதாக, பெண்களுக்கே. சபல சித்தம் அதிகம். மனத் திருப்தி என்பதே கிடையாது. எவ்வளவு செல்வம் படைத்தபோதிலும், எத்தகைய உன்னத பதவியில் இருந்தபோதிலும், இன்னும் செல்வமும் பதவியும் புகழும் பெற வேண்டுமென்ற அளவற்ற, அடங்காத ஆசை இந்தப் பெண் குலத்திற்கே ஒரு தனிப் பெருமை. அப்படியிருக்க, பக்தியின் ஜீவநாடியாகிய திருப்தி மனப்பான்மை இவர்களிடம் எங்கேயிருக்கும்? அடைந்ததைக் கொண்டு திருப்தியுடன், எது வந்தாலும் தாங்கும் உறுதியைப் பெற்று, வாழ்க்கையின் மேடுபள்ளங்களை சம நோக்குடன் பார்க்கக்கூடிய மன உறுதி இவர்களுக்கு வேண்டும். அத்தகைய உறுதி ஏற்பட்டால், மனத் திருப்தி தானே வந்து இவர்களையடையும். திருப்தியேற்பட்டால், சித்தத்தை ஒரு வழிப்படுத்தி, கடவுளை த்யானித்து மகிழ்ச்சியடையலாமன்றோ! அதில்லாவிட்டால், இந்த முக்கியக் காரணத்தினால் தான்–பல பேதைப் பெண்கள் சாமியார்களையும், மந்திரவாதிகளையும் நம்பி மோசம் போகிறார்கள்.

மூன்றாவதாக, பெண்களிடத்தில் ஒரு காரணமற்ற பயம் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. யாராவது ஒரு சாமியார் வந்து இவ்விதம் தான் கடவுளை வழிபட வேண்டும், இவ்வித பலிகள் அளிக்கவேண்டும், அதற்கு இவ்வளவு பொருள் செலவாகும் என்று ஒரு ஏரான தொகையைக் கூறிய போதிலும் அவ்வாறே செய்ய அவர்கள் தயங்குவதில்லை. ஏன்? அவ்வாறு செய்யாவிட்டால், கடவுள் கண்ணைக் கெடுத்துவிடுவார், அறிவை அழித்து விடுவார், வம்சத்தையே வேருடன் அழித்துவிடுவார் என்று பயமுறுத்துகிறார். எப்படி? இப்பெண்களிடம் இயற்கையாக உள்ள பயம் அவருக்கு எளிதாகத் தெரிந்துவிடுகிறதல்லவா? அவர் கூறியவுடன், இப்பெண்கள் அவர் கூறியபடி பொன்னையும் பொருளையும் வாரிவழங்கி, தாமும் கஷ்டத்துக்குள்ளாகி, தம்மோடு உள்ளவர்களையும் கஷ்டத்திற்குள்ளாக்குகிறார்கள். இவ்வாறு செய்தால்தான் கடவுள் நம்மை ரக்ஷிப்பாரா? அல்லது கைவிட்டுவிடுவாரா! அவர் கருணை வடிவானவரல்லவா! உயிர்ப்பலியும் கேட்பாரா என்றெல்லாம் நினைத்துப் பார்ப்பதில்லை; ஏன்! அவ்வாறு செய்யாவிட்டால் கடவுள் கோபங்கொண்டு நம்மையே அழித்து விடுவார் என்ற பயத்தினால். இந்த பயத்தினால் பல இன்னல்களுக்காளாகி பழி சுமந்து பாழாய்ப் போகின்றார்கள் இப்பெண்கள். ஆகவே, இந்தப் பயம் அறவே நீங்கவேண்டும்.

ஆகவே, பெண்கள் இந்த இன்னல்களை நீக்கச் செய்ய வேண்டுவது யாதெனின், முதலாவதாக மன உறுதி பெறவேண்டும்; அந்த உறுதியைப் பெற்று, கருணைசமுத்திரமாகிய கடவுளிடம் உண்மையான அன்பு செலுத்த வேண்டும். அன்பே தெய்வம், அழகே கடவுள்; சத்யமாகிய அறமே கடவுள் என்று உறுதியாகக் கடைப்பிடித்து பக்தி செயல்வேண்டும். கடவுளிடம் பயம் என்பதே வேண்டியதில்லை. நம் குறைபாடுகளோ, குணமோ, அவருக்குத் தெரியாததில்லை என்று தெளிய வேண்டும். தெளிந்து ஒருமனத்துடன் அவரை த்யானிக்கவேண்டும். அதுவே கடவுள் வழிபாட்டின் சிறந்த வகையாகும். அவ்வாறு செய்யின் நிச்சயமாக அவன் அருளுக்குப் பாத்திரமாகிப் பேரானந்தமெய்தலாம்.



# மாதர் மகாசபை

குங்குமம்

## 10

'அவன்கூட வாராமல் இருப்பாளா? வீட்டில் இருப்புத்தான் கொள்ளுமா?' என்றாள் அங்கே வந்த கனகாவை நோக்கிக் கோகிலா.

'உண்மையிலேயே ஏகப்பட்ட வேலை இருக்கிறது வீட்டில். இருந்தாலும் ஏதோ 'கசமுசா' என்று சொல்லிவிட்டால் அதைத் தெரிந்துகொள்ளாமல் இருக்க முடிகிறதா? அவர் சர்க்கரை வாங்கிவர ஸ்டோருக்குப் போயிருக்கிறார். அங்கு இருக்கப்பட்ட 'க்யூ'வைப் பார்த்தால், குறைந்தது அவர் வருவதற்கு ஒரு மணி நேரமாவது ஆகும் என்று தோன்றியது. அவர் வருவதற்குள் இந்தத் தகவலைத் தெரிந்து கொண்டு போகலாமென்று வந்தேன்' என்றாள் கனகா.

'அது சம்பந்தமாக இன்று மேலும் சில தகவல்கள் தெரிந்தது. அதைக் கேட்ட பிறகு மனதுக்கு ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது' என்று சொல்லிவிட்டு, காமுப்பாட்டி, தான் கேள்விப்பட்டதைச் சொல்லவாரம்பித்தாள்:

'உண்மையிலேயே சில விஷயங்களில் நாம் ஊகிப்பது ஒன்றும், நடந்துள்ளது வேறாகவும் இருந்துவிடுகிறது. கோடிவீட்டுக் கல்யாணியின் 'ஓர்ப்படி' சாந்தாவைப்பற்றி நாம் கொண்டிருந்த கருத்து அத்தனையும் அடியோடு தவறு என்பது இப்பொழுதல்லவோ தெரியவந்தது. பாவம், கல்யாணியின் 'ஆகாத்தியத்தை' உண்மையென்று நம்பி, சாந்தாவைப் பற்றி என்னதான் தவறான அபிப்பிராயம் கொண்டுவிட்டோம்! சேச்சே! நினைத்துக்கொண்டால் பரிதாபமாக இருக்கிறது! பாவம், கல்யாணிமீதும் தவறில்லை. அவள் என்ன செய்வாள்? சந்தர்ப்ப சூழ்நிலை, அவளை அந்த மாதிரி, சாந்தாவின்மீது அபாண்டப் பழியைச் சுமத்தச் செய்து விட்டது.

'நேற்று முன்தினம் கல்யாணியின் குழந்தைக்கு ஆண்டு நிறைவாம். கொஞ்சம் தடபுடலாகவே நடந்ததாம். இரவு சுமார் ஒரு மணி இருக்குமாம். எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்களாம். கல்யாணியின் கழுத்தில் கூச்சல் என்றதாம். தேளோ, பாம்போ என்று அலறியடித்துக்

கொண்டு எழுந்தாளாம் கல்யாணி பக்கத்தில் யாரோ உட்கார்ந்துகொண்டிருந்தானாம். தூக்கக் கலக்கத்தில் அவனைத் திருடன் என்று எண்ணிக் கொண்டு 'திருடன், திருடன்' என்று கூச்சல் போட வாயைத் திறந்தாளாம். அதற்குள் அந்தப்பேர்வழி அவள் வாயைக் கெட்டியாகக் கையால் பொத்திக்கொண்டுவிட்டானாம். யார் என்று நினைக்கிறாய் அந்தப் பேர்வழி? கல்யாணியின் அகத்துக்காரரேயாம். கையில் ஒரு கத்தரிக்கோல், கல்யாணியின் கழுத்திலிருந்து கத்தரித்து எடுத்த ஒரு செயின் ஆகியவற்றுடன் உட்கார்ந்துகொண்டிருக்கிறாராம்.

'கல்யாணிக்கு விஷயம் புரிந்துவிட்டது. மறுநாள் குதிரைப் பந்தயம். கல்யாணியின் அகத்துக்காரர் ஒரு 'ரேஸ் பைத்தியம். கையில் பணமில்லை. அதற்குப் போவதற்காக, கல்யாணி தூங்கிக்கொண்டிருக்கையில், அவள் கழுத்திலிருந்து செயினைக் கத்தரித்திருக்கிறான் 'மன்னன்' என்றாள் காமுப் பாட்டி.

'இப்படிக்கூட ஒரு அநியாயம் உண்டா பாட்டி? சொந்த பெண்டாட்டியினிடமே திருட்டா?' என்றாள் கனகா.

'மூன்று சீட்டு, குதிரைப் பந்தயம் என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டிருந்தாய்?' என்றாள் காமுப் பாட்டி.

'பாவம், கத்தரிக்கும்பொழுது கத்தரிக்கோல் எக்கச்சக்கமாகக் கழுத்தில் பட்டுவிடவே, அகப்பட்டுக்கொண்டு விட்டார் 'ரேஸ் ஆழ்வார்'. இல்லையென்றால், யாரோ திருடன் கொண்டு போய் விட்டதாகத்தானே முடிவு செய்து விடுவார்கள்?' என்றாள் கனகா.

'அதைத்தானே முக்கியமாகச் சொல்லவந்தேன். இது இன்று நேற்று ஏற்பட்ட வழக்கமில்லையாம். ரொம்ப நாளாக இந்த மாதிரி, கல்யாணியின் நகை ஒன்று மாற்றியொன்று திடீர் திடீரென்று அந்தர்த்தானமாகிவிடுமாம். உண்மையிலேயே யாரோ திருடன்தான் கொண்டுபோய்விட்டதாக அவள் முடிவு செய்துவிடுவாளாம். இதில் என்ன வேடிக்கையென்றால், தான் நகையைத் திருடினதுமல்லாமல், இந்தமாதிரி அவ்வப்பொழுது நகைகளைப் பறிகொடுத்துக் கொண்டிருந்தால், என்னவென்று அர்த்தமாம்? பொறுப்பு என்பது கொஞ்சமாவது இல்லையென்றால், எப்படி உருப்படும் இந்தக் குடும்பம்?' என்று கல்யாணியைக் கோபித்துக்கொள்ளுமாம் கல்யாணியின் கணவன்.

'இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் சாந்தாவின் பிறந்தகம் கொஞ்சம் வசதியுள்ள குடும்பமாம். அவளுடைய பெற்றோர்களுக்குச் சாந்தா ஒரே பெண்ணாம். சகோதரர்கள் மூன்று பேர்கள் இருக்கிறார்களாம். எல்லோரும் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார்களாம். பண்டிகை, பிறந்த நாள் என்று வந்தால், சாந்தாவின் சகோதரர்கள், அவளுக்கு ஏதாவது நகையோ, புடவையோ வாங்கிக் கொடுப்பார்களாம். இது விஷயத்தில்தான் கல்யாணிக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட ஆரம்பித்துவிட்டது. நாளாக ஆக அது வலுக்க ஆரம்பித்துவிட்டது. 'என்னதான் பிரியமாக இருந்தாலும் அவ்வப்பொழுது நகையோ, புடவையோ வாங்கிக் கொடுக்க அவர்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? இதனுடைய மர்மம் இதுதான். அதாவது அவ்வப்பொழுது என்னுடைய நகைகள் திடீர் திடீரென்று அந்தர்த்தானமாகிவிடுவதற்குக் காரணம் சாந்தாதான். தனது நகைகளுக்கு வேறு எங்கிருந்தோ திருடன் வந்து குதித்துவிடவில்லை. சாந்தாவேதான் அந்தத் திருடன். அவ்வப்பொழுது நகைகளைத் திருடவேண்டியது. பிறந்தகத்தில் கொண்டு கொடுக்க வேண்டியது. அவர்கள் அங்கே அதை உருக்கியோ, விற்றோ வேறு நகைகள் வாங்கி, பண்டிகை, பிறந்தநாள் பரிசென்று, சாந்தாவிடம் கொண்டு கொடுத்து விடவேண்டியது. இதுதான் விஷயம்' என்று ஒரேயடியாக ஜோடனை செய்துவிட ஆரம்பித்துவிட்டாள் கல்யாணி.





'காக்கை உட்காருவதற்கும் பனம்பழம் விழுவதற்கும் சரியாக இருக்கிறதென்ற' கதையாக, கல்யாணியின் நகையொன்று காணாமற் போவதற்கும், அதே சமயத்தில் சாந்தாவின்மீது புது நகையொன்று ஏறுவதற்கும் சரியாக இருந்தால், கல்யாணியின் ஊகத்தை நம்பத்தானே வேண்டியிருக்கிறது?' என்றாள் காமுப்பாட்டி.

'இதில் இன்னொரு அசந்தர்ப்பம் என்னவென்றால், இந்தமாதிரி 'நாள், கிழமை' காலங்களில், நாலுபேர் வந்திருக்கும்பொழுது, இப்படி இவன் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் திருட்டு வேலை செய்துவிட்டால், அனாவசியமாக, வந்திருப்பவர்கள்மீது தானே சந்தேகம் ஏற்படும்?' என்றாள் கமலாபாட்டி.

'அந்தமாதிரியும் ஒரு சமயம் நடந்துவிட்டதாம். அன்று இப்படித்தான் வீட்டில் ஏதோ விசேஷமாம். அந்த அயோக்கியன் கல்யாணியின் அகமுடையான் சமயம் பார்த்து ஒரு வெள்ளிச் செம்பைப் பதம் பார்த்துவிட்டானாம். இப்படி வேலியே பயிரை மேயும் என்று யாராவது எதிர்பார்க்க முடியுமா? அதைப் புரோகிதர்தான் எடுத்துவிட்டாரென்று அவர் மீது ஒரேயடியாக எல்லோரும் பழியைச் சுமத்திவிட்டார்களாம். புரோகிதர் பாவம், தான் நிரபராதி என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தாராம். கல்யாணியின் கணவன்தான், போலீஸை அழைத்து வந்து, மிரட்டி, உருட்டி, அந்தப் புரோகிதரிடமிருந்து அந்த செம்புக்குண்டான கிரயத்தை வசூல் செய்துவிட்டதாம்' என்றாள் காமுப்பாட்டி.

'என்ன அநியாயம்! இதற்கெல்லாம் என்ன கதிதான் கிடைக்குமோ?' என்றாள் கமலாப் பாட்டி.

'ரேஸ், குடியெல்லாம் கூடாதுதான். என்னமோ பிராரப்தகர்மம், வந்து சேர்ந்துவிட்டது. ருஜுவாக மனைவியிடம்கேட்டு வாங்கிக்கொண்டு போய்த் தொலையக்கூடாதோ?' என்றாள் வனஜா.

'ருஜுவாக, ரேஸுக்கென்று போய்க் கேட்டால், ஒவ்வொரு மனைவியும் இந்தா, இந்தா என்று கொடுப்பதற்குக் காத்துக்கொண்டுதானே இருக்கிறாள்? நீ எந்த உலகத்திலடியம்மா இருக்கிறாய்?' என்றாள் கோகிலா.

'அப்புறம் என்ன நடந்தது சொல்லுங்கள்?' என்றாள் கனகா.

'நடப்பதென்ன? இத்தனைநாள் நகைகள் காணாமற் போய்விட்டதற்குத் தனது கணவன்தான் காரணமென்று சந்தேகமில்லாமல் தெரிந்துவிட்டதாம் கல்யாணிக்கு. சாந்தாவின் நகைகள் விஷயம்தான் நினைத்ததுபோல் 'இல்லுமல்லு' அல்லவென்றும், உண்மையாகவே அவை, அவளுடைய சகோதரர்கள் பிரீதியாகச் செய்து கொடுத்தவை என்றும் விளங்கிவிட்டதாம். உடனே சாந்தாவிடம் சென்று, தான் அவளைப்பற்றித் தவறாக நினைத்துவிட்டதற்கு மன்னிப்பு கோரினளாம். சாந்தாவும் நல்ல பெண் பாவம். சந்தர்ப்ப சூழ்நிலைதான் கல்யாணி தன்னைப்பற்றித் தவறாக நினைக்க ஏதுவாக இருந்ததென்றும், அது கல்யாணியின் தவறில்லையென்றும் சொல்லிற்றாம்' என்றாள் காமுப்பாட்டி.

'ஒருவனுடைய கெட்ட பழக்கத்தினால் எத்தனை பேருக்கு எவ்வளவு சங்கடங்கள் உண்டாகின்றன. அதுவும் இந்த மாதிரி, சமயம் பார்த்துச் செய்துவிட்டு, அதைப் பிறர்மீது சுமத்தப் பார்ப்பது ரொம்பரொம்ப அயோக்கியத்தனம்' என்றாள் வனஜா.

'வரவர காலம் போகிற போக்கைப் பார்த்தால், ரொம்பவும் பயங்கரமாக இருக்கிறது. இது எங்கு, எப்படி போய் நிற்கும் என்றே தெரியவில்லை. கண், மண் தெரியாமல் வாயுவேகம், மனோவேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கிறது அதர்மம். ஆனால், உலகம் ரொம்ப ரொம்ப முன்னேறிவிட்டதாக மார் தட்டுகிறது. என்ன முன்னேற்றமோ? என்ன நாகரிகமோ? நேரமாகிறது. நான் வருகிறேன்' என்று எழுந்தாள் கனகா.

☆



# வாழப் பிறந்தவள்

எல்லார்வி

கல்யாண ஊர்வலம் தெருவில் வந்துகொண்டிருந்தது. புகழ் பெற்ற வித்துவான் நாதசுரம் வாசித்ததால் கல்யாணக்காரர்களைத் தவிர மற்றும் பலரும் குழுமி நின்று அந்தக் குழல் இசையை ரசித்துக் கொண்டிருந்தனர். அதனால் ஊர்வலம் அங்கங்கே நெடுநேரம் நின்று நின்று போய்க் கொண்டிருந்தது. தெருவில் வண்டிப் போக்குவரத்துக்குக் கூட வகை இல்லை. ஆடவர்கள் முன்புறத்திலும் பெண்மணிகள் பின்புறத்திலும் கூடி நின்று இசையை ரசிப்பதும் இடையிடையே உரையாடுவதுமாக இருந்தனர்.

பெண்கள் குழுவில் ஏறக்குறைய இருபத்தைந்து வயதுடைய ஒரு மாது சற்றே நலிந்த தோற்றம் உடையவளாக இருந்தாள். அவளால் நீண்ட நேரம் நிலைத்து நிற்க முடியவில்லை. அடிக்கடி சோர்ந்தாள். ஒதுக்குப்புறமான இடத்தை நாடி உட்கார்ந்தாள்.

வெகு நேரமாக அந்த ஊர்வலத்தைத் தொடர்ந்து, ஆனால் அதை அணுகாமல் வந்து கொண்டிருந்த முப்பது வயதுடைய ஒரு மனிதன் மேற்குறித்த பெண்ணையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

ஊர்வலம் ஒரு தெரு முனையில் திரும்பி நின்றது. அங்கே பூட்டிக்கிடந்த ஒரு வீட்டின் திண்ணையில் அந்தப் பெண் ஓய்ந்து உட்கார்ந்துகொண்டாள். உட்காரவும் முடியாமல் அப்படியே படுத்துக்கொண்டாள்.

'பானு!...'

'யாரது?'– அவள் திடுக்கிட்டு வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தாள். 'ஓ!...நீங்களா?' என்றாள். அவள் உடம்பு வெடவெடத்தது.

'நானேதான். வெகு நேரமாக உன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறேன்.'

'என்ன விசேஷம்?'

'தற்செயலாக உன்னைப் பார்த்தேன். பார்த்துவிட்டுப் பேசாமல் போக மனம் வரவில்லை. அடிக்கடி நீ சோர்ந்து தனி இடம் நாடி உட்காருவதைக் கண்டதும்

இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போகலாம் என்று ஒரு சபலம்...'

'மிகவும் அழகாக இருக்கிறது. பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? பேசுவதற்கு இதுதானா இடம்? இங்கேதானா சந்தர்ப்பம்?'

'வேறு இடமும் சமயமும்தான் இல்லவே இல்லையே?'

'ஏன் இல்லாமல்? பகிரங்கமாக வீட்டிற்கு வருவது; பேச வேண்டியதைப் பேசுவது.'

'நீயும் உன்னைச் சார்ந்தவர்களுந்தான் அதற்கு இடமே இல்லாமல் செய்து விட்டீர்களே?'

'தவறு. நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும்தான் அதற்குக் காரணம்.'

'சரி சரி. கிடைத்திருக்கிற சொற்ப அவகாசத்தில் பழைய குப்பைகளைக் கிளறிக் கொண்டிருக்க வேண்டாம். மேல் நடக்க வேண்டியவற்றைப் பற்றிப் பேசத்தான் இப்போது நான் உன்னைச் சந்தித்தது. இனி உன் உத்தேசம் என்ன? இந்நிலை நீடிப்பதைத்தான் நீ விரும்புகிறாயா; அல்லது...'

'எல்லாம் அண்ணா பாடு.'

'என்ன!...' — அவன் பேச்சில் சூடு ஏறிற்று. 'வாழ்வு பாழாவது உனக்கா, உன் அண்ணாவுக்கா?' என்றான்.

'எதற்காக இப்படி இரைகிறீர்கள்? கூச்சல் போட்டுக் கூட்டம் கூட்ட ஆசைப்படுகிறீர்களா? நாளை அங்கே வந்து அண்ணாவிடம் எல்லாம் பேசிக்கொள்ளுங்கள்' — இப்படிச் சொல்லிக் கொண்டே, அவள் போகக் கிளம்பினாள்.

'நில் பானு. உன் அண்ணா என்னை மதிப்பதே இல்லை; முகம் கொடுத்துப் பேசுவதே இல்லை. அப்படிப்பட்டவனிடம் வந்து பிச்சை கேட்பவன்போல் நிற்க எனக்கு விருப்பம் இல்லை. ஏன்? உன்னைப் பார்த்துப் பேசக்கூடத்தான் விருப்பம் இல்லாதவனாக இருந்தேன். நமக்குள் பிரிவினை ஏற்பட்டு நாலாவது வருடம் பிறந்துவிட்டபடியால், சட்ட முறைப்படி நடவடிக்கை எடுக்கத்தான் நான் தயாராக இருந்தேன். ஆபீஸ் நண்பர் ஆனந்தன்தான் என் போக்கைத் தடுத்தார். அவர் உபதேசப்படிக் கடைசி முயற்சியாக உன்னை இப்போது சந்தித்தேன். உன் விருப்பப்படி நாளை உன் அண்ணாவிடமும் வருகிறேன். ஆனால்...'

ஊர்வலம் நகரத் தொடங்கியது. பெண்கள் பகுதியிலிருந்து 'பானு! பானு!' என்று குரல் ஒலித்தது. அதே சமயத்தில் அந்த வீட்டுக்கு உடையவர்கள் படி ஏறி வந்தார்கள். பானு வேகமாக நடந்து சென்று, பெண்களின் கூட்டத்தில் கலந்தாள். பாஸ்கரன் சிலையாய் நின்றான். நீண்ட நேரத்திற்குப் பிறகே தன் வழி சென்றான்.

மறுநாள் மாலையில் பாஸ்கரன் போனபோது அவனே ஆச்சரியப்படத்தக்க விதத்தில் கல்யாணம் இன்முகத்துடன், 'வாருங்கள் மாப்பிள்ளை' என்று வரவேற்றான். 'பானு! மாப்பிள்ளைக்குக் காப்பி கொண்டு வா' என்றான். அவசியம் நேர்ந்தால் கைகலப்புக்கும் தயாரான முறையில் வந்திருந்த பாஸ்கரன், மகிழ்ச்சியே அடைந்தான். வெள்ளை உள்ளம் படைத்த அவன், தன் இயல்பின்படி அதை மைத்துனனிடம் சொல்லியும் விட்டான்.

கல்யாணம் கலகலவென்று சிரித்தான். 'கைகலப்பாவது மாப்பிள்ளை? எதற்காக அப்படியெல்லாம் நேர வேண்டும்? நீங்கள் பானுவை விரும்புகிறீர்கள்; பானு உங்களை விரும்புகிறாள்; குழந்தை ரேணுகா உங்கள் இருவரையும் விரும்புகிறாள். நடுவிலே நான் உங்களைப் பிரித்து வைத்து வேடிக்கை பார்க்கவா இருக்கிறேன்? ஆரம்பத்திலே எனக்கும் வேகம் இருந்தது. உங்களையும் உங்களைச் சார்ந்தவர்களையும் கசக்கிப் பிழிந்துவிட வேண்டும் என்றுதான் எண்ணினேன். பானுவுக்கு இனி இல்வாழ்வு இல்லை என்ற தீர்மானத்தோடுதான் பணத்தைச் செலவிட்டு ஓர் ஆசிரியையைத் திட்டமிட்டுப் பிரத்தியேக முறையில் அவளுக்குப் படிப்பும் அளித்தேன். இந்த ஆண்டில் ஆசிரியைப் பயிற்சிக்கு அனுப்பவும் உத்தேசம். ஆயினும் நானும் மனிதன்தானே? பெண்டு பிள்ளைகளோடு சுகவாழ்வில் இருப்பவன்தானே? காலம் என்னும் மருந்து என் மனப்புண்ணைச் சிறுகச் சிறுக ஆற்றிவிட்டது. பானுவின் வாழ்விலே மறுமலர்ச்சிக்கு வழி என்ன என்று சிந்தனை செய்துகொண்டே இருந்தேன். அவளும் அதே நினைவில் ஏங்குவதையும் உணர்ந்தேன். உங்கள் மனத்திலும் அந்த நினைப்பு முதிர்ந்திருப்பதை இதோ காண்கிறேன். ஆகவே, நல்ல வேளையில் உங்கள் மனைவியையும் குழந்தையையும் ஏற்றுக் கொள்ளுங்கள். தடை சொல்ல யாரும் இல்லை. ஆனால் ஒரே ஒரு நிபந்தனை...'

உள்ளம் தாங்காத மகிழ்ச்சியுடன் மைத்துனன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பாஸ்கரன், 'நிபந்தனை' என்றதும் சட்டென்று, 'என்ன?' என்றான்.



மனைவி:—(கணவனிடம்) இனிமேல் அடிக்கடி, சாப்பாட்டுடன் கடற்கரைக்கு வந்து, ஜாலியாக இருந்துவிட்டுப் போவது என்று முடிவு செய்துவிட்டேன். ம்......எப்படி என் யோசனை?

'பானுவும் நீங்களும் தனிக் குடித்தனமாக இருக்கவேண்டும்.'

'என்ன!...தனிக் குடித்தனமா?...'

பாஸ்கரன் இருக்கையினின்றும் எழுந்துவிட்டான்.

'ஆமாம். என் தங்கையை இனி உங்கள் பெற்றோரிடம் அனுப்ப மாட்டேன்.'

'அப்படியானால் இதுதான் நம் கடைசிச் சந்திப்பு!'

'விதி அப்படி இருந்தால் அதற்கு யார் என்ன செய்ய முடியும்?' — கல்யாணம் துண்டை எடுத்து மேலே போட்டுக் கொண்டு வெளியே போய்விட்டான்.

'பானு!...'

கதவருகில் நின்றிருந்த பானு அவன்முன் வந்தாள்.

'உன் அண்ணாவின் முடிவு தானே உன் முடிவும்? சரி. ரேணுகா எங்கே? கூப்பிடு.'

'கமலா அத்தையிடம் இருக்கிறாள்.'

'ஓகோ? நான் இன்று இங்கு வரப்போகிறேன்; அழைத்துப் போய்விடுவேன் என்று முன் ஏற்பாடாக...'

'நீங்களாக ஏன் இப்படிக் கோணலாக எண்ணுகிறீர்கள்? அத்தை அவளை அழைத்துச் சென்று பத்து நாள் ஆகிறது. நேற்றே கொண்டுவிடுவதாகச் சொன்னாள். இந்த நிமிஷத்தில் கூட வரலாம்.'

'சரி. அது இருக்கட்டும். உன் தீர்மானம் என்ன?'

'சற்றுப் பொறுமையாகக் கேட்கிறீர்களா?'

'சொல்லு.'

'நீங்கள் சாது. வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவர். வீட்டில் என்ன நடக்கிறது என்பதை அறியாதவர். நானும் என்னால் முடிந்தவரையில் வளைந்து கொடுத்துக் கொண்டுதான் போனேன். ஆனால் உங்கள் அம்மாவின் போக்கு, 'குனியக் குனியக் குட்டுகிறவன் முட்டாளா? குட்டக் குட்டக் குனிகிறவன் முட்டாளா?' என்பதுபோல் ஆகிவிட்டது. இன்னதுதான் பேசுவது என்ற வரையறையே இல்லை. 'இவள் வாழும் பெண்', 'நம் பிள்ளையின் மனைவி' என்பனபோன்ற நினைவே உங்கள் அம்மா மனத்தில் இல்லை. நிலைமை எல்லையை மீறுகிறபோது நானும் சில வார்த்தை பதில் சொல்லத்தான் செய்தேன். 'கலத்தில் இட்டுக் கையைப் பிடிக்காதே' என்பார்கள். தினசரி உங்கள் அம்மா அதைத்தான் செய்தார்கள். வீட்டின் எல்லா அலுவல்களையும் முடித்துக் கொண்டு நடுப்பகலுக்குமேல் இலையிலே சோற்றை வைத்துக் கொண்டு உட்கார்ந்தால், 'பாழும் கடன்', 'தண்டச் சோறு'–இப்படி என்ன என்னவோ! என் வாயில் ஒரு பிடி சோறு போனால் கலத்தில் நாலு பொட்டுக் கண்ணீர் விழும். இதெல்லாம் உங்கள் அப்பாவுக்குத் தெரியாது. மனம் தாளாமல் நான் சொல்கிற வார்த்தைகளை மட்டும் எடுத்துக் கொண்டு சண்டையாகத் தொடங்கிப் பெரிதாக வளர்ப்பார்கள். உங்கள் அப்பா அதைத்தான் அறிவார். ஏன்? முதலில் உங்களுக்குத்தான் உண்மை தெரியுமோ? நானும் சொல்ல விரும்புவதில்லை; சமயமும் கிட்டுவதில்லை.

'ஒரு நாள் ரகளை பெரிதாகி, 'நீ மானம் உள்ளவளாக இருந்தால் இங்கிருந்து போய்விடு' என்று அம்மா சொல்லவும், நான் என் அண்ணாவுக்குக் கடிதம் எழுதி வரவழைத்துப் புறப்படவும் நேர்ந்தது. நீங்கள் ஊரில் இல்லை. 'இனிமேல் இங்கே வராதே' என்றார்கள். வாழும் பெண்ணை இப்படிச் சொல்லலாமா? அப்படிப்பட்டவர்களிடம் நான் எப்படி மீண்டும் வருவது? நீங்களே சொல்லுங்கள்.'

பாஸ்கரன் பதுமையாய்ச் சமைந்திருந்தான்.

'இவள் சொல்வதை அப்படியே நம்பக்கூடாது; இவள்மட்டும் நல்லவள் என்பது என்ன நிச்சயம்?' என்று உங்களுக்குத் தோன்றலாம்; யாருக்குமே தோன்றலாம். நம்பவேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. இதுவரை போனதுபோக, இனியும் நான் அங்கே வந்தால் பழைய ரகளைதான். இன்னும் கடுமையாகவே இருக்கும். அது நான் உங்கள் அம்மா முகத்திலே விழித்த நேரத்தின் பலன் – அவ்வளவுதான். ஆகவே, மீளவும் அந்தப் போராட்டமும் நரக வாழ்க்கையும் யாருக்குமே அமைதி இல்லாத நிலையும் வேண்டாம் என்றுதான் நான் சொல்கிறேன். அல், அயல், அக்கம், பக்கம் யாரிடமாவது இதுவரை நான் அம்மாவைப்பற்றி ஒரு வார்த்தை சொன்னதில்லை. உங்களிடமே சொல்லாதவள் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? ஆனால் அதுவும் ஒரு வகையில் பிழையாகிவிட்டது. விவரம் இன்னதென்று புரியாததால் தானே மூன்று வருஷமாக நீங்கள் என்னை மறந்து, குழந்தையை மறந்து இருந்துவிட்டீர்கள்?' —

உணர்ச்சியைத் தாளமாட்டாமல் முகத்தை மூடிக்கொண்டு அழுதாள் பானு. பாஸ்கரன் வேதனையில் தோய்ந்து கிடந்தான். 'அழாதே பானு. சமீபத்தில் டைபாய்டில் கிடந்து பிழைத்தாய் என்று கேள்விப்பட்டேன். அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே' என்றான்.

அவள் அழுகையை நிறுத்தினாள்.

'சரி. இதைப்பற்றி நான் யோசிக்கிறேன்.'

'நன்றாக யோசியுங்கள். தனி ஜாகை என்றதனாலேயே பகை என்பது இல்லை. நாள், கிழமை, பண்டிகை என்றால் ஒருவருக்கொருவர் போய் வந்துகொண்டு, தேனைத் தொட்டு நீரைத் தொட்டாற்போல் இருப்போம். சொற்ப வருமானத்தில் எப்படித் தனித் குடித்தனத்தைச் சமாளிப்பது என்ற கவலை உங்களுக்கு வேண்டாம். அந்தப் பொறுப்பு என்னுடையது. நன்றாக யோசியுங்கள். குழந்தையும் 'அப்பா, அப்பா' என்று ஏங்குகிறாள்' —

மறுபடி அவளுக்கு அழுகை வந்தது. ஏன்? பாஸ்கரனே கண் கலங்கிவிட்டான்.

'சரி. நான் போய்விட்டு இரண்டு நாளில் வருகிறேன்.'

விடை பெற்று வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கிய பாஸ்கரனின் உள்ளத்தில் தாய் இடம் பெற்றாள், தந்தை இடம் பெற்றார், தம்பிகள், தங்கைகள், மற்றும் உள்ள உறவினர் அனைவரும் இடம் பெற்றனர். ஒவ்வொருவரைப் பற்றியும் தனித் தனியே அலசி அலசி ஆராய்ந்தான். வீட்டை அடைந்து, உணவு கொண்டு, படுத்து, வெகு நேரம் புரண்டு, கண்மூடுகிற



வரையில் உள்ளத்தில் ஒரே குழப்பந்தான். ஆராய ஆராய அநுதாபம் முழுவதும் பானுவிடமே சேர்ந்தது. 'தனி ஜாகை வைப்பதுதான் சரி' என்ற முடிவோடு கண் அயர்ந்தான். ஆனால்—

காலையில் எழுந்ததும், 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்பதுபோலப் பெரிய பிரச்னை ஒன்று மலைபோல் முன் நின்றது. தகப்பனாரிடம் எதிரே நின்றோ, பின்னாலிருந்து இரைந்த குரலிலோ பேசியே அறியாத அவன், இந்தச் செய்தியை அவரிடம் எப்படிப் பிரஸ்தாபிப்பது? தாயிடம் பேசுவது விபரீதம். பல பல யோசித்து மூன்றாம் மனிதர் ஒருவர்மூலம் மெதுவாகச் செய்தியை எட்டவிட்டான்.

அவ்வளவுதான்; அந்த நிமிஷ முதல் வீட்டில் பெரும் புயல் வீசத் தொடங்கிவிட்டது. தாய் ஒருபுறம், தகப்பனார் ஒருபுறம் வாய்க்கு வந்தபடி இரைச்சல் போட ஆரம்பித்துவிட்டார்கள்.

'ஆயிரம் பாடு அரும்பாடு பட்டுப் பெற்று, வளர்த்து, படிக்க வைத்து, மனுஷனாக்கிவிட்ட பெற்றோர்களை விஷமாக எண்ணும்படி அந்த மாயக்குறத்தி என் பிள்ளையை மயக்கி உரையேற்றிக் கலைத்துவிட்டாள்' – இப்படி.

பாஸ்கரனுக்கு ஒன்றுமே புரியவில்லை. மனைவி தனிக் குடித்தனம்தான் வேண்டும் என்கிறாள்; தாய் தகப்பனோ அது கூடாது என்கிறார்கள். 'அந்த நாய் இங்கே வந்து எங்கள் காலடியிலே விழுந்து மன்னிப்புப் பெற வேண்டும்' என்கிறாள் அம்மா. அப்படி ஒருவேளை பானுவைக் கெஞ்சி இசைய வைத்தாலும் அதன் பிறகு பழைய நிலை ஏற்படாமல் இருக்கும் என்பதில் அவனுக்கே நம்பிக்கை இல்லை. 'சண்டி முரண்டினால் காடு கொள்ளாது' என்பதுபோல் பெற்றோரின் அங்காரத்தை ஒதுக்கியே தனி ஜாகை வைத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தான். ஆனந்தன் அதைத் தடுத்தான். 'பொறு. சமயம் பார்த்து நான் உன் அப்பாவிடம் பேசுகிறேன். அவர்களின் இசைவோடு அதைச் செய்வதுதான் சிறப்பு' என்றான். காலம் ஓடிக்கொண்டிருந்தது.

'லக்ஷ்மி!...இங்கே வா. சீக்கிரம் வா.'

'என்ன?...என்ன?' — லக்ஷ்மி பதறிக்கொண்டு வந்தாள்.

'குழந்தை குந்தளம் வருகிறாளாம். இதோ கடிதம். அங்கே ஒரே ரகளையாம்!'

'ஐயையோ! எல்லாம் அந்தக் குடிகேடி அபிராமியால்தான். அவள் நாசமாய்ப் போக!'

'நீ இப்படிச் சொல்கிறாய்; குந்தளம் என்ன எழுதியிருக்கிறாள் தெரியுமா? 'பானு மன்னியின் வதை வீண் போகவில்லை' என்கிறாள்.

'இப்போது என்ன செய்கிறது?'

'செய்வதென்ன? காலையில் ரெயிலடிக்குப் போய்க் குந்தளத்தை அழைத்து வர வேண்டியதுதான்.'

'அப்புறம்?...குழந்தையின் வாழ்க்கை?'

'விதியின் கையில்.'

'என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? உடனே கிளம்பிப் போங்களேன். நானும் வேண்டுமானால் வருகிறேன்.'

'எதற்கு? அவமானப்பட்டு வரவா?'

'உங்களுக்கு இது விளையாட்டாக இருக்கு' —

'அட சட்!' – சுந்தரம் கடிதத்தை மனைவியின் முகத்திலே விட்டெறிந்துவிட்டு எழுந்து சென்றார். நடையில் போகும் போது அவர் முணுமுணுத்த, 'வினை நட்டவன் வினை அறுப்பான்; முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்ற மூதுரைகள் பொய்க்குமா?' என்ற சொற்கள் லக்ஷ்மியின் செவியில் நாராசமாய்ப் பாய்ந்தன. அழுதாள், அரற்றினாள், அன்றெல்லாம் வீடு அல்லோல கல்லோலப்பட்டது. பாஸ்கரன் ஒதுங்கி இருந்தான்.

ரெயிலடி சென்று திரும்பி வந்து டாக்ஸியிலிருந்து இறங்கி உள்ளே சென்ற சுந்தரம், சாய்வு நாற்காலியிலே பொத்தென்று விழுந்தார். லக்ஷ்மி அவரை அணுகினாள். அவளிடம் பரபரப்பு இல்லை. 'குழந்தை எங்கே?' என்று அவள் கேட்கவில்லை. அவளுடைய முகத்திலே நிம்மதி நிலவியிருந்தது. சுந்தரம் ஆச்சரியப்பட்டார்.

'ஏன் எதுவுமே கேட்கவில்லை?'



'நேற்றுத்தான் முகத்திலே கடிதத்தை விட்டெறிந்தீர்கள். இன்றைக்கும் அப்படி எதுவும் வேண்டாம்; நீங்களாகச் சொல்வதைக் கேட்டுக்கொள்ளலாம் என்றுதான்.'

'ஓகோ?...ரெயில் லேட்டாக வந்தது. ஆனால் அதில் குந்தளம் வரவில்லை.'

'என்ன காரணமோ?'

'விபரீதம் எதுவும் நேராமல் இருந்தால் சரிதான். ரிப்ளை தந்தி கொடுத்திருக்கிறேன். பதில் வந்துவிடும்.'

'ஏழுமலையான்தான் இருக்கிறான்.'

'லக்ஷ்மி...'

'என்ன?'

'வருகிற வழியில் டாக்ஸியில் ஒரு பெண் குழந்தை அகப்பட்டுக்கொள்ளத் தெரிந்தது. வண்டியை நிறுத்தி இறங்கிப் பார்த்தால், அந்தக் குழந்தை, 'தாத்தா' என்று என் காலைக் கட்டிக் கொண்டது. யார் தெரியுமா? நம்ம ரேணுகாதான். என் கையைப் பிடித்துக்கொண்டு கரகரவென்று இழுத்துக்கொண்டு போனாள், எதிரே இருந்த வீட்டுக்கு. பானு வந்து நமஸ்கரித்தாள். வற்புறுத்திக் காப்பி குடிக்கச் செய்தாள். லக்ஷ்மி,...குந்தளம் எழுதியிருப்பதுபோல அந்தப் பெண் பானுவின் வதை நமக்கு வேண்டாம்.'

'இப்படி நான் நேற்றே தீர்மானித்துவிட்டேன். நான் தீர்மானித்தேனோ இல்லையோ, அங்கே ஊசலாடிக் கொண்டிருந்த குந்தளத்தின் வாழ்க்கை நிலைத்து விட்டது.'

'என்ன! நீ என்ன சொல்கிறாய் லக்ஷ்மி?'

'இதோ, இந்தக் கடிதம் சற்று முன் வந்தது. படித்துப் பாருங்கள். எல்லாம் விளங்கும்.'

'...முன்னோர் செய்த புண்ணியத்தால் என் கணவரின் நண்பர் தற்செயலாக இங்கே...வந்தவர் குறுக்கிட்டு, பல நல்லுரைகள் கூறி, போராடி என் வாழ்வை நிலைக்கச் செய்துவிட்டார். என் மாமியார் என்மீது சுமத்திய பழி அபாண்டமென்று தாமாகவே ஒப்புக்கொண்டு விட்டார். என் கணவரின் நண்பர் யார் தெரியுமா? பானு மன்னியின் அண்ணா கல்யாணம்தான். தம் தங்கையை வாழாவெட்டியாக வைத்துக்கொண்டிருக்கிற துயரம் அவருக்கல்லவா தெரியும்? ஏதோ, இந்தத் தடவை என் கண்டம் தவறிற்று. கூடிய சீக்கிரம் மன்னி நல்வாழ்வு பெற்றால்தான் என் வாழ்வும் செழிக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. பிறகு உங்கள் இஷ்டம்.'

'பார்த்தாயா லக்ஷ்மி? பட்டது போதும். இனியேனும் பானுவை நாம் அழைத்துக் கொண்டு விடுவோம்.'

'முன்பே கண்ணனையும் அடுத்த வீட்டு அலமுவையும் அனுப்பி விட்டேனே. 'என் பிழைகளை நான் உணர்ந்துவிட்டேன்; நான் அவளிடம் மன்னிப்புக் கேட்பது சரி அல்ல; ஆகவே, கிளம்பி வந்து சேரவேண்டும்' என்று சொல்லி அனுப்பியிருக்கிறேன். வருகிற சமயந்தான்.'

'அப்பாடா! இப்போதுதான் என் மனம் நிம்மதி பெற்றது.'

வாசலில் டாக்ஸி. பானு சிரித்த முகத்துடன் வந்து பெரியோரை நமஸ்கரித்தாள். ரேணுகா, 'தாத்தா! பாட்டி!' என்று உற்சாகமேலீட்டால் ஆர்ப்பரித்தாள். அந்த வீடு இப்போதுதான் சோபையுடன் திகழ்ந்தது.



# நாய் வால்

திக்விஜயன்

'ஆசிரியர் 'புதுமைப் பிரியனு'க்கு உடல் குணமில்லை; உடன் வரவும்' என்ற டெலிபோன் அழைப்பு காதில் விழுந்ததுமே டாக்டரது கழுத்தில் 'ஸ்டெதாஸ்கோப்' ஏறிவிட்டது. பிரபல பத்திரிகை ஆசிரியரும், தமிழ் நாட்டு எழுத்தாள ஜாம்பவானுமான ஸ்ரீமான் புதுமைப் பிரியனுக்கு ஆபத்து என்று கேள்விப்பட்ட பிறகு அவரால் சும்மா இருக்க இயலுமா? இலக்கிய டாக்டரின் உயிரைக் காப்பதேதான் தமிழுக்குச் சுற்றி வளைத்துச் செய்யக்கூடிய மகத்தான சேவை என்பது அந்த மருத்துவரின் நம்பிக்கை.

பச்சைத் தமிழனுக்கு [illegible] புதுமைப் பிரியன் பெயர். ஆசிரியர் பிரியனைத் தெரியாதவர் தமிழ்ப் பிரியனே இல்லை என்று துணிந்து கூறிவிடலாம். சுமார் கால்நூற்றாண்டாக அவர் தமிழுக்கு ஆற்றிவரும் சேவையால் தமிழ் வாசக உலகமே திக்கு முக்காடி வருகிறது. எங்கேயோ சர்க்கார் காரியாலயத்தில் பெயருக்கு வேலை செய்துவிட்டு பழுதாப் பேப்பரில் கதைகள் எழுதி அனுப்பத் தொடங்கியவர்தான், கண்டியூர் தணிகாசலம். தன்னுடைய சிருங்காரம் ததும்பும் நாவல்கள் மூலம் முன்னுக்கு வந்து, புதுமைப் பிரியனாக மாறி, ஒரு பத்திரிகை ஆசிரியராக நிரந்தர அவதாரம் எடுத்தவர் அவர். ஆனால், சில முதுபெரும் எழுத்தாளர்கள் போல் பிரபலமானவுடன் தீபாவளி மலருக்கு மட்டும் எழுதும் வருடாந்திர சிருஷ்டிகர்த்தாவாக ஓய்ந்து விடவில்லை! தேனீ போன்ற சுறுசுறுப்புடன், ஓயாது எழுத்தும், சுவையான கற்பனைகளும், கையாண்ட பற்பல புதுமைகளும் அவரது பெயரைப் பத்திரிகைகளின் ஏடுகளிலே நிரந்தரமாக்கி விட்டன.

பெயருக்கு ஏற்றாற்போல் அவர் ஒரு புதுமை விரும்பி. அவர் தொடாத விஷயங்கள் இல்லை.

தொட்டதை எல்லாம் (மசியால்) கரியாக்காத நாட்கள் இல்லை. சிறுகதை மன்னனைப் பத்திரிகை விளம்பரங்களால் முடிசூட்டப்பட்டவுடன், அத்துறைக்கு முழுக்குப் போட்டுவிட்டு நாவல் அம்சத்தை நண்ணினர். காதலில் ஆரம்பித்து கல்யாணத்திலோ, கல்யாணத்தில் தொடங்கி கருமாதியிலோ முடியும் சமூக சித்திரங்களை அவர் நிரந்தரமாகத் தீட்டவில்லை. அவரது புதுமை நோக்கு அவரைச் சரித்திரப் பாட்டையில் இழுத்துச் சென்றது. வரலாறு என்பதற்காக அக்பரையும், திப்புசுல்தானையும், சிவாஜியையும், சில, உருதுச் சொற்களையும், காதலையும், கடமையையும் அடிப்படையாகக்கொண்டு நவீனங்கள் புனையவில்லை. ஆராய்ச்சியாளர்கள் கண்டிருந்த மூவேந்தர் வரலாற்றையும், பண்டிதர்கள் படித்து வந்த பழம் பாடல்களையும் இணைத்து, மாண்புமிக்க தமிழ் நாட்டு மன்னர்களை அடிப்படையாகக்கொண்டு சரித்திர நாவல்கள் எழுப்பினர். அவரது பாத்திரங்களது பெயர்களை வாசகர்கள் ஜீரணிக்கக் கஷ்டப்பட்டாலும், சம்பவங்கள் மூளையைக் கலக்கினாலும், அதில் வரும் அசுவங்களும், பாதாளச் சுரங்கங்களும், அரசிளங்குமரிகளும், தேவாரப் பாடல்களும், பராக்கிரமசாலிகளும் ரஸிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றனர்.

புதுமை பேனு எடுத்தார் என்ருல் இருபது பக்கங்கள். இத்தனைக்கும் அதன் பெயர் சிறுகதை. அவரது பாத்திரங்கள் ஒவ்வொருவராக நேரடியாகக் கதை சொல்ல ஆரம்பித்தால் ஆயிரத்தோரு இரவுகள் காணுது. அவரது தொடர்கதைகள் வெளி வருகிறது என்று 'லித்தோ போஸ்டர்'கள் கட்டியங்கூறியவுடனேயே வாசகர்கள் உஷாராகி விடுவார்கள். கதை முடிவடைந்து 'முற்றிற்று' என்ற பஞ்சாக்ஷரங்களைப் பார்ப்பதற்கு இருபத்தி நான்கு மாதங்களாவது ஆகும். தொடர்ந்து அதனை வாசித்து முடிக்கும்வரை தங்கள் ஜீவன் இருக்கும் என்ற நம்பிக்கை இல்லாத கிழவர்கள் அந்த நவீனத்தைத் தொடுவதில்லை. நாவல் அரையும் குறையுமாக இருக்கும்போது ஆயுள் முடிந்தால், ஒருவேளை ஆவிரூபத்தில் வந்து மிகுதி படிக்க வேண்டி இருக்குமோ என்ற பயம் முதியோர்களுக்கு. இளைஞர்களோ அவ்வப்போது படித்து மாளாது; இரண்டு ஆண்டுகள் கழித்து ஒரே மூச்சில் படித்துக்கொள்ளலாம்' என்று நாவல் பாகத்தைக் கிழித்து தனியாக 'பைல்' செய்து விடுவது வழக்கம்.

அவரது நாவல் முதல் அத்தியாயம் வெளியாகு முன்பே அதைப்பற்றிப் பாராட்டுக் கடிதங்கள் 'ஆசிரியருக்கு' என்ற பகுதியில் வெளியாவதுண்டு. அவற்றைப் பார்க்கும்போது சினிமாப் படங்களுக்குப் பத்திரிகைக் கண்காட்சி என்ற பிரத்யேக ஏற்பாடுபோல் நாவல்களுக்கு 'ரஸிகர்கள் ரிலீஸ்' என்று விசேஷமாக வைத்திருக்கிருர்களோ என்ற ஐயப்பாடு எழுவது சகஜம். அவரது முற்றுப்பெருத சரித்திர நாவல் இருபத்தி ஐந்தாவது வாரத்தை நெருங்கியவுடன் 'வெள்ளி விழா' கொண்டாடப்பட்டு மந்திரி ஒருவர் தலைமையில் 'வெள்ளிப் பேனு' பரிசளிக்கப்பட்ட வைபவம் மறக்க முடியாத நிகழ்ச்சி. (கோடயம், கத்தி பரிசளிக்கும் வழக்கம் அப்போது அமு[illegible] வில்லை.)

புதுமைப் பிரியன் ஆசிரியராக இருக்கும் பத்திரிகையில்



எத்தனையோ புதுமைகளைத் தோற்றுவித்திருப்பதை நினைவு கூறுகையில் அவரை 'ஸ்டண்ட் பிரும்மா' என்றே அழைக்கத் தோன்றும். ஒரு வாரம் அவரது பத்திரிகையில் ஒரே தலைப்பில் எட்டுக் கதைகள் வந்திருக்கும்; மற்ருெரு வாரம் எட்டுத் தலைப்புகளில் ஒரே கதை வந்திருக்கும்; இந்தப் புதுமையைக் கண்டு ரஸிகர்கள் பாராட்டியபடி இருப்பார்கள். ஒருசமயம் பத்திரிகை மேலட்டை இன்றி வெளிவந்த போது வாசக உலகம் புதுமை எனப் போற்றியது. (ஆனால் அந்த மாதம் அச்சக ஸ்டிரைக் நடந்ததன் விளைவு அது என்பது சகபத்திரிகையாளருக்கே தெரியும்!) குழந்தைகள் மலர் ஒன்றை பாதி அளவில் வெளி

யிட்டார். சிருங்கார மலர் அட்டையில் ரதியும் மன்மதனும் இலங்க, 'வசந்தம்' என்ற நாவலுடன் ஸென்டின் மணம் ஒன்று போட்டி போட்டது. 'பயங்கர இதழை'ப் பிரித்த வாசகர்களை ஆவிக் கதைகளைவிட மூன்றுவது பக்கத்தில் ஒவ்வொரு இதழிலும் அகப்பட்ட செத்த கரப்புதான் திகைக்க வைத்தது.

ஸ்ரீமான் புதுமை சிலோன் சங்கம் ஒன்றிற்கு சென்று வந்த பிறகு நான்கு பத்திரிகைகளில் பிரயாணம்பற்றி நாற்பது வாரம் தொடர்ந்து எழுதி வந்தார். 'கண்டேன் இலங்கையை', 'சிங்களத்திற்குச் சென்று வந்தேன்' என்ற கட்டுரைத் தொடர்களும், 'கண்டி அரசன்' என்ற நாவலும் அவரது சிங்கள விஜயத்திற்குச் சாட்சி கூறின. அவரது கதாநாயகர்களான சோழனும், பாண்டியனும் சிம்ஹசேனனாகவும், தண்டார நாயகனாகவும் மாறினர். கோடைக்கானலில் உலவிய அவரது சமூக சித்திரக் கதாநாயகிகள் இப்போது திரிகோணமலையில் திரியத் தொடங்கினர். பஞ்சாப் அகதிகளாகத் தோன்றி வந்த அபலைகள் சிங்களவர் வெறிக்குச் சிக்கிய மாதுசிரோமணிகளாக வேடம் புனைந்தனர். இவ்வாறு அவரது விஜயம் சிங்களத் தீவினுக்கு ஒரு பாலம் அமைத்தது என்று கூறினால் மிகையல்ல.

புதுமைப் பிரியன் சிறந்த உழைப்பாளி என்பதற்கு அவர் அங்கம் வகிக்கும் கமிட்டிகளின் எண்ணிக்கையே சான்று கூறும். கதைப் போட்டிகள் நீதிபதி ஜாபிதா முதல் அரசாங்க அகடாமி குழுவரை அவரது பெயர் நீங்கமற நிறைந்திருக்கும். 'அடியேனுக்கு ஆங்கிலம் அவ்வளவு பரிச்சியமில்லை' என்ற அவரது கூற்றை அவையடக்கமாகவே எண்ணி, சர்க்கார் மொழிபெயர்ப்பு கமிட்டிகளில் அவரை இழுத்துப் போடத் தயங்கவில்லை. யாருக்குப் பொன்னாடை போர்த்தினாலும், மலிவுப் பதிப்பு வெளியிட்டாலும் பிரியனது சொல்மழை உண்டு. அவரது முன்னுரை பெறாத புஸ்தகமும் நூலாமோ என்று பதிப்பாளர்கள் நம்பினார்கள். இவ்வாறு பேச்சும் மூச்சும் தமிழாக உள்ள அறிஞருக்கு மணிவிழா நடத்துவதற்கு அறுபது வயதுவரை காத்திருப்பார்களா ரஸிகர்கள்? இரண்டு வருடங்கள் முன்னதாகவே நடத்தத் தீர்மானித்தனர். சினிமாக் கலைஞர் ஒருவர் அதனைத் தனது சொந்தப் பொறுப்பில் நடத்த முன்வந்ததே பிரியனது பெருமையைக் கூறாமல் கூறுகின்றது. மணிவிழாக் கொண்டாடினால் ஆயுசு குறையும் என்ற சொல் உண்மையாகிவிடும்போல் தமிழ் இலக்கியப் பரம்பரை வாழ மணிக்கொடி நாட்டிய சொல்லேர் உழவருக்கு இன்று ஆபத்து. அவரது உயிரோட்டம் நின்றுவிட்டால் தமிழ் இலக்கிய ஓட்டமே நின்றுவிடுமே!

டாக்டர் சிந்தனையில் ஆழ்ந்தபடியே ஆசிரியர் இல்லத்தை அணுகினார்.

ஃ ஃ ஃ

இலக்கிய கர்த்தாவின் உடல்நிலையை எடை போட்டுக்கொண்டிருந்தன, டாக்டரின் கண்கள். அவரது இருதயத் துடிப்பை 'காய்தல் உவத்தல்' இன்றி ஆய்ந்து சொல்லிற்று, ஸ்டெதாஸ்கோப். டாக்டர் தனது மதிப்புரையைத் திரட்டி வெளியிட்டார்.



ஏஜண்டுகள்:—) பலாபாய் & கோ., 260. எஸ்பிளனேட் சென்னை-1.
(போன்: 4022)
சிலோன் ஏஜண்டுகள்: ஸிர்குல் கதிர் & கோ.,
41-43 செகண்ட் கிராஸ் தெரு, கொழும்பு-11.

'ஸார், உங்களிடம் அப்பட்டமாக விமர்ஸிப்பது நல்லது என நம்புகிறேன். தங்கள் உடலின் முக்கிய பாத்திரங்களான இருதயமும், மூளை நரம்புகளும் பலவீனமடைந்து காணப்படுகின்றன. இந்த அஸ்திவாரத்தின் மீது தாங்கள் பணிபுரிவது ஆபத்தானது. நாடியோ தளர்நடை போடுகிறது. தங்களுக்கு 'ரெஸ்ட்' மிக அவசியம். தமிழர் பாதுகாத்துப் போற்ற வேண்டிய இலக்கிய பொக்கிஷம் தாங்கள். நீங்கள் பிழைக்க வேண்டுமானால் ஓய்வு அவசியம். அவற்றை இங்கு பெறுவது முடியாது. இலக்கியத்தையும், சிந்தனையையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு ஒரு கிராமத்திற்குச் சென்று ஹாய்யாக இருங்கள். அதாவது இலேசான விஷயங்களைப்பற்றி அரட்டை; அவசியமானால் ஒரு 'ஹாபி' எடுத்துக்கொண்டு இலக்கியச் சிந்தனைக்கு ஓய்வு அளியுங்கள்.'

புதுமைப் பித்தன் இதழ்கள் விரிந்தன; தனது புஸ்தகங்களை மதிப்பிடும் பத்திரிகைகள்கூட டாக்டர் வருணித்ததுபோல அழகாக விமர்ஸிக்கவில்லையே என்று வருந்தினார்.

'என்னை எவ்வாறு சும்மா இருக்கச் சொல்கிறீர்கள்? இதோ சுதந்திர தினம் வரப் போகிறது. இரண்டு பத்திரிகைகளுக்கு முழு நாவலும், நான்கு பத்திரிகைகளுக்கு...'

'நன்றாகச் சொன்னீர்கள்! மலராவது மண்ணாங்கட்டியாவது! சுவரை வைத்துக்கொண்டு சித்திரம், பிளாட்டை வைத்துக்கொண்டு கதை; நீங்கள் நீண்ட காலம் வாழவேண்டுமானால் கிராம வாழ்க்கையை ஆற மாதங்களாவது அநுபவிக்க வேண்டும். உங்களுக்கு சிந்தையை அடக்கி சும்மா இருத்தல் அரிதென்றால் விவசாயம் பண்ணைபோன்ற விஷயங்களில் கவனத்தைச் செலுத்துங்கள்...'

விதிக்கு தலைகுனியும் கதாநாயகன்போல் டாக்டரின் பேச்சுக்கு ஆமோதிப்பு நல்கினார், ஆசிரியர்.

ஃ ஃ ஃ

கதைகளில் வருவது போன்று காலச்சக்கரம் சுழன்றது. ஒரு வருடத்திற்குப் பிறகு டாக்டருக்கு அழைப்பு வந்தது. எங்கேயோ ஒரு கிராமத்தில் தங்கி உடலும் உள்ளமும் வலுப்பெற்று வந்திருப்பார் என்றுதான் கற்பனை செய்த ஆசிரியரா இப்படி கட்டிலில் கிழித்த நார்போல் துவண்டு கிடக்கிறார்?

'நீங்கள் கிராமவாசம் மேற்கொள்ளவில்லையா?'

'அங்குதான் இருந்தேன். வந்து ஒரு வாரமாகிறது'. ஆசிரியரது க்ஷீணமான குரல் தத்தித்தத்தி வெளிவந்தது.

'அங்கும் போய் ஏராளமான புஸ்தகங்கள் படித்து, மண்டையைக் குடைந்துகொண்டு சரித்திர நாவல்கள் எழுதிக்கொண்டிருந்தீர்களா?'

'இல்லை; தாங்கள் கூறியபடி மண்ணிலும் பயிரிலும் மனதைச் செலுத்தினேன்...' ஆசிரியர் சொல்லி முடிக்குமுன் மயக்கம் போட்டுவிட்டது. டாக்டர் அவசர அவசரமாக இன்ஜக்ஷன் ஒன்று செய்துவிட்டு, 'மயக்கம் தெளியட்டும்' என்று நாற்காலியில் அமர்ந்தார். மேசையின் மீது புதுமைப் பிரியனுக்கு வந்த கடிதம் ஒன்று பிரித்துக் கிடந்தது.

'தங்கள் 'வரப்புயர' என்ற கட்டுரைத் தொகுதி கிடைத்தது. சிறுகதையிலும் நாவலிலும் கவனத்தை செலுத்தி வந்த தாங்கள் விவசாயத் துறையில் ஆராய்ச்சி மிகுந்த நூல் எழுத இயலும் என்று கற்பனை செய்யவே இயலவில்லை. தமிழ் அபிவிருத்திக் கழகம் விவசாயத் துறையில் நல்ல நூல்கள் வருவதில்லை என்று வருடாவருடம் குறைப்பட்டுக்கொண்டிருந்தது. அதனைத் தீர்க்கும் முறையில் வெளிவந்துள்ள தங்கள் புஸ்தகத்திற்கே இவ்வாண்டு முதல் பரிசு வழங்குவது எனத் தீர்மானித்திருக்கிறோம். இத்தகைய பல ஆராய்ச்சி நூல்கள் மேலும் எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம்.'

இதனைப் படித்த டாக்டர் அசந்துவிட்டார். அதன் அருகே காணப்பட்ட விளம்பரம் ஒன்று அவரை மேலும் நகைக்க வைத்தது.

மலிவுப் பதிப்பு:

படுமலிவுப் பதிப்பு.

ஆசிரியர் புதுமைப் பித்தன் தொகுத்த பழைமைக் கவிதைகள் தொகுப்பு

நாடோடிப் பாடல்கள்

'கொச்சையும் கொஞ்சும் தமிழும்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையுடன்.

பேராசிரியர் உலகநாதன் முன்னுரை கொண்டது.

டாக்டரது சிந்தனை விரிந்தது. நாய்வாலும் இலக்கிய கர்த்தாவும் ஒன்றுதான். எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் எழுத்தாளன் எழுத்தாளனே!

டாக்டர் நாற்காலியை விட்டு எழுந்து மீண்டும் ஆசிரியரைப் பரிசோதித்தார். ஆனால் தமிழுக்காகவே வாழ்ந்து தமிழுக்காகவே அவர் உயிர் இழந்துவிட்டதைப் புரிந்துகொள்ள அதிக நாழி ஆகவில்லை. புதுமைப் பிரியன் இருந்தாலும் இறந்தாலும் இலக்கிய நூல்களை. செத்தும் வழங்கிய இலக்கிய பிரும்மா அவர்!

★



மிருதங்கம் பழனி சுப்பிரமணிய பிள்ளையின் சிஷ்யர், சிர. எஸ் சாமிநாதனுடைய மிருதங்க அரங்கேற்றம் மிக விமரிசையாக சாஸ்திரி ஹாலில் சமீபத்தில் நடந்தது. மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர் கச்சேரிக்கு தலைமை வகித்த பிரதம நீதிபதி ஸ்ரீ பி. வி. ராஜமன்னார் மாணவனின் திறமையை வெகுவாகப் பாராட்டி ஆசீர்வாதம் செய்தார்.

# திருவெம்பாவை

சங்கீதகலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் ஸ்வரப்படுத்தியது

அன்னே, இவையும் சிலவோ! பலஅமரர்
உன்னற்கு அரியான், ஒருவன் இரும்சீரான்

சின்னங்கள் கேட்ப, "சிவன்" என்றே வாய்திறப்பாய்;
"தென்னா" என்னாமுன்னம், தீசேர் மெழுகொப்பாய்;

"என்னானை, என்அரையன், இன்அமுது," என்றுஎல்லோமும்
சொன்னோம்கேள், வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு ஏலோர் எம்பாவாய்! (7)




ஸிகந்த்ரியிலுள்ள கர்னாடக கலா மண்டலியினால் அக்டோபர் 30-ந் தேதி தீக்ஷிதர் தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டபோது திருவாரூர் ஸ்ரீ பாலுஸ்வாமி தீக்ஷிதர் வீணைக் கச்சேரி செய்தார்.

ராகம்: ரீதிகௌளை.] [ஆதி தாளம். (1 களை)

| | | | |
|---|---|---|---|
| 1 | பா. மா, கா ரீ ஸா நீ நீ | ஸா : ; நீ | பா நீ நீ ஸா ‖ |
| | அன்னே இ வையும் சில | வோ ப | ல அமரர் ‖ |
| | நீ ஸா ஸகாகா மாமக மா ; | கா மா பா மப | மகரி கா. மா ‖ |
| | உ ன்ன . ற்கு அ ரி யான் | ஒ ருவன் இ . | ரும் சீ ரான் ‖ |
| 2 | பா கமதபமகா ரீ ஸா நீ நீ | ஸா : ; நீ | ஸா ஸக கா மா ‖ |
| | அ .ன்னே இ வையும் சில | வோ ப | ல அ மரர் ‖ |
| | கம பா. பா பா பாஸ்ரி நி தா ம | கா மா பா, த மா .ப | மகா , ரி கா , மா ‖ |
| | உ ன்ன ற்கு அ ரி யான் . | ஒ ரு வ னி . | ரும் சீ ரான் ‖ |
| | ; நீ தா மா பககா, மா, மக | மா, மநீ நீ | ஸ்ா. நிஸ்ா ஸ்ா ‖ |
| | சின் னங்கள் கே ட்பசி | வன் என் றே | வாய் திறப்பாய் ‖ |
| | ; ஸ் நி நீ தா மா மககமா மக | மா, மநீ நீ | |
| | சின் னங்கள் கே . ட்ப சி . | வன் என் றே | |
| | | | ஸ்ா ; ஸ்ஸ்ா, க்ரிக் ‖ |
| | | | வாய் தி றப்பா . ய் ‖ |
| | ஸ்ா ஸ் நி நீ தா மா மககமா மக | மா : மநீ நீ | ஸ்ா, நி ஸ்ா ஸ்ா ‖ |
| | . ன் னங்கள் கே டபசி . | வன் என் றே | வாய் திறப்பாய் ‖ |
| | நி க் ரி ஸ்ா, ஸ்நிநீ , தா, மா மக | கமா பா , தபமாப | மகா . ரி கா மா ‖ |
| | தென் னாஎன் னா முன்னம் | தீ சேர் மெ | ழு . கொப்பாய் ‖ |
| | பா . , பா பா. நி தா மா | கா, மபா மப | மகரி கா. மா ‖ |
| | என் னா னை என்னரையன் | இன்னமு தென் | றெ ல்லோமும் ‖ |
| | கமா பா, பக பம கா ரீ ஸா | நிஸா ஸகா கா | மா மக மா மா ‖ |
| | சொன் னோம்கே ள்வெவ்வேறாய் | இன் னம். து | யி லு தி யோ ‖ |
| | ; நீ தா மா மககா , கமா மா | கமா மநீ நீ | ஸ்ா : ஸ்ா ஸ்ா ‖ |
| | வன்னெஞ்சப்பே தையர்போல் | வா ளாக்கி | டத் தியா ல் ‖ |
| | நி க் ரி ஸ்ா, நி ஸ் நீ தா மா மக | கமா பா. மப | கா ரீ கா மா ‖ |
| | என் னே து யிலின் பரி . | சே லோ ரெம் | பா . வா ய் ‖ |

(அன்னே இவையும் சிலவோ.)



# நாகரீகமா?

நாட்டினிலே நாகரிகம் நிறைய பெருத்துப் போச்சு—வெளி
நாடுகூட நம்மைப் பார்த்து காப்பியடிக்க லாச்சு
ஸ்கூட்டரில் ஒருத்தர் மனைவியோடு குந்திக்கொண்டு போனால்-பார்த்த
காட்டுப்புறத்து மனைவிக்காரர் வற்புறுத்துகிறார் வீணா!

மலேயாவுக்குப் போனஒருவர் மாட்டிவந்த செருப்பு—இப்போ
மக்களெல்லாம் அதனைத்தேடி அலைவதுதான் சிரிப்பு
வளையல் விதத்தைப் பார்க்கும்பொழுது மலைத்துப்போகுது மனசு-பல
வண்ண நிறத்தில் காகிதப்பூக்கள் விற்பதில் எத்தனை தினுசு!

கடலுக்குள்ளே இருக்கும் பொருளைக்காட்டும் கருவிபோலே-பெண்கள்
உடலின் உறுப்பைக் காட்டமுடியும் கண்ணாடி துணியினாலே
உடைவிதத்தில் ரேஷன் செய்து உடுத்துக் கொள்கிறார்கள்—தம்
உடம்பின் வியாதியை பேஷனாக எடுத்துச் சொல்கிறார்கள்!

வரிக்குதிரையை நினைப்பு ஊட்டும் ஒருத்தரின் புஷ்கோட்டு—அதை
வாங்கினது எங்கே என்று ஓடுவார் கடையைக் கேட்டு
பொரியும் "பாப்கார்ன்" ஆனதினால் ஏககிராக்கி அதுக்கு—இந்த
போக்கு ஒரு மூக்கறுத்தான் கதைதான் நமக்கு எதுக்கு?

இல்லாக் குறையால் ஒருத்தி ரவிக்கை கையில் கிழிந்து இருக்கும்-அது
இந்த வருஷப் பேஷனாகப் பெண்கள் கண்ணைப் பறிக்கும்!
பொல்லா நிலையை நினைக்கும்பொழுது பொங்குது சிரிப்பு உளத்தில்
போகப்போக அதிகரிக்க வேண்டாம் தமிழ் நிலத்தில்!

—நாஞு





# புதையல்

ப. ராதாகிருஷ்ணன்



நடுநிசிவேளை. உலகத்தின்மேற் கூரையே பிளந்துவிட்டதோ என வியப்புறும் படியாகக் கொட்டியது பெருமழை. தமோ குணத்திற்குப் பெயர் பெற்றிருந்த அந்தப் பாஸஞ்சர் வண்டி மழையைச் சாக்கிட்டுக்கொண்டு வழக்கத்தைவிடத் தாமதமாக வந்து குலக்கரை ஸ்டேஷனை அடைந்தது. ஒரு மூன்றாவது வகுப்புப் பெட்டியிலிருந்து முத்தையன் இறங்கினான். குடை, விளக்கு சகிதம் அந்த ரயிலை வரவேற்று வழியனுப்பிக் கொண்டிருந்த ஸ்டேஷன் மாஸ்டரிடம் தன் டிக்கெட்டை ஒப்படைத்துவிட்டு விட்டு மேலே நடந்தான்.

சின்னஞ் சிறு ஸ்டேஷன் கட்டடத்தின் ஒழுகாத பகுதிகளில் இன்னும் சில பிரயாணிகள் நின்றிருந்தனர். மண்ணெண்ணெய் விளக்கின் மங்கிய ஒளியில் முத்தையனைக் கண்டபோது அக் கிராமவாசிகளுக்கெல்லாம் வியப்பும் ஓரளவு அச்சமுங்கூட ஏற்பட்டன. நெடிதுயர்ந்த தோற்றம், முகத்தை மூடிமறைக்கும் மீசை—தாடிகள், எங்கோ வெறித்து நோக்கும் பார்வை — 'யார் இவன்? எங்கிருந்து, எதற்காக நம் ஊர் வந்து சேர்ந்திருக்கிறான்?' என்ற சந்தேகம் ஒவ்வோர் உள்ளத்திலும் எழுந்தது.

ஆயினும் நேரில் அவனையே விசாரித்து அறிந்து கொள்வதற்கான துணிவு அங்கு எவருக்குமே இல்லை!

முத்தையன் தனக்குத்தானே மெல்ல நகைத்துக்கொண்டான். இப்போது அவனை விழுங்கிவிடுவது போலப் பார்த்துக் கொண்டிருப்போரிற் சிலர் அவனது பழைய நண்பர்கள்! இருபது ஆண்டுகளுக்கு முன் 'முத்தண்ணே! முத்தண்ணே!' என அருமையாக அழைத்து அவன் தோள்மீது கைபோட்டுக் கொண்டு திரிந்தவர்கள் காலத்தின் போக்கும் அனுபவங்களின் கடுமையும் அவனது தோற்றத்தில் செய்துவிட்ட மாறுதல்களை ஊடுருவி நோக்கி அடையாளம் தெரிந்துகொள்ள இவர்களால் முடியவில்லை!

இருக்கட்டும். இதுவும் நன்மைக்கே.

வாயிலிருந்த பீடியை எடுத்துத் தூர வீசிவிட்டு முத்தையன் எழுந்தான், தன் சிறு பையைக் கையில் எடுத்துக்கொண்டான். இனியும் இங்கே தாமதிக்க வேண்டிய தேவை எதுவுமில்லை. சூழவிருந்தோரின் வியப்பு பரிபூரணமாகியது. சற்று வயது முதிர்ந்த கிராமவாசியொருவன் சற்று தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டான்:—'என்ன தம்பீ, ஊருக்கா கிளம்பிக்கிட்டிருக்கே?'

'ஆம்' என்னும் பாவனையாகத் தலையை அசைத்தான் முத்தையன்.

'அடடா! மழையும் இடியும் அடிக்குது பாரு. இந்த நேரத்திலேயா ரெண்டு கல் தொலைவு நடக்கப் போறே?'

அச்சத்தைப் போலவே தைரியமும் தொற்றிக்கொள்வதுதான். இங்கே இன்னொரு ஆளும் சம்பாஷணையில் புகுந்தான் – 'வளியாலே துறைமரத்தடி முனீசுவரன் வேறே இருக்கான் அண்ணே. அந்தப் பக்கமா ஒண்டியாப் போறது நல்லதில்லே, சொல்லிட்டேன்' என்ற எச்சரிக்கையுடன்.

முத்தையன் என்ன செய்தான்? 'எனக்கு ஒண்ணும் பரவாயில்லே அப்பா. நான் போய் வறேன்' என்ற இரண்டே வார்த்தைகள் பேசினான். ஓர் அலக்ஷியப் புன்னகையுடன் கட்டிடத்தின் வாயிற்படி இறங்கிவிட்டான்.

ஒரு நிமிஷ காலம் அங்கு நிலவிய மௌனத்தை அக்கிழவன் கலைத்தான். 'இந்த வேளையிலே இவனுக்கு என்ன அப்பிடித் தலைபோகிற அலுவல்? ஊருக்குப் புதுசு போலத் தோணுது. வளிதுறை தெரியாத இருட்டிலே, கொட்டுற மழையிலே...உம்... பொல்லாத முனீசுவரனுக்குக்கூடப் பயப்படாமே...'

'ஏன் பயப்படப் போறான்? இவனைப் பார்த்தாலே ஒரு முனீசுவரன் மாதிரித்தான் தெரியுது!' என்று ஒருவன் கிண்டலாகக் கூறியதும் சிரிப்பொலி கிளம்பிற்று. மழைக்கு அஞ்சி அங்கு ஒதுங்கியிருந்த கிராமவாசிகள் இந்த 'மர்ம மனிதனை'ப் பற்றிய சர்ச்சையில் பொழுதைப் போக்கினர்.

அவர்கள் பேச்சு முத்தையன் செவிகளில் புகவில்லை. மழையும் இடியும் அவனது சிந்தனையைப் பாதிக்கவில்லை. ஒரே உறுதியுடன் நடந்து கொண்டிருந்தான். அச் செம்மண் ரஸ்தாவின் பல பகுதிகளில் முழங்கால் ஆழத்துக்குத் தண்ணீர் தேங்கி நின்றது. இடைவிடாது மின்னிய மின்னல்கள்தாம் இருளைக் கிழித்து அவனுக்கு வழிகாட்டின. லக்ஷியமில்லாத வேகத்துடன் நடந்து இரண்டு கல் தூரத்தையும் கடந்துவிட்டான். மழையின் ஓசைக்குப் பின்னணி போலச் சேர்ந்துகொண்ட மாயனாற்று வெள்ளத்தின் பேரொலி கிராமத்தை நெருங்கி விட்டோமென்று அறிவித்தது.

கற்பாலத்தின்மீது ஒரு நிமிஷம் தாமதித்து நின்று கீழே ஓடும் பயங்கர வெள்ளத்தை உற்று நோக்கினான் முத்தையன். நுரைத்துச் சுழலிட்டுச் சென்ற அக்காட்டாற்று நீரில் அடியற்ற பல மரங்கள் மிதந்து வந்தன. கரையோரமாக வானுற ஓங்கி வளர்ந்து நின்ற அப்பெரும் விருக்ஷங்களை வேருடன் பறித்து அங்ஙனம் இழுத்துவர வேண்டுமானால் அந்தப் பொல்லாத வெள்ளத்தின் சக்தி எத்தகையதாயிருக்கும்! இப்பைசாச சக்தியின் பிடிக்குள் ஓர் அற்ப மானிடன் சிக்கினால்...?

எதற்கும் அஞ்சாத முத்தையனது இதயம் நடுக்கம் கண்டு சிலிர்த்தது. இதே இடத்தில் இதே வெள்ளத்தில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவனுக்கு ஏற்பட்ட அந்த அனுபவம் – அதை அவனால் எப்படி மறக்க முடியும்?


° ° °

'மச்சான்! இன்னும் உன் கையிலே கிடைக்கலியா அந்தப் புதையல்?' – இது ராஜாத்தியின் பரிகாசக் கேள்வி. முத்தையனை எப்போது சந்தித்தாலும் அவள் கேட்கும் முதல் கேள்வி இதுதான்.

கேவலம் அவனை ஏளனம் செய்யும் நோக்கத்துடன் மட்டும் அவள் அக்கேள்வியைக் கேட்பதில்லை. அவன்பால் அடிப்படையான ஓர் அனுதாபம், பகற்கனவுகளை விடுத்துப் பயனுள்ள முயற்சிகளில் அவன் மனதைத் திருப்பும் ஆவல் இவற்றைத்தான் அப்பரிகாசம் மூடி நின்றது. கட்டுறுதியுள்ள உடல், களை சொட்டும் முகம், ஒழுக்கம் தவறாத வாழ்க்கை இவை கொண்ட இளைஞன் முத்தையனை அவள் மனமார நேசித்தாள். அவனிடம் படிந்துவிட்ட ஒரே ஒரு குறைபாட்டை நீக்க ராஜாத்தி முயன்றது இயற்கை.

அழகும் நற்குணங்களும் ஓர் உருத்தாங்கி வந்தவள்போன்ற தன் அத்தை மகள் ராஜாத்தியை முத்தையனும் காதலித்தான். அவள் பொருட்டாக எத்தகைய தியாகங்களும் செய்யச் சித்தமாயிருந்தான். ஆனால்...

முத்தையனைக் குறை கூறிப் பயனில்லை. விதிவழியே தான்



மதி செல்லும். எங்கிருந்தோ வந்து சேர்ந்த ஓர் 'ஜோதிட மணி'யின் தீர்க்க திருஷ்டியும் சொல்வன்மையும் அவனைப் பைத்தியமாக்கிவிட்டன. 'நானா சொல்கிறேன்? இந்தக் கிரகங்களல்லவா கூறுகின்றன? உனக்குக் கிடைக்கவிருக்கும் புதையலில் பதினாயிரம் வராகனுக்கு ஒரு நாணயம் குறைந்தாலும் நான் காதை அறுத்துக் கொள்கிறேன்' என்றல்லவா சொன்னார் அவர்! அன்றிருந்து முத்தையனுக்கு நேர்ந்தது என்ன? உழைப்பில் தேனீயையும் சிற்றெறும்பையும் மிஞ்சியவன் எனப் பெயர் பெற்றிருந்த மனிதன் அடியோடு மாறிவிட்டான். மண்மேடுகள், மரப்பொந்துகள், பாழ் மனைகள் போன்ற புதையல் கிடைக்கக் கூடிய இடங்களை ஆராய்வதே அவன் தொழிலாயிற்று. வயலில் நின்ற பயிர்கள் தண்ணீர் இறைப்பாரின்றிக் காய்ந்து கருகின. மாடு கன்றுகள் கவனிப்பாரற்று இளைத்தன. முத்தையன் 'புதையல், புதையல்' என்று மந்திரம் ஜபித்தவண்ணம் திரிந்து கொண்டிருந்தான்.

'என்ன தம்பி முத்து. ராஜாத்திக்கு வயசாகிக்கிட்டே போகுதே. கல்யாணத்தை எப்போ வச்சுக்கிடலாம்?' என்று கேட்பாள் அத்தை.

'கேட்பானேன்? அதுவும் புதையல் கிடைச்ச பிறகுதான் அத்தையம்மா. நான் கட்டிக்கிடறப்போ ராஜாத்தி உடம்பெல்லாம் தங்கமும், வைரமுமா நகைகள் பளிச்சிட வேண்டாமா?' இது முத்தையனின் பதில். பொறுமையிழந்த அத்தை முணுமுணுப்பாள். அதை அவன் பொருட்படுத்துவதில்லை. ராஜாத்தியின் பொறுமையில் அவனுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது. அது போதாதா? கிணற்றுத் தண்ணீரை வெள்ளமா கொண்டு போய்விடும்?

முத்தையனைப் பிடித்திருந்த 'புதையல் பித்து' ஊரறிந்த விஷயமாகிவிட்டது. அதுபற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். சில பெரியவர்கள் நல்லெண்ணத்துடன் அவனுக்குப் புத்திமதிகள் கூறினர். ஆயினும் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயின. புதையல் வேட்டையாடுவதற்குத் தகுந்த இடங்கள் கிடைக்காதபோது முத்தையன் பகற்கனவுகள் கண்டு கொண்டு படுத்திருப்பான்.

பயனுள்ள உழைப்பின்றேல் பணம் எப்படிப் புரளும்? நிலத்தை விற்றான், மாடு கன்றுகள், உழவுச் சாதனங்கள் எல்லாம் ஒவ்வொன்றாகப் பிரிந்தன. 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதைக்கு அருமையானதோர் எடுத்துக்காட்டாக விளங்கினான் முத்தையன்.

இச்சமயத்தில் தான் அவனுக்கு ஓர் புதிய நண்பன் கிடைத்தான். இவனுக்கும் இதர நண்பர்களுக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது. 'முத்தண்ணே! இதெல்லாம் என்ன முட்டாள்தனம்? புதையலாவது, மண்ணாங்கட்டியாவது? இந்த வீணாசையை ஒழித்துவிட்டு உருப்படியாக ஏதாவது வேலை செய்' என்று இவன் இடித்துரைக்கவில்லை. அதற்கு மாறாகப் புதையல் வேட்டையில் அவனை ஊக்கினான். இருவரும் மண்வெட்டியும் கையுமாக எப்போதும் திரிந்து கொண்டே இருந்தனர்.



'ஊரார் சிரிக்கிறார்களா? நன்றாகச் சிரிக்கட்டும். அந்தப் புதையல் நமக்குக் கிடைத்த பிறகு எவன் சிரிக்கிறான், பார்ப்போம். நம் பணத்தின் பலத்தால் ஒவ்வொருவன் கண்ணிலும் விரலைக் கொடுத்து ஆட்டிவிட மாட்டோமா?' என்று மேற்படி நண்பன் ஆறுமுகம் உற்சாகப்படுத்துவான். அவன் பணக்காரர் வீட்டுப் பையன் எனவே முத்தையனது கைச்செலவுகளுக்கு ஒன்றும் சிரமம் கிடையாது.

ஆனால், வெள்ளையுள்ளம் படைத்த முத்தையன் இந்த ஆறுமுகத்தின் உண்மை நோக்கம் பற்றி உணரவில்லை. ராஜாத்தியின் அழகுக்குத் தன் இதயத்தைப் பறிகொடுத்துவிட்டுத் தவிக்கும் ஆறுமுகம் இட்டு வந்த திட்டங்களின் தன்மை அவனுக்குத் தெரிந்திருந்தால்...

அன்றொரு நாள் நள்ளிரவு. இன்று போலத்தான் பெருமழை கொட்டி மாயனாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடிக் கொண்டிருந்தது. ஊரெல்லாம் ஒடுங்கி விட்ட வேளையில் இரு மனிதர்கள்மட்டும் விழிப்பின்றி ஆற்றுப் பாலத்தின்மீது அமர்ந்திருந்தனர். அவர்களருகே வாய் அடைக்கப்பட்ட ஓர் பெரிய செப்புக் குடம்.

முத்தையனது உடலெல்லாம் மழையால் நனைந்திருந்ததென்றால் அவனுள்ளம் உவகை கொட்டிக்கொண்டிருந்தது. முன்

வருஷங்களாக அவன் கண்டுகொண்டிருந்த கனவுகளையெல்லாம் நனவாக்கிய 'புதையல்' இதோ இச்செப்புக் குடத்தினுள் இருந்தது.

'தம்பி ஆறுமுகம். நீ அவ்வளவு திட்டமாகச் சொல்லியிராவிட்டால் அந்தக் களத்து மேட்டைத் தோண்டிப் பார்க்கும் யோசனையே எனக்கு ஏற்பட்டிராது' என்றான் அவன்.

'நானாகவா அதைக் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டேன் அண்ணே? சாயங்காலம் பிள்ளையார் கோவில் பக்கமாகப் போனேன். சாமிக்குத் தோப்புக்கரணம் போடும்போது திடீரென்று தோன்றியது களத்து மேட்டு நினைவு. அந்தப் பிள்ளையாராகப் பார்த்துத்தான் நமக்கு வழி காட்டினார். இதில் சந்தேகமே கிடையாது. என் கடமை தீர்ந்தது. இந்தக் குடத்தினுள்ளிருப்பவையெல்லாம் இனி உன்னுடையவைதான்'. இது ஆறுமுகம்.

'என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? இதில் சரி பாதி உன்னுடையதல்லவா?'

'சே சே! எனக்கு ஓர் சல்லிக்காசு வேண்டியதில்லை அண்ணே. என் வீட்டில் வேண்டிய பணம் குவிந்து கிடக்கிறது. நண்பன் என்ற முறையில் உனக்கு உதவி ஒத்துழைத்தேனே தவிர, பங்கு கேட்கும் நோக்கமே எனக்குக் கிடையாது. இனி என்ன? நீ ராஜாத்தியைக் கலியாணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழ்வதைப் பார்த்தாலே எனக்குப் போதும்.'

முத்தையன் மேலே வற்புறுத்தவில்லை. தன்னலங் கருதாத இந்நண்பன்பால் அவனது நன்றி சுரந்து ஓடியது. மறுநிமிஷம் பிற சிந்தனைகள் மேலிட்டன.

'தம்பி, இந்தக் குடத்தின் வாயில் அடைத்திருப்பது அரக்குத்தானே? அதை எப்படித் திறப்பது?'

'திறப்பதற்கு இப்போது என்ன அவசரம் அண்ணே? ஜோசியன் சொன்னபடி பதினாயிரம் வராகனுக்குக் குறையாமல்தான் இருக்கும்...ஒருக்கால் தங்கச் சவரன்களாகவே இருந்தாலும் இருக்கலாம்.'

முத்தையனுக்குப் பொறுமை இல்லை. மடியிலிருந்து கூரிய பேனாக் கத்தியை எடுத்தான்; அரக்கு மூடியுடன் போராடினான். அவனது கவனம் தவறிய வேளை...!

வஞ்சகன் ஆறுமுகம் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தக்க தருணத்தைக் கண்டுகொண்டான். அசுர வேகத்துடன் ஓடும் வெள்ளம் முத்தையனது உடலை ஏற்று இழுத்துச் சென்றது. அவனைத் தொடர்ந்து விழுந்த செப்புக் குடத்தையும் விழுங்கியது.

முற்றிலும் புதிய சூழ்நிலையில், புது மனிதர்களுக்கிடையே பிரக்ஞை பெற்றுக் கண் திறந்தான் முத்தையன். வெள்ளத்தின் போக்கில் பல இடங்களில் மோதி அவன் தலையிலும் உடலிலும் ஏற்பட்டிருந்த பலத்த காயங்கள் அவனை மூன்று மாத காலம் ஆஸ்பத்திரியில் இருக்கச் செய்துவிட்டன. உடல் நிலை சற்றுத் தேறி வரும் சமயம் தற்செயலாக அவன் கையில் கிடைத்த தினசரிப் பத்திரிகையொன்றைப் புரட்டினான். ஆறுமுகமும் ராஜாத்தியும் மணமக்களாகித் தங்கள் புகைப் படத்துடன் செய்திருந்த விளம்பரத்தை அங்கு கண்டான்.

அவனது அறிவுக் கண் அகலத் திறந்தது. பிறர் சொல்லித் தெரிந்துகொள்ள முடியாத பல உண்மைகள் அப்போது தாமாக அவனுக்கு விளங்கின.

ஆஸ்பத்திரியினின்று விடுதலை பெற்றதும் சிங்கப்பூருக்குக் கப்பல் ஏறினான். அங்கு சென்று தன் புதையல் தேடும் முயற்சியை அவன் தொடரவில்லை. உழைத்தான், உயர்வுற்றான். இன்று பல லட்சம் பெறுமான ஆஸ்திக்கு அவன் அதிபன்.

ஆனால், அந்த உடமைகள் எல்லாம் யாருக்குப் பயன்படப் போகின்றன?

திடீரென ஓராவல் தூண்டிற்று. தாய் நாடு திரும்ப வேண்டும், தான் பிறந்து வளர்ந்த கிராமத்தையும், வீட்டையும், முடிந்தால் ராஜாத்தியையும் கண்டு வர வேண்டுமென்று கிளம்பிவிட்டான்.

இதோ—மாயனாற்றுப் பாலம்—அவனது வாழ்க்கையையே திருப்பிவிட்ட வெள்ளம்!

கண் மூடி நின்ற அவன் சிந்தனை கலைந்தது. ஆற்றின் எதிர் கரையிலிருந்த கிராமத்திலிருந்து எழுந்த அபயக் குரல்கள் அவன் செவியில் புகுந்தன. தலைவிரிகோலமாக அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்த ஜனங்களைக் கண்டான். இதெல்லாம் என்ன அமளி?

கரை உடைபட்டு ஊருக்குள் பாயத் தொடங்கியிருந்த வெள்ளம் அப்போதுதான் அவனது கவனத்திற்பட்டது.

மச்சு வீடு கட்டிக்கொண்டு ராஜ போகமாய் வாழ்ந்த ஆறுமுகமா இப்போது இச்சின்னஞ் சிறு குடிசையில் வாழ்கிறான்? அங்கு நிலவிய குழப்ப நிலையில் அக்கிராமவாசி தவறாக அவ்வில்லத்தைக் காட்டிவிட்டாரோ என்று சந்தேகித்தவனாய் முத்தையன் அதை அணுகினான்.

குடிசையின் கதவு திறந்திருந்தது. உள்ளே பிரவேசித்த வெள்ளத் தண்ணீரின் மட்டம் நிமிஷத்துக்கு நிமிஷம் ஏறிக்கொண்டிருக்க நாலைந்து குழந்தைகளுடன் நின்றாள் ராஜாத்தி.

அவள்தானா அது? அந்தக் கயிற்றுக் கட்டிலின்மீது ஒரே எலும்புக் கூடாகத் தோற்றமளிக்கும் அவன்தான் ஆறுமுகமா?

ஏன் இருக்க முடியாது? வாழ்க்கை வசதிகளும் மனோநிலையும் மாறுவதை அனுசரித்துத் தோற்றத்திலும் மாறுதல்கள் ஏற்படுவது இயற்கைதானே? இதோ ஆறுமுகம் இருமுகிறான். ஒவ்வொரு இருமலும் அவனுயிரை அணு அணுவாய்ச் சிதைத்துக்கொண்டு செல்கிறது. அக்கொலைபாதகனுக்குச் சரியான தண்டனை!

ஆனால்...ராஜாத்தியின் விம்மல்கள் அவன் காதை எட்டுகின்றன. அவள் கண்ணீர் நெஞ்சை அறுக்கின்றது. இதோ ஆறுமுகம் பேசுகிறான்—வெகு சிரமத்துடன்.

'ராஜி! இப்படி அழுது பயன் என்ன? என்னால் எழுந்து நடக்க முடியாது. இந்தக் கொடும் வெள்ளம்...இதற்கு நான் முத்தையனைப் பலியாகத் தள்ளினேன்,

அது இன்று என் குடும்பத்தையே பலி கொள்ள வந்துவிட்டது...அதுபற்றி வருந்திப் பயனில்லை. குழந்தைகளோடு நீ ஓடிவிடு. இதார்களைத் தொடர்ந்து பத்திரமான இடத்திற்குச் செல். அப்புறம் கடவுள் இருக்கிறான்...' இங்கே காச நோய் மறுபடி அவன் தொண்டையைக் கௌவியது.

ராஜாத்தி அசையவில்லை. நெஞ்சு வெடிக்க வரும் அவளது விம்மல்களுக்குச் சிறு குழந்தைகள் சுருதி சேர்க்கத் தொடங்கின.

வெளியிலிருந்து கிராமவாசிகளின் பரிதாப ஓலங்கள்—இக் குடிசையினுள் அவற்றின் எதிரொலி. அவர்களில் யாரும் பிறருக்கு உதவக்கூடிய நிலையில் இல்லை. அவரவர் வீடு, மனைவி மக்கள், உடைமைகள் இவற்றை வெள்ளத்தினின்று காப்பதே பிரயாசையாக இருக்கும்போது இந்த நோயாளியையும், அவன் குடும்பத்தாரையும் யார் கவனிப்பார்?

அதைக் கருதித் தானே இறைவன் முத்தையனை இம்மியும் நேரம் பிசகாது இங்கு கொண்டு சேர்த்திருந்தான்?

ராஜாத்தி திகைத்துத் தான் போனாள். முன்னறிவிப்பின்றி உள்ளே நுழைந்து ஓர் சிறு குழந்தையைத் தூக்குவதுபோல் அநாயாசமாகத் தன் கணவனைத் தூக்கியெடுத்துக்கொண்ட மனிதனை அவள் முதலில் அடையாளம் தெரிந்து கொள்ளவில்லை.

'உம், நட. இனியும் தாமதித்தால் ஆபத்துத்தான்' என்ற வார்த்தைகளுடன் அவன் வெளியே நடந்தான். ராஜாத்தி வாய் திறவாது பின்தொடர்ந்தாள். அவளது அணைப்பில் அடங்கியிருந்த குழந்தைகளைத் தவிரக் காப்பாற்றப்பட வேண்டிய 'செல்வங்கள்' ஒன்றும் இனி அக் குடிசையில் எஞ்சி நிற்கவில்லை.

ஆபத்தின் எல்லைக்கோட்டைத் தாண்டி ஓர் சாவடியை அடைந்தது அக்கிராமவாசிகளின் கோஷ்டி. அரைகுறை மயக்க நிலையிலிருந்த ஆறுமுகம் கண்ணை விழித்து நோக்கினான். அவனுயிரைக் காத்த புண்ணியவானை அங்கு காணவில்லை.

'ராஜாத்தி! யார் அவன்? எங்கே சென்றுவிட்டான்?' என்று மனைவியைக் கேட்டான் அவன், ஈனஸ்வரத்தில்.

'யாரோ தெரியவில்லை. போகும்போது இந்த மூட்டையைக் கொடுத்துவிட்டுப் போனார்...'

ஆறுமுகம் மூட்டையை அவிழ்த்தான். அதில் பளபளவென்று மின்னிய தங்கச் சவரன்கள் அவன் கண்ணைப் பறித்தன. அன்று செப்புக்குடத்தில் அவன் போட்டிருந்த ஓட்டாஞ்சல்லிகள் தான் இன்று இந்த ரூபத்தில் அவனிடம் திரும்பியிருந்தனவோ!

தங்க நாணயங்களைப்போலவே உண்மையும் அவன் உள்ளத்தில் பளிச்சிட்டது. 'முத்தையா. நீ மனிதனல்ல; ஓர் தெய்வம்' என்று அலறினான் ஆறுமுகம்.

# பைரவி பாலாமணி



எத்தனைதான் சமாதானம் செய்து கொண்டாலும் கல்யாணி அம்மாளின் மனம் ஆறுதல் பெற மறுத்தது. எவ்வளவோ அருமையாகப் பெற்று வளர்த்த ஒரே மகள், இப்படித் தன்னுடைய ஆசைக் கோட்டைகள் அனைத்தையும் ஒரேயடியாகத் தகர்த்தெறிந்துவிடுவாள் என்று அவள் கனவு கூடக் காணவில்லையே! கல்யாணி அம்மாளைப் பொறுத்த வரையில், 'இப்படி ஒரு பிழைக்கத் தெரியாத பெண் தனக்குப் பிறந்திருக்கவே வேண்டாம்' என்றுதான் எண்ணினாள். ஆனால் ஊரும் உலகமும் புகழ்கிறது அவளை; அழகுப் பொக்கிஷமான இசை அரசி பாலாமணியைப் பெற்றெடுத்த பாக்கியசாலியென்று.

ஆம்! அவர்கள் நினைப்பதில் தவறென்ன? இறைவனாக அளித்திருக்கும் பாலாமணியின் பேரழகிற்கும், இசைத் திறனுக்கும் ஈடு இணை எங்கே இருக்கிறது? அழகு என்றால் என்ன சாதாரண அழகா? தவறியும் ஒரு முறை அப்படி ஏறிட்டுப் பார்த்துவிட்டால் போதுமே! ஆயுள் முழுவதுமல்லவா அந்த சௌந்தர்ய நினைவு அவர் நெஞ்சிலே நங்கூரம் பாய்ச்சியது போல் நிற்கும்.

சங்கீதத்தில்தான் ஆகட்டுமே! இன்றுவரை அவளை மிஞ்சியவர்கள் உண்டா? பட்ட மரமும் பால் கசியும். பாலாமணியின் கச்சேரி என்றால் போதும், அதற்கென்று ஒருதனிக் கூட்

டும் கூடிவிடும். ஊனையும் உயிரையும் நெக்குருகச் செய்யும் அவளது கர்ணாமிர்தமான பைரவியைக் கேட்பதற்கென்றே. ரசிகர் குழாம் கால் கடுக்கக் காத்து நிற்கும். மைனாக்குருவி பாடுவது போல், 'ஜிலு–ஜிலு'வென்ற திவ்யமான சாரீரத்திலும் மத்தாப்பு உதிர்வதுபோல் அவள் தொண்டையில் பேசும் பிர்க்காவிலும் ஜனங்கள் மெய்மறந்துவிடுவார்கள். எந்த இடமானாலும் சரி 'பைரவி' பாடாமல் அவளை யாரும் விடமாட்டார்கள். அவளுடைய பைரவியில்மக்களுக்குஅப்படிஒரு தனி மயக்கம். ஆனால் அந்த மயக்கம்தெளியுமுன்னர், 'செப்பிடு வித்தைக்காரன், மாஞ்செடியைக் காட்டி காசு திரட்டுவது போல் அல்லாமல், மகளின் அழகும் அருங்கலையும் இப்படி வீணாகிறதே', என்பதுதான் கல்யாணி அம்மாளின் கவலை எல்லாம்!

மேனி மெருகு குன்றி, தங்கத் தளிர் மேனியிலே, வயோதிகத் தடம் தோன்றிய பிறகு, அவளை யார் நிமிர்ந்து பார்ப்பார்கள்? வாலிபமும், வனப்பும் உள்ளபோதே செல்வத்தை வாரிக் குவித்துக்கொள்ள வேண்டிய குலத் தொழிலை, இகழ்ந்து பேசித் திரியும், அசட்டுப் பெண்ணிற்கு யார் புத்தி சொல்லுவது?

எல்லாவற்றிற்கும் மேல், நாகப்பட்டணத்தில் அவள் நடந்துகொண்ட விதத்தைக் கண்டபிறகு, 'இனியும் மகளைத் தன் வழிக்குத் திருப்ப முடியும்', என்கிற நம்பிக்கையே கல்யாணி அம்மாளுக்கு அடியோடு அற்றுப் போய்விட்டது.

நாகப்பட்டணத்திலே, அ. த. ப. மு. அவர்களைத் தெரியாமல் யாரும் இருக்க முடியாது, பல லட்சங்களுக்கு அதிபதியாக இருக்கும் அவர் அந்த ஊரிலேயே ஒரு பெரிய புள்ளி. ஆழ்ந்த தெய்வ பக்தியுடையவர். பெரிய சம்சாரியும் கூட. அப்படியிருந்தும், எப்போதோ ஒரு கச்சேரியில் பாலாமணியைக் கண்டதிலிருந்து அவரது மனத்திலே ஒரு மயக்கம் விழுந்துவிட்டது. எத்தனை முயன்றும் அவரால் பாலாமணியை மறக்க இயலவில்லை. இதைப் பற்றி கல்யாணியம்மாளுக்குப் பல கடிதங்கள் எழுதினார், தன் ஆஸ்திகள் அனைத்தையும் கூட இழக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருந்தார். அதற்கு கல்யாணி அம்மாளும், அ. த. ப மு. வை சமயம் நேரும்வரை காத்திருக்கும்படிக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இந்த சமயத்தில் பாலாமணியின் கச்சேரி ஒன்று, நாகப்பட்டணத்தில் ஏற்பாடாகி இருந்தது. அது கோவில் கச்சேரியாதலால், கல்யாணி அம்மாள் தன் பெண்ணோடு அ. த. ப. மு அவர்கள் வீட்டிலேயே தங்க ஏற்பாடாகி இருந்தது. இப்படியொரு பொன்னான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த கல்யாணி அம்மாள் மனம் பூரித்தாள். வீட்டில் ராஜ உபசாரம் நடந்தது.

ஆனால் இதற்குள் கோவில் கச்சேரி முடிந்ததும், எப்படியோ பாலாமணிக்கு விஷயம் தெரிந்துபோய்விட்டது. தாயார் மீது அவளுக்கு வந்த கோபத்திற்கு எல்லையே இல்லை. சர்ப்பமாகச் சீறி விழும் பெண்ணினிடம் நெருங்கிப் பேசவே கல்யாணிக்குப் பயமாக இருந்தது. பெட்டி படுக்கைகளை எடுத்து வரக்கூட அந்த வீட்டிற்கு [illegible] முடியாதென்ற பாலாமணி, நேரே ஸ்டேஷனுக்கே சென்றுவிட்டாள். தலையாலும், வயிற்றிலும், இப்படியொரு அழகான பெண்ணைப் பெற்றேனே' என்று அடித்துக் கொண்டாள், கல்யாணி அம்மாள். வேறு வழியில்லை.

இரகசியமாகக் கைநீட்டி வாங்கி விட்ட ஐம்பதினாயிரத்தையும், அ. த. ப. மு விடம் அழாக்குறையாகத் திருப்பிக் கொடுத்துவிட்டு, அவரைச் சமாதானப்படுத்தி மீண்டு வருவதற்குள், கல்யாணி அம்மாளுக்குப்போதும் போதுமென்றாகிவிட்டது. அன்றுதான் அவளுக்கு வாழ்விலேயே முதன் முறையாகத் தன் மகள் மீது அளவு கடந்த கோபம் வந்தது.

குலத்தில் இல்லாத புது வழக்கமாய்த் தேடிவந்த ஸ்ரீதேவியை விரட்டி அனுப்பிய பெண்ணின் அறியாமையை எடுத்துக் காட்டிக் கடுமையாகக் கோபித்துக் கொண்டாள். 'காற்றுள்ளபோதே, தூற்றிக் கொள்ள வேண்டிய' வழி முறைகளை நயத்தினாலும் பயத்தினாலும் போதித்தாள். தானும் தனது முன்னோர்களும் வாழ்ந்த வகைகளையும், செல்வம் குவித்த விந்தைகளையும் விரிவாக விளக்கினாள் ஆனால் அவை ஒன்றாவது பாலாமணியின் செவிகளில் நுழைந்தால்தானே!

'அம்மா! அந்த அவலப் பிழைப்புப் பிழைக்க என்னாலே ஆவாது. இந்த உசிருள்ள வரை, நான் அதுக்கு இணங்கவும்மாட்டேன். ஒண்ணுலே, என்னைக் கௌரவமா யாருக்காலும் கட்டிக்கொடு. இல்லாட்டி என்னைக் கற்புடனேயாவது வாழவிடு' என்கிற பழைய பல்லவியையேதான் அவள் திரும்பத் திரும்பத் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தாள்.

'ஹூம்...உன்..கற்பும்..மண்ணாங்கட்டியும்...! வீணா நீ பைத்தியம் பிடிச்சுத்தான் அலையப் போறே' என்று விரல்களை நெஞ்சு வரைத் தூக்கிச் சொடுக்கியவண்ணம், விர்ரென்று உள்ளே சென்றுவிட்டாள். வேதனையும் ஏமாற்றமும் கல்யாணி அம்மாளின் இதயத்தைச் சில் வண்டெனத் துளைத்துக் கொண்டிருந்தன. மகளைத் தன் வழிக்குத் திருப்புவது சாத்தியமாகத் தோன்றவிடினும், மற்ற தன்னுடைய ஜாதி ஜனங்களுக்கு மத்தியில் அவர்களது கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு அந்த ஊரில் காலம் தள்ளுவது கஷ்டமாக இருந்தது. அதனால் செட்டிப் புதுத் தெருவில் தாங்கள் வசித்துவந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டுக் கும்பகோணம் வந்துவிட்டாள்.

ஒரு வேளை, இந்த இட மாற்றத்தின் நிமித்தமாவது தன் பெண்ணிற்கு மனமாற்றம் ஏற்படாதா?' என்பதுதான் கல்யாணி அம்மாளின் ஆசை. ஆனால் அவளது அந்த ஆசையும் எண்ணமும், பாலாமணியைப் பொறுத்த வரையில் வேறொரு வகையில்தான் நிகழ்ந்தது.

கும்பகோணத்திற்கு வந்த சொல்ப காலத்திற்குள் பாலாமணியின் பேரும் புகழும், இன்னும் அதிகப் பிரபலமாகிவிட்டது. 'பாலாமணி பேஸ் பவுடர், பாலாமணி பார்டர் பட்டுப் புடவை, பாலாமணி பின்கோத்து' என்று எங்கு பார்த்தாலும் வியாபாரம் கொள்ளைபோயிற்று. இப்படி ஜனங்கள் பாலாமணிப் பைத்தியம் பிடித்து அலைந்தபோதுதான், அவனுக்கு ஒரு பித்துப் பிடித்தது. பின்னர் அது, வரவர அவனையே விழுங்கி விட்டது.

* * *

கும்பகோணத்திற்கு வடக்கே ஆறாவது மைலில் இருக்கும் நீலத்தநல்லூர் ஓர் அழகிய சிறு கிராமம். அந்த ஊர் பிரபல மிராசுதாரான பஞ்சாபகேச முதலியாரின் ஒரே மகனான சுந்தரத்திற்கும் பாலாமணிக்கும், தெய்வாதீனத்தால்..எப்படியோ பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இருபத்தி ஆறு வயது இளங்காளையான சுந்தரம், கண்ணுக்கு மிகவும் லட்சணமாக இருப்பான். அவனுக்கு சங்கீதத்தில் அளவிற்கு மீறிய மோகம்.

அதிலும், பாலாமணியின் கச்சேரி என்றால் சுந்தரத்திற்கு உயிர். எங்கே நடந்தாலும் கேட்கத் தவறமாட்டான். இப்படி ஆதியில், அவளது இசையிலே உயிராயிருந்தவன், நாளடைவில் அவளையே உயிருக்குயிராய் நேசிக்கத் துவங்கிவிட்டான். இதே போல், தன் இசையிலே மனத்தைப் பறிகொடுத்து, தன்னிடம் அன்பு செலுத்த, பரம ரசிகன் ஒருவன் கிடைத்தானே', என்றுதானோ என்னமோ, பாலாமணியும் தன்னை சுந்தரத்திற்கே அர்ப்பணித்துவிட்டாள். எத்தனை ஆயிரம் பேர்கள் கேட்டு ரசித்தாலும், சுந்தரம் வரவில்லையானால் அன்று அவளுக்குப் பாடியது போலவேயே இருக்காது.

கல்யாணி அம்மாள் கண்காணாத இடமாகச் சென்று 'மடார்–மடார்' என்று தன் தலையால் அடித்துக் கொண்டு, புலம்பினாள். வரவரத் தன் மகளின் போக்கு அவளை வாட்டி வதைத்தது. எத்தனையோ செல்வந்தர்கள் தன் மகளின் தரிசனத்திற்காகத் தவங்கிடக்கும்போது, அவள் இப்படியொரு முருங்கைக் கொம்பைப் பிடித்துக் கொண்டு தொங்குவதைக் கண்டு, மனம் புழுங்கினாள். குபேர சம்பத்தைக் குவிக்கப் பயன்படுத்த வேண்டிய, தன் திருமகளின் பூத்துக் குலுங்கும் அழகும், இளமையும், இப்படி

வீணாகிறதே என்று, சமயம் நேர்ந்த போதெல்லாம் கெஞ்சியும், கொஞ்சியும் கோபித்தும் 'அள்ளி எடுக்க எதுவும் இல்லாமல், பெரிய இடத்து வாசனை மாத்திரம் வீசும், சுந்தரத்தைப் போன்ற பெருங்காயப் பாண்டங்களை மறந்துவிட்டுப் பிழைக்கிற வழியைப் பார்' என்று எவ்வளவோ பக்குவமாகத் தான் கல்யாணி அம்மாள் எடுத்துரைத்தாள்.

ஆனால் அதற்கெல்லாம் பாலாமணி ஒரேயடியாக, 'அம்மா! அவரை நான் பணத்திற்காக நேசிக்கவில்லை. உன் இஷ்டப்படி சுந்தரத்தின் அன்பைத் துறந்துதான் ஆகவேண்டுமென்றால், அதைவிட என் உயிரை இழப்பது தான் சுலபம்' என்கிற ஒரே பதிலைத் தான் கூறினாள். அதன்பிறகு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை கல்யாணி அம்மாள். கண்களில் நீர் மல்க, இளம் ரத்தம் கொப்புளிக்கும் தன் பெண்ணினுடைய பிடிவாதத்திற்கு எதிர்நீச்சல் போட விரும்பாமல், ஒதுங்கிவிட்டாள் பாவம்!

ஆனால் அதே சமயத்தில், கொதிக்கிற எண்ணெயில் விழுந்த நீரைப் போல் பஞ்சாபகேச முதலியார் படபடத்துக் கொண்டிருந்தார். சுந்தரத்தின் காதல் விவகாரம் அப்போதுதான் அவரது செவி வரைக்கும் எட்டியிருந்தது. தாயில்லாத பிள்ளையாயிற்றே என்று தட்டி வளர்க்காமல் தான் கொடுத்த செல்லம்தான் இத்தனைக்கும் காரணம் என்று தன்னையே நொந்து கொண்டார்.

அமைதியாயிருந்த அவருடைய உள்ளத் தடாகத்தில் ஒரு சிறு கல்லை வீசி எறிந்து அதில் எண்ணற்ற சிந்தனை அலைகளைத் தட்டியெழுப்பியவள் திருவிடைமருதூர் ராஜாயியேதான். ராஜாயியும் பாலாமணியைப் போல், ஒரு காலத்தில் மிகப் பிரசித்தமாய்க் கச்சேரிகள் எல்லாம் செய்துகொண்டிருந்தவள்தான். ஆனால் பாலாமணி வெளிவந்த பிறகு, ராஜாயி மதிப்புப் போய்விட்டது. அழகிலும் இசையிலும் சிறந்து விளங்கும் பாலாமணியிடம் அவளுக்கு ஒரே பொறாமை. அவளாலேயே தன் வாழ்வு பாதிக்கப்பட்டுப் போனது போன்ற ஒரு எண்ணம் ராஜாயிக்கு எப்போதும் உண்டு.

ஆதியில் சிறிது காலம் மைனர் விளையாட்டு விளையாடி ஓய்ந்த முதலியாருக்கு ராஜாயியின் குணம், தெரியுமென்றாலும், அதற்காக சுந்தரத்தை இப்படியே விட்டுவிட அவர் விரும்பவில்லை. முளையிலேயே கிள்ளி எறிய எண்ணினார். இந்த சமயத்தில் சுந்தரம், மாயவரத்திலுள்ள தன் அத்தை வீட்டிற்குச் சென்றிருந்தது அவருக்கு பெருத்த சாதகமாக இருந்தது.

அன்றிரவு சுமார் எட்டு மணி இருக்கும். சலங்கை பூட்டிய முதலியாரின் இரட்டை மாட்டு வண்டி பாலாமணியின் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய, முதலியார், 'கல்யாணி—கல்யாணி' என்று கதவைத் தட்டினார். கதவைத் திறந்த கல்யாணி அம்மாளுக்கு, முதலியாரின் திடீர் விஜயம் தூக்கி வாரிப் போடச் செய்தாலும் சாதுர்யமாக அதைத் தன்னுள் மறைத்துக் கொண்டாள்.

'அதற்குள் தூங்கிவிட்டாயா என்ன?' என்கிற முதலியாரின் கேள்விக்கு, பச்சைச் சிரிப்பு சிரித்தவண்ணம் எவ்வித பதிலும் கூறாமல் பின் தொடர்ந்த கல்யாணி அம்மாள் அவரை உட்காரும்படி உபசரித்தாள். கூடத்து விளக்கு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. அப்பொழுது எதேச்சையாகத் தூண் ஓரமாக நின்றுகொண்டிருந்த பாலாமணியின் உருவம் அவரது திருஷ்டியில் நன்கு விழுந்தது.

பாலாமணியை அத்தனை நெருக்கமாய், நிதானமாய் முதலியார் அதற்கு முன்பு இப்படிப் பார்த்ததில்லை. அவளது திரண்ட அழகை இன்னும் ரசித்துக்கொண்டிருந்தால், 'தான் கொண்டு வந்த கோபம் கரைந்து போவதோடு அத்தனை வயதிற்கு மேல் தன் புத்தியே கூடப் பேதலித்துவிடுமோ', என்கிற பயமே அவருக்குத் தோன்றியது.

சோபாவின் அருகே, 'டப்'பென்று கல்யாணி அம்மாள் கொண்டுவந்து வைத்த வெற்றிலைப் பெட்டியின் ஓசையிலிருந்து சிந்தனை தெளிந்த முதலியார், சாதுர்யமாகத் தன்னைச் சமாளித்தவண்ணம், 'கல்யாணி கொஞ்ச நாட்களாகவே உன்னிடம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசி முடிவு செய்ய வேண்டுமென்றிருந்தேன். அதற்கு இன்றுதான் சரியான சந்தர்ப்பம் கிட்டியது. அதற்கு நீயும் என்னுடன் ஒத்துழைப்பாயல்லவா' என்று அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே, 'எனக்கு நீங்கள் கூறுவதொன்றும் விளங்கவில்லையே', என்றாள் கல்யாணி அம்மாள் உண்மையிலேயே ஒன்றும் புரியாதவளாக.

அதற்கு முதலியாரும் 'ஆமாம்! நான் சற்று விரிவாகக் கூறினால்தான் உன் மண்டையில் ஏறும். என் மகன் சுந்தரத்தையாவது உனக்குத் தெரியுமல்லவா?' என்றார் கிண்டலாக.

'.........'

'அவன் என்னுடைய ஒரே மகன் என்பதும் உனக்குப் புரிந்திருக்கும். அவனது சுபிட்சமான நல்வாழ்க்கை ஒன்றைத்தான் என் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் காண விரும்புகிறேன். சமீப காலமாக அவன் போக்கு என் மனத்திற்கு மாளாத வேதனையை அளித்து வந்தாலும், தாயில்லாத பிள்ளையாகிய அவன் மீது நான் வைத்துவிட்ட பாசத்தினால், நேருக்கு நேர் கண்டிக்க என்னால் ஆகவில்லை. ஆகையால் இனிமேல் அவன் உன் வீட்டிற்கு வராமல் இருக்கும்படி நீதான் அதற்கு ஒரு வழி செய்ய வேண்டும்' என்று முதலியார் துயரமும், கண்டிப்பும் கலந்த குரலில் கூறிக்கொண்டு வரும்போதே, கல்யாணி அம்மாள் தன்னையும் மீறி 'நானா?' என்றாள்.

'ஆமாம்! நீயேதான். ஏன், ரொம்பக் கஷ்டமான காரியமாகப்படுகிறதோ? இதோ பார் கல்யாணி, என் மகன் அறியாப்பையன். எங்கள் வம்சத்திற்கே அவன் ஒருவன்தான் குலவிளக்காக இருக்கிறான். அவனை எங்களிடமிருந்து பிரித்து உங்கள் வலையில் போட்டுக் கொண்டு விடாதீர்கள். உங்களுக்குப் பணம்தானே வேண்டும். எவ்வளவு வேண்டுமானாலும் நான் தருகிறேன். என் பிள்ளையை மாத்திரம் விட்டுவிடுங்கள்' என்று மடை திறந்த வெள்ளம் போல் முதலியார் படபடப்பாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே கல்யாணி அம்மாளுக்குத் தன்னையும் மீறிக் கோபம் வந்துவிட்டது.

'இந்தாங்க! என்ன நீங்கபாட்டிலே பேசிக்கிட்டே போறீங்க? உங்க பிள்ளையை இங்கே யாரும் வலைவீசிப் பிடிச்சுவச்சிருக்கல்லே. அதுக்குஅவரு என்ன மீன் குஞ்சா? மான் குட்டியா? இல்லே, உலகமே தெரியாத பச்சைப் புள்ளையா? அவரை நீங்களே கண்டிச்சு அடக்கி வைக்கிறதுதானுங்களே?' என்றாள் ஆத்திரத்துடன்.

'அந்த சக்தி என்னிடம் இல்லை. என்பதால்தானே கல்யாணி நான் உன் காலில் விழுந்து கெஞ்சுகிறேன், இதோ இந்த ஐம்பதினாயிரம் ரூபாயையும் எடுத்துக்கொள். ஆனால் கொஞ்ச காலம் நீங்கள் இந்த ஊரில் இல்லாமல் எங்காவது தலைமறைவாக இருந்தால் ஒருவேளை மகன் மனம் மாறலாம் என்பது என் கனவு. எனக்காகவும், அவனுக்காகவும் அல்லாவிட்டாலும், சுந்தரத்தையே நம்பி ஏங்கிக்கொண்டிருக்கும் என் சகோதரி மகளுக்காகவாவது நீ இந்த உதவியைச் செய்துதான் ஆகவேண்டும் கல்யாணி' என்று முதலியார் கூறிவரும்போதே அவரது கண்களில் கண்ணீர் பளபளத்தது. ஆனால் கல்யாணிக்கு என்னமோ ஆத்திரம்



"செக்ரட்ரி சார்...டீ பார்ட்டிக்கு வரேன். ரொம்ப பலமாக ஒண்ணும் எனக்குன்னு செய்ய வாண்டாம். லைட்டாக ரெண்டு ஸ்வீட், மசாலா தோசை.. வெங்காய ஊத்தப்பம், காபி. ஐஸ்க்ரீம் போதும். எதுக்கும் கொஞ்சம் வெங்காய சாம்பார் தனியா பண்ணச் சொல்லுங்க..."

ரன் பற்றிக்கொண்டு வந்தது. தன் ரானம் அவளைத் தட்டி எழுப்பி பிட்டது.

'நல்லா இருக்குதுங்க உங்க நியா ம்? பிள்ளையை அடக்க முடி ல்லேன்னு எங்களை ஊரைவுட்டுத் ரத்த வந்துட்டீங்களே! நாங்க ன்ன உங்க ஆதீனத்திலே குடி ருக்கோமா, இல்லே, உங்க இந்தப் ணத்தைக் கண்டதும், பல்லே இளிச் டுவோமின்னு நெனச்சுப்பிட்டீங் ளா? இந்தக் கல்யாணியும் தன் ஆயு லே, இது போலெ எவ்வளவோ ணத்தைப் பாத்தவள்னு நெனச்சுக் ட்டுப் பேசுங்க! வேணும்னு, பிள்ளை யைக் கூட்டிக்கிட்டு நீங்க எங்களைச்சும் போய்க்கிங்க......' என்று உணர்ச்சி வசப்பட்டு, அவள் பேசிக்கொண்டிருக்கும்போதே, அத்தனை நேரம் மறைவிலிருந்து, அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த பாலாமணி சட்டென்று அங்கே வந்து, 'இல்லேங்க! அம்மா ஏதோ வருத்தத்திலே பேசுது. உங்க இஷ்டப்படியே நாங்க அவரு வர்றதுக் குள்ளாரே, ஊரைவிட்டே போயிடறோம். ஆனால், எங்களுக்கு உங்க பணம் ஏதும் வேண்டாம்' என்று கண்களில் நீர் வழியக் கூறிவிட்டு மாடியை நோக்கி ஓடிவிட்டாள்.

திடீரென்று மின்னல்போல் தன் முன் தோன்றி, இடி முழக்கம்போல், இரண்டே வார்த்தைகள் பளிச்சென்று கூறிவிட்டு மறைந்துவிட்ட பாலாமணியின் செய்கை முதலியாரின் இதயத்தில் 'சுரீர்' என்று சவுக்கால் அடிப்பதுபோலிருந்தது. இமைகள் நனைந்து, அவளது தியாகத்துக்கு அஞ்சலி செலுத்தின.

❀ ❀ ❀

நான்கே நாட்களில் வந்துவிடுவதாக, பாலாமணியிடம் ஆறுதல் கூறி, அவளது கண்ணீரோடு விடை பெற்றுச் சென்ற சுந்தரத்திற்கு, மாயவரத்தில் இருப்பே கொள்ளவில்லை. அத்தைக்கு உடம்பு சற்றுத் தேவலாம் என்று டாக்டர் கூறியதும், ஒரு நாள் முன்னதாகவே புறப்பட்டுவிட்டான். ஆனால், திடீரென்று பாலாமணி முன் தோன்றா திகைக்கவைத்து, அவளை மகிழ்ச்சிக் கடலில் ஒரேயடியாகத் திணறடிக்க வேண்டுமென்று ஓடோடியும் வந்த சுந்தரம்தான், ஏமாற்றக் கடலில் மூழ்கி மூழ்கி எழுந்தான்.

கண்கள் மகிழ்ச்சியினால் மலர, முத்துப்பற்கள் ஒளி வீச, மோகனப் புன்னகையால் 'அத்தான்! வந்துவிட்டீர்களா?' என்று ஆசையோடு ஓடி வந்து வரவேற்கவேண்டிய பாலாமணிக்குப் பதிலாக, வீட்டு வாசலிலே, ஊஞ்சலாடிக்கொண்டிருந்த பெரிய திண்டுக் கல் பூட்டுத்தான் அவனை வரவேற்றது. வீட்டிற்கு வந்த சுந்தரம் வண்டிக்காரன் வீராசாமிமூலம் ஆதியோடந்தமாக அத்தனை விவரங்களையும் அறிந்ததும் துடிதுடித்துப் போனான்.

பாலாமணி இல்லாத அவனது வாழ்க்கையே வறண்ட பாலைவனமாகக் காட்சியளித்தது. அவளைப் பிரிந்து, அவள் இல்லாமல் ஒருநாள்கூட அவனால் உயிர் வாழ முடியாதுபோல் தோன்றியது. தூணிலும், சுவற்றிலும் யாரும் காணாமல் முட்டி மோதிக் கொண்டு கதறினான். இரக்கமின்றி அவர்களிடம் நடந்து கொண்ட தன் தந்தையின் செய்கை அவன் இதயத்தை அணுவணுவாகத் தின்று கொண்டிருந்தது. பாலாமணியைக் கண்டுபிடித்து, தன் தந்தையின் பொருட்டு அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டால்தான் அவன் மனம் சாந்தியடையும்போலிருந்தது.

ஆனால், காலச் செடியிலிருந்து வருஷ மலர்கள் இரண்டு வாடி உதிர்ந்தனவேயன்றி, பாலாமணியைப்பற்றி அவனால் எவ்விதத் தகவல்களும் அறிந்து கொள்ள முடியவில்லை. எந்த இடத்திலும், யாரை விசாரித்தாலும், பாலாமணியின் கச்சேரிகூட நடந்ததாக சுந்தரத்திற்குத் தகவல் கிடைக்கவில்லை.

'ஆம்! அவன் தந்தைக்குக் கொடுத்த வாக்கைப் பூரணமாகக் காப்பாற்ற வேண்டித் தன் இசைக் கலையைக் கூடத் துறந்து, அஞ்ஞாதவாசம்தான் வாழ்கிறாள்' என்பதை சுந்தரம் நன்கு உணர்ந்து கொண்டுவிட்டான். ஆனால், இந்த சமயத்தில் ஒருநாள் வீராசாமி, யார் மூலமோ விசாரித்துக்கொண்டு வந்த தகவலின்படி, பாலாமணி மன்னார்குடியில் இருப்பதாக அறியவுமே, சுந்தரம் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டான்.

மன்னார்குடியை அடைந்த சுந்தரத்தின் பங்கில், தெய்வமும் சேர்ந்து ஒத்துழைத்தது என்றே கூறவேண்டும். ஒரே நாளில் பாலாமணியின் வீட்டைத் தேடிக் கண்டு பிடித்துவிட்டான். ஆனால், உள்ளே அடி எடுத்துவைத்ததும் சுந்தரத்திற்கு 'சுரீர்' என்று நெஞ்சில் முள் தைத்தாற்போலிருந்தது. 'ஞானியரையும் வெல்லும் வனப்பு வாய்ந்த பாலாமணியா இப்படித் தேய்பிறைபோல் உருக்குலைந்து போய்விட்டாள்?' ஒருகணம் தன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. 'அதற்குள்ளாகவா அழகு அவளிடம் விடை பெற்றுச் சென்றுவிட்டது?' என்று எண்ணினான். ஆனால், மறுவிநாடியே, 'அழிக்கும் அழகை அடித்துத் துரத்திவிட்டு, அவளாகவேதான் இந்த அலங்கோலத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறாள்' என்பதை அவன் நிதர்சனமாகக் கண்டான்.

எண்ணெய் கண்டு எத்தனையோ நாட்கள் ஆகிய அவளது கேசம், கவனிப்பாரற்று மூலைக்கொன்றாய் சுதந்திரமாகப் பறந்து கொண்டிருந்தது. பொன்னாடை தழுவும் அவளது மென்பட்டு உடலை, முரட்டு நூலாடை சுற்றியிருந்தது. அழகிற்கு அழகு செய்யும் ஆபரணங்கள் ஒன்றுகூட அவள் அங்கங்களை அலங்கரித்து ஒளி வீசிக் கொண்டிருக்கவில்லை. ஆனால், அத்தனையும் மீறிக்கொண்டு, 'கணத்திற்கு கணம் வானவில்லின் வர்ண ஜாலங்களை வாரி இறைக்கும் அந்த அழகிய வதனத்தில், மாளாத சோகம் தாண்டவமாடும், இந்த கோரக் களை எங்கிருந்து வந்தது?' என்கிற ஒரே கேள்விதான் சுந்தரத்தின் இதயத்தில் எழுந்தது.

மறுகணமே, 'அட முட்டாளே! பாலாமணியுடன் அத்தனை நாட்கள் பழகியும் உனக்கு இன்னும் அவள் மனம் புரியவில்லை. உன் நினைவும், உன் தந்தைக்கு அவள் கொடுத்த வாக்கும் தானடா பார்புகழும் பாலாமணியை நிறுத்தியிருக்கிறது' என்று அவன் மனமே குத்திக் காட்டிற்று.

இத்தனை உள்ளப் போராட்டங்களையும், இமைக்கும் நேரத்திற்குள் தன்னுள் அனுபவித்த சுந்தரம், மறுகணம் தன் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி 'பாலாமணி' என்று அலறிய வண்ணம் அவள் எதிரில் வந்து நின்றான்.

அத்தனை நேரம் அமைதியாக எதையோ தைத்துக்கொண்டிருந்தவள் சட்டென்று நிமிர்ந்தாள். கண்களிலே பூச்சி பறப்பதுபோலிருந்தது. கொட்டுகிற மழையில், சொட்டச் சொட்ட நின்று கொண்டிருப்பவளைப் போல், விழிகளை மறைத்துக்கொண்டிருந்த நீர்ப்படலங்களின் வழியாக பாலாமணி, சுந்தரத்தையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். புதிராக இருந்த அந்தப் பார்வையிலிருந்து அவனால் எவ்விதப் பொருளையும் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், இங்கேயுமா என்னைத் துரத்திக் கொண்டு வந்தீர்கள்?' என்று விரட்டியடிப்பதாகத் தோன்றவில்லை.

'என்மேல் கோபமா பாலாமணி?' என்று நாத்தழுதழுக்கக் கேட்ட சுந்தரம், அவள் அருகில் அமர்ந்து, 'அம்மா எங்கே பாலா?' என்ற அடுத்த கேள்வியைக் கேட்டதும்தான், அவள் பதறியே போய்விட்டாள். அத்தனை நேரம் அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு, தொண்டைக் குழிக்குள் புதைத்து வைத்துக்கொண்டிருந்த துயரமெல்லாம் சதையைப் பிய்த்துக்கொண்டது போல, பீறிட்டு வந்துவிட்டது.

அம்மா போய்விட்டாளாம்.

பச்சைக் குழந்தையைப்போல், சுந்தரத்தின் மடியில் தலையை வைத்துக் கொண்டு விக்கி விக்கி அழுதாள். சுந்தரம் அவளைத் தேற்றினான். 'அம்மா போய்விட்டாலும், உன்னை அருகிலிருந்து ஆதரிக்க நான் இருக்கிறேனே பாலா! இனி என் உயிருள்ள

வரை, அரைக்கணமும் உன்னைப் பிரிய மாட்டேன் பாலா!' என்று வாஞ்சையோடு அணைத்துக்கொண்டவண்ணம் கூறினன். அந்த ஆறுதலான மொழிகள்தான், மரணச்சாலையை நோக்கி நடந்துகொண்டிருந்த அவள் மனத்தை மீண்டும் வாழ்வின் பாதைக்குத் திருப்பியிருக்கவேண்டும்.

சுந்தரத்தின் தளராத காத்தை முழு நம்பிக்கையுடன் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, மீண்டும் புது வாழ்வு வாழத் துணிந்துவிட்டாள் பாலாமணி. இரண்டு நீண்ட வருஷங்களுக்குப் பிறகு பாலாமணியின் தேவகானம் மீண்டும் ரசிகர்களின் செவிகளில் ஒலிக்கலாயிற்று. ஆனல், அத்தனை காலம் கச்சேரியை நிறுத்திவிட்டிருந்ததாலும், நோயில் விழுந்துவிட்ட தாயைக் குணப்படுத்த ஏற்பட்ட செலவுகளினலும், அவளது சொத்துக்கள் அநேகமாகக் காலியாகிவிட்டன. ஆகவே, இப்பொழுதெல்லாம், பாலாமணி கச்சேரி செய்து, அதன்மூலம் கிடைக்கும் வருவாயில்தான் குடும்பம் நகர்ந்து வந்தது.

ஆனல், 'துன்பம் வந்தால் துணையோடுதான் வரும்' என்பார்களே, அதேபோல்தான் ஆயிற்று பாலாமணியின் வாழ்க்கையும். தாயாரின் மறைவுக்குப்பின், அப்பொழுதுதான் குடும்பம் சீர்பட்டு, சற்றே தலைதூக்க முயன்றபோது மீண்டும் ஒரு பேரிடி விழுந்துவிட்டது.

சாதாரணமாக தலையை வலிக்கிறது என்று படுத்த சுந்தரம், மூன்று நாள் காய்ச்சலுக்குப் பிறகு, 'நிமோனியா தாக்கியிருக்கிறது' என்று டாக்டரால் கூறப்பட்டான். பாலாமணி இதைக் கேட்டுத் துடிதுடித்துப் போனள். தன் தாயின் மரணத்தின்போதுகூட, அவள் இத்தனை வருந்திக் கண்ணீர்விட்டுக் கதறவில்லை.


'எப்படியாவது அவரைப் பிழைப்பு மூட்டிவிடுங்கள் டாக்டர்! என்னை அநாதையாக்கிவிடாதீர்கள்' என்று டாக்டரின் கால்களில் விழுந்து கேட்டுக்கொண்டாள். அவரும் பரம அக்கறையோடுதான் வைத்தியம் செய்தார். நாள் ஒன்றுக்கு மருந்து பலவாக மாற்றி மாற்றி எழுதிக்கொடுத்துப் பார்த்தார். சில சமயங்களில் ஒரே மருந்தைத் தொடர்ந்து சாப்பிடும்படிச் செய்தார். ஆனல், என்ன செய்தும் சுந்தரத்தின் உடல்நிலை என்னமோ, அபிவிருத்தியை நோக்கி ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை.

கையிலிருந்த கொஞ்சநஞ்ச உடைமைகளையும் விற்றுயிற்று. கச்சேரியும் நடந்து கொண்டுதானிருந்தது. ஆனல், வருமானத்திற்கும் வைத்தியத்திற்கும் நடந்த போட்டாப் போட்டியில் வந்த பணமெல்லாம் போதவில்லை. ஊசி வைத்தியம் ஆளையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடும் போலிருந்தது.

சுருதியோடு இணையும் இசைபோல மருந்துச் செலவுகளுடன், டாக்டர் பீசும் வளர்ந்து ஒரு கணிசமான தொகையில் வந்து நின்றது. டாக்டர், அவர்களது நிலைக்கு இரங்கினலும், பாலாமணிக்கு அவரது முகத்தில் விழிக்கவே என்னமோபோலிருந்தது. இந்த சமயத்தில்தான், திடீரென்று தன் வீட்டிற்கு ஒருமுறை வந்து போன திருவிடைமருதூர் ராஜாயியின் ஞாபகம் பாலாமணிக்கு வந்தது.

நீடாமங்கலம் மைனர் ஒருவரின் அன்பிற்கு சமீபத்தில் பாத்திரமாயிருக்கும் ராஜாயிக்குப் பணப் பஞ்சமே கிடையாது என்பதை பாலாமணியும் அறிவாள். ஆகவே, தங்களுக்கிடையே உள்ள அபிப்பிராய பேதத்தை மறந்து, ராஜாயியிடம் ஒரு பெருந்தொகை கடனகக் கேட்டு வாங்கி வைத்தியம் செய்ய விரும்பினள்.

பாலாமணியின் திடீர் விஜயமும், விண்ணப்பமும் ராஜாயியை வியப்பிலாழ்த்தின. இப்படியொரு நிலை ஏற்பட வேண்டுமென்று காத்திருந்த அவள் மனம் களிப்பிலாழ்ந்தது. பாலாமணியிடம், 'இவ்வளவு பெரிய தொகையை, வெறும் நம்பிக்கையின்பேரில் கொடுத்தால் ஒருவேளை 'அவர்' (மைனர்) கோபிப்பாரே பாலா!' என்று பசப்பினள். உள்ளூர அவள் மனம், பாலாமணியைப் பழிவாங்கத் துடித்தது.



பாலாமணியின் வயிற்றை என்னமோ வேதனை செய்தது ராஜாயியின் பேச்சைக் கேட்டதும். அவளிடம் புதிதாக அடகு வைக்கப் பெருமானமுள்ள பொருள் என்ன இருக்கிறது? அத்தனையும்தான், அவள் வீட்டில் இருக்கப் பிடிக்காமல், மார்வாடி பன்னலாலின் இரும்புப் பெட்டிக்குள் அல்லவா சென்று ஒளிந்து கொண்டிருக்கின்றன. தன் அன்பின் அத்தாட்சியாக சுந்தரம் கட்டிய திருட்டுத் தாலியையும், கச்சேரியில் நாலு பேர் கண்களுக்குத் தன் ஏழ்மைக் கோலம் தெரியாமலிருக்கவேண்டி, அணிந்து செல்லும் கில்ட் நகைகளையும் தவிர அவளிடம் வேறு என்ன இருக்கிறது? ஒருவேளை, அதையெல்லாம் தங்கம் என்று மற்றவர்களைப்போல் ராஜாயியும் தப்புக் கணக்குப் போட்டுவிட்டாளா?

பாலாமணிக்கு ஒருகணம் அழுகையே வந்துவிடும்போலிருந்தது. ஆனல், விரைவிலேயே ராஜாயி அப்படி ஒன்றும் ஏமாந்து விடவில்லையென்று புரிந்து கொண்டதோடு, பணத்திற்காக அவள் விதித்த ஒரு நிபந்தனையையும் கேட்டவுடன், பாலாமணி பதறியே போய்விட்டாள். கண்கள் மாலை மாலையாக வடித்த கண்ணீரைச் சாதுர்யமாகத் துடைத்துக்கொண்ட பாலா

மணமான மனம் ஒரு முடிவிற்கு வந்துவிட்டது.

உயிருக்குயிராய் நேசிக்கும் சுந்தரத்தின் விலை மதிப்பற்ற உயிரைவிட வேறெதையுமே பெரிதெனக் கருதாத பாலாமணி மறுநிமிஷமே, 'ராஜாயியிடம் கடனைப் பெற்றுக்கொண்டிருக்கும் தொகை ஆயிரம் ரூபாய் கடன் அடைகிறவரை, எந்தக் கச்சேரியிலுமே நான் 'பைரவி' பாடுவதில்லை' என்று அவள் விருப்பப்படியே நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்துவிட்டு வந்துவிட்டாள். கையில் பொருளுடனும், உள்ளத்தில் பாரத்துடனும் வீட்டை அடைந்த பாலாமணி சுந்தரத்தினிடம் எந்த விஷயத்தையுமே கூறவில்லை.

ராஜாயியிடம் வாங்கி வந்த ஆயிரம் ரூபாயில் சுந்தரத்திற்கு ராஜ வைத்தியம் நடந்தது பொய் போலாகிவிட்டது. 'டபிள் நிமோனியா'வாக வியாதி வேர்விட்டு, வியாபித்திருந்ததுதான் உண்மையாக இருந்தது. அடிக்கடி சுந்தரம், 'பாலா! என்னை நீ இன்னமும் பிழைக்கவைத்து விடலாமென்று நம்பிக்கொண்டிருக்கிறாயா? வியாதி என்னைப் பிழைப்பு மூட்டிவிட்டாலும், உன்னை இத்தனை துன்பத்திற்கு ஆளாக்கிய அதிர்ச்சி என்னை நிச்சயம் கொன்றுவிடும் பாலா' என்று மனம் உடைந்து பிதற்றலானான்.

கண்ணீர் வழிய, பாலாமணி அவன் வாயைப் பொத்தினாள். 'வர வர இப்படி உங்களுக்குப் பிரக்ஞை தவறுகிறதே, அப்பாவுக்குச் சொல்லி அனுப்பட்டுமா?' என்றாள். ஆனால், சுந்தரத்திற்கு அதில் விருப்பம் இல்லை என்றறிந்ததும் விட்டுவிட்டாள்.

பாலாமணிக்கும் வர வரக் கச்சேரிகள் முன்போல் நடக்கவில்லை. ரத்தினத்தை இழந்த சர்ப்பம்போலவேதான், பைரவி பாடாத பாலாமணியின் மதிப்பும், ரசிகர்கள் வட்டாரங்களில் வாட்டமுற்றது. சில இடங்களில், 'பைரவி பாடாவிட்டால் பணம் தரமாட்டோம்' என்கிற ரகளைகூட எழுந்தது. ராஜாயிக்குக் கொடுத்த வாக்கிற்காகப் பணத்தைக் கொடுத்து, பைரவியை மீட்டுக் கொடுக்கச் சில தனவந்தர்கள் முன் வந்தாலும், அவர்கள் இதயத்தின் அடியிலிருக்கும் ஆதிகாரணத்திற்கு உடன்படாத பாலாமணி, அவர்கள் உதவிகளையெல்லாம் நிராகரித்தாள். வறுமையைக் குத்திக் காட்டித் தன்னை வயப்படுத்த நினைக்கும் மனிதர்களைக் கண்டு மனம் குமுறினாள். ஆனால், சுந்தரத்தின் செவிவரையில் அவள் எந்த விஷயத்தையும் எட்டவிடுவதில்லை.

வருமானம் குறைந்ததன் பயனாக ஆங்கில வைத்தியம் நின்றது. மோட்டாரில் வந்து இறங்கும் டாக்டருடைய ஸ்தானத்திற்கு, நாட்டு வைத்தியர் நல்லகண்ணுப் பிள்ளை, கால்நடையாகத் தினம் ஒரு முறை சுந்தரத்தை வந்து பார்த்துவிட்டுப் போனார். சிகப்பும், பச்சையுமாக வண்ண மருந்துகளையே குடித்து அலுத்துப்போன சுந்தரத்திற்கு குளிகையும், லேகியமும் கொஞ்சம் மாறுதலாக இருந்தன. ஆனால், நாளடைவில் அதிலும் அவனுக்கு வெறுப்பே ஏற்பட்டது.

ஒரு நாள் வைத்தியர் கொடுத்த சூர்ணத்தைக் குழைத்து விழுங்கிவிட்டு, செத்துப்போன நாக்கு கேட்டதென்று பாலாமணிக்குத் தெரியாமல், உறியிலிருந்த மோரை எடுத்துக் குடித்துவிட்டான் சுந்தரம். சிறிது நேரத்திற்கெல்லாம் ஜுரம் நெருப்பாகக் காயத் துவங்கிவிட்டது.

வெளியிலிருந்து வந்த பாலாமணி சுந்தரத்தைப் பார்த்துவிட்டுப் பதறியே போனாள். பார்வையில் தீட்சண்யமில்லை. வாய் எதையோ முணுமுணுத்துக்கொண்டேயிருந்தது. அருகில் அமர்ந்தவண்ணம் தன் தலையை வருடிக்கொண்டிருந்த பாலாமணியிடம், 'நான் விரும்பினால்கூட உன்னை விட்டுவிட்டு என்னால் போக முடியாது போலிருக்கிறதே பாலா' என்றான். வரவரத் தன்னம்பிக்கையைக்கூட அவன் இழந்துவிட்டிருந்தான்.

சட்டென்று எழுந்த பாலாமணி, அதைக் கேட்க விரும்பாதவளைப் போல் உள்ளே சென்றுவிட்டாள். துக்கம் பெரும் உருண்டையாக அவள் நெஞ்சை அடைத்தது. ஆரோ ரூட்மா கஞ்சியில் சிறிது க்ளூகோஸைக் கலந்து கொண்டு வந்த பாலாமணி சிறிய பாத்திரத்தில் ஊற்றிக் கொடுத்துக் குடிக்கும்படிக் கெஞ்சினாள்.

'பசிக்கவே இல்லை பாலா' என்று அவள் அன்புக் கரத்தை ஒதுக்கினான் சுந்தரம்.

சற்று முன்பு திருட்டுத்தனமாக மோர் குடித்து, அவன் வயிறு நிறைந்திருக்கிறது என்பதைப் பேதை அவள் எப்படி அறிவாள்? 'எப்படிப் பசிக்காமலிருக்கும். காலையில்கூட ஒன்றும் குடிக்கவில்லை, டாக்டரைப் போய் அழைத்து வருகிறேன். உங்களைப் பார்க்கவே இன்று என்னமோபோலிருக்கிறது' என்று எழுந்த பாலாமணியைச் சட்டென்று இழுத்துத் தன் அருகில் அமர்த்திக்கொண்டான்.

'எனக்கு இப்போது என்ன வந்துவிட்டது பாலா, நீ டாக்டரை வீட்டிற்கு ஓட? நீ என் அருகில் இரு. இப்பொழுது எங்கேயே போகக் கூடாதுபோல் என்னுள் ஏதோ தோன்றுகிறது' என்று அவள் கையை எடுத்துத் தன் மார்மீது வைத்துக் கொண்டான். அவளும் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

சற்று நேரம் சுவரிலுள்ள படமொன்றையே வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்த சுந்தரம் திடீரென்று பாலாமணியின் பக்கம் திரும்பி, 'பாலா! முன்பொரு சமயம், திருவாரூரில், மாணிக்கவாசகருடைய 'பால் நினைந்தூட்டும்' என்கிற திருவாசகத்தை ராகமாலிகையாகப் பாடாமல், பைரவி ராகத்திலேயே நீ பாடியது உனக்கு நினைவிருக்கிறதா? அன்று உன்னை எத்தனை பேர்கள், எத்தனை விதம்விதமாகவெல்லாம் புகழ்ந்தார்கள். உன் கானத்திலே மெய்மறந்து, உடல் சிலிர்த்து வந்த வயோதிக சிவபக்தர் ஒருவர், உனக்கு விபூதி இட்டு ஆசீர்வதித்தாரே—'பராசக்தி பைரவி, பாடகி பாலாமணிக்கு அடிமையாயிருக்கக் கண்டேன்' என்று; ஞாபகமிருக்கிறதில்லையா பாலா? அந்த சம்பவத்தை நினைத்துக்கொண்டுவிட்டதனால்தானோ என்னமோ 'எனக்கு இன்று இன்னுமொரு முறை அந்தத் திருவாசகத்தை நீ பைரவி ராகத்திலேயே பாடிக் கேட்க வேண்டும் போல் ஒரே ஆவலாக இருக்கிறது. பாடுகிறாயா பாலாமணி' என்று சுந்தரம் கேட்டுக்கொண்டு வரும்போதே, பிரளயமாகத் தன்னுள் பொங்கி வரும் துயரத்தை அடக்க முடியாமல் 'ஹோ'வென்று வாய்விட்டே கதறிவிடுவாள்போலிருந்தது. கீழ் உதட்டைப் பற்களால் அழுந்தக் கடித்துக்கொண்டு பொருமினாள். இருதயமே 'படீ'ரென்று வெடித்துச் சிதறிவிடும்போலிருந்தது அவளுக்கு.

'டப்–டப்'பென்று தன் நெற்றியில் வந்து சொட்டிய சுடுநீர்த் துளிகளைக் கண்டு, திடுக்கிட்டுத் திரும்பிய சுந்தரம், அவை பாலாமணியின் கண்ணீர்த் துளிகள் என்றறிந்ததும் பதறியே போனான்.

'பாலா! அழுகிறாயா என்ன? ஏன் அழுகிறாய் பாலா......?' என்று திரும்பத் திரும்பக் கேட்பதைத் தவிர, அவளது துயரின் காரணத்தை அவனால் அறிந்து கொள்ள முடியவில்லை. அவளும் சொல்லுகிற வழியைக் காணோம். இதற்குள் பழைய தொடர் இருமல் அவனுக்கு வந்துவிட்டது. உயிரையே காறி உமிழ்ந்து விடுவான்போல், 'லொக் கொல்' என்று இருமி இருமிக் களைத்து அப்படியே சாய்ந்துவிட்டான்.

சிறிது நேரம் கழித்து அவளைவே கண் விழித்தான். அப்பொழுதும் ஆற்றுவாரின்றி பாலாமணி குலுங்கக் குலுங்க அழுதுகொண்டுதானிருந்தாள். கொட்டும் வைரத்தின் ஜ்வலிப்பைப் போல், அழகைச் சொரியும் அவள் நயனங்கள் நீரைச் சொரிந்துகொண்டிருந்தன. ஆனால், சுந்தரமோ விட்ட இடத்திலேயே தொடர்ந்தான். தன் மூச்சு ஒடுங்கிக்கொண்டு வருவதைப் போல், கணத்திற்கு கணம் உணர்ந்த அவன், அவளுடைய இசையில், ஒன்றியே தன் ஜீவன் பிரிய வேண்டுமென்று விழைந்தான்.

'பாலா...பாலா...என் பாலா... கண்ணே...பல கோடி மக்கள் ம[illegible] பைரவி பாடும் நீ...உன் அன்பு சுந்[illegible]

சத்திற்காக ஒருமுறை...பைரவி பாட மாட்டாயா?' என்று திரும்பத் திரும்ப சுந்தரம் கூறிக்கொண்டிருக்கும்போதே 'ஐயோ சுந்தரம்...பாலாமணி எப்படியடா பைரவி பாடுவாள்?' என்று யாரோ உணர்ச்சியுடன் கதறிக் கொண்டுவரும் குரல் கேட்ட திசையை நோக்கி, நான்கு நயனங்கள் சார்ந்தன. மறுகணம்!

'அப்பா!'
'மாமா!'

'என்னை அப்படி அழைக்காதீர்கள். நான் மகாபாபி. கண்ணே பாலா மணி...உன் அருமை உணராமல் எவ்வளவு கொடுமை செய்துவிட்டேன்... என் மகனுக்கு நீ செய்திருக்கும் தியாகம்...ஆனால்...ஐயோ! அந்தப் பொருமைப் பிண்டம் அதை உபயோகப்படுத்திக்கொண்டு விட்டதே. சுந்தரம், 'உன் பாலாமணி தெய்வமடா... பைரவியையே அடகு வைத்தல்லவா... உனக்காகப் பணம் வாங்கி, உன் உயிரை மீட்டிருக்கிறாள்?... ஆனால் அந்த ராஜாயி...நன்றி கெட்ட துரோகி...'பைரவி பாடாத பாலா மணிக்கு இனிப்புகழேது?' என்று என்னிடமே அல்லவா மார் தட்டுகிறாள்... பாலா...அப்போதே என் கண் திறந்தது...கடனைத் தூக்கி எறிந்துவிட்டேன். பாலா இதோ நீ அவளுக்கு எழுதிக் கொடுத்தது...' என்று உணர்ச்சி வசப்பட்டு அவர் கூறிக்கொண்டு வரும்போதே, 'மாமா! அப்போது உங்களுக்கு முன்னரே ராஜாயியைத் தெரியுமா?' என்று பாலாமணி கேட்கவுமே, அசடு வழியும் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டவண்ணம், 'எங்கே... பாலா...நானும் கேட்கிறேன்...பாடு உன் பைரவியை' என்று பேச்சை மாற்றினார்.

சற்றைக்கெல்லாம் அங்கே சொல்லொலி மறைந்து நாத ஒலி மறைந்தது. உடலைப் பிழிந்து உயிரைக் குரலாக்கி, அன்று பாலாமணி பைரவி பாடியதுபோல், ஆயுளிலும் அப்படிப் பாடியிருப்பாளா என்பதே சந்தேகம் தான். விடுதலை கண்ட பைரவி தேவதையின் வீர வெற்றி முழக்கமல்லவா அது! தன்னையும், சூழ்நிலையையும் மறந்து, தழுவிக்கொண்டிருந்த தம்பூராவோடு ஒன்றிவிட்ட அவளது அன்றைய இசையில், 'இப்படியே இறைவனது திருவடிகளை எட்டிப் பிடித்துவிடமாட்டேனா?' என்கிற ஏக்கம்தான் பிரதிபலித்தது. ஆனால், அது அத்தனை சீக்கிரம் அவளுக்கு சித்தித்துவிடும் என்பதுதான் சுந்தரம் எதிர்பாராத ஒன்று.

'பால்நினைந்தூட்டும் தாயினும்
சாலப்பரிந்து

என்ஊனினை உருக்கி
உள்ளொளி பெருக்கி

ஆனந்தமாய தேனினைச் சொரிந்து,
புரம்புறம் திரிந்த

செல்வமே, சிவபெருமானே,
யானுனைத் தொடர்ந்து

சிக்கெனப்பிடித்தேன்,
எங்கெழுந்தருளுவதினியே'

என்ற அடிகளை மெய்மறந்து பாலாமணி திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டு வரும்போதே, அவளது குரல் ஒடுங்கி பிடியிலிருந்து தம்பூரா நழுவுவதை சுந்தரம் கண்டான்.

மறுகணம் தன்னையும் மறந்து 'பாலாமணி' என்று அலறியவண்ணம் சுந்தரம் கட்டிலிலிருந்து துள்ளி எழுந்து ஓடி வருவதற்குள்; தூண் உருவாய் குறுக்கே நின்ற மறலியின்மீது மோதுண்ட சுந்தரம், ரத்தக் குளத்தில் சுருண்டு விழுந்தான்.

உயிர் கூண்டிலிருந்து விடுதலை கண்ட இரண்டு உயிர்ப் பறவைகள் அத்தனை காலம் ஒன்றாக வாழ்ந்தது போலவே, வான வீதியிலும் ஜோடியாகப் பறந்து மேலே மேலே சென்றன. ஆனால், கீழே இரண்டு சடலங்களின் மீதும் விழுந்து விழுந்து அழுது புலம்பிக்கொண்டிருந்தார் ஆறுதலே பெற முடியாத பிள்ளையவர்கள்.






'வேலன்-வள்ளி' காதல் தெரிய வந்தபொழுது எவ்வளவு ஆச்சர்யம் கொண்டனரோ, அதைவிடப் பன்மடங்கு ஆச்சர்யம் கொண்டனர் அவ்வூர் மக்கள் 'முருகையன்–தங்கம்' காதல் தெரிய வந்தபொழுது.

'என்ன ஓய் இது...என்னாலே நம்பவே முடியவில்லை...! முருகையனுக்கும் தங்கத்துக்கும் காதலா...? வேடிக்கையாயிருக்கிறதே...!' என்றார் வேதநாயகம்.

'உமக்கு எதுதான் வேடிக்கையாயிருக்காது...? நீரே ஒரு வேடிக்கையான மனுஷராகத்தான் இருக்கின்றீர்...!' என்றார் ராமசாமி. இவர் எதையுமே வேடிக்கை விநோதம் என்று ஒப்புக்கொள்ளாத சந்தேகப் பேர்வழி.

'நான் கண்ணால் பார்த்தேனய்யா...முருகையனும் தங்கமும் சேர்ந்து போறதையும் சேர்ந்து வர்றதையும்...! மந்தையிலே மத்த மாடுகளெல்லாம் கும்பலாயிருக்கும்பொழுது கூட 'இதுக' ரெண்டும் தனியா தூரப்போய் 'ஜோடி'யாத்தான் நிக்குது...' – இது கோடி வீட்டுக் குப்புசாமி.

'உம்...மனிதரிலே சிலர் மிருக குணம் படைச்ச மனிதர்கள் இருக்கிறுப்போலே, மிருகங்களிலேயும் சில மனித குணம் கொண்ட மிருகங்கள் இருக்கிருப்போலிருக்கிறது' என்ருர் அடுத்த வீட்டு அண்ணுசாமி.

'நீங்க என்னதான் சொல்லுங்க. என்ளுலே இதை நம்ப முடியாது...மாடாவது காதலிக்கிறதாவது!' – இவர் கண்ணுல் கண்டதும் பொய்; காதால் கேட்டதும் பொய்; தீர விசாரித்தறிந்ததும் பொய் என்ற கொள்கையுடையவர்.

குப்புசாமிக்கு இவர் பேச்சு கோபத்தை உண்டாக்கிவிட்டது. 'நீர் எதைத்தானய்யா நம்புகிறீர்? மொதெல்லே உம்ம சம்சாரம் உம்மை நம்புகிருளா?' என்ருர் ஆத்திரத்துடன்.

'நீங்க எதுக்கு இப்போ சண்டை பிடிக்கிறேள்...? 'வேலன் – வள்ளி' காதல் எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை 'முருகையன் – தங்கம்' காதல் என்று கூறிவிட்டு, பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தார் சமாதானப் பிரியரான சந்தானம்.'

முனியன் தனது இரண்டு கண்களில் ஒன்றைத் தனது அருமைப் பெண் வள்ளியாகவும், அடுத்ததை தன்னுடைய உயிர்க்காளையான முருகையனுகவும் பாவித்து வந்தான்.

அவன் வள்ளியின்மேல் வைத்திருந்த அன்பில் சரி பாதி காளையின்மேல் வைத்திருந்தான் என்றே சொல்லலாம். முருகையன் கன்றிலிருந்தே அவனிடம் இருந்து வருகிறது. தாயில்லாப் பெண்ணுன வள்ளியை எப்படியெல்லாம் சீராட்டி வளர்த்தானே அப்படியே முருகையனையும் வளர்த்து வந்தான்.

வள்ளியும் முருகையனும் வளர்ந்தார்கள். மணலிலிருந்து பிடுங்கின வள்ளிக் கிழங்கைப் போல் தளதளவென்று காட்சியளித்த வள்ளியைப் போலவே முருகையனும் 'கொழு கொழு' என்று காட்சி தந்தது.

முருகையன் காளையான பிறகும் முனியன் அதை வண்டியிலோ, ஏரிலோ பூட்டவில்லை. காளை எந்தவிதமான கவலையுமின்றி மூன்று வேளையும் வேலை ஏதுமின்றி நன்ருகத் தின்று கொழுத்து வந்தது. இதுல் முருகையனிடம் முரட்டுக் குணமும் வளரத் தொடங்கியது.

அது அந்த ஊரிலேயே இரண்டேயிரண்டு பேருக்கு மட்டுமே அடங்கி நடந்து வந்தது. அது முனியனும் வள்ளியும் தான்! மற்ற எவரைக் கண்டாலும் அலட்சியம்தான். முருகையன் தெருவில் நடந்து வருகிறது என்ருல், அதன் எதிரில் செல்லவே பயந்தனர் ஊரார். மக்களே அந்தக் காளையைக் கண்டு கலங்கியபொழுது, மற்ற மிருகங்களைப் பற்றிச் சொல்வானேன்! மொத்தத்தில் முருகையன் ஒரு 'முடிசூடா மன்னன்' போல் அவ்வூரில் வளைய வந்தது.

ஊரிலுள்ள சிலர் முனியனிடம் வந்து, 'முனியா! காளையை ஏன் இப்படி வெட்டியா வேலை கொடுக்காம பாழடிக்கிறே...இப்பவே அதை வேலைக்குப் பழக்கினுத்தான் உண்டு. அப்புறம் அதை அடக்குவது நாய் வாலை நிமித்தற கதைதான்' என்றனர்.

முனியன் அவர்கள் பேச்சைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. என்றும்போலவே காளை தன்னிச்சையாகவே திரிந்து வந்தது.

இப்படித் திரிந்து வந்த காளை தங்கத்தின்மேல் 'காதல்' கொண்டதுதான் அவ்வூர்வாசிகளிடையே மிகுந்த பரபரப்பை உண்டாக்கிவிட்டது.

வேலனின் அன்புக்குப் பாத்திரமான பசுதான் தங்கம். வேலனின் உயிர் நாடி தங்கத்தினிடம் தான் இருந்தது. கண்ணும் கருத்துமாக அதைக் கவனித்துக் கொள்வதுதான் அவனுடைய முக்கியமான வேலை.

வேலன் எந்தச் சமயத்தில் வள்ளியைச் சந்தித்தானே, அதே சமயத்தில் தங்கமும் முருகையனை சந்தித்தது!

கண்டவுடன் வேலனும் வள்ளியும். காதல் கொண்டது வியப்பல்ல! காரணம் அவர்கள் மனிதர்கள். வேலனுடைய கட்டுமஸ்தான தேகத்தையும், களை பொருந்திய முகத்தையும் கண்டு மயங்கிவிட்டாள் வள்ளி. வள்ளியின் குறுகுறுத்த விழிகளையும், குண்டு முகத்தையும் கண்டு உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்டான் வேலன். உடனே அவர்களிடம் காதல் பிறந்தது.

ஆனுல், முருகையனும் தங்கமும் சந்தித்துக் கொண்டவுடனே, அவர்களிடையே காதல் பிறந்ததுதான் வியப்புக்குரிய விஷயமாக அமைந்துவிட்டது. அதற்குப் பிறகு அவைகள் நடந்து கொண்ட விதம், அவைகளின் காதலை ஊர்ஜிதம் செய்தது.

காலையில் அவிழ்த்துவிட்டவுடன் முருகையனும் தங்கமும் ஒன்ருக மந்தையை நோக்கிக் கிளம்பும். மற்ற மாடுகள் பின்னுல் கும்பலாக வருவதைத் திரும்பியும் பார்க்காமல் அவைகள் இரண்டும் ராஜநடை போட்டுக்கொண்டு செல்வதை ஊரே பார்த்து அதிசயித்தது.

மாடுகள் எல்லாம் [illegible] மேய்ந்து கொண்டிருக்கும். ஆனுல், முருகையனும் தங்கமும் தனித்து வந்து படுத்துக் கொண்டு, எவருக்கும் புரியாத பாஷையிலே எவ்வளவோ விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும். அவைகள் என்ன பேசினவோ! ஆனுல் அவைகள் காதல் பேச்சுக்களாகத்தான் இருக்கவேண்டும்!

முருகையன் தனது காதலி தங்கத்திடம் வைத்திருந்த அன்பு எத்தகையது – எவ்வளவு ஆழமானது என்பதை அவ்வூரார் அறிந்துகொள்ளும் சம்பவமொன்று நடந்தது.

ஒரு நாள், மாடு ஓட்டிச் செல்லும் பையன் தெரியாத்தனமாக தங்கத்தைப் பிரம்பால் அடித்துவிட்டான். அவ்வளவுதான்! இதைப் பார்த்துக்கொண்டேயிருந்த முருகையன் ஒரு உறுமல் உறுமிவிட்டு, சிங்கம்போல் பையன்மேல் பாய்ந்தது. பையன் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓட்டம் பிடித்தான். முருகையன் அவ்வளவு லகுவில் அவனை விட்டுவிடும்? பையன் கூப்பாடு போட்டுக்கொண்டே அசுர வேகத்தில் ஓட, காளை அவனைத் துரத்திக்கொண்டு ஓடியது. ஆயிற்று, இன்னும் சில விடிைகளில் அது அந்தப் பையன்மேல் பாய்ந்து அவனைக் குத்திக் கொதறிவிடும். அந்தச் சமயத்தில் அந்த வழியே வந்து சேர்ந்தான் முனியன். 'முருகு' என்ற முனியனின் குரல் கேட்டதும்தான் பையன்மேல் பாயப் போன காளை 'டக்'கென்று நின்றது. பையனும் பிழைத்தான்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு தங்கத்திடம்கூட எவரும் நெருங்குவதில்லை.

தை மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது!

வழக்கம்போல், வள்ளியின் வரவுக்காகக் கொல்லை மேட்டிலே காத்துக் கொண்டிருந்தான் வேலன். தலையிலே கூடையொன்றைக் கவிழ்த்துக்கொண்டு வள்ளி வந்து சேர்ந்தாள்.

'என்ன வள்ளி இது…? ஆனாலும் நீ சுத்த மோசம்! எவ்வளவு நேரமா நான் காத்துக்கிட்டிருக்கேன் தெரியுமா…? அதோ பாரு தங்கத்தை! 'முருகு'வைக் காக்க வைக்கக்கூடாதுன்னு கூடவே வந்துடுத்து.' – முருகையனும் தங்கமும் படுத்துக் கொண்டிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டிக் கூறினான் வேலன்.

வள்ளி திரும்பிப் பார்த்தாள். சற்றுத் தொலைவில் காளையும் அதன் காதலியும் படுத்துக் கொண்டு, தங்கள் நயன பாஷையில் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தன.

'அது சரி, மச்சான்! தை பொறக்கப் போவுது. இந்தத் தையிலே எங்க முருகுக்கு எப்படியும் கல்யாணத்தை செஞ்சுப்புடறதா இருக்கோம்…நீ என்ன சொல்றே?' என்றாள் வள்ளி சிரித்துக்கொண்டே.

'நானு சொல்றதுக்கு என்ன இருக்காம். பொண்ணும் புள்ளையும் எப்போ ஒத்துப் போயிட்டாங்களோ அப்புறம் யாருதான் என்ன சொல்ல முடியும்?' என்றான் வேலன், குறும்பாக.

'அப்படிச் சொன்னா வுட்டுடுவோமா…? பொண்ணுக்குப் பரிசப் பணம் எதுவும் எங்களாலே கொடுக்க முடியாது. சம்மதமா …?'

'உங்க அப்பாரு தங்கத்துக்குப் பரிசப் பணம் எதுவுமே கொடுக்க வேணும். எனக்கு வேண்டியதெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான்…' என்று கூறி நிறுத்தினான் அவன்.

'என்னதாம் அது…?'

'என் கண்ணான பொண்ணு வள்ளியை எனக்குக் கொடுத்துடணும்.'

'ஆமாம், நீ என்கிட்டே சொல்லிக்கிட்டிருந்தா காரியம் ஆன மாதிரிதான்…அ ப் பா ரை வ க் கண்டு பேசுவியா, அதைவுட்டுப் புட்டு…இதோ பாரு மச்சான்… தையும் பொறக்கப் போவுது. நீ இனியும் சும்மா இருக்கிறதிலே என்ன அர்த்தம்?' என்றாள் அவள் படபடப்புடன்.

'கேட்டுடறேன் வள்ளி! இன்னிக்கே நிச்சயம் கேட்டுடறேன். இந்தத் தையிலே நம்ம கல்யாணம் 'ஜாம்ஜாம்'னு நடக்கும்…ப ய ப் ப ட ா தே…நம்ம முருகு–தங்கம் கல்யாணமும் தான்' என்றான் அவன்.

அவள் முகத்தில் திருப்தி நிழலாடியது.

வேலன் கூறியதைக் கேட்டு இடி இடி என்று சிரித்தான் முனியன். அவன் சிரிப்புக்குக் காரணம் தெரியாமல் வேலன் முழிக்கையிலே, கேள்வியொன்றையும் போட்டான் அவன்.

'தம்பி, நம்ம வள்ளியோடு, கண்ணுக்குக் கண்ணா முருகையனையும் நான் வளர்த்துக்கினு வரேன். ஏன் தெரியுமா?'


வேலன் மௌனமாகவிருப்பதைக் கண்டு அவனே தொடர்ந்தான்: 'முருகுவை என்னிக்காவது வண்டியிலே பூட்டியிருப்பேனா?…ஏரிலே பூட்டியிருப்பேனா…? அதுக்கும் வேலையெதுவும் கொடுக்காமே நல்லா தீனி போட்டுக் கொழுக்கடிச்சு வளர்த்தது எதுக்காக…? அதுலேதான் விஷயம் இருக்கு…!'

'என்ன வெஷயம்?'

'வள்ளியோட கல்யாண வெஷயம்!'

'வள்ளியோட கல்யாணத்துக்கும், முருகையனை வேலை வெட்டியில்லாமல் கொழுக்கடிச்சதுக்கும் என்ன சம்பந்தம்…?'

'சம்பந்தம் இருக்கு, தம்பி! நம்ம காளையைப்பத்தி ஊருலே



நல்லா தெரியும்! ஒரு பய கிட்டே நெருங்க முடியாது. வருகிற பொங்கலுக்கு நம்ம முருகையனைப் போட்டியிலே விடப் போறேன். போட்டி என்ன தெரியுமா? சண்டை! காளையோடு சண்டை! நம்ம முருகையனோடு எவன் சண்டை செய்து, அடக்கி, அதன் கொம்புலே கவுத்தைக் கட்டி இழுத்துக்கிட்டு வரானோ அவனுக்குத்தான் வள்ளி. இப்போ புரியுதா…? வள்ளி வேணுமின்னு மொதல்லே முருகையனோடு சண்டை செய்யறதுக்கு உன்னைத் தயார் செஞ்சுக்கோ!'–சொல்லிவிட்டு, மறுபடியும் இடி-இடி என்று சிரித்தான் அவன்.

வேலனுக்கு அவன் சிரிப்பு வேம்பாகவிருந்தது. பேசாமல் எழுந்து வந்துவிட்டான்.

ஊராரிடையே முனியன் காளையைப் போட்டியில் விடப் போகும் விஷயம் பரவியது. எல்லோருக்கும் அப்பொழுதுதான் 'அவன் காளையை வேலை ஏதும் செய்ய விடாமல் நன்றாகத் தீனி போட்டுக் கொழுக்கடித்ததன் மர்மம் தெரியவந்தது.'

வள்ளிக்கு விஷயம் எட்டிற்று. என்ன செய்வதென்று தெரியாமல், 'இருதலைக் கொள்ளி எறும்புபோல்' அவள் தவித்தாள். முருகையனுடைய முரட்டுக் குணம் அவளுக்குத் தெரியும்.

அதனுடன் சண்டை செய்து ஜயிப்பது என்பது முடியாத காரியம் என்பதையும் அவள் அறிவாள்· இந்த நிலையில் அவள் வேலனை அடைவது எப்படி?

வேலன் யோசிக்கவேயில்லை; தான் காளையுடன் சண்டையிடத் தயார் என்று அறிவித்து விட்டான்· அவன் கூறியது கூரிய வேலால் தன் நெஞ்சத்தைப் பிளப்பதுபோலிருந்தது வள்ளிக்கு· செய்வதொன்றுமறியாமல் அவள் புழுவாய்த் துடித்தாள்.

பொங்கலுக்கு · மறுநாள்! அன்றுதான் மாட்டுப் பொங்கல்.

காளையின் சண்டையைப் பார்ப்பதற்கு ஊரே அந்த மைதானத்தில் கூடியிருந்தது· எங்கும் ஓரே ஜனக் கூட்டம்· மைதானத்துக்கு முன்னால் வள்ளி நின்றுகொண்டிருந்தாள்· அவளுக்கு அருகில்...

காளையின் காதலி தங்கம் நின்றுகொண்டிருந்தது. அவள் தூரத்தே நின்றுகொண்டிருந்த வேலனை ஏறிட்டு நோக்கினாள். அவன் அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான்·

சாதாரணமாக அவன் புன்முறுவலைக் கண்டு சொக்கி நிற்கும் வள்ளி, அப்பொழுது வேதனையினால் விண்டு விரிந்தாள்·

சண்டையும் ஆரம்பமாயிற்று· முதலில் யாரோ ஒரு ஆள் காளையை நோக்கி ஓடி வந்தான். முருகையன் ஓரே பாய்ச்சலாக அவன்மீது பாய்ந்து, அவனைத் தன் கொம்புகளால் தாக்கிக் கூட்டத்தை நோக்கிப் போட்டது· விழுந்தவன் மறுபடியும் எழுந்து வரவேயில்லை· இதுபோலவே அடுத்து வந்த நான்கு பேரும் மூலைக்கொருவராகத் தூக்கியடிக்கப்பட்டனர்.

கடைசியாகக் காளையை நோக்கி கம்பீரமாக நடந்து வந்தான் வேலன்· வள்ளியின் இதய சப்தம் அவள் காதுக்குக் கேட்டது.

காளையும் காளையும் ஒருகணம் ஆக்ரோஷத்துடன் பார்த்துக் கொண்டனர்· அடுத்த கணம்...

முருகையன் வேலனை நோக்கிப் பாய்ந்தது· வேலன் 'சடக்' கென்று ஒதுங்கிக்கொண்டான். காளை முன்னால் இருந்த தூணில் போய் முட்டிக்கொண்டது· அவ்வளவுதான்! காளையின் கோபம் உச்சநிலையை அடைந்து விட்டது. திரும்பிய அது அசுர பலத்துடன் வேலனின் மேல் பாய்ந்தது· அடுத்த கணம் அப்பால் போய் விழுந்தான் வேலன்·

விழுந்தவன் சமாளித்துக் கொண்டு எழுந்து விட்டான். மறுபடியும் காளையை நெருங்கினான்· இரண்டாவது முறையாக வேலன் தூக்கியடிக்கப்பட்டான். இப்படியாக வேலன் முருகையனை நெருங்குவதும், அது இவனைத் தூக்கியடிப்பதுமாக நான்கைந்து முறை நடந்து விட்டது·

வேலனுக்கு வேர்த்துக் கொட்டியது· உடம்பு முழுவதும் ஒரே வலி. களைப்பு வேறு· இனி எழுந்திருக்கவே முடியாதபடி. இடுப்பு வலி. அவன் தலை நிமிர்ந்தான்· நிமிர்ந்தவன் கண்களில் தூரத்தே நின்றுகொண்டிருந்த வள்ளி தென்பட்டாள்· உடனே சமாளித்துக்கொண்டு மெள்ள எழுந்தான்· களைப்பால் கால்கள் தள்ளாடின. கைகால்கள் சோர, காளையை நோக்கி ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கத் தொடங்கினான்·

காளை சீற்றத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்தது. அதனுடைய கண்களில் ஜ்வலித்த கோபத்தின் ஜ்வாலையைக் கண்டு, கூட்டத்திலுள்ளவர்களெல்லோரும் கலகலத்துவிட்டனர்· இம்முறை வேலன் அதை நெருங்கினால் நிச்சயம் அவனைக் 'குளோஸ்' செய்துவிடும்·

வள்ளியின் கண்களில் கண்ணீர் ஆறுகப் பெருகியோடிக் கொண்டிருந்தது. இதயத்தை யாரோ பலவந்தமாகப் பிய்த்து எடுப்பதுபோன்றதோர் பிரமை... 'வேண்டாம், போகாதே' என்று கத்த வேண்டும்போலிருந்தது· ஆனால், வார்த்தைகள் வெளிவர முடியாதபடி, தொண்டையில் ஏதோ வந்து அடைத்துக்கொண்டது.

முருகையனுக்கும் வேலனுக்கும் உள்ள தூரம் குறைந்துகொண்டே வந்தது· ஆயிற்று...இதோ வேலன் காளையை நெருங்கியே விட்டான்· இந்தக் காட்சியைக் கண்டதும் வள்ளி மயக்கம் போட்டு விழுந்து விட்டாள்.

காளை தனது கூரிய கொம்புகளை அவனுடைய உடலில் பாய்ச்ச இன்னும் ஒரு விநாடியே இருந்தது· இதோ அது குனிந்து கூட விட்டது. அடுத்த நிமிடம் அவன் பிணமாகத் தரையில் சாயப் போகிறான்.

அந்தச் சமயத்தில்...

மூர்ச்சையுற்று விழுந்து கிடந்த வள்ளியின் பக்கத்திலிருந்து பலத்த ஒரு குரல் எழுந்தது·

'அம்மாவ்...'

அந்தக் குரலிலே என்ன மந்திர சக்திதான் இருந்ததோ...! எல்லோரும் அதிசயிக்கத்தக்க வண்ணம் புலியாகச் சீறிக் கொண்டிருந்த காளை, அந்தக் குரலைக் கேட்ட அடுத்த விநாடி பூனைபோல் நின்றுவிட்டது. அதனுடைய சீற்றமும், உறுமலும் இருந்தவிடம் தெரியாமல் ஓடி மறைந்தன·

ஆச்சரியத்தால் ஒருகணம் ஸ்தம்பித்து நின்ற வேலன், அடுத்தகணம் கையில் வைத்திருந்த கயிற்றால் அதன் கொம்புகளைக் கட்டத் தொடங்கினான். காளையும் குனிந்து கொடுத்தது· வேலன் கயிற்றைப் பிடித்துக் கொண்டு முன்னால் வர, முருகையன் பூனைபோல் அவன் பின்னால் வந்தது·

கூட்டத்திலே ஓரே பரபரப்பு. 'தங்கம் குரல் கொடுத்த மறுவிநாடி புலியாயிருந்த முருகையன் எப்படிப் பூனையா மாறிடுத்து பார்த்தீங்களா...? அது தன் காதலனிடம் ஏதோ சொல்லியிருக்கு...காதலியின் சொல்லுக்குக் காதலன் கட்டுப்பட்டு நிந்துடுத்து' என்றார் கூட்டத்தில் ஒருவர்·

மூர்ச்சை தெளிந்து எழுந்த வள்ளி, தங்கத்தைக் கட்டிக் கொண்டு கண்ணீர் உகுத்தாள்·

அந்த வருடம் அவள் மணப்பெண்ணாக வேலனின் வீட்டிலே காலடி எடுத்து வைத்தபொழுது அவள் பின்னால் முருகையனும் சென்றது—தன் காதலியிடமே நிரந்தரமாயிருக்க·

★




**ஓ...ஓ...சாரதா!**

இடையிலே செப்புக்குடமேந்தி குளக்கரைப்படியின்மீது ஏறிக்கொண்டிருந்த சாரதா பின்னால் திரும்பிப் பார்த்தாள்!

குளத்தின் நடுவே இருந்து நீந்திக் கொண்டு கரையை நோக்கி வேகமாக வந்தான் விஸ்வம். திரும்பிப் பார்த்த சாரதாவைக்கண்டு 'சாரதா' என்று கூவினான். வாயில் இருந்த நீரைக் கொப்புளித்தபடியே இரு கைகளையும் வீசிவீசிக் கரையை அடைந்து மேலே ஏறினான். அவன் கட்டியிருந்த துண்டிலிருந்து தண்ணீர் கீழே வழிந்து கொண்டிருந்தது. ஏற்கெனவே சுருண்டிருந்த அவன் தலைமயிர் தண்ணீரால் அலைக்கழிக்கப்பட்டு இன்னும் சுருளாயிருந்தது. மயிரிலிருந்து நீர் சொட்டிக்கொண்டிருந்தது கீழே.

வாட்டசாட்டமாக விஸ்வம் நின்று கொண்டிருப்பதைப் பார்க்கும்போது 'ராஜா' போலத்தான் இருந்தான்.

விஸ்வம் பேசினான்.

'சாரதா! உனக்குக் கல்யாணமா சாரதா!'— திக்கித் திணறிக் குழைந்தபடி பேசிய விஸ்வத்தைக்கண்ட சாரதாவுக்கு அந்த நிலை என்னவோபோல இருந்தது.

'இல்லையே விஸ்வம்!'—என்றாள் சாரதா மெல்ல.

'நீ என்னிடம் மறைக்கப் பார்க்கிறாய் சாரதா—இதோ கல்யாணி சொன்னாளே, உனக்குக் கல்யாணம் என்று!'

சாரதாவுக்கு அப்போதுதான் உண்மை புலனாகியது. விஷமச் சிரிப்புடன் புடவையை நீரில் அலசிக் கொண்டிருந்த கல்யாணியை கனல் தெறிக்க நோக்கினாள். அவள் இந்தப் பக்கம் திரும்பினால்தானே!

'இல்லை விஸ்வம்! கல்யாணி வேண்டுமென்றே உன்னிடம் பொய் சொல்லியிருக்கிறாள். நீ அவள் பேச்சை நம்பாதே!' என்றாள் சாரதா விஸ்வத்தின் பரந்த மார்பைப் பார்த்தபடியே.

'அப்படிச் சொல்லு சாரதா! நானும் கல்யாணியிடம் 'பொய் சொல்லாதே' என்றுதான் சொன்னேன். அவளுக்கு எப்போதுமே உன்னைக்கண்டால் கொஞ்சமும் ஆகவில்லை...திக்கித் திக்கியபடி வார்த்தைகளைச் சொன்ன விஸ்வத்துக்கு, அதற்கு மேல் அங்கேயிருக்கப் பிடிக்கவில்லை.

ஆனால் கல்யாணி சும்மா இருக்கவில்லை! 'ஆமாம் ஆமாம்! நான்தான் பொய் சொன்னேன். இல்லாவிட்டால் பைத்யத்துக்கு யார் பெண் கொடுப்பார்கள்?' என்று அவள் சொல்லி முடித்ததும், அங்கே அமர்ந்து பாத்திரம் தேய்த்துக்கொண்டிருந்த பார்வதியும்—அம்புஜமும் கலீர் என்று சிரித்து விட்டனர்.

பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கொண்ட சாரதா விஸ்வத்தைப் பார்த்தாள். அவனைப் பார்க்கவே முடியவில்லை! தன்னைப் பைத்தியம் என்று ஏசிச் சிரிக்கும் பெண்களின்பேரில் அவனுக்குக் கொஞ்சமும் கோபம் வரவேயில்லை. தானே அழுதான். கரையில் இருந்த வேஷ்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு துண்டைப் பிழிந்து தலையில் போட்டுக்கொண்டு 'விடுவிடு' வென்று சென்றான்.

சாரதா குடத்தை எடுத்துக்கொண்டு மெல்லச் சென்றாள்.

'பைத்தியத்துக்குப் பார்த்தாயாடி கோபத்தை! அதற்கு சாரதாவின்மீது எத்தனை ஆசை!' கல்யாணி பார்வதியிடம் சொல்லிக்கொண்டிருந்தது சாரதாவின் காதில் விழாமல் இல்லை.

'பைத்தியமோ—கிறாக்கோ—எதுவானாலும் அவர் என் அத்தான்! எனக்குத்தான் சொந்தமானவர். இதில் இவர்களுக்கு என்ன அக்கறை?'

—வெளியே சொல்லாவிட்டாலும் மனதுக்குள்ளேயே நினைத்தபடி வீட்டுக்குள் சென்றாள் சாரதா!

விஸ்வம்—அவள் அத்தான் விஸ்வம் ஊஞ்சல் பலகையில் குப்புறப்படுத்துக் கொண்டிருந்தான். தண்ணீர்க்குடத்தை ஒரு மூலையில் வைத்த சாரதா, ஊஞ்சலின் அருகே வந்து நின்றாள். கீழே தரையில் ஈரமாயிருந்தது. நிச்சயம் விஸ்வம் அழுதிருக்க வேண்டும் குளக்கரையில் நடந்த சம்பவம் காரணமாக!

ஊஞ்சலை ஒரு கையால் மெல்லப் பிடித்துக்கொண்ட சாரதா 'அத்தான்! விஸ்வம் அத்தான்!'—என்று அழைத்தாள்.

படுத்துக்கொண்டே தலையை அசைக்காமல் 'உம்' கொட்டினான் விஸ்வம்.

'ஏன் அத்தான் அழுகிறாய்? கல்யாணி உன்னை பைத்யம் என்று சொன்னதற்காக அழுகிறாயா?'

விஸ்வம் திடீரென்று எழுந்து உட்கார்ந்தான். சாரதாவையே வைத்த கண் வாங்காமல் சற்று நேரம் உற்றுப் பார்த்தபடியே உட்கார்ந்தான்.

'என்ன அத்தான்; ஏன் பேசாமலிருக்கிறாய்?'—ஊஞ்சலில் தானும் உட்கார்ந்தபடி அவன் மோவாயைப் பிடித்தபடியே கேட்டாள் சாரதா!

'இல்லை சாரதா! என்னைப் பைத்யம் என்று சொன்னதற்காக நான் அழவில்லை. உன்னைத்தான் கல்யாணியின்... விஸ்வம் வார்த்தையை முடிப்பதற்கு முன்பே அவன் கண்களிரண்டிலும் கண்ணீர் கோடிட்டது.

'கல்யாணியின் அண்ணாவுக்கு என்னைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போவதாக உன்னிடம் அவள் சொன்னாளா—அத்தான்? அதற்காகத் தான் அழுகிறாயா?' சாரதாவே கேட்டு விட்டாள்.

விஸ்வம் பதில் சொல்லவில்லை. 'ஆமாம்' என்றுமட்டுமே தலையை ஆட்டினான்.

'அத்தான்! இப்போது சொல்கிறேன், கேட்டுக்கொள். நீ இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்னால் சென்ற வருடம் இப்படியொரு பேச்சு இருந்தது

உண்மைதான். ஆனால், எனக்கொரு அத்தான் இருப்பது தெரிந்ததும்—முதன்முதலாக உன்னைப் பார்த்த பிறகு, நான் உன்னைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று தீர்மானித்து விட்டேன்.'

'உண்மையாகவா சாரதா? நான் பைத்தியம் என்று தெரிந்த பிறகுமா நீ என் மனைவியாக ஆசைப்படுகிறாய்?'

'ஆமாம் அத்தான்! நீ பைத்தியம் என்று எப்போதாவது நான் சொல்லியிருக்கிறேனா?'

'சாரதா! என்னிடம் படிப்பும் இல்லை—பணமும் இல்லையே!'

'தேவையில்லை அத்தான்! அழகாகப் பேசுகிறீர்கள், உயர்ந்த குணம் இருக்கிறது! இதுவே எனக்குப் போதும்!'—என்ற சாரதா, அவன் கையைப் பிடித்தாள். தலைமயிரைக் கோதினாள்.

விஸ்வத்தின் கண்களில் நீர் துளிர்த்தது, அவள் கையைப் பிடித்து கண்களில் ஒத்திக்கொண்டபோது—

இடியோசை கேட்டது!

'போதுமடி சாரதா, உன் நாடகம், நானும்தான் பார்க்கிறேன் பத்து மாதமாய். மூளை கலங்கிப்போன பைத்தியமானாலும், அவன் இருபத்தைந்து வயதுப் பிள்ளை. நீயோ பதினெட்டு வயதுப் பெண்! அத்தானாயிருந்தாலும், இப்படிப் பட்டப் பகலிலே பைத்தியத்தோடு கொஞ்சவேண்டாம்! கல்யாணி சும்மாவா சொன்னாள்!'— சித்தி நாகம்மா சீறினாள்!

'சித்தி.....' வீறிட்டுக் கத்தினாள் சாரதா! 'என்னை என்ன வேண்டுமானாலும் சொல் சித்தி! எப்போதும் செய்வாயே, அதுபோல வேண்டுமானாலும் அடி—உதை! ஆனால், அத்தானைமட்டும் என்னெதிரில் 'பைத்தியம்' என்று சொல்லாதே!'

முகவாய்க்கட்டையைத் தோள் பட்டையில் இடித்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள் நாகம்மா.

## 2

பத்து மாதங்களுக்கு முன்பு ...

'இதுதானே ராமசாமியின் வீடு?'—என்று கேட்டபடியே கையில் ஒரு பையுடன் இளைஞன் ஒருவன் வாசலில் நின்றான்.

திண்ணையில் உட்கார்ந்து கயிறு திரித்துக்கொண்டிருந்த ராமசாமி, அந்த இளைஞனை மேலும் கீழுமாக நோக்கினார். வாட்டசாட்டமாய் வஞ்சனை இல்லாமல் ஆறடி உயரத்துக்கு வளர்ந்திருந்த அந்த வாலிபன், மூக்கும்முழியுமாக பொன்னிற மேனியுடன் அழகாகத்தான் காட்சியளித்தான். ஆனால், சில சமயம் பேந்தப் பேந்த விழித்தான்.

'நான்தான் ராமசாமி!' என்று மட்டுமே சொல்லி நின்றார் அவர்!

அந்த வாலிபன்தான் பேசினான்: 'நீங்கள்தான் அத்தான் ராமசாமியா? நான்தான் சேஷாசலத்தின் பிள்ளை விஸ்வம்! டெல்லியிலிருந்து வருகிறேன்!'—என்று சொல்லிவிட்டு விடுவிடுவென்று உள்ளே சென்றான் விஸ்வம்.

'சேஷாசலத்தின் பிள்ளையா நீ? அவனைப்போலவேதான் இருக்கிறாய் ஐந்து வருஷத்துக்கு முன்பே அவன் தவறி விட்ட கடிதம் வந்தது. அம்மாவை அழைத்து வரவில்லையா?'—என்று ராமசாமி கேள்விக்கு மேல் கேள்வியாக அடுக்கிக்கொண்டே போனார்.

'இல்லை அத்தான்! அப்பாவைப் பின் பற்றி அம்மாவும் போய்விட்டாள். நான்தான் மிச்சம்!'—என்றான் விஸ்வம்!

குளத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு, அப்போதுதான் உள்ளே நுழைந்த சாரதாவைக் கண்ட விஸ்வம் ராமசாமியின் பக்கம் திரும்பி 'அத்தை எங்கே அத்தான்?'—என்று கேட்ட போதே வந்திருப்பது தன் தாயாரின் அண்ணாவின் பிள்ளை என்பதை உணர்ந்துகொண்ட சாரதா, துள்ளி யோடினாள் சமையலறைக்குள்ளே!

அவள் போய் மூன்று வருடத்துக்கு மேலாகிறது. இரண்டாந் தாரமாகவும்



ஒருவளை கல்யாணம் செய்து கொண்டும் இருக்கிறேன்'—என்றார் ராமசாமி!

விஸ்வம் தரையில் உட்கார்ந்து எப்போதோ இறந்துபோன அத்தைக்காக கண்ணீர்விட்டான். கொஞ்ச நேரத்தில் தானே அடிக்கடி 'சினிமா வசனம்' ஒப்புவிப்பதுபோல சுவரைப் பார்த்துப் பேசினான். தலையைக் கலைத்துக்கொண்டு அடிக்கடி சிரிக்க ஆரம்பித்தான். அவன் அந்த வீட்டுக்குள் நுழைந்த ஒரு மணி நேரத்துக்குள் தெரிந்துவிட்டது—பையனுக்குப் புத்தி சரியில்லையென்று!

ராமசாமி நேரிடையாகவே சாப்பிடும்போது கேட்டு விட்டார். 'விஸ்வம்! ஒன்றும் சாப்பிடாமல் இலையில் என்னவோ எழுதிக்கொண்டிருக்கிறாயே — உனக்கென்ன பைத்தியமா?'

'நீங்களும் என்னைப் பைத்தியம் என்று சொல்கிறீர்களா—அத்தான்! நான் பைத்தியம் இல்லையே!' — என்று விஸ்வம் சொன்னதைப் பார்க்கும் போது பரிதாபமாகத்தான் இருந்தது.

'விஸ்வம் வந்த இரண்டு மூன்று நாட்கள் ராமசாமியின் இரண்டாம் மனைவி நாகம்மா அவனுக்கு வேளைக்கு சாப்பாடு போட்டாள், தலைவிதியேயென்று! நான்காம் நாளிலிருந்து அந்தப் பையனை ஏனென்று கேட்க அந்த வீட்டில் எவரும் இல்லாமல்தான் போயிருக்கும்—சாரதா இல்லாமலிருந்திருந்தால்......

சாரதா நிலைமையை உணர்ந்துகொண்டாள். ஏற்கெனவே, இரண்டு வருடங்களாகச் சித்தியின் கொடுமையால் வாழ்க்கையைக் கழித்து வந்தவளுக்கு தன் தாய் இறக்கும் சமயம் கூறிய வார்த்தைகள் இன்றும் நினைவுக்கு வராமல் இல்லை.

'சாரதா! கவனமாகக் கேள்: என்னுடன் பிறந்த அண்ணன் ஒருவன் இருந்தான் சேஷாசலம் என்று பெயர். ஒரு நாள் அப்பாவிடம் சண்டை போட்டுக் கொண்டு தன் இருபத்தி இரண்டாவது வயதில் வீட்டைவிட்டே ஓடிவிட்டான். ஓடிப்போன இரண்டாவது வருஷமே அப்பாவும்—அம்மாவும் இறந்து விட்டனர். சேஷாசலம் ஓடிப்போய்



"என்ன சார்...போன வருஷம் மாதிரியே தீபாவளி இனும் ஒரு ரூபா கொடுக்கறீங்க.........விலை வாசி எல்லாம் ஏகமா ஏறிவிட்டது...நீங்க என்ன சாமி..."

இருபத்தைந்து வருடங்களாகிறது. தெரிந்தவர்கள் அண்ணா டெல்லியில் இருப்பதாகவும்—கல்யாணம் செய்து கொண்டு குடும்பத்தோடு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். பிள்ளை ஒருவன் இருப்பதாகவும் சிலர் சொன்னார்கள். என்றைக்காவது என் அண்ணாவாவது—உன் அத்தானாவது நிச்சயம் வருவார்கள். கவனமாகப் பார்த்துக்கொள். அப்பாவின் சுபாவம் தான் தெரிந்ததே......

அம்மாவின் சொல்லுக்காக இல்லாவிட்டாலும்—தனக்கு உரிமையான அத்தானைக் கவனிக்கவேண்டியது தன் கடமையென உணர்ந்தாள் சாரதா! அதுவும் அத்தானுக்கு சித்தசுவாதீனமில்லை என்று தெரிந்தபிறகு கடமையைப் பொறுப்புடன் கவனிக்க வேண்டியிருந்தது!

இந்நிலையில் ஒரு நாள் ராமசாமியே சாரதாவை நேரிடையாகக் கேட்டுவிட்டார். 'சாரதா! எத்தனை நாளைக்குத் தான் இவனைக் கட்டிக்கொண்டு அழப் போகிறாய்? எனக்கு இருப்பது நீ

ஒரே பெண். நல்ல இடத்தில் கல்யாணமாகிக் குடியும் குடித்தனமுமாய் நீ விளங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இப்போதே ஊர் முழுவதும் இந்தப் பைத்தியத்தையும்—உன்னையும் சேர்த்தே பேசுகிறது. போன வருஷம் தீர்மானித்தபடியே கல்யாணியின் அண்ணாவுக்கு உன்னைக் கொடுப்பதாக நிச்சயித்துவிட்டேன்!'

தரையைப் பார்த்தபடியேதான் சாரதா பேசினாள்!

'அப்பா! உங்களுக்கு மட்டுமல்ல—ஊராரின் கண்ணுக்கும் அத்தான் பைத்தியமாகத் தெரியலாம். என்று நான் அத்தானை முதன்முதலாகக் கண்டேனோ, அன்றே அவரை நான் மனத்துக்குள் புருஷனாக வரித்துவிட்டேன். அம்மாவின் கடைசி ஆசைப்படியும்—அத்தானின் நிலைக்காகவும் – நான் அவரைத் தவிர வேறு யாரையும் மணந்துகொள்ளத் தயாராக இல்லை!'

'அப்படியானால் நீ இந்தப் பைத்தியத்தைத்தான் கட்டிக்கொள்ளப் போகிறாயா?'

'ஆமாம், அப்பா! அத்தானைத் தான்......' சாரதாவின் சொற்களில் எவரும் அசைக்க முடியாத உறுதி!

'சரி, உன் இஷ்டப்படியே எது வேண்டுமானாலும் செய்துகொள். ஆனால், நான் முன்னின்று கல்யாணம் செய்வேன் என்றுமட்டும் கருதாதே! அத்துடன் இருக்கவும் – உன்னாலும் வேறு இடத்தைப் பார்த்துக்கொள்!' – ராமசாமியின் குரலில் சற்றும் பாசமும் பந்தமும் காணவில்லை. அப்படி ஆக்கியிருக்கிறாள் சித்தி நாகம்மா!

'கோவில் இருக்கிறது, அப்பா! அத்துடன் ஊரிலே நான்கு பெரிய மனிதர்களின் வீடும் இருக்கிறது. காலை முதல் மாலைவரை ஏச்சும் பேச்சும், அடியும் உதையும் பெற்று நான் இங்கே செய்யும் வேலையை இரண்டு பணக்காரர் இல்லத்தில் செய்தால், எங்கள் இருவர் வயிற்றுக்கும் போதும் அப்பா!'—சிரித்தபடியே கூறினாள் சாரதா!

சாரதாவின் சிரிப்பு—நெருப்பாகப் பற்றி யெரிந்தது நாகம்மாவுக்கு! நாடகைபோல இடுப்பிலே கையைவைத்துக்கொண்டு தகப்பனுக்கும் மகளுக்கும் இடையிலே நடந்த உரையாடலைக் கவனித்துக்கொண்டிருந்தவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. சுவர் ஓரமாக இருந்த அரிவாள்மணையை எடுத்து 'என்ன சொன்னாய் அகங்காரி!' – என்று கூறி, சாரதாவின் தலையிலே ஓங்கி அடித்தாள்.

'ஐயோ அத்தான்!'—என்று கூவியபடியே தலையைப் பிடித்துக்கொண்டு பொத்தென்று கீழே விழுந்தாள் சாரதா. மண்டையிலிருந்து குங்குமச் சிவப்பு போன்ற இரத்தம் பீறிட்டுக்கொண்டு அவள் கையெல்லாம் வழிந்து தரையில் தேங்கி நின்றது.

கொல்லைப்புறத்திலே கதவோரமாக நின்றுகொண்டிருந்து இவர்கள் பேச்சைக் கவனித்துக்கொண்டிருந்த விஸ்வம் 'சாரதா' என்று அலறிக்கொண்டே ஓடி வந்தான். கீழே மயங்கிப் போய் விழுந்த சாரதாவின் தலையிலிருந்து பொங்கும் ரத்தத்தைக்கண்டு ராமசாமியையும்—நாகம்மாவையும் பயங்கரமாய் விழிகளை உருட்டிப் பார்த்தான். கட்டியிருந்த வேஷ்டியைக் கிழித்து ரத்தத்தைத் துடைத்து பொங்குவதை நிறுத்திக் கட்டுப்போட்டான். நாகம்மா பயந்து போய் சமையலறைக்குள் நுழைந்து தாளிட்டுக்கொண்டாள். ராமசாமி வைத்தியர் வீட்டை நோக்கி ஓடினார். விஸ்வம் சாரதாவைத் தூக்கி பெஞ்சியில் போட்டு விசிறினான்! வைத்தியர் வந்ததும் மருந்தைப் போட்டுக் கட்டுப் போட்ட பிறகுதான் நாகம்மா சமையலறையை விட்டு வெளியே வந்தாள். அக்கம்பக்கத்துப் பெண்மணிகளெல்லாம் கூடி அனுதாபம் தெரிவித்தனர். கல்யாணி எல்லாம் தனக்குத் தெரிந்ததுபோலத் தலையை ஆட்டிக்கொண்டு பேசினாள்.

'எல்லாம் எனக்கு முன்பே தெரியும். அந்தப் பைத்தியம் என்றைக்காவது ஒரு நாள் இப்படி இவள் மண்டையை உடைத்துவிடும் என்று சொன்னால் இவள் கேட்டாள்தானே! அதை மன்மதக் குஞ்சு' என்று எண்ணிக்கொண்டு நாலுபேருக்கு மத்தியிலேயே அவனோடு கூத்தடித்தாளே!'—என்று அவள்



சொன்னபோது நாகம்மாவும் 'ஆமாம்! கொல்லைப்புறத்தில் இருந்தேன். 'ஐயோ' என்ற சப்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தால், இவள் ரத்தம் சொட்டச் சொட்டக் கீழே விழுந்து கிடக்கிறாள். என்னைக்கண்டதும் அவன் அரிவாள்மணையைத் தூக்கி வீசிவிட்டு வெளியே ஓடுகிறான்!'—என்று சொன்னதை ஓரமாக நின்று கேட்டுக்கொண்டிருந்த ராமசாமிக்கு கண்ணீர் வரத்தான் செய்தது.

அரைமணி நேரத்துக்குப் பின்னர் தான் எல்லோருக்கும் விஸ்வத்தை அங்கே காணவில்லையே என்று தெரிந்தது. ஆனால், எதிர் வீட்டு சாம்பு—அப்போதுதான் வெளியூரிலிருந்து ரயிலேறி வந்தவர். 'என்ன ராமசாமி! உங்க வீட்டு 'கீழ்ப்பாக்க'த்தை ஸ்டேஷனிலே பார்த்தேனே. நான் இறங்கின மெட்ராஸ் வண்டியிலே ஏறி எங்கோ போகிறானே! கீழ்ப்பாக்கம் போகிறானா?'—என்று கேட்டபோது யாருக்குமே ஒன்றும் புரியவில்லை.

ஆனால், சாரதா 'ஐயோ! அத்தான்!'—என்று அலறி மீண்டும் மூர்ச்சையாகிவிட்டாள்.

## 3

இரண்டு நாட்கள் சென்றன.

சாரதாவுக்கு தலையில் பட்ட காயம் வலியைத் தரவில்லை. இலேசாக ஆறியிருந்தது. ஆனால், தலைப்புண்தான் ஆறியதே தவிர, அவள் மனப்புண் ஆறவில்லையே!

விஸ்வம் எங்கே? அவள் அத்தான் விஸ்வம் எங்கே? ஒருவேளை எங்காவது

விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டாரோ?

சாரதா இரண்டு நாளாக சாப்பிடவேயில்லை. குலுங்கிக் குலுங்கி அழுதாள். கல்யாணிக்கே சாரதாவைக்கண்டு நெஞ்சு வெடித்துவிட்டது. தன் தவறை உணர்ந்துகொண்டு அவள் அருகிலேயே இரண்டு நாட்களாக இருந்தாள். மெல்ல மெல்லக் கேட்டு அவள் சித்திதான் அரிவாள்மனையினால் அடித்ததை தெரிந்துகொண்டாள். அடுத்த நிமிஷமே கிராமம் முழுவதும் தகப்பனுக்கும்—மகளுக்கும் நடந்த சண்டையிலிருந்து—நாகம்மா சாரதாவை அடித்து அதை மறைக்கக் கதை கட்டியதுவரையில் கல்யாணியின் மூலம் பரவிவிட்டது.

ஆனால், அன்று மாலை நடந்தது என்ன?

புத்தம் புதிய 'ப்ளேமௌத்' நீல வண்ணக் கார் ராமசாமியின் வீட்டு வாசலில் வந்து நின்றது. பின் கதவைத் திறந்துகொண்டு கல்யாணியின் அண்ணன் நடராஜன் இறங்கினான். வாசலுக்கு வந்த கல்யாணி அண்ணனைக் கண்டு திகைத்தாள். ஆனால் அவள் திகைப்பு அதிகரித்துப் போய் சிலை போல நிற்கக் காரணம்—டிரைவின் சீட்டிலிருந்து சீட்டியடித்துக் கொண்டே இறங்கிய வாலிபனைக் கண்டுதான். உயர்தர துணியில் சூட்டும்—அதற்கேற்ற கோட்டும் அணிந்த அந்த மூக்குக் கண்ணாடி வாலிபன் டக்டக்கென்று பூட்ஸ் சப்தம் சப்திக்க வீட்டுக்குள் நுழைந்தான். தலையில் கட்டுடன் படுத்துக்கொண்டிருந்த சாரதாவின் படுக்கை அருகில் சென்று 'சாரதா!' என்று மெல்ல அழைத்தான்.

துள்ளியெழுந்தாள் தன் அத்தானைக் கண்ட சாரதா! 'ராஜா'போல நிற்கும் விஸ்வத்தைக் கண்டு 'அத்தான்' எனக் கூவியபடியே அவனை அப்படியே கட்டிக்கொண்டாள். விஸ்வத்தின் கண்களில் நீர் துளிர்த்தது.

'சாரதா! உன் அத்தான் வந்துவிட்டேன்! கவலை வேண்டாம், புறப்படு!' என்று விஸ்வம் சொன்னதைக்கண்டு ஒன்றும் புரியாமல் அவள் விழித்து நின்றாள். விஸ்வம் சாரதாவின் கையைப் பிடித்து வாசலுக்கு வந்து காரின் முன் பக்கக் கதவைத் திறந்து அவளை உட்காரவைத்தான். தெரு முனையில் வந்துகொண்டிருந்த ராமசாமி தன் வீட்டு வாசலில் காரைக்கண்டு ஓடி வந்தார். விஸ்வத்தை—ஆங்கில பாணியில் உடை தரித்து புன்சிரிப் பொன்றை உகுத்தபடி நின்ற விஸ்வத்தைக்கண்டு திகைத்தார். ஆனால் அவனோ காரிலிருந்து ஒரு பெட்டியை எடுத்து ராமசாமியிடம் தந்தான். 'இதில் ஆயிரம் பத்திரிகைகள் இருக்கின்றன. இன்றைக்கு ஐந்தாம் நாள்—சென்னை அடையாறில் என் பங்களாவில் எனக்கும் சாரதாவுக்கும் திருமணம்! எல்லோருக்கும் கொடுங்கள். பாக்கியை நடராஜன் சொல்வான்!' என்று கூறிய விஸ்வம், கதவைத் திறந்து காரில் ஏறி அமர்ந்தான். மறு விநாடி பின்னால் புழுதியைப் பறக்கவிட்டுவிட்டு கார் பறந்தது சென்னையை நோக்கி!

இரண்டு நாட்களுக்கு முன் நடந்த ராமாயணத்துக்குக்கூட அவ்வளவு கூட்டம் இல்லை. புள்ளமங்கலம் கிராமமே திரண்டு ராமசாமியின் வீட்டு வாசலில் காணப்பட்டது—நடராஜன் சொல்லப் போகும் கதையைக் கேட்க!

நான்கு வருடங்களுக்கு முன்பு தந்தை தாய் இருவரையும் இழந்த விஸ்வநாதன் டெல்லியிலிருந்து ஒரு லட்ச ரூபாயுடன் சென்னை வந்தான். விஸ்வநாதனின் தகப்பனாரின் நண்பர் மூலமாக பிரஸ் ஒன்று வாங்கி, அவர் மேற்பார்வையிலேயே நடத்தினான். நல்ல லாபம் கிடைத்தது. அடையாறில் பங்களா ஒன்றும் கட்டிக்கொண்டான். நடராஜன் ஒரு வருஷத்துக்கு முன்னால் 'நாதன் பிரிண்டர்ஸில்' நூறு ரூபாய் சம்பளத்துக்கு வேலையில் அமர்ந்தான். ஒருநாள் தற்செயலாக முதலாளி விஸ்வநாதத்தைக் கடற்கரையில் சந்தித்தபோது 'அவன் ஊரை' அவர் விசாரித்தார். புள்ளமங்கலம் என்று நடராஜன் சொன்னபோது 'அந்த ஊரில் ராமசாமி என்பவராவது பங்கஜம்மாள் என்பவளாவது இருக்கிறார்களா...

இறந்துவிட்டதாகவும்—ராமசாமி மட்டும் இரண்டாம் மனைவியுடன் இருப்பதாகவும்—'சாரதா' என்று பதினெட்டு வயதுப் பெண்ணும் இருப்பதாகவும் நடராஜன் சொன்னான்.

விஸ்வநாதன் ராமசாமியின் இரண்டாம் மனைவியை எப்படி என்று விசாரிக்கவே 'அவள் கொடுமைக்காரி, அடிக்கடிச் சாரதாவை இம்சிப்பாள்' என்ற உண்மையை நடராஜன்சொல்லியிருக்கிறான். உடனே விஸ்வநாதன் தன் அத்தை மகளைப்பற்றியும்—ராமசாமியைப்பற்றியும் அறிய விரும்பினார். இரண்டு லட்ச ரூபாய்க்கு மேலேயே சொத்துடன் வசதியாக இருந்த அவர், நேராகவே காரில் வந்தால் 'பணத்துக்காக உபசரிப்பு நடக்கும். குணத்தை அறிய முடியாது' என்று தீர்மானித்து பைத்தியம்போல நடப்பது எனத்திட்டமிட்டார். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த விஷயம் எவருக்கும் தெரியக்கூடாது என்று கண்டிப்பாக நடராஜனிடம் சொல்லிவிட்டு, பத்து மாதங்களுக்கு முன்பு இங்கே பையுடன் நுழைந்தார். பைத்தியமாக நடித்தார். புள்ளமங்கலம் கிராமமே அவரை எள்ளி நகையாடியது. ஆனால், சாரதாமட்டும் மனப்பூர்வமாய் தன் அத்தானைக் காதலித்தாள். பைத்தியமாக இருந்தாலும் அவரையே மணக்கச் சித்தமாயிருந்தாள். சில சமயங்களில் சித்தி நாகம்மாவிடம் சாரதா படும் அவதியைக்கண்டு வேஷத்தைக் கலைத்துவிடலாமா என்றுகூட விஸ்வநாதன் எண்ணியிருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்பு சாரதாவின் மண்டையில் சித்தி அரிவாள்மனையால் அடித்தது கண்டு சென்னை ஓடி வந்தார்.

முகூர்த்தம் குறித்துக் கல்யாணப் பத்திரிகையும் அச்சிட்டு நடராஜனையும் அழைத்துக்கொண்டு வந்தார்—தன் சொந்தக்காரில்! சாரதாவை அழைத்துக்கொண்டு போய்விட்டார்! அவள் சேர வேண்டிய இடத்தில் சேர்ந்துவிட்டாள்!

நடராஜன் கதையை முடித்ததும் எல்லோரும் வியப்புடன் அவனையே பார்த்தனர். ராமசாமி நாதழுதழுக்க அழுதபடியே கூறினார். 'விஸ்வம்! நீ பைத்தியம் இல்லையடா—நாங்கள்—இந்தக் கிராமத்தில் இருக்கும் எல்லோரும்தான் பைத்தியம்—நீ தெய்வமடா!'

திடீரென்று கதவோரம் நின்றுகொண்டிருந்த நாகம்மா கத்தினாள்: 'இல்லை இல்லை, நான் அடிக்கவில்லை. அரிவாள்மனைதான் என்னை அடித்தது. மாடு ஏன் முட்டுகிறது!' என்று கத்திவிட்டு கூட்டத்தைப் பார்த்து ஹி...ஹி...என்று சிரித்தாள். தலையை அவிழ்த்துக்கொண்டு புடவையைக் கிழிக்க ஆரம்பித்தாள்.

நாகம்மாளுக்கு உண்மையாலேயே பைத்தியம் பிடித்துவிட்டது அது அவள் செய்த வினைப்பயன்!

★



"நீ போட்டிண்டு இருக்கிற மாதிரி துணி எங்கேயும் கிடைக்கல்லே...... ஒரு கடை விடாம தேடிட்டேன்..."

"நல்ல வேளை ... எங்கே என் பிரண்ட்ஸ் வாங்கிடுவாளோன்னு பார்த்தேன்; இனிமே தைரியமா போட்டுக்கலாம்.

# நத்தையும் மின்மினியும்

தமிழ்மழ

நல்ல இருட்டு வேளை. இருள் கருகும்மென்று இருந்தது. அந்த சமயத்திலே ஒரு நத்தை ஊர்ந்து சென்றது. கன்னங்கரேல் என்று இருட்டிவிட்டதால், மேலே நடந்து போக அதற்கு வழி தெரியவில்லை. வெளிச்சம் இல்லாததால்; மிகவும் வேதனை பட்டுத் தவித்தது. அந்த சமயத்திலே, அங்கே ஒரு மின்மினிப் பூச்சி பறந்து வந்தது. அதனிடம் விளக்கைப்போல வெளிச்சம் மின்னிக்கொண்டிருந்தது. அதைக் கண்ட நத்தை, மின்மினியிடம் சென்று, 'ஐயா! மின்மினியாரே! தங்களிடமோ சிறந்த வெளிச்சம் இருக்கிறது. எனக்கோ இருட்டில் வழி தெரியவில்லை. அதனால் கொஞ்சம் தயவு செய்து, எனக்குச் சிறிது வெளிச்சம் காட்டுவீர் என்று கெஞ்சிக் கேட்கிறேன். உங்களுடைய இந்த உதவியை என் உயிருள்ள வரையிலும், மறக்கவே மாட்டேன்' என்று பணிவாகக் கேட்டது.


ஆனால் அந்த மின்மினிப் பூச்சியோ அதைச் சற்றும் மதிக்கவில்லை. அலட்சியமாகப் பதில் சொன்னது.

'அடே அற்பப் பயலே! என்னை யாரென்று நினைத்தாய்? நானோ பறவைக் கப்பலைப்போல வானத்திலே பறந்து செல்லும் மின்மினி! நீயோ தரையிலே ஊர்ந்து செல்லும் கேவலமான நத்தை. நானா உனக்கு வேலைக்காரனைப்போல வெளிச்சம் காட்டி அழைத்துச் செல்வது? முடியாது' ஆணவமாக இதைச் சொன்னது.

நத்தையோ ஒன்றும் பேசாமல், மின்மினியின் உதவியையே எதிர்பார்த்து நின்றது. அதைக் கண்ட மின்மினிக்கு கர்வம் தலைக்கேறி விட்டது. தன்னுடைய பெருமையைப் பற்றித் தானே புகழ்ந்து கொண்டது. ஆகா! என்னுடைய வெளிச்சம் எவ்வளவு பிரகாசமாக இருக்கிறது! பறவைக் கப்பல் இரவிலே வானத்திலே பறக்கும் பொழுது உண்டாகும் வெளிச்சத்தைப் போல அல்லவா என்னுடைய வெளிச்சம் இருக்கிறது.

என்னுடைய இந்தப் பெருமை தெரியவில்லை இந்த அற்ப நத்தைக்கு இப்படி எண்ணியதும் மின்மினிக்கு அபார கோபம் வந்துவிட்டது. 'எதற்காக இன்னும் என்னை வீணாக எதிர்பார்த்து நிற்கிறாய்? உனக்கு வெளிச்சம் காட்டவே மாட்டேன், போ! போ!!' என்று சொல்லிவிட்டு, ஒய்யாரமாக மேலே பறந்தது.

அந்த சமயத்திலே அங்கே ஒரு தூக்கணங் குருவி பறந்து வந்தது. மின்மினிப் பூச்சி அதன் கண்களிலே பட்டுவிட்டது. அவ்வளவுதான்! அடுத்த நொடியிலேயே தாவிப் போய் மின்மினியைப் பிடித்துக் கொண்டு, நேரே அதனுடைய கூட்டிற்குப் பறந்து போய்விட்டது. இரவு வேளையில் தூக்கணங் குருவிக்கு அதனுடைய கூட்டில் வெளிச்சம் வேண்டியிருந்தது. அதனால் வெளிச்சத்தைத் தேடி வெளியில் செல்கையில், எதிரே வந்த மின்மினியைப் பிடித்துக் கொண்டு போய்க் கூட்டிற்குள் வைத்தது. அது கூட்டில் இருந்து தப்பி ஓடாமல் இருப்பதற்காக, நல்ல ஒட்டுப் பசையினால் அதன் கால்களை நன்றாக ஒட்ட வைத்து விட்டது. அதனால் மின்மினியின் வெளிச்சம் தூக்கணங்குருவிக் கூட்டிற்குள்ளே மின்சாரப் பல்புப்போல ஒளி வீசிக் கொண்டிருந்தது— தாங்காத வேதனையுடன். அதைப் பார்த்த தூக்கணங் குருவிக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாகிவிட்டது. ஆகா! இன்று புறப்பட்ட வேளை நல்ல வேளை! அற்புதமான மின்சார ஒளி விளக்கு கிடைத்து விட்டது. அதுவும் பறக்கும் மின்விளக்கு என்று குதூகலமடைந்தது.



ஆனால் மின்மினயோ ஒட்டுப் பசையில் சிக்கிக் கொண்டு வேதனையால் தவியாய்த் தவித்தது. அங்கிருந்து தப்பியோட எவ்வளவோ முயன்றது. ஆனால், ஒன்றும் பலிக்கவில்லை. மின்மினி இரவு முழுதும் தூங்காமல், தாங்க முடியாத வேதனை அடைந்துகொண்டே, வெளிச்சம் காட்டிக் கொண்டிருந்தது. இப்படியே விடியும் வரையில், வெளிச்சம் காட்டிக் கொண்டிருக்க வேண்டியிருந்ததால், வேதனை தாங்காமல் விடியற்காலையில் மாண்டு விட்டது!

இரப்போர்க் குதவி செய்யாதான்
ஈட்டும் பொருளைக் கொடியவர்கள்
அரிவாள் கொண்டு பறிப்பார்கள்
அடித்தும் அவனைக் கொல்வார்கள்!



# நாராயணீயம்

[சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்]

27-வது தசகம்

## 2. இந்திரன் முதலியோர் ஸ்ரீ நாராயணரை அடைதல்

शापेन प्रथितजरेऽथ निर्जरेन्द्रे
देवेष्वप्यसुरजितेषु निष्प्रभेषु ।
शर्वाद्याः कमलजमेत्य सर्वदेवा
निर्वाणप्रभव समं भवन्तमापुः ॥

சாபேன ப்ரதித ஜரே'த
நிர்ஜரேந்த்ரே
தேவேஷ்வப்யஸுரஜிதேஷு
நிஷ்ப்ரபேஷு
சர்வாத்யா: கமல ஜமேத்ய
ஸர்வ தேவா
நிர்வாண ப்ரபவ ஸமம்
பவந்தமாபு:

பதவுரை:— நிர்வாண ப்ரபவ—மோக்ஷத்திற்குக் காரணமான ஏ குருவாயூரப்பா! அத—பிறகு, நிர்ஜரேந்த்ரே—தேவர்களுக்கு அதிபதியான தேவேந்த்ரன், சாபேன—சாபத்தினால், ப்ரதிதஜரே—சக்தி குன்றியவனாகவும், தேவேஷ்வபி—தேவர்களும், அஸுரஜிதேஷு—அஸுரர்களால் ஜயிக்கப்பட்டு, நிஷ்ப்ரபேஷு—ஒளியிழந்தவர்களாயிருக்கையில், சர்வாத்யா:— பரமேச்வரன் முதலிய, ஸர்வ தேவா:— எல்லா தேவர்களும், கமலஜம்—தாமரையிலிருந்து உண்டான ப்ரம்ம தேவனை, ஏத்ய—அடைந்து, ஸமம்—கூட்டமாகச் சேர்ந்துகொண்டு, பவந்தம்—தங்களை, ஆபு:—அடைந்தனர்.

கருத்துரை:—மோக்ஷத்திற்கு காரணபூதரான ஏ குருவாயூரப்பா, தேவேந்திரன் சாபத்தால் வ்ருத்தாப்யத்தை அடைந்துவிட்டான். தேவர்களும் அஸுரர்களால் ஜயிக்கப்பட்டு ஒளியிழந்து இருந்தனர். அப்பொழுது பரமேச்வரன் முதலிய எல்லா தேவர்களும் ப்ரம்ம தேவனை அடைந்து ஒன்றுகக் கூடித் தங்களை அடைந்தார்களாமே!—என நம்பூதிரி கேட்க, ஸ்ரீ குருவாயூரப்பனும் 'ஆம்' என்று சொல்லித் தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:— இங்கு ஸ்ரீ பகவானை மோக்ஷத்திற்குக் காரணம் என நம்பூதிரி கூறியிருக்கிறார். இதற்குக் காரணம் मोक्षमिच्छेज्जनार्दनात् (மோக்ஷமிச்சேஜ்ஜனார்தனாத்) என்றபடி மோக்ஷத்தை விரும்புபவன் ஸ்ரீ ஹரியான நாராயணனுடைய அனுக்ரஹத்தைப் பெற வேண்டும் என்று சாஸ்த்ரம் கூறியிருப்பதேயாகும். இந்திரனுக்கு சாபத்தால் ராஜ்யம் போனதுமட்டுமின்றி அவன் சரீர வலுவும் குன்றிவிட்டதாம். இதையே நம்பூதிரி 'கிழத்தனம் வளர்ந்தவர்' எனப் பொருள்பட प्रथितजरे (ப்ரதித ஜரே) என்பதால் சொல்லியிருக்கிறார். இந்திரன் செய்த தவறு தேவர்கள் எல்லோருக்கும் துன்பத்தைக் கொடுத்துவிட்டது. அதனால் அவர்கள் ஒளி மங்கிவிட்டார்களாம். இதையே நம்பூதிரி निष्प्रभेषु (நிஷ்ப்ரபேஷு) என்ற பதத்தால் குறிப்பிட்டிருக்கிறார். துர்வாஸர் 'இந்திரனுக்கு ராஜ்யம் போக வேண்டும்' என்று மட்டும்தான் சபித்தார். அது பல இன்னல்களையும் கொடுத்துவிட்டது. அஸுரர்கள் தேவர்களை தோல்வியுறும்படிச் செய்துவிட்டார்கள். ஆகவே, எல்லோரும் பரமசிவனிடம் சென்று குறையைத் தெரிவித்தனர். ஸ்ரீ பரமசிவனும் தனது அம்சமும், தன்னிடம் அளவு கடந்த பக்தியும் படைத்தவருமான துர்வாஸர் சபித்ததைப் போக்க இயலாமல் ப்ரம்ம தேவன் முதலியோருடன் ஸ்ரீ ஹரியான நாராயணனை வந்தடைந்தனர். ஸ்ரீமத் பாகவதத்தில் இக்கதையைக் கூறும் ச்லோகமாவது:—

यदा दुर्वाससः शापात्सेन्द्रा लोका
स्त्रयो नृप ।
निः श्रीकाश्चाभवंस्तत्र नेशुरिज्या
दयः क्रियाः ॥
8-5-10

யதா துர்வாஸ ஸ: சாபாத்ஸேந்த்ரா
லோகாஸ்த்ரயோ ந்ருப
நி: ஸ்ரீ கச்சாபவம்ஸ்தத்ர
நேசுரிஜ்யாதய: க்ரியா:

துர்வாஸரின் சாபத்தினால் இந்திரனுடன், மூவுலகமும் ஒளி மங்கி விட்டது. யாகம் முதலிய ஸத்காரியங்களும் நின்றுவிட்டன. இப்படியெல்லாம் துர்வாஸரின் சாபம் செய்துவிட்டது. இங்கு சுகர் பரீக்ஷித்தைப் பார்த்து नृप (ந்ருப) அரசனே என்று அழைத்துச் சொல்வதற்குக் காரணம் ப்ரம்ம சாபத்தினால் நீ மனம் கலங்கியதுபோல் இந்திரன் முதலிய தேவர்களும் துர்வாஸரின் சாபத்தினால் கலக்கமடைந்தனர் என்பதைக் காட்டவேயாகும்.

## 3. ஸ்ரீபகவான் பாற்கடலைக் கடையும்படிக் கட்டளையிடுதல்

ब्रह्माद्यैस्तुतमहिमा चिरं तदानीं
प्रादुष्यन् वरदपुरः परेण धाम्ना ।
हे देवा दितिजकुलैर्विधाय सन्धिं
पीयूषं परिमथ तेति पर्यशास्त्वम् ॥

ப்ரஹ்மாத்யைஸ்துதமஹிமா சிரம்
ததானீம்
ப்ராதுஷ்யன் வரதபுர:
பரேணதாம்னா
ஹே தேவா திதிஜகுலைர் விதாய
ஸந்திம்
பீயூஷம் பரிமததேதி
பர்யசாஸ்த்வம்

பதவுரை:—வரத—பக்தர்களுக்கு வேண்டிய வரன்களைக் கொடுக்கும் ஏ குருவாயூரப்பா, ப்ரஹ்மாத்யை—ப்ரம்மா முதலிய தேவர்களால், சிரம்—வெகு காலம், ஸ்துதமஹிமா—ஸ்தோத்ரம் செய்யப்பட்ட மஹிமையை உடைய, த்வம்—தாங்கள், ததானீம்—அப்பொழுது, பரேணதாம்னா—சிறந்த காந்தியோடு, புர:—அத்தேவர்களுக்கு முன்னிலையில், ப்ராதுஷ்யன்—தோன்றி, ஹே தேவா:— ஏ தேவர்களே, திதிஜகுலை:—அஸுரக் கூட்டங்களோடுகூட, ஸந்திம்—ஸமாதானத்தை, விதாய—செய்துகொண்டு, பீயூஷம்—அம்ருதத்தை, பரிமதத—கடையுங்கள், இதி—என்று, பர்யசா—கட்டளையிட்டீர்களல்லவா?

கருத்துரை:—பக்தர்களுக்கு வேண்டிய வரன்களைத் தந்தருளும் ஏ குருவாயூரப்பா! ப்ரம்மா முதலிய தேவர்களால் தாங்கள் வெகு காலமாக ஸ்தோத்ரம் செய்யப்பட்டீர்கள். அத்தகைய தாங்கள், அவர்களுடைய முன்னிலையில் தோன்றி, 'ஹே தேவர்களே! அஸுரக் கூட்டங்களுடன் கூடி சமாதானம் செய்துகொண்டு அம்ருதத்தை வேண்டி பாற்கடலைக் கடையுங்கள்!' எனக் கட்டளையிட்டீர்களாமே என நம்பூதிரி கேட்க ஸ்ரீ குருவாயூரப்பனும் 'ஆம்' எனச் சொல்லித் தலையை அசைத்து அங்கீகாரம் செய்தாராம்.

விளக்கவுரை:—ப்ரம்மா முதலிய தேவர்கள் ஸ்ரீ பகவானுடைய கல்யாண குணகணங்களைச் சொல்லித் துதித்தனர். அந்த ஸ்தோத்ரத்தையும் चिरं (சிரம்) என்று சொல்லி வெகு காலமாகச் செய்ததாக நம்பூதிரி கூறியிருக்கிறார். ஸ்ரீ பகவானை திருப்தி செய்து வைக்க பூஜை, ஜபம், அர்ச்சனை முதலிய கர்மங்களிருந்தபோதிலும் ஸ்தோத்ரங்களைப் படிப்பதால் ஸ்ரீ பகவானுக்கு அளவு கடந்த திருப்தி ஏற்படுகிறது. அதனாலேயே யாகங்களில் பல ஹோமங்கள் செய்து திருப்தி செய்து வைத்தபோதிலும் ஸாம வேதம் முதலியவற்றால் ஸ்தோத்ரம் செய்யும்படி சாஸ்த்ரம் கூறியிருக்கிறது. இப்பவும் யாகங்களில் [illegible] விதம் ஸ்தோத்ரம் செய்யும்பொழுது சன்யாஸிகளும்கூட வந்து ச்ரவண[illegible]

செய்வதுண்டு. இங்கு நீண்ட நேரம் ப்ரம்மா முதலியோர் ஸ்தோத்ரம் செய்ததும் ஸ்ரீ பகவான் நேரிலேயே திவ்ய காந்தியுடன் தரிசனமளித்தாராம். இப்படி ஸ்தோத்ரம் செய்ததும் நேரில் தோன்றிய ஸ்ரீ பகவானைப் பார்த்த தேவர்கள் 'வேண்டியவற்றை யெல்லாம் அளிப்பவர்' என்னும் பொருள்கொண்ட 'வரத' என்னும் பெயரால் ஸ்ரீ பகவானை மனங் குளிர்ந்து அழைத்தனர். ஸ்ரீ பகவான் தரிசனமளித்ததோடு தேவர்களுக்கு ஓர் உபதேசத்தையும் முதலில் செய்தார். அதாவது 'அஸுரர்களுடன் த்வேஷ மனப்பான்மையை விட்டு ஒற்றுமையை அடையுங்கள்' எனக்கூறினார். மஹா பாரதத்திலும் पूगवैरं (பூகவைரம்) அதாவது 'கூட்டத்தை எதிர்ப்பது கூடாது' எனக் கூறியிருக்கிறது. அதனாலேயே இங்கு அஸுரக் கும்பலுடன் த்வேஷம் கூடாது என ஸ்ரீ பகவான் கூறியிருக்கிறார். அஸுரர்களையும் சேர்த்துக்கொண்டு பாற்கடலைக் கடைந்து அம்ருதத்தை அடையும்படிக்கும் ஸ்ரீ பகவான் கூறியிருக்கிறார். ஸத்வ குணமுள்ள தேவர்கள் அம்ருதத்தைப் பருகிவிட்டால் அவர்கட்கு மரணம் ஏற்படாது. சாதுக்களான தேவர்கள் நன்றாக இருந்தால் உலகிற்கே நன்மை. அதனாலேயே அம்ருதத்தைக் கடைந்து எடுக்கும்படி கட்டளையிட்டார். அதைப்பற்றியே இதற்கடுத்த ச்லோகங்களில் பாற்கடலைக் கடைய வேண்டிய முறையையும் சொல்லியிருக்கிறார். இங்கு நம் ஸூரி ब्रह्माद्यैः स्तुतमहिमा (ப்ரஹ்மாத்யை: ஸ்துதமஹிமா) 'ப்ரம்மா முதலியவர்களால் துதிக்கப்பட்டார்' என்று சொல்லியவாறு ஸ்ரீமத் பாகவதத்திலும் ப்ரம்மாதிகள் ஸ்துதித்த ச்லோகங்கள் சில வருமாறு:—

नावमः कर्मकल्पोऽपि विफलाय[illegible]र्पितः

कल्पते पुरुषस्यैव स ह्यात्मा दयितो हितः ॥ 8-5-48

यथा हि स्कन्धशाखानां तरोर्मूलाव सेचनम् ।

एवमाराधनं विष्णोः सर्वेषा मात्मनश्च हि ॥ 8-5-49.

நாவம: கர்மகல்போ(அ)பி
விப ரயேச்வரார்ப்பித:
கல்பதே புருஷஸ்யைவ
ஸஹ்யாத்மா தயிதோ ஹித:
யதா ஹி ஸ்கந்தசாகானாம்
தரோர் மூலாவஸேசனம்
ஏவமாராதனம் விஷ்ணோ:
ஸர்வேஷாமாத்மனச்சஹி

இதன் பொருள் வருமாறு:—ஈச்வரார்ப்பணமாகச் செய்யப்பட்ட ஸ்வல்பமானதும், போலியானதுமான கர்மவும் வீணாவதில்லை. ஏனெனில், அந்த ஈச்வரன் ஜீவனுடைய ஆத்மாவும் நண்பனுமன்றோ? ஆகையால் அந்த பகவானுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட கர்மா வீணாவதில்லை. மேலும் எப்படி மரத்தின் வேரில் விடும் ஜலம் அதனுடைய பெரிதும், சிறியதுமான கிளைகளுக்குப் போய்ச் சேருகிறதோ, அதேமாதிரி பகவான் விஷ்ணுவிற்குச் செய்யும் பூஜை எல்லோருக்கும் நமக்கும் நற்பயனையே விளைவிக்கும். இந்திராதி தேவர்கள் துதித்ததும் இங்கு ஸ்ரீ பகவான் நேரில் வந்து அனுக்ரஹித்ததால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், ப்ரதி தினமும் சிறிது நேரமாவது ஸ்ரீ பகவானைத் துதித்தால் நமக்கும் அவ்வாறே ஸ்ரீ பகவதனுக்ரஹம் நிச்சயம் கிட்டும் என்பதில் சந்தேகமில்லை என்பதாம்.

(தொடரும்)